

ஜல
தீபம்
சாண்டில்யன்
பாகம்
2
வானதி
பதிப்பகம்
ஜல
தீபம்
பாகம்
2
சாண்டில்யன்
வானதி


இரண்டாம்
பாகம்

இந்நூலாசிரியரின்
பிற நூல்கள்

| | |
|---|---|
| கடல் புறா I, II & III | மலையரசி |
| யவன ராணி I, II | மோகனச் சிலை |
| ராஜ முத்திரை I, II | ராஜயோகம் |
| ராஜ திலகம் | ராணா ஹமீர் |
| ராஜ பேரிகை | நீலவல்லி |
| வசந்த காலம் | சந்திரமதி |
| மன்னன் மகள் | ஜீவ பூமி |
| மலைவாசல் | மஞ்சள் ஆறு |
| கன்னிமாடம் | ராணியின் கனவு |
| புரட்சிப் பெண் | செண்பகத் தோட்டம் |
| ராஜ்யஸ்ரீ | மதுமலர் |
| பாண்டியன் பவனி | மூங்கில் கோட்டை |
| நாகதேவி | இளைய ராணி |
| விலை ராணி | நங்கூரம் |
| சேரன் செல்வி | உதயபானு |
| கவர்ந்த கண்கள் | நாகதீபம் |
| அவனி சுந்தரி | பல்லவ திலகம் |
| மங்கல தேவி | நீள்விழி |
| ஜலமோகினி | நிலமங்கை |
| கடல் ராணி | மனமோகம் |
| மோகினி வனம் | இந்திரகுமாரி |

வானதி பதிப்பகம்
தியாகராய நகர் — சென்னை-17




# இரண்டாம் பாகம்

## அத்தியாயம் 1

## டிஸம்பர் 1712

காற்றில் பூரணமாகப் புடைத்துக் கப்பலைக் கடலில் கடுகியோடச் செய்துகொண்டிருந்த ஜலதீபத்தின் பாய்களைக் கண்ணெடுத்து ஒருமுறை நோக்கிக் கடலையும் நோக்கிய இதயசந்திரன் இதயத்தில் திருப்தியின் பூர்த்தியிருந்தது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் தனது கடல் வாழ்க்கையில் ஏற்பட்ட துரிதமான முன்னேற்றத்துக்கும் மாறுபாட்டுக்கும் புடைத்த அந்தப் பாய்களுக்கும் எத்தனை ஒற்றுமையென்பதை எண்ணிப் பார்த்த இதயசந்திரன், பாய்களைப் புடைத்துக் கப்பலை ஓடச் செய்த காற்றைப் போலவே விதியெனும் காற்றும் தனது முன்னேற்றத்தை மிகமிகத் துரிதப்படுத்தியிருக்கிறதென்பதையும் புரிந்து கொண்டதாலோ என்னவோ, உள்ளத்தில் திருப்தி அவன் முகத்திலும் நன்றாக விரிந்து அதற்கு ஒ

தனிப் பொலிவையும் அளித்தது. அந்தப் பொலிவை அதிகப்படுத்தும் யோசனையுடன் அரபிக் கடலில் குளிக்கத் தொடங்கிய கதிரவன் தன் சிவந்த கிரணங்களை அவன் முகத்திலும் வீசி அதை நன்றாகத் தேய்க்கப்பட்ட செப்பு போல் ஒளிவிடச் செய்தான். கதிரவனுக்குப் போட்டியாக ரத்தச் சிவப்பைப் பெற்ற தமிழக வாலிபன் அந்த முகத்தைக் கண்டு அச்சப்பட்டதால், ஜலதீபத்தின் பாய்களில் உட்கார்ந்திருந்த அந்தி அன்றில்கள் இரண்டு ஜிவ்வெனப் பறந்து தரையை நோக்கிச் சென்றன.

மேலே செவ்வானமும் கீழே கருங்கடலும் அணைப்புக் கொடுக்க, இடையே நீரைக் கிழித்துக்கொண்டு ஓடிய ஜலதீபம் அந்தக் கடலே தனக்குச் சொந்தம்போல் அனாயாசமாகச் சென்றுகொண்டிருந்ததாலும் தன்னையும் அடக்கி ஒரு தமிழன் தளத்தில் நிற்கிறானென்ற அச்சத்தால் அடிக்கடி தலையை மட்டும் லேசாக நீர்மட்டத்தை நோக்கித் தாழ்த்திக் கொண்டிருந்தது. இரண்டரை ஆண்டுகளில் தனக்கு இணையிலாப் பெயரை அரபிக்கடல் பகுதியில் ஏற்படுத்திக் கொடுத்த அந்த ஆண்மகனிடம் தனக்குள்ள அன்பைக் காட்ட, தலை உச்சியில் நடுப்பாய் மரத்தில் பூட்டப்பட்டிருந்த கொடியைப் படபடவென அடிக்கவிட்டுக் கொண்டிருந்தது ஜலதீபம். இரண்டரை ஆண்டுகளில் அதற்குக் கிடைத்த பெரிய பெயருக்கும் வெற்றிக்கும் அளிக்கப்பட்ட வெகுமதிச் சின்னங்களைப் போல், ஜலதீபத்தின் நடுப் பாயிலிருந்த இரண்டொரு குறுக்குத் தையல்களும், பக்கக் கைப்பிடி மரங்களில் காணப்பட்ட நாலைந்து விரிசல்களும் அதற்கு அழகையே கொடுத்தன. பல போர் விருதுகளை உடலில் அணிந்து கொண்ட பெரும் வீர மாதாவைப் போல் ஜலதீபம் கடலில் ஓடிக் கொண்டிருந்ததைப்போலவே இதயசந்திரனின் இருதயமும் இரண்டரை ஆண்டு சரிதத்தின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தது.

இரண்டரை ஆண்டுகள், அவன் உடலின் உறுதியை முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக அடித்திருந்ததன்றி,



கடற்காற்றிலும் வெளியிலும் பிரளயம்போன்ற மழையிலும் அது அடிபட்டிருந்ததால் அதன் நிறமும் சிறிது மங்கி முன்பிருந்த வெண்மை நிறத்தை மாற்றிக் காய்ச்சின செம்பாக அடித்திருந்தது. அதன் காரணமாகச் சிறிது கடுமை ஏறி விட்டதுபோல் தெரிந்த முகம் முன்னைவிட அதிகம் கம்பீரத்தையும் அதிகாரத் தோரணையையும் பெற்றிருந்தது. அவன் கால்கள் இரும்பாக மாறியிருந்ததால், சுவர்ண துர்க்கத்தில் காஸ்ட்ரோவுடன் படகிலேறிய போது சட்டென்று அலைமோதிப் படகில் விழுந்த அந்தத் தடுமாற்ற நிலை மாறி, கப்பலே கவிழ்ந்தாலும் அசையாத நிலையில் கால்கள் திடத்துடன் நின்றிருந்தன. இடுப்பில் ஊன்றியிருந்த ஒரு கை சிறிதும் வளையாமல் இரும்புத் துண்டெனக் காட்சியளித்தது. அவனுடைய இன்னொரு கை இடைக் கச்சையிலிருந்த அதே பெரும் கைத்துப்பாக்கியில் பதிந்திருந்தது. காஸ்ட்ரோவுடன் ஜலதீபத்திற்கு வந்தபோதும் பிறகும் ஏற்பட்ட சோதனைகளை அவன் நினைத்துப் பெருமிதமே அடைந்தான்.

மானுவல் டி காஸ்ட்ரோ தனக்கு எத்தனையோ தீமைகளைச் செய்தாலும் அத்தனை தீமைகளும் தனக்கு எத்தனை நன்மைகளை விளைவித்தன என்பதை எண்ணியதால், 'நான் இருவருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு மாலுமித் தொழில் வாய்ப்பளித்த ஸார்கேல், கஷ்டமான அலுவல்களையே அளித்து என்னை இணையற்ற மாலுமியாக்கி விட்ட காஸ்ட்ரோ இருவரையும் நான் மறக்க முடியாது' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டான். முதல் நாள் காஸ்ட்ரோவின் அதிகாரத்தின் விளைவாகத் தான் துடுப்புத்தள்ள நியமிக்கப்பட்டதையும், அதை மஞ்சு ஆட்சேபித்ததையும் எண்ணிப் பார்த்தான். இன்று நின்ற அதே தளத்தில் அவன் அன்றும் நின்று கொண்டிருந்தான். எதிரே டி காஸ்ட்ரோவும் மஞ்சுவும் நின்று கொண்டிருந்தார்கள். ''இவர் என் தந்தையின் அன்புக்குப் பாத்திரமானவர். இவரை எப்படித் துடுப்புத் தள்ள நியமிக்கலாம்?'' என்று மஞ்சு சீறினாள்.

"கப்பலில் யாருக்கு யார் வேண்டியவர் என்பது கிடையாது. யார் எதற்குத் தகுதி என்பதுதான் உண்டு" என்று சர்வசாதாரணமாகக் கப்பல் தலைவியைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் கூறினான் காஸ்ட்ரோ.

"இவர் துடுப்புத் தள்ளத்தான் தகுதியென்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று மீண்டும் சீறினாள் மஞ்சு.

"அதுவும் தெரியாது. மாலுமி தொழிலுக்கு முதலில் வருபவர்களுக்குக் கொடுக்கப்படும் வேலையை இவருக்குக் கொடுத்திருக்கிறேன்" என்று கடமை உணர்ச்சியைக் காட்டினான் காஸ்ட்ரோ.

"நான் இஷ்டப்பட்டால்..." மஞ்சு வார்த்தையை முடிக்கவில்லை.

காஸ்ட்ரோவே வாசகத்தை முடித்தான், "இவரை எந்த வேலைக்கும் நியமிக்கலாம். தங்கள் பதவியைக்கூட ஒப்படைக்கலாம். தந்தைக்கு இருப்பதாகச் சொன்னீர்களே அந்த அன்பு தங்களுக்கும் இவரிடமிருந்தால்" என்று.

காஸ்ட்ரோ தன்னைப் பார்த்து நகைக்கிறானென்பதைப் புரிந்துகொண்ட மஞ்சு, "அப்படியானால் இவர் பீரங்கி இயக்கட்டும்" என்று கூறித் திரும்பித் தன் அறையை நோக்கிச் செல்ல முயன்றாள்.

"சற்று நில்லுங்கள்" என்றான் காஸ்ட்ரோ கடுமையுடன்.

அவள் திரும்பி காஸ்ட்ரோவை நோக்கினாள். "என்ன காஸ்ட்ரோ?" என்று அலட்சியத்துடன் கேட்கவும் செய்தாள்.

காஸ்ட்ரோவின் கண்கள் அவள் கண்களை மிக அலட்சியத்துடன் சந்தித்தன. "என் உபதளபதிப் பதவிக்கு வேறு யாரையாவது நியமித்துக் கொள்ளுங்கள்" என்ற சொற்கள் திடமாக அவனிடமிருந்து உதிர்ந்தன.

மஞ்சுவின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "ஏன் உபதளபதிப் பதவி பிடிக்கவில்லையா?" என்று வினவினாள் அவள்.



"பெயருக்கு உபதளபதியாயிருக்க இஷ்டமில்லை, புத்தம் புதிதாக வரும் மாலுமிக்கு வேலை நிர்ணயிக்கக்கூட ஓர் உபதளபதிக்கு அதிகாரமில்லையென்றால் அந்தப் பதவியை வகிப்பதில் அர்த்தமில்லை, ஆபத்திருக்கிறது" என்ற காஸ்ட்ரோ, மேலும் சொன்னான். "இந்தத் தொழிலுக்கு இவன் போகாவிட்டால், உங்கள் சலுகையால் வேலையை மாற்றிக் கொள்ளலாம் என்ற துணிவு மற்ற மாலுமிகளுக்கும் ஏற்படும். பிறகு எல்லோரும் உங்களிடம் சலுகைக்கு வருவார்கள் கட்டுப்பாடு குறைந்துவிடும். பிறகு இந்தக் கப்பலின் கதி என்னவாகுமென்று சொல்ல முடியாது" என்று.

அவன் சொல்லுவதில் அர்த்தமிருப்பதை மஞ்சு புரிந்து கொண்டதால் என்ன செய்வதென்று தெரியாமல் திணறினாள். உண்மையில் காஸ்ட்ரோவுக்குக் கட்டுப்பாட்டில் கவலையில்லை என்பதையும் தன்னைத் துன்புறுத்தவே இல்லாத கஷ்டங்களைக்கொண்டு வந்து முன் நிறுத்துகிறானென்பதையும் மஞ்சு புரிந்துகொண்டாலும், கப்பலின் உபதளபதியை விரோதித்துக் கொள்வது பெரும் உபத்திரமென்பதையும் புரிந்து கொண்டாள். புரிந்து கொண்டும் இதயசந்திரனைத் துடுப்புத் தள்ள அனுமதிக்க இஷ்டமில்லாததால் தயங்கினாள். அந்தத் தயக்கத்தை இதயசந்திரனே அப்பொழுது தீர்த்தான். "தலைவி! எனக்குத் துடுப்புத் தள்ளத்தான் ஆசையாயிருக்கிறது" என்று குறுக்கே புகுந்து தனது கருத்தைத் தெரிவித்தான் தமிழன். அதற்கு மேல் ஏதும் சொல்ல மஞ்சுவால் முடியவில்லை. மௌனமே சாதித்தாள் அவள். விடுவிடு என்று துடுப்புத் தள்ளும் அடி அறைக்குச் சென்றுவிட்டான் இதயசந்திரன்.

இத்துடன் விடவில்லை காஸ்ட்ரோ. துடுப்புத்தள்ளாத சமயங்களில் மேல்தளத்துக்கு வருவதையும் தடுத்தான். அப்படி வராதிருப்பதற்கு வேண்டிய அலுவல்களையும் கொடுத்தான். ஆனால் இரண்டு நாட்கள் கழித்து மஞ்சுவே அந்த அடித்தளம் வந்து மாலுமிகளுக்குப் பாடினாள். திரும்பிச் செல்லும்போது இதயசந்திரனையும் தன்னுடன்

அழைத்துக் கொண்டு மேல்தளம் வந்தாள். இரவு நேரம் அப்பொழுது, பெரும் பாய்மரத்தின்கீழ் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். மஞ்சுவின் கை அவன் கையில் தவழ்ந்தது. அவன் கை அந்தக் கையை இறுகப் பிடித்தது. ''இது துடுப்பு அல்ல வீரரே!'' என்றாள் மஞ்சு மெல்ல நகைத்து.

''துடுப்புதான் மஞ்சு'' என்ற இதயசந்திரன் குரல் குழைந்தது.

''அத்தனைக் கடினமா!'' அவள் குரலில் போலிக் கோபம் இருந்தது.

''இல்லை. மிருதுதான். என் வாழ்வை உந்துகிறதே இது!'' என்றான் தமிழன்.

''அப்பா! கை தேர்ந்தவர்'' என்று சொல்லி நகைத்தாள் மஞ்சு.

அப்பொழுது கேட்டது காஸ்ட்ரோவின் குரல் ''தமிழா! தமிழா!'' என்று.

இதயசந்திரன் இருப்பிடத்திலிருந்து எழுந்ததற்கும் காஸ்ட்ரோ அங்கு வருவதற்கும் சமயம் சரியாயிருந்தது. ''இங்கு என்ன செய்கிறாய்!'' என்று வினவினான் காஸ்ட்ரோ கடுமையான குரலில்.

''உட்கார்ந்திருக்கிறேன்'' என்றான் இதயசந்திரன் கடுமையாக.

''உட்கார்ந்திருக்க உனக்கு வேலை கொடுக்கவில்லை'' என்ற காஸ்ட்ரோ அப்பொழுதுதான் மஞ்சுவைப் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்து, ''ஓ! நீங்கள் அழைத்து வந்தீர்களா! புரிகிறது புரிகிறது'' என்று நகைத்தான்.

இதயசந்திரன் சட்டையின் கையை மடக்கினான். மஞ்சு அவன் கையைப்பிடித்து அடக்கிவிட்டு, ''நீங்கள் கீழே செல்லுங்கள்'' என்றாள். இதயசந்திரன் காஸ்ட்ரோவை ஒருமுறை முறைத்துவிட்டுச் சென்றான். தடதடவென்று தளத்தில் நடந்த காஸ்ட்ரோவும் கேலிநகை நகைத்துவிட்டு நடந்தான் எதிர்ப்புறமாக.



இப்படிப் பலமுறை இருவரும் மோதினார்கள் அடுத்த மூன்று மாதங்களில். அந்த மூன்று மாதங்களில் துடுப்புத் தள்ளுவதிலும் சுக்கானைப் பிடித்து மரக்கலத்தை திருப்புவதிலும் பெரும் திறமையைப் பெற்ற இதயசந்திரனுக்கு, பீரங்கி இயக்கும் திறமையைக் காஸ்ட்ரோ உணரும்படி செய்யும் தருணமும் வந்தது. பம்பாய்க்கு வந்துகொண்டிருந்த வணிகக் கப்பலொன்று ஜலதீபத்தைக் கண்டதும் எதிர்த்துப் போரிடத் தொடங்கித் தனது பக்கவாட்டுப் பீரங்கிகளை ஜலதீபத்தை நோக்கித் திருப்பியது. ''கப்பலின் இடப்பக்கத்தை எதிரிக்கப்பலை நோக்கித் திருப்பு!'' என்று உத்தரவிட்டான் காஸ்ட்ரோ சுக்கானிலிருந்த தமிழனை நோக்கி.

இதயசந்திரன் கண்கள் வியப்பைக் காட்டின. பிரிட்டிஷ் வணிகக் கப்பல்களில் பக்கமொன்றுக்குப் பதினொன்கு பீரங்கிகளிருந்ததைப் பார்த்த இதயசந்திரன், ஜலதீபத்தின் இடப்பக்கத்தை அதை நோக்கித் திருப்பினால் அதன் குண்டுகளுக்கு முன்பு ஜலதீபம் என்ன செய்ய முடியும் என்று நினைத்ததால் சுக்கானை வேறொரு மாலுமியிடம் கொடுத்துவிட்டுக் காஸ்ட்ரோவின் அருகில் வந்து, ''அந்தக் கப்பலில் பதினான்கு பீரங்கிகள் இருக்கின்றன'' என்று சுட்டிக் காட்டினான்.

''அதனாலென்ன?''

''அந்தப் பீரங்கிகள் நமது பீரங்கிகளைவிடப் பெரியவை!''

''இருந்தாலென்ன?''

''நமது குண்டுகள் அதைத் தொடுமுன்பு அதன் குண்டுகள் ஜலதீபத்தைத் தூள் தூளாக்கிவிடும்.''

இதைக் கேட்ட காஸ்ட்ரோ இதயசந்திரனை நோக்கிக் கோபவிழி விழித்தான். ஆனால் இதயசந்திரன் அவனைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் பிரிட்டிஷ் கப்பலை உற்று நோக்கினான். பெரும் பருந்துபோல் பாய்ந்துவந்த அதன்

வேகத்தைக் கண்டதும் சுக்கானுக்குச் சென்று ஜலதீபத்தை வேறு திசையில் திருப்பினான்.

''கப்பலை அப்படித் திருப்பாதே!'' என்று காஸ்ட்ரோ கத்தினான்.

இதயசந்திரன் அதைக் காதில் வாங்காமல் ஜலதீபத்தை சற்றுத் தள்ளித் திருப்பி அதன் நடுவிலிருந்த பெரும் பீரங்கியை நோக்கி ஓடிவந்து அதைச் சுழற்றி எதிரிக் கப்பலின் கொடி மரத்தைக் குறிவைத்துச் சுட்டான். கொடிமரம் முறிந்தது. தீப்பிடித்தது. பிறகு காஸ்ட்ரோவைப் பார்த்து, ''எதிரி கப்பலின் வேகம் குறைந்துவிட்டது. இனி நடத்துங்கள் போரை!'' என்று கூறிவிட்டுச் சுக்கானைப் பிடித்துக்கொண்டான்.

காஸ்ட்ரோ திறமையுடன் போரை நடத்தி எதிரி கப்பலைப் பிடித்தான். ஆனால் இதயசந்திரனை அவனால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. உள்ளூரப் புகைந்த வஞ்சக எண்ணங்களைப் புன்சிரிப்பால் மறைத்தான். இதய சந்திரனை எல்லா மாலுமிகளுக்கும் எதிரில் பாராட்டி அவனைப் பீரங்கி இயக்கும் வேலைக்கு உயர்த்தினான். ஆனால் உள்ளூர பல திட்டங்களை வகுத்துக் கொண்ட காஸ்ட்ரோ ஒரு முடிவுக்கு வந்தான்.

மஞ்சுவைச் சரிப்படுத்தாமல் தான் எதுவும் செய்ய முடியாதென்ற முடிவுக்கு வந்ததாலும், அவளிடம் அவனுக்குக் காமவிகாரம் நிரம்ப இருந்ததாலும் அவளுடன் மிக நெருங்கிப் பழக ஆரம்பித்தான். ஏதேதோ சந்தேகம் கேட்பதுபோல் அவள் அறைக்கு அடிக்கடி சென்றான். ஒருநாள் தளத்தில் துணிவுடன் அவள் கையையும் பிடித்தான். ஜலதீபத்தில் அவன் வாழ்வுக்கு அது முடிவு கட்டிவிட்டன. இரும்புக் கரமொன்று அவன் கையைப் பிடித்துத் திருப்பியது. மற்றொரு கை முஷ்டியாக இயங்கி அவன் முகவாய்க் கட்டையில் தாக்க, காஸ்ட்ரோ தளத்தில் குப்புற விழுந்தான். குப்புற நிலையி லிருந்து மெள்ளத் திரும்பும் பாவனையில் கைத்துப்பாக்கி



யைச் சரேலென எடுக்கவும் செய்தான். அவன் கைத் துப்பாக்கியைக் கையில் எடுப்பதற்கும், அந்தக் கையில் ஒரு துப்பாக்கி ரவை பாய்வதற்கும் நேரம் சரியாயிருந்ததால் ''ஐயோ!'' என்றலறினான் காஸ்ட்ரோ. கனோஜி கொடுத்த கைத்துப்பாக்கி கையில் புகைய நின்று கொண் டிருந்தான் தமிழன். ''இது ஸார்கேல் கொடுத்தது. உன்னிடமிருந்து மஞ்சுவைக் காப்பாற்ற. அவசியமானால் உன்னைச் சுட்டு ஒழித்துவிடவும் உத்தரவு இருக்கிறது'' என்ற சொற்கள் பயங்கரமாக உதிர்த்தன தமிழன் வாயிலிருந்து.

அன்றே காஸ்ட்ரோ சிறையிடப்பட்டான். ஆனால் அந்தச் சிறையிலிருந்து வெகு சாமர்த்தியமாகத் தப்பிய காஸ்ட்ரோ பிறகு அந்தப் பிராந்தியத்தில் காணப்பட வில்லை. பிரிட்டிஷ் கப்பலைப் பிடித்ததற்கு வெகுமதியாக இதயசந்திரனை ஜலதீபத்தின் உபதளபதியாக நியமித்தார் கனோஜி ஆங்கரே. நியமித்து இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன.

பயிற்சிக் காலம் ஆறு மாதங்களும், பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளும், ஆக இரண்டரை ஆண்டுகளில் இதயசந்திரன் பெயர் கடல் பகுதிகளில் பெரும் கீர்த்தியைப் பெற்றது. ஜலதீபத்தின் பெயரைக் கேட்டு மாலுமிகள் நடுங்கினார்கள். கனோஜி தமிழகத்திலிருந்து ஓர் எமனைக் கொண்டு வந்திருக்கிறார் என்று துறைமுகங்களில் வதந்தி உலாவலாயிற்று. அந்த வதந்தியாலும், பல கப்பல்களைப் பிடித்ததாலும், பல துறைமுக நுட்பங்களை அறிந்து இடைவிடாது கடலோடியதாலும் பிரக்யாதியைப் பெற்ற இதயசந்திரன் மனத்தில் அந்தப் பழைய நிகழ்ச்சிக ளெல்லாம் திரும்பத் திரும்ப வலம் வந்தன. அந்தச் சமயத்தில் மாலுமி உடை அணிந்த மஞ்சுவும் தலைக்குழல் பறக்க, உடை நன்றாக ஒட்டியதால், உடலின் அழகுகள் பகிர்ந்து காட்ட, இரண்டு பாய்மரங்களை வலம் வந்து அவனை நெருங்கினாள். அந்தி வேளை தந்த மயக்கத்தை விட அதிக மயக்கம் தந்த அவளை அருகில் அழைத்தான்

இதயசந்திரன். அடுத்து நடப்பதைப் பார்க்க வெட்கியவன் போல் வெங்கதிரோன் அலைகளுக்குள் மூழ்கி எங்கும் இருளைப் படரவிட்டான்.

மஞ்சுவும் அவன் பக்கத்தில் உராய்ந்து உட்கார்ந்து கொண்டு பாய் மரத்தில் சாய்ந்துகொண்டாள். ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்றும் வினவினாள்.

அவன் கை அவள் பின்னால் சென்றது. ''பழைய விஷயங்களை யோசிக்கிறேன்'' என்றான் இதயசந்திரன்.

''பழங்கணக்குப் பார்க்கிறீர்களா?'' என்று உதட்டை அவன் காதுக்கருகில் கொணர்ந்து கேட்டாள் அவள்.

''ஆம்.''

''பசித்தவனல்லவா பழங்கணக்குப் பார்ப்பான்?''

''ஆம்.''

''என்ன ஆம்?''

''எனக்குப் பசிக்கிறது.''

''எனக்குந்தான்.''

''உனக்கா?''

''ஆம்.''

''சாப்பிடுவதுதானே?''

''நீங்களில்லாமல் எப்படி முடியும்?''

''நான் எதற்கு.''

''என்ன கேள்வி இது?''

''கேள்விக்கென்ன?''

''இருவர் பசிக்கும் என்ன வித்தியாசம்!''

''ஓகோ!''

''என்ன ஓகோ?''

இதைக் கேட்ட அவள் சிரித்தாள். அவள் மட்டுமல்ல சிரித்தது, 1712-ஆம் ஆண்டு டிஸம்பரும் சிரித்தது.

## அத்தியாயம் 2

# காத்திருந்தவன் கதி

**அ**ங்கத்துடன் அங்கம் உராய, பாயின் அடிமரத் தண்டில் அலட்சியமாகச் சாய்ந்து அண்டையில் நெருங்கி அமர்ந்து, அனங்கனின் கணைகளை அள்ளிச் சொரிந்த அந்த அழகியின் உடல் கூறுகளாலும், அழைப்பு விடுத்த சொற்களின் திறத்தாலும், அலைந்த மனத்தினனாகிய இதயசந்திரன் அவள் இடையை அணைத்த அந்த நேரத்தில் உலகத்தையே மறந்து விட்டான். அப்படி மறந்ததன் விளைவாக ஜலதீபத்தில் மாலுமிகள் ஆங்காங்கு அலைந்து விளக்குகளை ஏற்றத் தொடங்கிவிட்டதையோ, தன்னையும் மஞ்சுவையும் நெருங்கா விட்டாலும் தூரத்தி லிருந்தே அரைப்பார்வையாகப் பார்த்துக் கொண்டு, சென்றதையோ அவன் உணரவில்லை. தவிர இரண்டரை ஆண்டுகளாக மஞ்சுவும் அவனுக்குப் புரியாத பெரும் புதிராகவே இருந்தாள்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் தொடர்ச்சியாக அவளுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்ததும் அவனுக்கு அவள் எட்டும் கனியாகவும் இருந்தாள், எட்டாக் கனியாக வும் இருந்தாள். இதேபோல் பலமுறை அவனுடன் தனித்து இணைந்து உட்கார்ந்து சரச வார்த்தைகள் பேசியிருக் கிறாள். திடீரென சில நாட்கள் அவனுடன் பேசாமலும் அவனை அருகில் நெருங்கவொட்டாமலும் எட்ட நிற்க வைத்துமிருக்கிறாள். இரண்டொருமுறை கடற்போரில் அவளுக்குக் காயம்பட்டபொழுது அவளைத் தன் தோளின் மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு போய் சிகிச்சை செய்திருக்கிறான் அவன். சிகிச்சையை முன்னிட்டு மார்புச் சட்டையைக் கிழித்துக் காயம்பட்ட இடத்தில் கட்டும் போட்டிருக்கிறான். இன்னும் சில சமயங்களில் அவளே ஆயாசப்பட்டு அவனை அறைக்கு அழைத்துப்போய், ''முழங்கால் பிடித்துக் கொண்டிருக்கிறது, சற்றுப்

பாருங்கள்,'' என்று கால் சராயை முழங்கால் வரை தூக்கிப் பரீட்சிக்கவும் அனுமதித்திருக்கிறாள். ஆனால் அப்படிச் சலுகை கிடைத்ததே என்று மனத்தை அலைய விட்ட சமயத்தில் அவனைப் புறக்கணித்து வெளியே அனுப்பியும் இருக்கிறாள். அவள் அவனை நோக்கிச் சினந்த சமயங்கள் உண்டு. நெருங்கி வரம்பு மீறாத அணைப்புக்கு இடங்கொடுத்த சமயங்களும் உண்டு. ஆகவே அவள் தனக்கு எட்ட இருக்கிறாளா கிட்டே இருக்கிறாளா என்பதை இதயசந்திரனால் அந்த இரண்டரை ஆண்டுகளில் புரிந்துகொள்ள முடியவில்லை. இருப்பினும் ஒவ்வொரு முறை அவள் இடம் கொடுத்த போதும் அவன் பலவீனம் அதிகப்படவே செய்தது. மனம் அதிக செயலுக்கு முயலத் தூண்டவே செய்தது.

அந்த இருவர் உறவையும் மாலுமிகளும் கவனிக்கத் தவறவில்லை. இதைப்பற்றித் தலைவியும் உபதளபதியும் இல்லாத சமயங்களில் மாலுமிகள் கேலியாகவும் பேசினார்கள். இதை ஒரு சமயம் துடுப்புத் தள்ளும் ஹர்கோவிந்த் கனோஜி காதிலும் போட்டான். பதிலுக்குக் கனோஜி இடி இடியென நகைத்தார். ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று கேட்டான் ஹர்கோவிந்த்.

''தமிழனை அனுப்பு'' என்று பதிலுக்குக் கூறினார் கனோஜி. அதன்படி வந்த இதயசந்திரனை முதுகில் தட்டிக்கொடுத்த கனோஜி, ''தமிழா! உன் ஜபம் பலிக்கவில்லைபோலிருக்கிறது'' என்று வினவினார்.

''யாரிடம்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''உன் கப்பல் தலைவியிடம்'' என்று கூறிச் சிரித்தார்.

அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பது தெரிந்ததால், ''நீங்கள் மஞ்சுவைப்பற்றி இப்படிப் பேசுவது தகுதியல்ல'' என்று அவன் சினத்துடன் கூறினான்.

''நான் மஞ்சுவைப் பற்றிக் கூறவில்லை தமிழா!''

''பின் யாரைப் பற்றிக் கூறுகிறீர்கள்?''



''உன்னைப் பற்றி. கடலில் ஒரு பெண் தனித்து அகப்பட்டுக் கொள்கிறாள். அப்படியும் உன் கையால் ஆகவில்லை. நானாயிருந்தால்...''

''உங்கள் குணம் எனக்குத் தெரியும்.''

''தெரிந்தும் படிப்பினை உனக்குப் பயனளிக்கவில்லையே!''

''மாதர்கள் மதிக்கத் தக்கவர்கள், தலைவரே.''

''ஆம் ஆம். நாம் அவர்களை மதிக்க வேண்டும். அவர்கள் நம்மை வதைக்க வேண்டும். போ தமிழா போ, நீ சுத்த துப்புக் கெட்டவன்'' என்று கூறி அவனை முதுகில் பேயறையாக அறைந்து நகைத்து அனுப்பினார்.

வளர்ப்புப் பெண்ணைப்பற்றி இப்படி அவர் பேசியது அவனுக்குப் பெரும் விந்தையாயிருந்தது. வெறுப்பாகவும் கூட இருந்தது. அவர் கண்ணியமுள்ளவரா என்பதில் கூடச் சந்தேகம் ஏற்பட்டது அவனுக்கு. ஆனால் அவருடன் சென்று போர்புரிந்த சமயங்களில் அவருடைய திறமையைக் கண்டு அவன் மயங்கினான். கப்பலை எப்படி நடத்தி, எப்படி வளைத்து, எப்படித் தாக்கினால் வெற்றி கிடைக்கும் என்பதைப் பல சமயங்களில் பல கோணங்களில் அவன் கண்டிருந்ததால் அவர் எதைச் சொன்னாலும் மறுக்கும் சக்தியை மற்றவர்போலவே அவனும் இழந்து கிடந்தான். ஆகவே அவர் மஞ்சுவைப்பற்றி அப்படிப் பேசியபோதும் ஏதும் அவன் மறுத்துப் பேசவில்லை. கோபத்தை வெளிக்குக் காட்டாமல் ஜலதீபத்துக்கு வந்து சேர்ந்தான். அப்படிக் கோபாக்கினியுடன் வந்த சமயத்தில் ஜலதீபத்தில் அந்த அக்னியை அணைக்க மஞ்சுவின் குளிர் விழிகள் காத்துக் கொண்டிருந்தன.

தங்களைப்பற்றி கனோஜி ஆங்கரே அறிந்து கொண்டிருக்கிறாரென்று மஞ்சுவுக்கு அவனே எடுத்துச் சொன்னபோது அவள் நகைக்கவே செய்தாள். ''இதில்

என்ன வியப்பு?'' என்று கப்பலில் தனது பஞ்சணையில் சாய்ந்த வண்ணம் வினவினாள் மஞ்சு.

''நானும் நீயும் பழகுவதை யாரோ சொல்லியிருக்கிறார்கள்'' என்று கோபத்துடன் கூறினான் அவன்.

''இருக்கலாம்'' என்றாள் அவள் அலட்சியமாக நகைத்து.

''யார் அப்படி நம்மைப் பார்த்திருக்கிறார்கள்?'' அவன் சொற்களில் கோபம் மிதமிஞ்சித் துளிர்த்தது.

''எல்லா மாலுமிகளும் பார்த்திருக்கிறார்கள்.''

''எல்லோருமா?''

''ஆம். நீங்கள் பார்க்கிற பார்வையிலிருந்து விவரமறியாத குழந்தைகூடப் புரிந்து கொள்ளும்.''

''அப்படியா!''

''ஆம், பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸ்தமித்து விட்டதாக நினைக்கிறது. உலகம் அஸ்தமிக்கவில்லை. விழித்துக் கொண்டுதான் இருக்கிறது.'' இதைச் சொன்ன அவள் பஞ்சணையில் நன்றாகக் கால்களை நீட்டிக் கொண்டாள். அவளை அவன் முறைத்துப் பார்த்துவிட்டு அறையைவிட்டு வெளியேறி விட்டான்.

இப்படிப் பல விஷயங்கள் பலமுறை நடந்தும் அவனுக்கு மட்டும் அவளை நெருங்கப் பூரண தைரியம் வராததாலும், திடீர் திடீரென்று மாறும் அவள் மனப் போக்கை முழுதும் புரிந்துகொள்ள முடியாததாலும் அவன் இரண்டரை ஆண்டுகளைச் சஞ்சலத்திலேயே கழித்தான். சிறந்த மாலுமியென்றும் காஸ்ட்ரோவைப் போல் கடற்போர் புரியும் திறமைசாலியென்றும் பெரும் பெயர் வாங்கியதுகூட அவன் சஞ்சலத்தைப் போக்கவுமில்லை, மனத்திற்குச் சாந்தியை அளிக்கவுமில்லை.

அன்றும் இன்றும் அதே நிலைதான் என்ற நினைப்பில் அவளருகில் அமர்ந்திருந்தான் அவன். அவள் அணுகும் போதெல்லாம் உடலில் அபரிமிதமாக எழுந்த காமத்தின் துடிப்பு அன்றும் அவனை அலைக்கழித்தது. அவள் பசியைப் பற்றிக் குறிப்பிட்டது அவனை எந்த உலகத்துக்கோ இழுத்துச் சென்றது. 'ஓகோ'வை மறுமுறை திருப்பிச் சொல்லி அவள் சிரித்தது அவன் காதில் இன்ப மணிகள் கலகலவென்று சப்திப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. அந்த வேளையில் ஒரு முடிவு செய்து கொண்டான். 'இவளை இன்று லேசில் விடுவதில்லை. ஆங்கரே முன்பு சொல்லிக் கொடுத்த பாடம் இருக்கிறது' என்று உள்ளே சொல்லிக்கொண்டான். வெளியிலும் கூறினான் சிறிது பலமாக ''இருக்கிறது'' என்று. அதைச் சொன்ன சமயத்தில் அவள் இடையில் பாய்ந்திருந்த அவன் கை இடையில் இறுகவும் செய்தது.

சூசகங்களை அவள் கவனித்தாள். ''என்ன இருக்கிறது?'' என்றும் வினவினாள் மஞ்சு.

''பாடம் இருக்கிறது மஞ்சு'' என்றான் அவன்.

''என்ன பாடமோ?''

''உன் தந்தை சொல்லிக் கொடுத்த பாடம்.''

''தந்தை இதற்கும் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறாரா?''

இதயசந்திரன் அவள் தோளில் முகத்தைப் புதைத்தான். அவன் தலை அவள் மலர்க் கன்னத்தில் இழைந்தது. ''இதற்கும் என்றால்?'' என்று கழுத்துக்கருகில் புதைந்த உதடுகளால் கேட்டான் அவன். அப்படி அவன் கேட்டதால் அவன் கழுத்தில் இதழ்கள் திறந்து மூடின.

அவள் கண்கள் கடலை நோக்கிக் கொண்டிருந்தன. கழுத்தில் அவன் உதடுகள் திறந்து மூடியதால் ஏற்பட்ட நெகிழ்ச்சி உடல் பூராவும் பரவியது. கடலைப் பார்த்த வண்ணம், ''இதற்குத்தானா!'' என்றாள் மெதுவாக.

''இதற்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாதா அவர்?'' அவன் உதடுகள் திறந்து மூடின.

''இதற்கு...'' என்று இழுத்தாள் அவள்.

"என்ன மஞ்சு?"

"பாடம் சொல்லிக் கொடுக்க அவர் தகுந்தவர்தான்.'

"யார்?"

"தந்தை."

"அவரும்..."

"உம் உம்..."

"மஞ்சு? மஞ்சு" என்ற அவன் தனது இடது கையை இடையிலிருந்து எடுத்து அவள் தலையைப் பிடித்துத் தனக்காகத் திருப்பி அழுத்தினான்.

அவள் விலகவில்லை. "வீரரே!" என்றாள் அவள் மெதுவாக.

"என்ன மஞ்சு?"

"உங்கள் உபாத்தியாயர்..."

"உம்."

"பாடத்தை எப்படிச் சொல்லிக் கொடுத்தார்?"

"எப்படியென்றால்?"

"அனுபவத்தில் தெரியும்படி..."

"ஊம்?"

"யாரையாவது..."

"யாரையாவதா?"

"ஆம். அவருக்கென்ன, பெண்களுக்குக் குறைச்சலா? இறங்குகிற துறைமுகங்களிலெல்லாம் பெண்கள்."

"அதனால்..."

"அதிலொருத்தியை..."

"சே சே..." என்று அவள் வாயைப் பொத்திய இதய சந்திரன் அவளை இழுத்தான் தன் பக்கமாக.

அவள் உணர்ச்சிகள் கொந்தளித்தன. அவள் சரே லென்று அவனை உதறினாள். திடீரென எழுந்து தனது அறையை நோக்கி வேகமாக நடந்தாள். "அதே பழைய



முறைதான். கிட்டே நெருங்குவது பிறகு வெட்டிப் போவது" என்று சீற்றங் கொண்ட இதயசந்திரனும் எழுந் திருந்து அவளைத் தொடர்ந்தான். மானைப்போல் கடுகி யோடிய அவள் தனது அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அறைக் கதவின் முன்பு நின்றுகொண்ட இதயசந்திரன் "மஞ்சு! மஞ்சு!" என்று கதவைத் தட்டினான்.

"என்ன?" என்று உள்ளிருந்து வந்தது அவள் குரல்.

"கதவைத் திற."

"எதற்கு?"

"திற சொல்கிறேன்."

"முடியாது."

"திற."

"முடியாது."

"கதவை உடைத்து விடுவேன்."

"மாலுமிகள் பார்க்கப் போகிறார்கள்?"

"பார்க்கட்டும். இனிமேல் நான் பூனையல்ல. திறக்கா விட்டால் உன் தந்தை கூறியதுபோல் கோட்டையை உடைத்து உள்ளே புகுந்து விடுவேன்."

சீற்றமும் பதட்டமும் அதட்டலும் நிறைந்த அவன் சொற்களைக் கேட்ட அவள் கதவைத் திறந்தாள். இதய சந்திரன் உள்ளே சென்று கதவைத் தாழிட்டான்.

மஞ்சுவின் விழிகள் அவனை வியப்புடனும் கோபத் துடனும் நோக்கின. இத்தனை நாளாக அவன் செய்யத் துணியாத செயலில் அவன் அன்று இறங்கிவிட்டதை உணர்ந்ததால் அவள் இதயத்திலும் லேசாகத் திகில் துளிர்த்தது. அந்தத் திகிலில் ஏதோ இன்பமிருப்பதும் அவளுக்குப் புரிந்தது. இருப்பினும் கேட்டாள் அவள், "பைத்தியமா உங்களுக்கு?" என்று.

''ஆம், பைத்தியந்தான். பைத்தியமாக அடித்தது நீதான்'' என்ற அவன் அவளை ஒரு தூக்காகத் தூக்கிக் கைகளில் ஒரு விநாடி தாங்கினான்.

அந்த நிலையில் அவளை தொப்பெனப் பஞ்சணையில் போட்டு அவளருகில் உட்கார்ந்து அவள் கைகளிரண்டை யும் அகல வைத்துத் தனது கைகளால் அவற்றை அழுத்திப் பிடித்து அவளை நோக்கி குனிந்தான். ''இரண்டரை ஆண்டுகள் காத்திருந்தேன் மஞ்சு, இனி காத்திருக்கத் திறனில்லை'' என்று அவள் கண்களை உற்று நோக்கிக் கூறவும் செய்தான்.

அவள் கண்கள் மெல்லச் சிரித்தன. இதழ்களில் இளநகை அரும்பியது. ''யார் காத்திருக்கச் சொன்னது?'' என்று மெல்ல உதடுகள் சொற்களைத் தொடுத்தன.

அவன் அவள் விழிகளுடன் விழிகளைக் கலந்து கேட்டான்: ''காத்திருந்தது தவறா!'' என்று.

அவள் நகைத்தாள். ''தமிழில் ஒரு பழமொழி கேட் டிருக்கிறேன், காத்திருந்தவன் பெண்டாட்டியைப் பற்றி'' என்றாள் நகைப்பின் ஊடே.

''உனக்குத் தமிழ்ப் பழமொழிகூடத் தெரியுமா மஞ்சு?'' என்று அவன் உதடுகள் கேட்டன. கைகள் தழுவின அவளை.

''ஒன்றிரண்டு தெரியும்.''

''நல்லது மஞ்சு! காத்திருந்தது தவறு என்று தெரிந்து கொண்டேன்.''

''அது மட்டுமல்ல...''

''வேறென்ன?''

''கோட்டையை அணுகியதும் வீரன் வெளியில் காத் திருப்பது.''

''காத்திருப்பது?''

''கோழைத்தனம்.''



''அப்படியா?''

''ஆமாம்.''

''அப்படியானால்...?''

''நான்...''

''உம்.''

''இத்தனை நாள்...''

''கோட்டையை உடைக்கட்டும் என்றிருந்தாயா?''

அவள் பதில் கூறவில்லை. அவனை ஒருமுறை நோக்கி விட்டு அவன் கைகளை அசைத்துப் பஞ்சணையில் புரண்டு படுத்தாள். லேசாக நகைத்தாள். கோட்டையை அவன் பிடித்திருப்பான் அன்று, விதி மட்டும் மீண்டும் குறுக்கிடா திருந்தால், டிஸம்பர் மட்டும் சிரிக்காதிருந்தால். கோட்டைக் கதவு திறக்க இருந்த சமயத்தில் கோவென அலறியது கப்பலின் சங்கு. அறைக் கதவும் தடதடவென இடிக்கப்பட்டது.

## அத்தியாயம் 3

# கண்ணாடியில் தெரிந்த கட்டழகி

அபாயத்தை வலியுறுத்தக் கப்பல் சங்கு அலறிய தாலும், அறைக் கதவும் தடதடவெனத் தட்டப்பட்ட தாலும், பரஸ்பரப் பிணைப்பிலிருந்தும் அணைப்பின் இணைப்பிலிருந்தும் பிரிந்தெழுந்த காதலரிருவரும் ஒருவரையொருவர் சிறிது நேரம் பார்த்துக் கொண்டனர். அந்த இருவர் பார்வையிலும் ஏமாற்றமிருந்தது, மஞ்சுவின் பார்வையில் ஏமாற்றத்துடன் வெட்கமும் கலந்திருந்தது. அசடு வழிய விழித்த இதயசந்திரனை நோக்கி, ''கதவைத் திறவுங்கள். மாலுமி ஏதாவது தவறாக நினைத்துக் கொள்ளப் போகிறான்'' என்று கூறிப் புன்முறுவலும் செய்தாள் மஞ்சு.

''சரி'' என்று அலுத்துக்கொண்டு கதவைத் திறக்கப் போன இதயசந்திரனை, ''இருங்கள்! இருங்கள்! ஒரு போர்வையை மேலே சுற்றிக் கொள்கிறேன். சட்டையின் பித்தான்களைப் பிய்த்து விட்டீர்களே!'' என்று அவசர அவசரமாகப் பஞ்சணையிலிருந்து இறங்கி ஒரு துப்பட்டியை எடுத்து மேலே போர்த்திக் கொண்டாள்.

பிறகு கதவைத் திறந்த இதயசந்திரன், எதிரே நின்ற ஹர்கோவிந்தை நோக்கி, ''எதற்கு இப்படிக் கதவை இடித்தாய்?'' என்று வினவினான் கோபத்துடன்.

''முக்கிய விஷயமில்லாவிட்டால் கதவை இடிப்பேனா?'' என்றான் ஹர்கோவிந்த் அவசரத்துடன்.

''நாங்களும் முக்கிய விஷயத்தைத்தான் பேசிக்கொண்டிருக்கிறோம்'' என்று சுட்டிக் காட்டினான் இதயசந்திரன்.

''இருக்கும். இல்லாவிட்டால் கதவைத் தாளிட்டுப் பேசுவீர்களா?'' என்று ஹர்கோவிந்த் மிகுந்த தாழ்மையுடனும் அடக்கத்துடனும் பதில் சொன்னான்.



அது மேலுக்கு அடக்கமென்றும் உண்மையில் ஹர்கோவிந்த் தன்னைக் கேலி செய்கிறான் என்றும் புரிந்து கொண்ட இதயசந்திரன் கேட்டான்: ''சரி; அப்படி என்ன தலை போகிற காரியம்? சொல்'' என்று.

''தலை மட்டுமல்ல போகக்கூடியது, கப்பலே போகிற காரியம்'' என்று விளக்கினான் ஹர்கோவிந்த்.

''கப்பல் போகிற காரியமா?''

''ஆம்.''

''எந்தக் கப்பல்? ஜலதீபமா?''

''ஆம்.''

''ஏதாவது சொப்பனம் கண்டாயா?''

''கண்டது சொப்பனமாயிருந்தால் கதவை இடிக்கத் துணிந்திருக்க மாட்டேன். நீங்களே வந்து பார்க்கலாம்'' என்ற ஹர்கோவிந்த் தனது கையிலிருந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியை இதயசந்திரன் கையில் கொடுத்தான்.

பிடுங்காத தோஷமாக அதை ஹர்கோவிந்தின் கையிலிருந்து வாங்கிக் கொண்ட இதயசந்திரன் அறையைவிட்டு வெளியே வேகமாக நடந்தான். தளமெங்கும் மாலுமிகள் நடமாட்டம் பலமாயிருந்தது. இரண்டாண்டுகள் இதயசந்திரன் தலைமையில் பணியாற்றியதால் எந்தெந்த நிலையில் எதெதை எப்படியெப்படிச் செய்ய வேண்டுமென்றறிந்த அந்த மாலுமிகளில் சிலர் பாய்மரத்தின் நடுத்தண்டிலிருந்த பெரு விளக்கைத் தவிர மற்ற விளக்குகளை அணைத்தனர். இன்னும் சில துடுப்புத் துழாவுவோர் களைக்கும்போது கை கொடுக்கக் கீழ்த்தளத்துக்கு ஓடினர். சிலர் சுக்கானைத் திருப்புவதிலும், தள பீரங்கிகள் சரியா இருக்கின்றனவா என்று பரிசோதிப்பதிலும் முனைந்தனர். உபதளபதி உத்தரவை அந்தந்தப் பகுதிகளுக்குத் தெரிவிக் அறைகூறுவோர் ஆங்காங்கு நின்றனர். இப்படி மே தளத்திலும் கீழ்த் தளத்திலும் வேலைகள் துரிதமா நடந்து கொண்டிருப்பதைக் கவனித்துக் கொண்

நடுப்பாய்மரத்துக்கு வந்த இதயசந்திரன் பாய்மரக் கயிற்றில் தொற்றி விடுவிடு என்று மேலே ஏறி அம்மர உச்சிக்குச் சிறிது கீழிருந்த பலகைமீது நின்றுகொண்டான். பலமாக வீசிய காற்று பாய்மரத்தை ஆட்டிக் கொண் டிருந்தது. அலைகள் சற்றுப் பெரிதாகிக் கப்பலின் சீரான கதியை அசைத்து மாற்றிக்கொண்டிருந்தது. அத்தனை ஆட்டத்தையும் அசைக்கலையும் லட்சியம் செய்யாமல் பாய்மரத்தில் சாய்ந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியை கண்ணில் வைத்துக் கைகளால் அதை நீட்டியும் குறைத்தும் சரி செய்து கொண்ட இதயசந்திரன், தனது கப்பலை எதிர்நோக்கி மூன்று கப்பல்கள் வருவதை உணர்ந்தான். அவன் அவற்றைப் பரிசீலித்து முடித்த சமயத்தில் மஞ்சுவும் புதுச்சட்டையையும் சராயையும் அணிந்து தலையிலொரு துண்டையும் குழலை அடக்கக் கட்டி மேலேறி வந்து பாய்மர உச்சித் தட்டில் இதயசந்திரனுடன் நின்றாள். ''எதிரிக் கப்பலா வருவது?'' என்றும் வினவினாள்.

பதிலுக்குத் தூரதிருஷ்டிக் கண்ணாடியை அவளிடம் அளித்த இதயசந்திரன், ''நீயே பார்!'' என்றான். அவள் நீண்டநேரம் பார்த்துவிட்டு, ''மூன்று கப்பல்கள் வருகின்றன'' என்றாள் அவனை நோக்கி.

''ஆம்'' என்று ஆமோதித்தான் அவன்.

''ஒன்றுதான் போர்க் கப்பல், மற்ற இரண்டும் சிறியவை, சாதாரணக் கப்பல்கள்'' என்று கூறினாள், அவள் தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்துக் கொண்டே.

''வேறென்ன தெரிகிறது?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

''மூன்றும் பிரிட்டிஷ் கப்பல்கள். பிரிட்டிஷ் கொடி இருக்கிறது.''

''அவ்வளவுதானா?''

''அவ்வளவுதான் எனக்குத் தெரிகிறது. உங்களுக்கு'' என்று வினவினாள் மஞ்சு.



இதயசந்திரன் அவளிடமிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியை வாங்கி மீண்டும் அக் கப்பல்களைக் கவனித்துக் கொண்டே, ''மஞ்சு! ஒன்று பெரிய போர்க் கப்பல். ஜலதீபத்தைவிட இரண்டு மடங்கு பெரியது. இரண்டு பக்கங்களிலுமாகச் சேர்ந்து பதினெட்டு பீரங்கிகள் அடித்தள வாய்களில் மட்டும் இருக்கின்றன. தவிர, தளத்தில் இரு பெரும் சுழல் பீரங்கிகள் இருக்கின்றன. கூட வருபவை சிறிய கப்பல்கள்தான். ஆனால் பெரிய கப்பலின் பயங்கரம் அவற்றுக்கும் உண்டு. மூன்றில் ஒன்று ப்ரிகேட், இன்னொன்று யாக்ட், மூன்றாவது கெட்ச்'' என்று கூறினான்.

''விளக்கிச் சொல்லுங்கள்'' என்றாள் மஞ்சு. மஞ்சு அவனைக் கேட்டதற்குக் காரணம் இருந்தது. கப்பல் பாகுபாடுகள், பிரிவுகள் அவளுக்குத் தெரியாததல்ல. இருப்பினும் அவன் சென்ற இரண்டாண்டுகளில் அடைந் துள்ள அனுபவத்தை எடை போடுவதிலும், எதையு அவன் வாயால் கேட்பதிலும் அவளுக்குத் திருப்தி யிருந்தது.

எப்போதும் கேட்கிற பாணியில்தான் அவள் கேட்ட ளென்றாலும், அவன் எப்பொழுதும் சொல்கிற முறையி பதில் சொல்லவில்லை. இம்முறை அவன் பதிலில் சிறி கலக்கமும் இருந்தது.

''ப்ரிகேட் இரண்டு தளங்களுள்ள போர்க் கப்ப பூர்ண ஆயுத பலமுள்ளது. அதன் பெயர்கூட அ பக்கப் பலகையில் பெரிதாக எழுதப்பட்டிருக்கிற 'டிபையன்ஸ்' என்று எழுதியிருக்கிறார்கள், பொரு தெரியுமா மஞ்சு அதற்கு?'' என்று வினவினான் இ சந்திரன்.

''தெரியாது'' என்றாள் மஞ்சு.

''எந்த ஆபத்தையும், யாரையும் அலட்சியம் செய் கூடியது. போரை லட்சியமின்றி நடத்தக் கூடியது எ

பெயர். தவிர, ப்ரிகேட் என்ற சொல் ப்ரிகேடா என்ற சொல்லிலிருந்து வந்தது. ப்ரிகேடா ஒரு கடற்பறவை. அந்தப் பறவை எதையும் கொத்திக் கொன்றுவிடும் குரூரத் தன்மையுள்ளது'' என்றான் இதயசந்திரன்.

''அப்படியானால் இதுவும் நம்மைக் கொத்திக் கொன்று விடுமா?'' என்று கேட்டாள்.

''பார்ப்போம்'' என்ற இதயசந்திரன், ''மஞ்சு, இன்னொன்று கெட்ச் என்று சொன்னேனல்லவா? அது கடலோரமாகச் செல்லும் சிறு வணிகக்கப்பல். அதன் பெயர் 'ஆன்' என்று எழுதியிருக்கிறது. அதிலும் பீரங்கிகள் இருக்கின்றன. ஆயுதம் தரித்த மாலுமிகள் இருக்கிறார்கள். அது தவிர, 'யாக்ட்' என்பது உல்லாசப் படகு. சிறு கப்பல் போன்றது. ஆனால் இந்த யாக்டில் சின்னஞ்சிறு பீரங்கிகள் இரண்டிருக்கின்றன. தோற்றத்தில் சிறிதானாலும் பெரும் சேதம் விளைவிக்கக் கூடியவை. அதன் பக்கத் துவாரங்களிலும் பீரங்கிகள் எட்டிப் பார்க்கின்றன. ஜலதீபத்தை வேட்டையாட மூன்று பலமுள்ள நாவாய்கள் நெருங்குகின்றன'' என்றும் கூறினான்.

அப்படி அவன் கூறிக்கொண்டேயிருக்கையில் திடீரென சொற்களை நிறுத்தினான். அவன் முகத்தில் போர்க் கவலை போய் வியப்பின் குறி நன்றாகப் படர்ந்தது. அந்த முக மாறுதலை மஞ்சுவும் கவனித்தாள். ''என்ன பார்க்கிறீர்கள்? வியப்பதற்கு ஏதாவதிருக்கிறதா?'' என்று வினவவும் செய்தாள்.

''ஒன்றுமில்லை மஞ்சு, சீக்கிரம் கீழே சென்று போருக்கு ஏற்பாடு செய். இந்தப் பாய்மரத் தண்டிலுள்ள நடு விளக்கையும் அணைத்துவிடச் சொல், எதிரிக் கப்பல்கள் முழு விளக்குகளுடன் ஜாஜ்வல்யமாக வருகின்றன'' என்று கூறினான்.

மஞ்சு போகவில்லை. ''என்ன பார்க்கிறீர்கள்? எதைப் பார்த்து வாயைப் பிளந்தீர்கள்?'' என்று கேட்டு, ''அதை



இப்படிக் கொடுங்கள்'' என்று தூரதிருஷ்டிக் கண்ணாடியைப் பிடுங்கிக் கொண்டு பார்த்தாள்.

'ஆன்' என்ற சிறு வணிகக் கப்பலில் அழகியொருத்தி நிலவுபோல் நடுவில் நின்றிருந்தாள். அந்த வெள்ளைக் காரிக்குப் பதினைந்து வயதிருக்கலாம். பருவத்தின் திரட்சி பரிபூர்ணமாயிருந்தது அவள் தோற்றத்தில். அவள் பக்கத்தில் ஒரு வெள்ளைக்கார வாலிபனும் நின்றிருந்தான். அவன் கை அவள் கழுத்தைச் சுற்றி வளைந்து கிடந்தது. இதைக் கண்ட மஞ்சு, ''வீரரே! அவள் உங்களுக்கு எட்டாப் பழம். இந்தாருங்கள். வேண்டுமானால் பார்த்துப் பல்லிளித்துக் கொண்டிருங்கள்'' என்று முரட்டுத்தனமாக அவனிடம் தூரதிருஷ்டிக் கண்ணாடியைத் திணித்துவிட்டுப் பாய்மரக் கயிற்றில் தொற்றி இறங்கிச் சென்றாள் கடுவேகத்துடன்.

'அவள் எட்டாப் பழமாம்! இவள் மாத்திரம் என்னவாம்? இரண்டு வருஷமாகக் கூட இருக்கிறேன். கிட்டே நெருங்க விட்டாளா? இன்று நெருங்க முற்பட்டேன். முடிவு என்ன? மறுபடியும் போர்' என்று முணுமுணுத்துக் கொண்டே இதயசந்திரனும் கீழே கயிற்றில் இறங்கினான். இறங்கியதும் உத்தரவுகளைக் கிடுகிடுவெனப் பிறப்பித்தான். ஹர்கோவிந்தைப் பார்த்து, நீ கீழே துடுப்புத் துழாவும் இடத்திற்குப் போ'' என்று கூறிவிட்டு, சற்று எட்ட இருந்த ஒரு மாலுமியை நோக்கி, ''இப்ரஹீம்! சுக்கானை நீ கவனித்துக் கொள். யாரங்கே மாலுமி! நடுப்பாயைத் தவிர மற்ற இரு பாய்களையும் அவிழ்த்து விடு, ஜலதீபத்திற்கு வேகம் வேண்டாம். யாராவது ஒருவன் காம்பஸ் (திசை காட்டும் கருவி) எடுத்துவா'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டு ஜலதீபத்தின் முகப்பில் நின்று கொண்டிருந்த மஞ்சுவிடம் சென்று, ''தலைவியின் உத்தரவை எதிர்பார்க்கிறேன். இக்கப்பலின் வேகத்தைத் தளர்த்தி முதலில் அந் ஆயுதப் படகைச் சுடப்போகிறேன். பிறகு போர்

கப்பலின் பாய்மரங்களைச் சுட்டு வீழ்த்தப் போகிறேன். கடைசியாக அந்த வணிகக் கப்பலைத் தாக்க உத்தேசம்'' என்று தனது போர்த் திட்டத்தை விவரித்தான்.

மஞ்சு சரேலென்று திரும்பி அவனை நோக்கினாள். ''ஆன் என்று பெயர் போட்டிருக்கிறதே அக்கப்பலா?'' என்று வினவினாள் துரிதமாக.

''ஆம் தலைவி'' என்றான் இதயசந்திரன்.

''கூடியவரை சேதமில்லாமல் அதைப் பிடியுங்கள்.''

''செய்கிறேன்.''

''செய்கிறேன் என்ன! அப்படித்தான் செய்யப் போகி றீர்கள்'' என்ற மஞ்சு பல்லைக் கடித்தாள்.

''எதற்குக் கோபிக்கிறாய் மஞ்சு?'' என்று வினவி னான்.

''ஏனா? அந்த வெள்ளைக்காரியிருக்கிற கப்பலைப் பற்றி என்ன அக்கறை உங்களுக்கு? அதைக் கடைசியில் தாக்க வேண்டுமாம்!''

''மஞ்சு! மஞ்சு! இதென்ன பைத்தியம்? அதைக் கடைசியில் தாக்குவதில் லாபமிருக்கிறது.''

''ஆமாம். இருக்கிறது லாபம்— உங்களுக்கு'' என்று கூறிய மஞ்சு வேகமாக நடந்து மாலுமிகள் இரண்டு பாய் களை இறக்குவதைக் கவனிக்கத் தொடங்கினாள்.

இதயசந்திரன் இதயத்தில் கோபம் பொங்கி எழுந்தது.

சுக்கான் பிடித்த இப்ரஹிமிடம், ''இப்ரஹிம்! வழக்க மாகப் போரிடுகிறபடி போர்க் கப்பலுக்கு எதிரில் நமது மரக்கலத்தின் பக்கப் பகுதியைத் திருப்பாதே. போர்க் கலத்துக்கு எந்தப் பழுதையும் ஆரம்பத்தில் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. போர்க் கப்பல் வந்தால் அதற்கு நேர் எதிர்த் திக்கில் அதைவிட்டு விலகி ஜலதீபம் ஓடட்டும்,



அதைத் தொடர்ந்து இரு சிறு கப்பல்கள் வருகின்றன. ஜலதீபம் அவற்றை நோக்கி மட்டும் போகட்டும். பாய் களில் இரண்டை இறக்கி விட்டதால் சுக்கானை நீ அளவுடன் திருப்பலாம்'' என்று உத்தரவிட்ட இதய சந்திரன் கீழ்த்தளம் சென்று, ''ஹர்கோவிந்த்! துடுப்புக் களை நான் உத்தரவிடும் வரை வேகத்துடன் துழாவ வேண்டும். ஜலதீபம் அதிகமாக நகராமல் தத்தளிப்பது போன்ற பிரமையை ஏற்படுத்த வேண்டும்'' என்று கூறிவிட்டு, 'பர்னாண்டோ' என்ற போர்ச்சுகீஸியனைத் தன்னுடன் வரும்படி அழைத்துக் கொண்டு மேல்தளம் வந்தான். அவனுக்குப் பின்வருமாறு உத்தரவிட்டான்: ''பர்னாண்டோ! நாம் கரைக்கு அருகிலிருக்கிறோம். ஆகவே கரையை நோக்கி இருமுறை பீரங்கியால் சுடு. பிறகு ஜலதீபம் தப்பித்துக்கொள்ளப் போகிற நிலையில் அது எதிரி போர்க் கப்பலுக்கு நேர் எதிர்த் திக்கில் கரை நோக்கி ஓடட்டும்.''

''போர்க் கப்பலிடமிருந்து ஓடினால் அது நம்மை விடுமா?'' என்று பர்னாண்டோ வினவினான்.

''விடக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப் பிராயம்.''

''தரையை நோக்கி பீரங்கி வெடி வீசினால் உதவி அழைப்பதாக அர்த்தமல்லவா?''

''அப்படித்தான் அர்த்தம்.''

''இது தங்கள் பெயருக்கும் கீர்த்திக்கும் தகுந்த தல்லவே!''

''பெயரில் என்ன இருக்கிறது'' என்று கூறிய இதய சந்திரன் கப்பலின் முனைக்குச் சென்று தூரதிருஷ்டிக் கண்ணாடியால் எதிரிக்கப்பல்களைச் சில விநாடிகள் நோக்கினான். பிறகு கூவினான், ''திருப்பு சுக்கானை'' என்று. ஜலதீபம் மெல்லத் திரும்பியது. ''துழாவுங்கள் பலமாக'' என்று மீண்டும் கூவினான். தளத்திலிருந்து

கீழ்த்தளம் செல்லும் வாயிலில் நின்றிருந்த மாலுமி, ''துழாவுங்கள் பலமாக'' என்று அதைத் திருப்பிக் கூவினான் கீழ்ப்புறம் நோக்கி.

''பர்னாண்டோ? சுடு தரையை நோக்கி'' என்றான்.

தரையை நோக்கி இருமுறை பீரங்கி பலமாகச் சப்தித்தது. ஜலதீபம் கரை நோக்கி நகர்ந்தது. அதே சமயத்தில் எதிரிகளின் கப்பல்களில் பெரும் சுறுசுறுப்புக் காணப்பட்டது. அவற்றின் பாய்கள் புடைத்து எழுந்தன. இரண்டொரு பீரங்கிகள் வெடித்து ஜலதீபத்தை எச்சரிக்கை செய்தன. அந்தக் கப்பல்களிலிருந்து தப்பி ஜலதீபம் புறமுதுகு காட்டி ஓடிக் கொண்டிருந்தது.

மஞ்சு தடதடவென்று இதயசந்திரனை நோக்கி நடந்து வந்தாள். ''புறமுதுகு காட்ட வெட்கமாயில்லை உங்களுக்கு?'' என்று சீறினாள்.

''இல்லை'' என்ற பதில் இதயசந்திரனிடமிருந்து திட்டமாக வந்தது.

அதே சமயத்தில் பிரிட்டிஷ் போர்க் கப்பலான டிபையன்ஸ் பெரும் வெடிகுண்டு ஒன்றை ஜலதீபத்தின் மீது வீசியது.

## அத்தியாயம் 4

# கடற்போர்

பிரிட்டிஷ் போர்க் கப்பலான டிபையன்ஸ் ஜலதீபத்தின் மீது வீசிய வெடிகுண்டு ஜலதீபத்தின் வேகத்தின் காரணமாக அதன்மீது விழவில்லையாதலால் எந்தச் சேதமும் ஜலதீபத்திற்கு ஏற்படவில்லை. வீணாக்கப் பட்ட அந்த வெடிகுண்டு ஜலதீபத்துக்கு அருகில் விழுந்து நீரைப் பளேரென்று அள்ளித் தெளித்ததே தவிர வேறு பயனெதுவும் ஏற்படாததைக் கண்ட இதயசந்திரன் முகத்தில் மகிழ்ச்சிக்குறி உலாவுவதைக் கண்ட மஞ்சு, ''அந்தக் குண்டு இங்கு விழாததைப் பற்றி உற்சாகம் போலிருக்கிறது?'' என்று வினவினாள் கோபத்துடன்.

தூரதிருஷ்டிக் கண்ணாடியை மீண்டும் கண்ணில் பொருத்திக் கொண்டு போர்க் கப்பலைக் கவனித்த இதய சந்திரன், ''ஆம்'' என்று மிகுந்த அசட்டையுடன் பதில் கூறினான்.

''ஓடுவதில் உங்களுக்கிருக்கிற சாமர்த்தியம் எதிரிக் கில்லை'' என்று குத்தினாள் மீண்டும் மஞ்சு.

''இல்லை. இருந்திருந்தால் அந்தக் குண்டு இந்தத் தளத்தில் விழுந்திருக்க வேண்டும். குண்டு வீச்சின் எல்லை யைக் கவனித்து அந்த எல்லைக்குள் ஜலதீபம் இருக்கிறதா என்பதைப் பார்த்த பின்பு எதிரி பீரங்கியைப் பிரயோகித் திருந்தால் குண்டு இங்கு விழுந்திருக்கும். ஏதோ பீரங்கியை வெடிக்க வேண்டுமென்பதற்காகக் குண்டு வீசுவது வீண் நஷ்டம்'' என்றான் இதயசந்திரன் கண்களிலிருந்து கண்ணாடியை எடுக்காமலே.

''அந்த நஷ்டத்திற்கு நீங்கள் உள்ளாக மாட்டீர்கள்?'' மஞ்சுவின் குரல் இகழ்ச்சியைக் காட்டியது.

''மாட்டேன். ஒரு குண்டுகூட வீணாவதை நான் விரும்பவில்லை.''

''போரையும் விரும்பவில்லையா?''

''இல்லை.''

''ஓடத்தான் விரும்புகிறீர்கள்?''

''ஆம்.''

''ஏன்?''

''ஓடுபவனைக் கண்டால் துரத்துபவனுக்கு எளிது'' என்று சொல்லிக் கொண்டிருந்த இதயசந்திரன் திடீரென ''துடுப்புகள் நிற்கட்டும் துழாவ வேண்டாம்'' என்று கூறினான். உடனே தளத்தில் ஓடி, ''பர்னாண்டோ! அந்தத் தளபீரங்கியை டிபையன்ஸை நோக்கித் திருப்பு. அதோ அதன் முகப்புப் பாய்மரத்தின் நடுவில் ஒரு பெரிய விளக்கு தெரிகிறது பார். அதைப் பார்த்துச் சுடு'' என்று உத்தரவிட்டான். அத்துடன் தளபீரங்கிகளில் இன்னொன்றின் அருகில் தான் சென்று அதை இரு கைகளாலும் பிடித்துத் திருப்பி டிபையன்ஸுக்குப் பின்னால் வந்திருந்த ஆயுதந் தரித்த சிறு கப்பலின் பாயை நோக்கிச் சுட்டான்.

திடீரென எதிர்பாராத விதமாக வெடித்த அந்த இரு பீரங்கிகளும் விளைவித்த நாசத்தால் எதிரிக் கப்பல்களின் தளங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பர்னாண்டோவின் குறி தப்பவில்லை. பாய்மர விளக்கு படுதூளாக, பாய்மரமும் முறிந்து, பாயும் தீப்பிடிக்கவே டிபையன்ஸ் சட்டென்று வேகத்தை அடக்கிக் கொண்டது. ஒரு பாய் நாசமடைந்தாலும் நடுமரப் பெரும் பாயும் பின் பாயும் நன்றாக விரிந்திருந்ததால் அதன் வேகத்தில் அதிகத் தடை ஏற்படவில்லையென்றாலும் போர்க்கப்பலின் தலைவன் சட்டென்று துடுப்புத் துழாவுவதை நிறுத்தி சற்று வேகத்தைக் குறைத்தான்.

மஞ்சு மெள்ள மெள்ளப் புரிந்து கொண்டாள் இதயசந்திரன் போர் முறையை. பிரிட்டிஷ் கப்பலை வேண்டுமென்றே தன்னைத் துரத்தவிட்டு அந்தக் கப்பல் சற்றும் எதிர்பாராத சமயத்தில் பாயைச் சுட்டுவிட்டான்



இதயசந்திரன் என்பதைப் புரிந்து கொண்டதால், அடுத்து அவன் அந்தப் போர்க் கப்பலின் மற்ற பாய்களையும் சுட்டுவிடுவான் என்று எதிர்பார்த்தாள். தவிர அந்தச் சிறு கப்பலின் பாயை எதற்காக உடைத்தான் என்பதும் புரியவில்லை அவளுக்கு.

இதயசந்திரன் இட்ட அடுத்த உத்தரவுகள் அவளுக்கு வியப்பை அளித்தன. ''இப்ரஹிம்! சுக்கானைத் திருப்பி 'ஆன்' என்ற சிறு கப்பலை நோக்கிச் செல். துடுப்புகள் துழாவட்டும். அதோ பார் அந்த இரு சிறு கப்பல்களும் பெரிய கப்பலைவிட்டுப் பிரிந்து நிற்கின்றன. பர்னாண்டோ! நாம் போர்க் கப்பலிடமிருந்து சற்று எட்டவே செல்வோம். நம்மை அந்த மூன்று கப்பல்களும் வளைத்துக் கொள்ளவே பிரிந்து நிற்கின்றன. நாம் அவற்றைச் சேர்ந்து தாக்க முடியாது, ஒவ்வொன்றாகத் தாக்குவோம்'' என்று கூறிவிட்டு, ''மஞ்சு! இந்தா! இந்த பீரங்கியைப் பிடித்துக் கொள். 'ஆன்' என்ற கப்பலின் இரண்டு பாய்களில் ஒன்றை நான் சுட்டுவிட்டேன். இன்னொன்றை நீ சுட்டுவிடு'' என்று உத்தரவிட்டுக் கப்பலின் அடித்தளத்துக்குச் சென்று அங்கு சில உத்தரவுகளை ஹர்கோவிந்துக்கு இட்டான். தூரதிருஷ்டிக் கண்ணாடியை அவனிடம் கொடுத்து எதிரிக் கப்பல்களைப் பார்க்கச் செய்தான். பிறகு துடுப்புகளை எவ்வப்பொழுது எந்த வேகத்தில் துழாவ வேண்டும் என்று கூறினான்.

''டிபையன்ஸ் பெரிய போர்க்கப்பல், ஹர்கோவிந்த்! ஜலதீபத்தைவிட அதிகப் பீரங்கிகளை, அதுவும் பெரிய பீரங்கிகளை உடையது. அதை நெருங்கித் தாக்கிப் பயனில்லை. அதன் பாய்மரங்களை ஒவ்வொன்றாக நாம் உடைத்து அதன் வேகத்தை உடைக்க வேண்டும். பிறகு வேகமாக நெருங்கி இடித்து நமது வீரர்களை அதன்மீது தாவச் செய்து போரிட வேண்டும். அது கடைசிப் பகுதி. இப்பொழுது நாம் அந்த 'ஆன்' என்ற கப்பலை நோக்கிச் செல்கிறோம். பலமாகத் துழாவு துடுப்புகளை!'' என்று கூறிவிட்டுத் தளம் வந்தான்

அங்கு வந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியால் எதிரி கப்பல்களை ஆராய்ந்தான். ஆராய்ந்ததில் திருப்தியும் கொண்டான். எதிரிக் கப்பல்கள் மூன்றாகப் பிரிந்து அர்த்தசந்திர வளையமாக நகர்ந்து கொண்டிருந்தன. அந்த வளையத்தின் நடுவில் 'ஆன்' கொண்டு வரப்பட்டிருந்ததைக் கவனித்த இதயசந்திரன் அதில்தான் வர்த்தகச் சரக்குகள் அதிகமிருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். அவன் பார்த்த சமயத்தில் மற்றொரு ஆயுதக் கப்பலில் பறக்க விடப்பட்ட கொடியிலிருந்து அது பம்பாய் கவர்னரின் கப்பலென்பதையும் புரிந்து கொண்டான். ஒரு புறம் டிபையன்ஸ் என்ற போர்க் கப்பலும் இன்னொரு புறம் கவர்னரின் ஆயுதக் கப்பலும் பாதுகாப்பளிக்க நடுநாயகமாய் நின்றிருந்த ஆன் என்ற கெட்சின் இரு பீரங்கிகளும் ஜலதீபத்தை நோக்கித் திருப்பப்பட்டிருந்தன. அந்தச் சிறு கப்பலை நோக்கி ஜலதீபத்தை நேராகச் செலுத்த உத்தரவிட்டான் இதயசந்திரன்.

அந்த உத்தரவை இதயசந்திரன் கூவ, அதை மற்றொரு மாலுமி கீழ்த்தளத்துக்கு இரைந்து அறிவிக்க ஜலதீபம் அந்த நடுக்கப்பலை நோக்கி நகர்ந்தது. இதைக் கண்ட மஞ்சு கேட்டாள், ''இப்பொழுது போர்க் கப்பலின் பீரங்கிகள் ஜலதீபத்தைச் சுடாதா?'' என்று.

''சுடாது'' என்றான் இதயசந்திரன்.

''ஏன்?'' என்றாள் மஞ்சு.

''இந்தா, இந்தக் கண்ணாடியில் எதிரிக் கப்பல்களின் வளைவைப் பார்'' என்று அவளிடம் கண்ணாடியைக் கொடுத்தான்.

''அதோ பார். இப்பொழுது அந்தக் கப்பல்கள் நன்றாக வளையமாகி ஜலதீபத்தைக் கௌவ வரும் நண்டைப் போல ஆகிவிட்டன. நண்டின் நீண்ட முன்புறக் கொடுக்குகளைப் போல் போர்க்கப்பலும் கவர்னரின் சிறு ஆயுதக் கப்பலும் ஜலதீபத்தை நெருங்குகின்றன. ஜலதீபம் அவற்றின் கொடுக்குக்குள் கால்வாசி செல்லும். பிறகு நின்றுவிடும்'' என்று விளக்கினான்.



மஞ்சு கண்ணாடியை அவனிடம் கொடுத்தாள். ''இப்படி வாருங்கள் ஒரு விநாடி'' என்று அழைத்தாள் பக்கத்திலிருந்த பாயின் மறைவுக்கு, இதயசந்திரன் சென்றான் அவளைத் தொடர்ந்து. பாயின் மறைவில் நின்ற மஞ்சு சொன்னாள் ''உங்களிடம் அபராதப்பட்டு விட்டேன்'' என்று.

''என்ன அபராதம்?''

''நீங்கள் ஜலதீபத்தைப் புறமுதுகு காட்டச் செய்ததால் உங்களைக் கோழை என்று நினைத்தேன். அது அபராதமல்லவா?''

''ஆம் மஞ்சு'' என்றான் இதயசந்திரன்.

''இந்தாருங்கள் அபராதக் காணிக்கை!'' என்று தனது இரு கைகளாலும் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கீழே இழுத்து இதழ்களை அவன் கன்னத்தில் அழுத்தி விட்டுப் பிறகு சரேலென்று ஓடிவிட்டாள் தளத்தின் மற்றொரு பகுதிக்கு.

இதயசந்திரன் திக்பிரமை பிடித்து நின்றான். தனது போர்த் திறமையை உணர்ந்து மஞ்சுவிடமிருந்து எதிர் பாராதவிதமாகக் கிடைத்த அந்த வீரப் பரிசு அவனை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. உடலெல்லாம் புல்லரிக்க, உணர்ச்சியெல்லாம் ஊசி முனையில் நிற்க, சற்று நேரம் குழம்பிவிட்ட அவனை இப்ராஹீமின் குரல், இவ்வுலகுக்குக் கொண்டு வந்தது, ''தலைவரே! நாம் நடுக்கப்பலை அணுகப் போகிறோம்!'' என்று கூறினான் இப்ராஹீம்.

''போர்க் கப்பலுக்கும் சிறு ஆயுதக் கப்பலுக்கும் இடையில் ஜலதீபம் தீப முகத்தை நீட்டுகிறது'' என்று கூவினான் பர்னாண்டோ.

அந்தக் கூவல்களால் அழைக்கப்பட்ட இதயசந்திரன் வெகுவேகத்துடன் பர்னாண்டோ இருந்த இடம் வந்து, ''பர்னாண்டோ! சற்று ஜலதீபம் நிற்கட்டும்!'' என்றான், பிறகு எதிரே தனது கப்பலின் முகப்பிலிருந்து சற்றுத் தள்ளி இரு புறமும் நின்ற கப்பல்களையும், எதிரே சற்று தள்ளி நின்ற 'ஆன்' என்ற கெட்சையும் கவனித்துத் திருப்தியடைந்தான்.

எதிரிக் கப்பல்களில் திடீரெனக் குழப்பமுண்டாயிற்று. கவர்னரின் சிறு கப்பலிலிருந்த தலைவன் 'சுடு எதிரி மீது' என்று போர்க்கப்பலுக்கு விளக்கச் சைகை செய்தான்.

போர்க் கப்பலின் தலைவன் சுடவில்லை. தனது கப்பலும் கவர்னர் ஆயுதக் கப்பலும் நேருக்கு நேர் நிற்பதாலும் இடையே ஜலதீபம் மூக்கை மட்டும் நுழைத்திருப்பதாலும் தனது பக்கப் பீரங்கிகள் சுட்டால் கவர்னரின் ஆயுதக் கப்பல் மீதுதான் விழுமே தவிர ஜலதீபத்தைத் தொடாதென்பதை உணர்ந்து கொண்டதால் 'சுடமுடியாது' என்று பதில் விளக்குக் காட்டி பிரிக்கவும் செய்தான்.

அடுத்த விநாடி ஜலதீபம் பிசாசுபோல் இயங்கியது. திடீரென இரு கப்பல்களுக்கும் இடையே அது புகுந்து போர்க்கப்பலின்மீது பக்கப் பீரங்கிகளைப் பலபலவென்று வீசியது. எதிரிப் போர்க் கப்பல் பீரங்கிகளை இயக்குவதற்கு முன்னால் வீசப்பட்ட குண்டுகள் அதன் தளத்தில் திடீர் திடீரென விழவே, அதன் தலைவன் கப்பலை வேகமாக நகர்த்தினான் குண்டுவீச்சின் எல்லையிலிருந்து.

அந்தப் பெரும் தவறை செய்திருக்கா விட்டால் ஜலதீபம் அன்று உருக்குலைந்து இருக்கும். அந்தத் தவறால் நண்டுவளையமும் உடைந்துவிடவே, இன்னொரு பக்கத்திலிருந்த கவர்னர் கப்பலின் பாய்களை ஜலதீபத்தின்



இன்னுமிரு பீரங்கிகள் உடைத்தன. போர்க் கப்பலின் தளத்தில் குழப்பமிருந்தது. தீப்பற்றிய ஒரு பாயின் நுனியை மாலுமிகள் அணைத்துக் கொண்டிருந்தார்கள். மற்ற பாய்கள் நன்றாக விரிந்திருந்ததால் போர்க் கப்பல் வேகமாகப் பின்வாங்கியது. கவர்னர் கப்பலின் பாய்மரங்கள் உடைந்து பாய்கள் தீப்பிடித்து எரிந்தன. இரு கப்பல்களிலும் குழப்பமும் கூச்சலும் அதிகமாக இருந்த சமயத்தில் இதயசந்திரன் ஜலதீபத்தை 'ஆன்' என்ற நடுக் கப்பலை நோக்கி வெகுவேகமாகச் செலுத்தி, ''பர்னாண்டோ! அதன் பாய்களையும் எரித்து விடு'' என்றான். அத்துடன் கீழ்த்தள பீரங்கிகளை இருபுறமும் இயக்கி கவர்னர் கப்பல் மீதும் போர்க்கப்பல் மீதும் வெடி குண்டுகளை வீசித் தாக்கினான்.

பூம்பூம் என்று சப்தித்துக் கடலை நடுங்க வைத்த ஜலதீபத்தை நெருங்க முடியாவிட்டாலும், கவர்னர் கப்பலின் தலைவன் தனது பீரங்கிகளை அதை நோக்கி இயக்கினான். கையில் வைத்திருந்த நீளத் துப்பாக்கியால் பீரங்கி இயக்கிய பர்னாண்டோவைச் சுட்டுவிடவும் முயன்றான். அதே போல பீரங்கிகளை வெடித்து டிபையன்ஸும் ஜலதீபத்தை நெருங்கியிருந்தால் முடிவு வேறுவிதமாயிருக்கும். ஆனால் கோழையான அந்தப் போர்க் கப்பலின் தலைவன் பாய் விரித்துப் பின்வாங்கி ஓடிக் கொண்டிருந்தான்.*

அவன் ஓடினாலும் கவர்னர் கப்பல் தலைவன் மும்மரமாகப் போரிட்டான். தைரியத்துடன் ஜலதீபத்தை நெருங்கி பீரங்கிகளை வேகத்துடன் இயக்கிச் சரமாரியாகக் குண்டுகளை வீசினான்.

---

* டிபையன்ஸ் பம்பாய் சேர்ந்ததும் கோழைத்தனத்துக்காக அவன் தலைவன் விசாரிக்கப்பட்டு வேலையிலிருந்து விலக்கப்பட்டான். *Kanhoji Angrey by Manohar Malgonkar.*

அந்தக் கப்பல்மீது பதில் குண்டுகளை வீசிக் கொண்டே நடுக்கப்பலான 'ஆனை' நோக்கிச் சென்ற இதயசந்திரன் ஜலதீபத்தின் பீரங்கிகளைக் கொண்டு அந்தக் கப்பலை மீண்டும் சுட்டான். தள பீரங்கிகளிலொன்றைத் தானே இயக்கிப் பாய்மரத்தை உடைத்தான். அத்துடன் ஜலதீபத்தை அதனுடன் நெருக்கி, ''ஹர் ஹர் மகாதேவ்!'' என்று கூவினான்.

ஜலதீபத்தின் மாலுமிகள் அந்தக் கூவலைக் கேட்டு உருவிய வாட்களுடன் தளத்துக்கு ஓடிவந்து, ''ஹர் ஹர் மகாதேவ்!'' என்ற மகாராஷ்டிரர் போர்க்கூச்சலை எழுப்பினர். இரு கப்பல்களையும் இணைக்கக் கொக்கிகள் வீசப்பட்டன. 'ஆன்' நெருங்கி ஜலதீபத்துடன் உராய்ந்தது.

எங்கும் பயங்கர இரைச்சல்! துப்பாக்கிச் சூடு பயங்கரமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக எழுந்தது, ''ஹர் ஹர் மகாதேவ்'' என்ற மகாராஷ்டிரர் போர்க்கூச்சல்! ஜலதீபத்தின் மாலுமிகள் 'ஆன்' மீது தடால் தடாலெனப் பாய்ந்தனர். வளைந்த அவர்கள் வாட்கள் எதிரிகளை வெட்டின. எதிரிகளும் போரிட்டார்கள் பலமாக. எல்லாவற்றுக்கும் மேலாகப் போரிட்டான் கண்ணாடியில் தெரிந்த பிரிட்டிஷ் வாலிபன். ஆனால் ஜலதீபத்திலிருந்து ஒரு பீரங்கி குண்டு அவன் வாட் கையைப் பிய்த்துக் கொண்டு போயிற்று, அந்தச் சமயத்தில் உள்ளிருந்து வந்த வெள்ளைக்காரப் பெண் அவனைக் கையால் தாங்கிக் கொண்டு கிரீச்சிட்டு ஓவென்று அலறினாள்..

சற்றுத் தூரத்தில் மீண்டும் வெடிகுண்டு சத்தம் கேட்டது. கனோஜியின் கடற்படையைச் சேர்ந்த இரு கப்பல்கள் தூரத்தில் தென்பட்டன. போர் முடிந்ததென்பதைப் புரிந்துகொண்ட இதயசந்திரன் தனது கைத் துப்பாக்கியைக் கச்சையில் செருகிக்கொண்டு வாளையும் உறையில் போட்டுக்கொண்டு அந்தப் பெண்ணை அணுகி



னான். வெள்ளைக்கார வாலிபன் வெடியால் மரணமடைந்து ரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவனைக் கையில் தாங்கிய அந்த ஆங்கிலப் பெண் மேற்கொண்டு அலறக்கூடச் சக்தியின்றி மயக்கமுற்றிருந்தாள். இறந்தவனை அகற்றி அந்தப் பெண்ணைத் தூக்கித் தோள் மேல் போட்டுக் கொண்ட இதயசந்திரன் குறுக்குப் பலகை மீது நடந்து ஜலதீபத்தின் தளத்தை அடைந்தான்.

# அத்தியாயம் 5

# அல்லி மலர்

மயக்கமுற்றிருந்த வெள்ளைக்காரப் பெண்ணை தோள்மேல் தூக்கிப் போட்டுக்கொண்டு முதுகுப்புறம் அவள் தலையும் பாதி உடலும் தொங்கவும் முன்புறம் அவள் கால்களைத் தனது இடது கை சுற்றிப் பிடிக்கவும், வலது கையை அனாயாசமாக வீசிக்கொண்டு ஜலதீபத்தின் தளத்துக்கு வந்த இதயசந்திரன் சுற்றுமுற்றும் ஒருமுறை நோக்கினான். சற்று தூரத்தில் கனோஜி ஆங்கரேயின் கடற்படையைச் சேர்ந்த இரு குராப்புகள் கரைப்புறமிருந்து வேகமாக வந்து கொண்டிருந்ததையும் பிரிட்டிஷ் போர்க் கப்பலான டிபையன்ஸ் வெகுவேகமாக வடக்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்ததையும், பம்பாய் கவர்னரின் ஆயுதக் கப்பலும் கெட்ச் ஆன் என்ற வணிகக் கப்பலும், பாய்கள் பற்றி எரியவும் பாய்கள் உடைந்து பாதி கடல் நீரிலும் பாதி கப்பலிலுமாகக் கிடக்கவும், சிறகொடிந்த பட்சிகள்போல தத்தளித்துக் கொண்டிருந்ததையும் கண்ட இதயசந்திரன் ஒரு மாலுமியை அழைத்து ஹர்கோவிந்தை அழைக்கக் கட்டளையிட்டான்.

அடுத்த விநாடி 'ஹர்கோவிந்த்! ஹர்கோவிந்த்!' என்று மாலுமி குரல் கொடுக்க தளத்தை நோக்கி விரைந்து வந்த ஹர்கோவிந்தை நோக்கி, ''ஹர்கோவிந்த்! போர் அநேகமாக முடிந்துவிட்டது! எதிரி கப்பல்கள் இரண்டிலும் சரணடையும் மாலுமிகளை அந்தந்தக் கப்பலின் கீழ்த் தளத்தில் அடைத்துவிடு. எதிர்ப்பவர்களைச் சுட்டுவிடு. ஆன் என்ற கப்பலில் வர்த்தகச் சரக்கு நிரம்ப இருக்க வேண்டும். அதை ஜாக்கிரதையாக நடத்தி விஜய துர்க்கத்துக்குக் கொண்டு செல்லும் பொறுப்பை அதோ வரும் குராப்புகளிடம் ஒப்படைத்துவிடு— கவர்னர் ஆயுதக் கப்பல் அதிகச் சேதமடைந்துவிட்டது. அதையும் இழுத்துச் செல்ல குராப்புகளுக்கு உத்தரவிடு'' என்று உத்தரவுகளை



மடமடவெனப் பிறப்பித்துவிட்டுக் கப்பல் தலைவியின் அறையை நோக்கி நடந்தான்.

அறைக் கதவு திறந்து கிடந்ததால், மஞ்சு ஆன் கெட்டிலோ கவர்னர் ஆயுதக் கப்பலிலோ போரில் சிக்கியிருக்கிறாளென்பதைப் புரிந்து கொண்ட இதயசந்திரன் அறைக்குள் சென்று அங்கிருந்த மஞ்சுவின் பஞ்சணையில் தோளில் சுமந்து வந்த வெள்ளைக்காரியைப் படுக்க வைத்தான். கடற்காற்றில் அணைந்து போயிருந்த அவ்வறை விளக்கையும் மெல்ல தீக்குச்சி கொண்டு கொளுத்தினான். ஜலதீபத்தின் தலைவியறைத் தீபத்தில் அந்த வெள்ளைக்காரி அளித்த காட்சி இதயசந்திரனைப் பிரமிக்கவே வைத்தது. அவளுக்கு வயது பதினாறுக்கு மேலில்லையென்பதை அவள் குழந்தை முகம் சொல்லிற்று. ஆனால் வயது பதினெட்டுக்கு மேலிருக்க வேண்டுமென்று உடலெழுச்சிகள் வலியுறுத்தின. ரத்தக்கறை அவள் உடலாடையிலும் கன்னத்திலும் நடு நெற்றியிலும் திட்டை திட்டையாகவும் பட்டை பட்டையாகவும் காணப்பட்டதால் வெள்ளை அல்லி மலரில் யாரோ திராக்ஷை மதுவை ஊற்றி விட்டுச் சென்றது போன்ற பிரமையை அளித்தது அவள் தோற்றம். ரத்தக்கறை படாத இடங்களில் வெளேரென்று தெரிந்த அவள் கன்னப் பகுதிகளும் கழுத்தும் இருந்த வழவழப்பு சலவைக் கல்லுக்குக்கூட இராதென்று நினைத்தான் இதயசந்திரன். சிவந்த சிறு பூவைப் போலிருந்த உதடுகளில் தெரிந்த ஈரம் அவற்றுக்குத் தனி மெருகைக் கொடுத்து தேனை உள்ளடக்க முடியாத மலரிதழ்களுக்கு உவமை காட்டியது. வெள்ளைக்காரியாதலால் அவள் கேசம் தங்க நிறம் பெற்றிருந்தது. மூடிய கண்களும் இமைகளும் தங்க நிறத்தில் வெள்ளைக் கன்ன முகப்புகளில் படுத்துக் கிடந்தன. அளவுடனிருந்த சிறு மார்பும் இருபுறமும் உட்புறமாக வழித்துவிடப்பட்ட இடைப் பகுதியும், லேசாக எழுந்து பிறகு கீழ்ப்புறம் விர்ரென்று சரிந்து

இறங்கிவிட்ட வயிறும், சற்றே அகன்று கிடந்த அழகுக் கால்களும், ஏதோ புதுதேவதை ஜலதீபத்தின் பஞ்சணையில் விழுந்துவிட்ட பிரமையை அளித்திருந்தன. அவள் மார்பு முழுவதும் வயிறுவரை படிந்திருந்த ரத்தக்கறையைக் கண்ட இதயசந்திரன் அவள் அந்த வெள்ளைக்காரனை அணைத்துப் பிடித்திருக்க வேண்டுமென்று ஊகித்தான். அந்த ஊகம் அவனுக்குச் சற்று வேதனையைக்கூட அளித்தது. அதை நினைத்து அவன் பெரிதும் வியப்படையவும் செய்தான்.

சற்று நேரம் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் பார்த்த பெண், போர் முடிந்ததும் தூக்கி வரப்பட்டவள், அவளிருந்த நிலை காரணமாக, இதைப் பற்றித் தன் மனம் ஏன் சஞ்சலப் படவேண்டும் என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்ட தமிழனுக்கு உடனடியாக விடை ஏதும் கிடைக்காவிட்டாலும் சிறிது நேரம் கழித்துக் கிடைக்கவே செய்தது. விடையை மஞ்சுவே அளித்தாள். அந்தப் பெண்ணின் மூர்ச்சையைத் தெளிவிக்க அறையிலிருந்த ஜலத்தை எடுத்து அந்தப் பெண்ணின் கண்களைத் துடைத்த இதயசந்திரன் அவள் மூச்சை நன்றாக விடுவதற்காக இறுகக் கட்டப்பட்டிருந்த அவள் கௌனில் கழுத்து முடிப்பையும் அவிழ்த்துக் கையை விட்டு ஆடையை நன்றாக விலக்கினான். பிறகு சிறிது நீரை எடுத்து விரல்களால் முகத்தில் தெளித்தான்.

மெள்ள மெள்ள அவள் கண்களை அகல விரித்தாள். கைகளை உயரத் தூக்கி எதையோ தடவ முயன்றாள். ஏதும் கிடைக்காததால் பஞ்சணையில் கைகளைத் தொப்பென்று போட்டாள். திறந்த கண்களில் நீர் வழிந்து ஓடியது. பிரமை பிடித்த கண்கள் தமிழனை ஒரு விநாடி பர்ர்த்தன. பிறகு கூரையை நோக்கின. உதடுகள் உளறின, ''மிர்ரர் மிர்ரர்'' என்று. பார்வையில் கனவிருந்தது, பித்து இருந்தது, தெளிவு மட்டும் அறவே இல்லை. விரிந்த இமைகள் மீண்டும் மூடின. கை ஊர்ந்து வந்து பஞ்சணை



பக்கத்திலிருந்த இதயசந்திரன் தொடையைத் தொட்டது. பிறகு வாளைத் தடவியது. அந்தக் கையை மெல்லத் தனது கையால் பிடித்துக்கொண்ட இதயசந்திரன் அந்தக் கை நடுங்குவதைக் கண்டான். ''மிர்ரர் மிர்ரர்'' என்று அவள் முகம் பார்க்கும் கண்ணாடியைக் குறிப்பிட்டது ஏதோ பழைய நினைவு என்பதைப் புரிந்துகொண்ட அவன், அவள் கையை ஆதரவுடன் இறுக்கிப் பிடித்து, ''பெண்ணே பயப்படாதே'' என்று ஆங்கிலத்தில் கூறினான்.

சில விநாடிகள் கழித்து அவள் கண்களை மீண்டும் விழித்தாள். அப்பொழுது அத்தனை பிரமையில்லை, கண்களில் வேறு சுரணையிருந்ததுபோல் தென்பட்டது. ''லேஸ் லேஸ்'' என்று மார்பைச் சுட்டிக் காட்டினாள்.

சுருக்கிட்ட உடைக் கயிற்றைப் பற்றி அவள் கூறுகிறாளென்பதை உணர்ந்துகொண்ட இதயசந்திரன், ''கயிற்றை அவிழ்த்துவிட்டேன்'' என்று தமிழில் கூறினான்.

அவள் கண்கள் வியப்பால் மலர்ந்தன. ''உனக்குத் தமிழ் தெரியுமா?'' என்று தமிழிலேயே கேட்டாள் அவள் பாதி மயக்க நிலையிலும்.

''தெரியும்'' என்று கூறி முறுவல் செய்தான் இதயசந்திரன்.

அவள் கண்களில் மயக்கம் நன்றாக அகன்றது. ''எனக்கும் தெரியும்'' என்று கூறிய அவள் மார்புச் சட்டைக் கயிற்றை நன்றாகப் பிரித்து சட்டையைத் தளர்த்தி விடும்படி சைகை காட்டினாள். அப்படி அவன் தளர்த்தியதும் மெள்ளப் படுக்கையில் புரண்டு ஒருக்களித்து, ''மேல் கௌனை எடுத்து விடுங்கள்'' என்றாள்.

அவன் தயங்கினான். பெண்ணின் சட்டையைத் தான் எப்படிக் கழற்றுவது என்று திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில், ''ஏன் கழற்றி விடுவதுதானே? கேட்கிறாளே'' என்ற குரலைக் கேட்டு வாயிற்படியை நோக்கித் திரும்பிய இதயசந்திரன் அங்கு ரத்தக்கறை படிந்த உருவிய வாளுடன்

மஞ்சு நிற்பதைக் கண்டு, செய்யத்தகாததைச் செய்து விட்டவன் போல் மிரள மிரள ஒரு விநாடி விழித்தான். பிறகு அதிகாரத்துடன் அவளையும் நோக்கினான். அவளுக்குப் பின்னால் நின்றிருந்த பர்னாண்டோவையும் மற்ற மாலுமிகளையும் நோக்கினான். ''இவர்களையெல்லாம் எதற்காக அழைத்து வந்தாய்?'' என்று மஞ்சுவை நோக்கிச் சீறவும் செய்தான்.

''நான் அழைத்து வரவில்லை'' என்ற மஞ்சுவின் விழிகளிலும் சீற்றமிருந்தது.

''எதற்காக வந்திருக்கிறார்கள்?'' என்று வினவினான் இதயசந்திரன் குரலில் சீற்றத்தின் எல்லையைக் காட்டி.

''உபதளபதியின் உத்தரவு பெற வந்திருக்கிறார்கள்'' என்றாள் மஞ்சு இகழ்ச்சியுடன்.

''எதற்கு உத்தரவு?''

''அந்தச் சீமாட்டியின் சட்டையைக் கழற்ற அல்ல...''

''மஞ்சு!''

''கோபிக்கவேண்டாம் உபதளபதி. இவளிருந்த கப்பலை நீங்கள் பிடித்த நேரத்தில் நானும் கவர்னர் கப்பலைப் பிடித்து விட்டேன். அவற்றை எங்கு கொண்டு போவது என்று என்னைக் கேட்டார்கள்....''

''நீதானே தளபதி, நீயே சொல்லலாமே.''

''நான் பெயருக்குத்தானே தளபதி. உபதளபதியானது முதல் உங்கள் அதிகாரந்தானே அதிகமாயிருக்கிறது?''

''மஞ்சு!''

''ஏன் இரைகிறீர்கள், இந்தப் போரை நானா நடத்தினேன்?''

இப்படி இருவரும் ஒருவருக்கொருவர் முரண்டு கொண்டு நின்றதைக் கண்ட பர்னாண்டோ, ''உபதளபதி! பிரிட்டிஷ் போர்க்கப்பல் ஓடிவிட்டது. வணிகக் கப்பலும்



கவர்னர் ஆயுதக் கப்பலும் பிடிபட்டுவிட்டாலும் பாய்மரங்களை இழந்து நிற்பதால் அவற்றைத் துடுப்புகளைத் துழாவிதான் கொண்டு போகவேண்டும். எங்கு கொண்டு போவது? எப்படிக் கொண்டு போவது?'' என்று வினவினான்.

இதயசந்திரன் பர்னாண்டோவை நோக்கிக் கோபத்துடன் கேட்டான், ''ஹர்கோவிந்த் எங்கே?'' என்று.

''தங்கள் கட்டளைப்படி வணிகக் கப்பலின் மாலுமிகளைச் சிறை செய்து வணிகப் பொருள்களையும் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார்'' என்றான் பர்னாண்டோ.

''நமது குராப்புகள் எத்தனை தூரத்திலிருக்கின்றன?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''அருகில் வந்துவிட்டன'' என்று சற்று எட்ட வந்து கொண்டிருந்த மகாராஷ்டிரப் போர்க் கப்பல்களைக் கையால் சுட்டிக்காட்டினான் பர்னாண்டோ.

அறை வாயிற்படி மூலம் நேராகத் தெரிந்த அந்தக் கப்பல்களைக் கண்ட இதயசந்திரன், ''அந்தக் கப்பல்களிடம் வணிகக் கப்பலையும் கவர்னர் கப்பலையும் ஒப்படைத்து நம்மைத் தொடர்ந்து வரும்படி சொல்லிவிடு. அதற்காக முரசுகளை அடித்து அறிவித்துவிடு'' என்று உத்தரவிட்ட இதயசந்திரன் அவனையும் மற்ற மாலுமிகளையும் அனுப்பிவிட்டு, ''மஞ்சு! நீ இவளைக் கவனி'' என்று கூறிவிட்டு அறைக்கு வெளியே நடந்துவிட்டான்.

அன்றிரவு முழுவதும் அவன் திரும்ப அந்த அறைக்கு வரவேயில்லை. பிடிபட்ட இரு கப்பல்களையும் குராப்புகளிடம் ஒப்படைப்பதிலும், தனது மாலுமிகளைத் திரும்ப ஜலதீபத்துக்கு வரவழைப்பதிலும், இறந்த மாலுமிகளைக் கடலில் எறிந்துவிடவும், இறவாதவர் எண்ணிக்கை, அவர்கள் பதவி அந்தஸ்து இவற்றைக் கணக்கெடுப்பதிலும் ஹர்கோவிந்த், இப்ரஹீம், பர்னாண்டோ இவர்களுடன் காலங்கழித்தான்.

இந்த விவரங்களைச் சேகரித்த பின்பு ஜலதீபத்தின் பாய்களை உயர்த்தி நன்றாக விரிக்கச் செய்த இதய சந்திரன் ''சுக்கானைத் திருப்பிக் கப்பலை விஜய துர்க்கத்தை நோக்கிச் செலுத்து'' என்று ஹர்கோவிந்துக்கு உத்தரவிட்டான். தளத்தை நன்றாகச் சுத்தம் செய்யும்படி மாலுமிக்குக் கட்டளையிட்டுத் தானே நேரிலிருந்து சுத்திகரிப்பு வேலையைக் கவனிக்கவும் தொடங்கினான். எதிரிக் கப்பல்களிலிருந்து பிரிட்டிஷ் மாலுமிகள் சுட்ட சில துப்பாக்கி ரவைகள் தளத்தில் சில இடங்களில் பொத்திக் கிடந்தன. இரண்டொன்று பக்கப் பலகைகளில் பதிந்திருந்தன. ஜலதீபம் வணிகக் கப்பலை இணைத்துப் போர் தொடுத்தபோது ஜலதீபத்தின் தளத்தில் பாய்ந்து மகாராஷ்டிர மாலுமிகளின் வளைந்த வாட்களுக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்ட வெள்ளைக்காரர் சிலரின் உடல்கள் ஆங்காங்கு அலங்கோலமாகக் கிடந்தன. ஜலதீபத்தின் வெடிகுண்டு வீச்சுக்குப் பலியான எதிரியின் பாய்மரத் தண்டு சிலாம்புகள் தளத்தில் சிதறிக் கிடந்தன. ரத்தக்கறை பல இடங்களில் படிந்திருந்தது. இவையனைத்தையும் மாலுமிகள் வெகு துரிதமாகச் சுத்தப்படுத்தினார்கள். வெள்ளையர் சடலங்கள் கடலரசனிடம் சரணடைந்தன. சிலாம்புகளும் துப்பாக்கி ரவைகளும் பொறுக்கப்பட்டு நீரில் எறியப்பட்டன. கடல்நீர் கொண்டு ரத்தக் கறைகள் தேய்த்துக் கழுவப்பட்டன. வெகு விரைவில் நன்றாகச் சுத்தப்பட்டுப் பளபளத்த ஜலதீபத்தின் தளத்தை மகிழ்ச்சியுடன் பார்த்த இதயசந்திரன் பெருமூச்சு விட்டான். ஜலதீபத்தை அவன் பெரிதும் நேசித்தான். ஒவ்வொரு போர் முடிந்ததும் அதை வெகு சீக்கிரம் கழுவிச் சீர்படுத்தினான். அதைப்பற்றி பர்னாண்டோ ஒரு முறை கேட்டதற்கு, ''ஜலதீபம் என் உடலைப் போன்றது. அதில் படும் காயம் என் உடல்மீது படும் காயம். அதன் அசுத்தம் என் உடலின் அசுத்தம்'' என்று பதில் கூறினான் இதயசந்திரன்.



ஆகவே ஒவ்வொரு போர் முடிந்ததும் ஜலதீபத்தைத் துப்புரவுப்படுத்துவதை மாலுமிகள் முக்கியப் பணியாகக் கொண்டிருந்தனர். அதில் உபதளபதி செலுத்தும் அக்கறை அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்ததால் ஜலதீபம் என்றும் எப்பொழுதும் பார்ப்பதற்குப் பரம சுத்தமாகவும் அழகாகவும் இருந்தது. அதைப் பார்ப்பதிலேயே இதயசந்திரனுக்குப் பேரானந்தம் இருந்தது. ஒவ்வொரு வெற்றி முடிவிலும் பெருமிதமும் இருந்தது அவனுக்கு, ஜலதீபத்தைப் பற்றி. ஆனால் அன்றிரவில் அவனுக்குப் பேரானந்தமும் இல்லை, பெருமிதமுமில்லை. அன்று அவனடைந்த வெற்றி பெருவெற்றிதான். இருப்பினும் அவன் மனத்தை அந்த வெள்ளைக்கார யுவதி அலைக்கழித்துக் கொண்டிருந்தாள். அந்த வெள்ளைக்கார வாலிபன் இறந்ததும் அவள் கிறீச்சிட்டு அலறியது, மயக்கமுற்றது, விழித்த பின்பு மலைத்தது, அத்தனையும் அவன் உள்ளத்தில் வலம் வந்து கொண்டிருந்தன. 'அந்த வாலிபனை அவள் மிகவும் நேசித்திருக்க வேண்டும். இல்லையேல் அவள் எதற்காக அப்படி அலறினாள்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் இதய சந்திரன். 'அப்படியிருந்தால் தமிழ் பேசி மகிழ்ச்சி காட்டினாளே என்னிடம்? அது எப்படி சாத்தியம்?' என்றும் கேள்விகளை எழுப்பிக் கொண்டான் சித்தத்தில்.

எத்தனைக் கேள்விகள் சித்தத்தில் எழுந்தாலும் எத்தனை சந்தேகங்கள் மனத்தில் உலாவினாலும் இடையே அவள் அழகிய வதனமும் கொடி போன்ற கட்டுடலும் அவன் இதயத்தை விடாப்பிடியாகப் பிடித்து இருந்தன. ''அல்லி மலரைப் போலவா ஒருத்தியின் வெளுப்பிருக்கும்?'' என்று வியந்தான் தமிழன் ஆனந்தத்துடன். இந்த நினைப்புகளுக்கிடையே புகுந்தன இரு விழிகள்— மஞ்சுவின் விழிகள்! கூர்ந்து நோக்கின வெறுப்புடன். ''பெண்ணைக் கண்டதும் பித்துப் பிடிக்கும் நீயும் ஓர் ஆடவனா?'' என்று கேட்டன அவள் உதடுகள்.

அந்த விழிகளும் உதடுகளும் ஊடுருவியதால் இதயத்திலிருந்து விலக்கப்பட்ட அந்த அல்லி மலரிடத்திலிருந்து தப்பியதாக அவன் எண்ணிப் பெருமூச்செறிந்தான். அவன் தப்பவில்லை. மறுநாள் அவனுக்கு மேலும் சோதனை அளித்தது. கதிரவன் கிளம்பியதும் நீராடிப் புத்துடை புனைந்து கப்பலின் தலைவியின் அறையை நாடிச் சென்ற தமிழனுக்கு அங்கு பெரும் வியப்பும் காத்திருந்தது; திகைப்பும் காத்திருந்தது. அவன் கதவைத் தட்டியதும் மஞ்சு கதவைத் திறந்தாள். அவளருகில் நின்றிருந்தாள் அந்த அல்லி மலர். கறுப்புடை அணிந்திருந்ததால் அவள் உடல் நிறம் அதிக வெண்மையாகத் தெரிந்தது. இரு பெண்களின் முகத்திலும் துன்பம் தோய்ந்து கிடந்தது. வாயிற்படி தாண்டி உள்ளே நுழைந்தான் இதயசந்திரன். அல்லி மலர் அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து அவனை இரு கைகளாலும் கட்டிக் கொண்டு மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். மஞ்சு இருக்கிற பயத்தில் அவளை விலக்கக் கையை எடுத்த இதயசந்திரனை மஞ்சுவின் துயரக் கண்கள் நோக்கின. ''வேண்டாம் அவளை விலக்க வேண்டாம்'' என்ற சொற்கள் உதிர்ந்தன மஞ்சுவின் உதடுகளிலிருந்து.

இதயசந்திரனுக்கு ஏதும் புரியவில்லை. மஞ்சுவுக்கு மிதமிஞ்சிய பொறாமையால் சித்தப் பிரமை ஏற்பட்டு விட்டதோ என்று அஞ்சினான். அத்தகைய அச்சம் புகுந்த இதயத்தைத் தாங்கி நின்ற மார்பில் அல்லி மலர் அழுந்திக் கிடந்தது. அருகே வந்த மஞ்சு அவள் பொன்னிறக் குழல்களைத் தடவினாள். தன் அனுதாபத்தின் காரணத்தை இரண்டு வார்த்தைகளில் சொன்னாள். அந்தச் சொற்கள் இதயசந்திரன் பிரமையை உச்சநிலைக்குக் கொண்டு சென்றன.

### அத்தியாயம் 6

# அவள் கதை

மலர்ந்த அல்லி மலரைப் போல் தமது மார்பில் புதைந்துவிட்ட மதிமுகத்தாலும், அல்லிக் கொடிகளைவிட வழவழப்புடன் தன்னைச் சுற்றிக்கொண்ட இரு கைகளாலும், அந்தக் கோலத்தை மஞ்சு பார்த்துக் கொண்டிருக்கிறாளே என்ற பயத்தாலும் மிதமிஞ்சிய திகைப்பை அடைந்திருந்த இதயசந்திரனுக்கு மஞ்சு வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள் அவன் திகைப்பையும் பிரமிப்பையும் ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தவே செய்தன. ''இவள் இப்பொழுது விதவை. இவள் கணவனை நீங்கள் அழித்து விட்டீர்கள்'' என்று கூறினாள் மஞ்சு அந்தப் பெண்ணின் குழல்களைக் கோதி விட்டுக் கொண்டே.

இதைக் கேட்ட இதயசந்திரன் கண்கள் மஞ்சுவின் கண்களை ஏறெடுத்துச் சந்தித்தன துணிவுடன். அதுவரை செயலற்றிருந்த அவனது கைகளில் ஒன்று எழுந்து அந்தப் பெண்ணின் முதுகில் ஆதரவுடன் பதிந்தது. ''என்ன! என்ன சொல்கிறாய் மஞ்சு? அவள் கணவனைக் கொன்று விட்டேனா? நானா!'' என்று அனுதாபமும் வியப்பும் கலந்த சொற்களும் அவனது உதடுகளிலிருந்து உதிர்ந்தன.

மஞ்சுவின் விழிகளில் பரிதாபம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. ''ஆம்! நீங்கள் அன்று கண்ணாடி மூலம் பார்த்தீர்களே ஒரு வாலிபனை. அவன்தான் இவள் கணவனாம்'' என்று விளக்கினாள் மஞ்சு. அத்துடன் மேலும் சொன்னாள்: ''என்ன பயங்கரம்! பீரங்கிக் குண்டு கையைப் பிய்த்துக் கொண்டு அவனைத் தள்ள அவனைத் தாங்கிய இவள்மீது அவன் உடல் வீழ, கணவன் ரத்தமெல்லாம் உடைமீது பாய, அவன் பிணத்தின் கீழ் இவள் அகப்பட்டுக் கிடப்பதென்றால், என்ன விபரீதம், என்ன விபரீதம்!'' என்று.

இதயசந்திரன் அந்தக் காட்சியை ஏற்கெனவே கண் கூடாகக் கண்டிருந்தாலும் போர் மும்முரத்தில் அது அத்தனை பயங்கரமாகவோ விபரீதமாகவோ தெரியா விட்டாலும், அமைதி நிலவிவிட்ட அந்தக் காலையில் அதன் கோரம் தெள்ளெனப் புரிந்தது அவனுக்கு. அதுவும் மஞ்சு அதை விவரித்த முறையில் வெள்ளைக்காரன் சாவுக்கும் வெள்ளை யுவதியின் துயரத்துக்கும் தான்தான் காரணம் போல் தென்படவே, ''அப்படியா!'' என்ற ஒற்றைச் சொல் மட்டும் அவனிடமிருந்து வெளிவந்தது.

''அது மட்டுமல்ல. அவள் இரண்டாம் முறையாக விதவை. பாவம்! இவள் கதையைத் தாங்க என்னால் முடியவில்லை. கொஞ்சம் தைரியம் சொல்லுங்கள் இவளுக்கு'' என்று கூறிய மஞ்சு அறையிலிருந்து வெளியே சென்றுவிட்டாள், ''மஞ்சு மஞ்சு'' என்று அவசரமாக அழைத்த இதயசந்திரன் குரலுக்குச் செவி மடுக்காமலே.

அறையில் இருந்த அல்லி மலருடன் தனித்து விடப்பட்ட இதயசந்திரன் என்ன சொல்வதென்று தெரியாமல் பல விநாடிகள் தவித்தான். மற்ற மாலுமிகள் அவளும் தானுமிருந்த கோலத்தை கண்டுவிட்டால் வீண் பேச்சுக்கும் விபரீத விமர்சனத்திற்கும் இடமேற்படுமே என்ற காரணத்தால் அவளைத் தன்னிடமிருந்து விலக்க முயன்றான். அந்த முயற்சி அவன் எதிர்பார்த்த பலனுக்கு நேர் எதிர்விதமான பலனையே அளித்தது. அவள் கைகள் அவனைச் சுற்றி வலுவாக இறுகின. விசும்பி விசும்பி அவள் அழுததால் முகம் அவனது பரந்த மார்பில் எழுந்து எழுந்து விழுந்தது. உடலும் குலுங்கியதால் அவன் வேதனை அதிகப்படவே அவன் மெல்ல அவள் குழல்களைக் கோதி, ''அழாதே. போர்களின் விளைவு எப்பொழுதுமே பயங்கரமானது'' என்று ஆறுதலும் சொன்னான். சொன்னதோடு நில்லாமல் அவளை மெள்ளத் தழுவிய வண்ணமே அழைத்துச் சென்று பஞ்சணையில் உட்கார வைத்துச் சற்று விலகி நின்றுகொண்டான்.



அவள் மெள்ள தலைநிமிர்ந்து இதயசந்திரனை ஏறெடுத்து நோக்கினாள். அவள் கண்களிரண்டும் செக்கச் செவேலென்று சிவந்து அல்லிமீது பங்கயங்கள் முளைக்க முடியும் என்பதற்கு அத்தாட்சி காட்டின. பலபலவெனக் கண்களிலிருந்து உதிர்ந்து கன்னங்களில் வழிந்தோடிய அருவிகள் சலவைக் கல்லில் நீரோட்டமிருந்தால் இப்படித் தானிருக்க முடியும் என்று நிரூபித்தன. அவள் முகம் துயரக் களஞ்சியமாயிருந்தது. ''என்னைப் போன்ற துரதிர்ஷ்டம் படைத்தவள் யாரிருக்க முடியும்?'' என்று உதிர்ந்த சொற்கள் இதயசந்திரன் இதயத்தில் கூர்வேல்களெனப் பாய்ந்தன.

இதயசந்திரனுக்கும் கப்பல் போரும் புதிதல்ல. அதன் விபரீதங்களும் புதிதல்ல. கொங்கணிக்கு வந்தபோது அதன் விபரீதத்துக்கு அவனே ஆளானவன். தவிர அரபிக் கடலின் அலைக்கரங்கள் அவனைக் கொங்கணியின் வரலாற்றுக் கரங்களில் தள்ளிவிட்ட சம்பவங்களையும் அவன் மறக்கவில்லை. இருப்பினும் அந்தச் சமயத்தில், அந்தப் பெண்ணின் வேதனையில், வேதனை தோய்ந்த முகத்தில், ஒடுங்கி உட்கார்ந்திருந்த அவள் தோற்றத்தில் அவன் அத்தனையும் மறந்து அவள் துன்பத்தையே நினைத்தான். ஆகவே வேதாந்தமாகப் பேசத் தொடங்கி, ''பெண்ணே! நமது அதிர்ஷ்டத்தையும் துரதிர்ஷ்டத்தையும் தீர்மானிப்பது நாமல்ல. நம்மிலும் பெரிய சக்தி ஒன்றிருக்கிறது. ஒரு துரதிர்ஷ்டத்துக்குப் பின் பெரும் அதிர்ஷ்டமும் வரக்கூடும்'' என்று ஆறுதல் கூறினான்.

கண்களை அவள் மெள்ள தலைப்பால் துடைத்துக் கொண்டாள். தலைப்பை எடுத்த பிறகுதான் அவள் கறுப்புப் புடவை கட்டிக் கொண்டிருக்கிறாளென்பதையும் அந்தப் புடவை மஞ்சுவினுடையதென்பதையும், சில உல்லாச வேளைகளில் மஞ்சு அதைக் கட்டிக்கொண்டு நிற்பது வழக்கமென்பதையும் அவன் உணர்ந்து கொண்டான். அதிலும் ஒரு விபரீதமிருப்பதைப் புரிந்து

கொண்ட இதயசந்திரன், 'ஒருவருக்கு மகிழ்ச்சிக்குக் காரணமாயிருப்பது இன்னொருவரின் துன்பத்துக்குக் காரணமாயிருக்கிறது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் அந்தப் புடவையைக் கவனிப்பதைக் கண் களைத் துடைத்துக் கொண்டபின் பார்த்த அந்த வெள்ளைக்காரப் பெண் கூறினாள்: ''வீரரே! இது உமது மனைவியுடையதுதான். அவள்தான் கொடுத்தாள் எனக்கு. கணவன் இறந்ததும் துக்கம் கொண்டாட நாங்கள் கறுப்பாடை கட்டவேண்டும்'' என்று.

வெள்ளைக்காரரோடு சென்னையில் ஓரளவு பழக்க மிருந்ததால் அவர்கள் ஆசார விவகாரங்களைப்பற்றி அதிகமறியாத இதயசந்திரன், ''அப்படியா!'' என்று கேட்டுவிட்டு, ''பெண்ணே! அவள் என் மனைவியல்ல...'' என்று திருத்தினான் அவள் வாசகத்தை.

''மஞ்சு உங்கள் மனைவியல்லவா?'' என்ற சொற்கள் வியப்புடன் வந்தன வாயிலிருந்து.

இதயசந்திரன் வியப்பு விழிகள் அவளை ஊன்றி நோக்கின. ''அவள் பெயர்கூட உனக்குத் தெரியுமா?'' என்ற அவன் கேள்வியிலும் வியப்பு நன்றாக ஊடுருவி யிருந்தது.

''தெரியாமலென்ன? அவள் உங்களைப்போல இதய மற்றவளா? இதயசந்திரன் என்ற பெயர்தான் பெரிய பெயராயிருக்கிறது உங்களுக்கு'' என்று மேலும் வெடி களை வீசினாள் அந்தப் பெண்.

இதயசந்திரன் பிரமை பிடித்து நின்றான். 'ஒரே இரவில் மஞ்சு தன் கதை பூராவையும் இவளிடம் அளந் திருக்கிறாள் போலிருக்கிறது. அப்படியானால் ஒருவேளை அவளே தன்னை என் மனைவி என்று கூறியிருக்கிறாளோ இவளிடம்?' சற்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட அவன் பல விநாடிகள் மௌனமாக நின்றான்.



அந்த மௌனத்தை அந்தப் பெண்ணே கலைத்தாள். ''வீரரே! இரு பெண்கள் தனித்திருந்தால் மனம்விட்டுப் பேசாமலிருப்பார்களா? அதுவும் ஒருத்தி துயரத்திலாழ்ந் திருக்கும்போது. ஆனால் அவள் எத்தனை நல்ல பெண்! உங்களிடம் எத்தனை அன்பு அவளுக்கு! என்னைப்பற்றிச் சகலத்தையும் அறிந்தாள். உங்களைப்பற்றிச் சகலத்தையும் சொன்னாள். ஆனால் நீங்கள் என்னை ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லை. ஏன் என் பெயரைக்கூடக் கேட்க வில்லை. என்ன கல்நெஞ்சு உங்களுக்கு?'' என்றாள் அந்தப் பெண்.

இதயசந்திரன் குழப்பம் அதிகமாகியதே தவிரக் குறையவில்லை. ''ஆமாம், உன் பெயர் என்ன?'' என்று வினவினான்.

''மிஸஸ் சௌன்.''

''மிஸஸ் சௌனா?''

''மிஸஸ் என்பது மனைவிப் பதவியைக் குறிக்கும். இறந்த என் கணவர் பெயர் தாமஸ் சௌன். நான் மிஸஸ் தாமஸ் சௌன். சுருக்கமாக மிஸஸ் சௌன் என்று எல்லோரும் அழைப்பார்கள்.''

''அப்படியானால் உனக்குச் சொந்தப் பெயர் எதுவும் கிடையாதா?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

அவள் கண்கள் நிலத்தை நோக்கித் தாழ்ந்தன. ''உண்டு வீரரே! ஆனால் அந்தப் பெயரைச் சொல்லி தந்தை அழைக்கலாம், காதலன் அழைக்கலாம். கணவன் அழைக்கலாம். மற்றவர் அழைக்கக்கூடாது'' என்று கூறிய அவள், ''என் பெயர் காதரைன். காட்டீ என்றும், கேட் என்றும் குறுக்கி அழைப்பார்கள்'' என்றாள் அந்தப் பெண்.

இதயசந்திரன் அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. அவளும் பதிலை எதிர்பார்க்கவில்லை. சிறிது நேரம் மௌனமாயிருந்துவிட்டு அவனைப் பஞ்சணையில் தனது

பக்கத்தில் உட்காரச் சொன்னாள். இதயசந்திரன் சிறிது தயங்கினான். பிறகு அறைக் கதவைச் சாத்தச் சென்றான்.

"கதவைச் சாத்த வேண்டாம், கணவனை இழந்தவள் மறுநாளே இன்னோர் ஆடவனுடன் சாத்திய அறைக்குள் தனித்திருப்பது தவறான ஊகத்துக்கு இடங்கொடுக்கும்" என்று அவனைத் தடுத்த அந்தப் பெண், "பாதகமில்லை, உட்காருங்கள்" என்று தன் பக்கத்தில் இடம் காட்டினாள்.

வேறு பேச வழியில்லாமல் இதயசந்திரன் உட்கார்ந்தான், தலையைக் குனிந்த வண்ணம். அவள் தனது கதையைச் சொல்ல துவங்கினாள்: "வீரரே! நேற்று உமது மனைவியிடம் என் துர்ப்பாக்கியங்களைச் சொன்னேன். இன்று உங்களிடம் சொல்கிறேன் கேளுங்கள்..." என்று துவங்கிய அவளை, "என்னிடம் வேறு எதற்காகச் சொல்ல வேண்டும். அவளிடந்தான் சொல்லியாகி விட்டதே" என்று தேக்க முயன்ற இதயசந்திரனை, "வீரரே! துன்பத்தைப் பகிர்ந்துகொண்டால் துன்பம் குறைகிறது. மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டால் மகிழ்ச்சி பன்மடங்கு அதிகப்படுகிறது என்றொரு ஆங்கிலப் பழமொழி உண்டு" என்றாள் அவள். மெள்ள மெள்ள தனது கதையைச் சொல்லவும் முற்பட்டாள்.

"வீரரே! என் தந்தையின் பெயர் காப்டன் ஜெரார்டு. கிழக்கிந்தியா கம்பெனியின் என்ஜினியராக நியமிக்கப்பட்டார். நானும் அவரும் லாயல் ப்ளிஸ் என்ற கப்பலில் இங்கிலாந்திலிருந்து கிளம்பி வந்தோம். ஆறு மாத காலம் கஷ்டமான பயணம் செய்து இந்தியா வந்து கார்வார் துறைமுகத்தை அடைந்தோம். கார்வாரை அடைந்தபோது எனக்கு வயது பதின்மூன்று; அப்பொழுதே பருவமடைந்து இரண்டாண்டுகள் ஆகியிருந்தன. பதின்மூன்று வயதில் நல்ல வளர்த்தியாயும் இருந்தேன். கார்வார் பாக்டரி தலைவர் ஜான் ஹார்வே என்பவர் எங்களை வரவேற்றார். சகல வசதிகளும் செய்து கொடுத்தார். என்னைக் காதலித்தார். அப்படி இப்படியென்று காதலிக்கவில்லை. என்னைவிட்டு அரை விநாடி பிரியவில்லை. அவரிடமிருந்த பணபலம் ஆள்பலம் அனைத்தையும் என் காலடியில் சமர்ப்பித்தார். என்னை மயக்கிய மயக்கில் அவரை மணக்கச் சம்மதித்தேன். என் தகப்பனாரும் மணம் முடித்துக் கொடுத்தார். என் கணவருக்கு அப்பொழுது வயதென்ன தெரியுமா..." என்று கேட்ட மிஸஸ் ஹௌன் சிறிது பேச்சை நிறுத்திப் பக்கவாட்டில் திரும்பி இதயசந்திரனை நோக்கினாள்.

"இருபத்தி ஐந்து இருக்குமா?" என்று கேட்டான் இதயசந்திரன்.

"இல்லை; அறுபது?" என்றாள் அந்தப் பெண்.

இதயசந்திரன் அதிர்ச்சியடைந்து சற்று நிமிர்ந்து உட்கார்ந்தான். "என்ன அறுபதா!" என்று வினவினான் அதிர்ச்சி குரலிலும் ஒலிக்க.

"அது மட்டுமல்ல..." என்று இழுத்தாள் அவள்.

"வேறு என்ன!" என்று கேட்டான் தமிழன்.

"வியாதியும் படைத்தவர்" என்றாள் அவள்.

இதயசந்திரன் வாயடைத்து உட்கார்ந்து விட்டான். அவள் மேலே தொடர்ந்தாள். "அவர் வயோதிகர், வியாதி படைத்தவர். ஆனால் நல்ல மனமுள்ளவர். என்னை ராணிபோல் நடத்தினார். இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றார். என்னை அழைத்துக் கொண்டு இங்கிலாந்து செல்லத் தீர்மானித்தார். நாங்களிருவரும் பம்பாய் வந்தோம். அங்குதான் நான் இந்த வாலிபரை தாமஸ் ஹௌனை சந்தித்தேன். எங்களுக்கு வயதுப் பொருத்தமிருந்தது. இருவரும் காந்தமும் ஊசியும் போலானோம். நானும் என் கணவரும் இங்கிலாந்து புறப்படுவதற்குள் கணவர் இறந்து போனார். கம்பெனி விவகாரங்களும் என் கணவர் செல்வாதார விவகாரங்களும் கலந்து கிடந்ததால் கம்பெனி

அதிகாரிகள் அதைச் சரி செய்யும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். தாமஸ் சௌனை கார்வார் பாக்டரித் தலைவராக நியமித்து எனக்குத் துணையாக அவரை அனுப்பினார்கள். எங்கள் கப்பல் கார்வார் கரையை அடைந்தது. கரையை அடையும் வரை என் காதலராயிருந்த சௌன், கரையை அடைந்ததும் என் கணவரானார். நாங்கள் ஓராண்டு மிக உல்லாசமாகக் காலம் கழித்தோம். சௌன் கம்பெனிக் கணக்குகளைச் சீர்பார்த்தார். அதைவிட என்னை அதிகமாகச் சீர்பார்த்தார். எங்கள் வாழ்வு பெரும் நிலவாயிருந்தது. எங்கள் தேன்நிலவு சில நாட்களல்ல, ஆண்டு பூராவும் தேன்நிலவாயிருந்தது. பிறகு நாங்கள் பம்பாய் புறப்பட்டோம். இடையே நீங்கள் குறுக்கிட்டீர்கள். என் இரண்டாம் கணவரையும் இழந்து விட்டேன். உங்களிடம் நானும் எனது மரக்கலங்களும், மாலுமிகளும் கைதி. எனது அதிர்ஷ்டத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று வினவினாள் காதரைன்.

இதயசந்திரன் பெருமூச்செறிந்தான். ''உன் வாழ்வு கதை போலிருக்கிறது'' என்று கூறினான் அந்தப் பெருமூச்சைத் தொடர்ந்து.

''ஆம் வீரரே! ஆனால் *உண்மைக் கதை'' என்றாள் காதரைன்.

''அதிசயத்திலும் அதிசயம்'' என்றான் இதயசந்திரன்.

''ஆனால் உண்மை'' என்று மீண்டும் வலியுறுத்திக் காதரைன் மேலும் ஒரு வெடியை எடுத்து வீசினாள். ''இப்பொழுது மூன்றாவது ஆடவராக என் வாழ்வில் நீங்கள் புகுந்திருக்கிறீர்கள்,'' என்று.

---

* காதரைன் கதை உண்மைக் கதை. வரலாற்றில் இது அப்படியே காணப்படுகிறது.



இதயசந்திரன் கட்டிலிலிருந்து சட்டென எழுந்தான். ''என்ன! என்ன சொல்கிறாய்?'' என்றும் கோபத்துடன் வினவினான்.

''கோபப்பட்டுப் பயனில்லை வீரரே. விதிக்கு நாம் பணியத்தான் வேண்டும்'' என்றாள்.

''என்ன விதி! யார் விதி?''

''நம் இருவர் விதியும்.''

''நம் இருவர் விதிக்கும் என்ன?''

''பிணைப்பு இருக்கிறது.''

''என்ன பிணைப்பு?''

காதரைனும் எழுந்திருந்தாள் கட்டிலிலிருந்து. ''எங்கள் நாட்டில் எந்த வீரனும் ஓர் அபலையைக் காக்காமல் விடமாட்டான். அந்தப் பாதுகாப்பை வீரனான உங்களிடமும் எதிர்பார்க்கிறேன்'' என்றாள் கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி.

''பாதுகாப்பா? எதிலிருந்து? யாரிடமிருந்து?'' என்று குழப்பமும் நடுக்கமும் தெரிந்த குரலில் கேட்டான் இதயசந்திரன்.

அவள் கம்பீரமாகவே பதில் கூறினாள். அத்தனை துயரத்திலும் அவள் பெரிய ராணிபோல் தோற்றமளித்தாள். அவள் வாயிலிருந்து உதிர்ந்த ஒவ்வொரு சொல்லிலுங்கூட கம்பீரமிருந்தது. அது மட்டுமல்ல இதயசந்திரன் இதயத்தை அசக்கிக் கலக்கி அச்சமுறுத்தும் முறையில் உதிர்ந்தன அவள் சொற்கள். இந்தப் பிசாசிடம் ஏன் அகப்பட்டுக் கொண்டோம் என்று ஏங்கினான் அந்த நேரத்தில் தமிழக வாலிபன்.

## அத்தியாயம் 7

# அவள் விளைவித்த தொல்லை

காதரைனின் வாழ்க்கைக் கதை கற்பனைக் கதையை விட விசித்திரமாயிருந்ததென்றால் அவள் கேட்ட வரம் அதைவிட விசித்திரமாயிருந்தது. ''கனோஜி ஆங்கரேயிடமிருந்து எனக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும்'' என்ற அவள் வேண்டுகோளைக் கேட்ட இதயசந்திரன் ஆச்சரியம் ததும்பிய விழிகளை அவள்மீது திருப்பினான். ''நீ என்ன கேட்கிறாய் என்பதைப் புரிந்து கொண்டுதான் கேட்கிறாயா?'' என்று வினவவும் செய்தான் சிறிது சீற்றத்துடன்.

அவன் வியப்பையும் அவள் லட்சியம் செய்யவில்லை. அவன் சினத்தையும் சீந்தவில்லை. ''நன்றாகப் புரிந்து கொண்டுதான் கேட்கிறேன்'' என்றாள் அவள் பதிலுக்கு.

''அப்படியானால் தலைவருக்குத் துரோகம் செய்யச் சொல்லுகிறாயா?'' என்று மீண்டும் வினவினான் அவன்.

''அவருக்குத் துரோகம் செய்யச் சொல்லவில்லை. எனக்குப் பாதுகாப்புக் கேட்கிறேன்.''

''இரண்டுக்கும் வித்தியாசம் அதிகமில்லையென்பது உனக்கு விளங்கவில்லையா?''

''இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது உபதளபதி. போரில் நாங்களும் பிடிபட்டிருக்கிறோம், எங்கள் மரக்கலங்களும் பிடிபட்டிருக்கின்றன. மரக்கலங்களோடு எங்களையும் கனோஜி ஆங்கரேயிடம் கொண்டு செல்லப் போகிறீர்கள். அங்கு மரக்கலங்களைப்போல் நாங்களும் நடத்தப்படுவது வழக்கம். மரக்கலங்களையும் எங்களையும் திருப்பியனுப்ப பம்பாய் ஈஸ்ட் இந்தியா கம்பெனியிடம் பணம் கேட்பீர்கள். அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால் மரக்கலங்களைத் திரும்பி அனுப்புவது



போல் என்னை அனுப்பக்கூடாது. இங்குதான் வித்தியாசம் வருகிறது.''

''எனக்குப் புரியவில்லை.''

''புரியச் சொல்கிறேன் கேளுங்கள். மரக்கலத்தை யாரிடமும் ஒப்படைக்கலாம். அதைக் கொண்டு செல்பவர்கள் அதை என்ன செய்தாலும் செய்யலாம். ஆனால் என்னை அப்படி அனுப்பக்கூடாது. திருப்பி அனுப்புவதாயிருந்தால் நீங்களே என்னை அழைத்துச் செல்ல வேண்டும்.''

மெள்ள மெள்ள அவள் நோக்கம் புரிந்தது இதயசந்திரனுக்கு. சிறை மீட்கப்பட்ட பல பெண்கள் வழியில் பட்ட அவஸ்தைகள், அடைந்த மானபங்கங்கள் இவற்றை அவன் அறிந்தே இருந்தான். இருப்பினும் சிறைபட்டவர்களை என்ன செய்ய வேண்டும், ஏது செய்யவேண்டும் என்கிற விஷயங்களில் கனோஜியிடம் யாரும் தலையிட முடியாதென்பதையும் இதயசந்திரன் அறிந்திருந்ததால் கூறினான்: ''மிஸஸ் செளன்! நீ போர்க் கைதி. உன்னை யாருடன் அனுப்பவேண்டும், எப்படி நடத்தவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் முடிவு செய்ய எனக்கு அதிகாரமில்லை. இதைப்பற்றித் தலைவரிடம் பேசவும் முடியாது. என் செல்வாக்கையும் திறமையையும் நீ அதிகமாக எடை போடுகிறாய்.''

காதரைன் முகத்தில் இகழ்ச்சிக் குறி படர்ந்தது. ''உங்கள் செல்வாக்கைப்பற்றி கார்வாரிலேயே கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் எதைச் சொன்னாலும் ஆங்கரே தட்டுவதில்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள். அரபிக்கடல் பிராந்தியத்தில் கனோஜி ஆங்கரேக்கும் ஸித்திகளுக்கும் அடுத்தபடியாக வீரச் செயல்களுக்குப் பேசப்படும் ஒரே ஒரு பெயர் இதயசந்திரன் என்ற பெயர். அந்தப் பெயருக்கு உடையவர் தனக்குச் செல்வாக்கில்லையென்று சொல்வது நம்பத்தக்கதா?'' இந்தக் கேள்வியை மிக இகழ்ச்சியுடன் கேட்டாள் காதரைன்.

இதயசந்திரன் இதயத்தில் கோபம் அதிகப்பட்டுக் கொண்டிருந்தது. ''இவ்வளவு தெரிந்தவள் கனோஜியின் தஸ்தக் இல்லாமல் ஏன் கப்பலைக் கொண்டு வந்தாய்?'' என்று சீறினான் தமிழன்.

காதரைன் மிகக் கம்பீரமாகத் தலையை நிமிர்த்தித் தன் பொற்குழலை ஒரு விதமாகத் தள்ளிக் கொண்டாள். ''*தஸ்தக் என்பது கொள்ளைக்காரன் சாஸனம். அதைப் பிரிட்டிஷ்காரர்கள் இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் தஸ்தக்கைக் கொண்டுவரவில்லை. அதற்குப் பதில் போர்க்கப்பலைத் துணைக்குக் கொண்டு வந்தேன். அதுவும் ஓடிவிட்டது'' என்றாள் குரலில் கம்பீரத்தைக் காட்டி.

''தஸ்தக் வாங்கினால் அவமானமா பிரிட்டிஷாருக்கு?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''ஆம்.''

''போர்க் கப்பல் பாதுகாப்பளிக்காமல் ஓடினால் அவமானமில்லை போலிருக்கிறது?''

''அது பெருத்த அவமானம். அதற்குக் கப்பலின் தலைவன் தண்டனை அடைவான். அதல்ல பிரச்சினை, இப்பொழுது. கணவனை இழந்திருக்கும் ஒரு காரிகையைக் கயவர் யாரிடத்திலும் ஒப்படைக்காமல் அவள் பாதுகாப்பை ஏற்க வீரனான உங்களுக்குத் துணிவிருக்கிறதா இல்லையா? அதற்குப் பதில் சொல்லுங்கள்'' என்றாள் மிஸஸ் சௌன்.

இதயசந்திரன் கண்கள் அவளை வெறித்து நோக்கின. பிறகு சிந்தனை படர்ந்தது அவற்றில் சில விநாடிகள். கடைசியில் அவன் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்தது.

---

* தஸ்தக் என்பது கடலில் கப்பல்கள் செல்ல கனோஜி அளித்து வந்த அனுமதிப் பத்திரம். அதற்குக் கப்பலையும் சரக்கையும் பொறுத்துக் கட்டணம் உண்டு.



''உனக்குத் தகுந்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறிவிட்டு அந்த அறையிலிருந்து விடுவிடுவென்று வெளியே நடந்தான்.

அரபிக்கடல் அன்று காலையில் கதிரவன் மெருகு பூண்டு பளபளத்துக் கொண்டிருந்தது. கனோஜியின் இரண்டு குராப்புகளுடன் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட கவர்னர் ஆயுதக் கப்பலும் 'ஆன்' என்ற வணிகக் கப்பலும் அவற்றின் பின்புறம் நகர்ந்து கொண்டிருந்தன. அந்த இரண்டு கப்பல்களின் பாய்மரங்களும் பக்க பலகைகள் சிலவும் போர்க் காயங்களை அடைந்து பழுதுபட்டுக் கிடந்ததால், இரண்டு பலவான்கள் பின்னால் வியாதியஸ்தர் செல்லும் பாணியில் ஆடியும் அசங்கியும், தளர்ந்தும் தடுமாறியும் சென்று கொண்டிருந்தன. அவற்றின் தளங்கள் முழுவதும் சுத்தம் செய்யப்படாததால் ஓரிரண்டு கடற்கழுகுகள் பறந்து வந்து தளத்தில் உட்கார்ந்து மனித மாமிசப் பசைகளைத் தின்னத் தொடங்கின. காலை வேளையில் அலைகள் அதிகமில்லாததால் ஓரளவு அமைதியும் மண்டிக் கிடந்தது. அரபிக் கடலின் அந்தப் பகுதியில் இப்படியிருந்த கடற்பகுதியை வெறித்துப் பார்த்த இதயசந்திரனுக்கு மட்டும் மன அமைதி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. பிடிபட்ட அந்த இரண்டு கப்பல்களையும் பார்த்தும் மகிழ்ச்சியோ, பெரு வெற்றியடைந்து விட்டோமே என்ற பெருமிதமோ அவன் மனத்தில் இல்லை. இந்த இரண்டைப் பிடிக்காதிருந்தால் இந்த வெள்ளைக்காரியின் தொந்தரவு இருக்காதே என்றே நினைத்தான் அவன்.

''நன்றாகச் சிந்தித்துப் பார்த்ததில் வெள்ளைக்காரி என்னிடம் சிக்கியிருக்கிறாளா, நான் வெள்ளைக்காரியிடம் சிக்கியிருக்கிறேனா என்பது புரியவில்லை'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவள் சொன்ன விஷயங்கள் தெளிவாக இருந்தன தமிழனுக்கு. சிறை பிடிக்கப்பட்ட பெண்கள் கற்பழிக்கப்

படுவதும் துன்புறுத்தப்படுவதும் சர்வசகஜமாயிருந்தது அந்த நாட்களில். கனோஜி ஆங்கரேயின் படையில் அது குறைவென்றாலும், அவரிடம் வேலை செய்த வெளிநாட்டு மாலுமிகளைப் பற்றிப் புகார் இருக்கவே செய்தது. அத்தகைய சூழ்நிலையில் வாலைப்பருவத்தாளொருத்தி ஒரு வீரனின் பாதுகாப்பை நாடுவதில் தவறில்லையென்பது தெள்ளென விளங்கியது அவனுக்கு. அந்த பாதுகாப்பைத் தான் மறுக்கவும் முடியாதென்பதும் தெரிந்திருந்தது அவன் சித்தத்துக்கு. அதற்காக கனோஜி ஆங்கரேயிடம் கேட்பதும் தவறில்லைதான் என்றாலும் கனோஜி அதை எப்படி வரவேற்பார் என்பதும் பெரும் சந்தேகமாயிருந்தது அவனுக்கு. தன்னைக் கிட்டத்தட்டத் தன் மகளுக்கு மணாளன் என்று நிர்ணயித்திருக்கும் கனோஜி ஆங்கரேயிடம் போய், 'இந்த வெள்ளைக்காரியை நான் அழைத்துப் போகிறேன்' என்று சொன்னால் அவர் எப்படி அதை ஏற்றுக்கொள்வார் என்பதை எண்ணிப் பார்த்தான். சில சமயங்களில் ஆண் பெண் உறவைப் பற்றி அனாயாசமாகப் பேசி சிரித்துக் கேலி செய்யும் கனோஜி தன் மகளே பாதிக்கப்படும் நிலைமையில் என்ன நினைப்பார். ஆகவே தான் செய்த முடிவே சரியானதென்று தீர்மானித்தான். பாதுகாப்பை அவள் கேட்பதால் மஞ்சுவையே அவளுக்குப் பாதுகாப்பாக ஏற்பாடு செய்துவிடலாம். பேசவேண்டியதை மஞ்சு கனோஜியிடம் பேசிக்கொள்ளட்டும் என்று முடிவு கட்டினான் உபதளபதி. அதைச் சொல்ல மஞ்சுவைத் தேடிக்கொண்டு சென்றான்.

மஞ்சு அப்பொழுது கீழ்த்தளத்தில் துடுப்புத் தள்ளுமிடத்தில் இருந்தாள். மாலுமிகள் கோரிக்கைக்கு இணங்கப் பாடிக்கொண்டும் இருந்தாள். கீழ்த்தளத்தில் வாயிற்படியிலிருந்தே அவள் பாட்டைக் கேட்டான் இதயசந்திரன். அன்று அவள் காலைக் கீதத்தைக் கேட்ட இதயசந்திரன் பிரச்சினைகள் மனத்தைவிட்டுப் பறந்தன. சங்கீதத்தின் அசைவுக்குத் தகுந்தபடி அவள் உடல் அசைந்தது, குரல் ஒலிக்குத் தக்கபடி அவள் தலை அசைந்தது, மாலுமிகளும்



அசைந்தார்கள். ஜலதீபம்கூட அப்படியும் இப்படியும் அசைந்தது. அரபிக் கடலின் அலைகள் ஜலதீபத்தின் பக்கத்தில் தாளம் போட்டன. பாட்டு முடிய நேரம் பிடித்தது. ஆனால் நேரம் போவது மட்டும் தெரியாததால் இதயசந்திரன் நின்று கொண்டேயிருந்தான், இசையின் மயக்கத்தில் சிக்கி. கடைசியாகப் பாட்டை முடித்துத் திரும்பிய மஞ்சு, ''நீங்களா நிற்கிறீர்கள்?'' என்று வினவினாள்.

''ஏன், பாட்டின் சுகத்தில் ஆள் அடையாளங்கூடத் தெரியவில்லையா?'' என்று வினவிய இதயசந்திரன் அவள் கோலத்தைக் கண்டு பிரமித்தான். அன்று அவள் வழக்கத்துக்கு மாறாகச் சீலையணிந்திருந்தாள். சீலையும் வெண்ணிறமாய் ஓரத்தில் பூவேலை செய்ததாய், பெரிய புஷ்பத் தலைப்பு உள்ளதாய் இருந்தது. அந்தச் சீலையணிந்திருந்ததால் அவள் அதிக உயரமாகிவிட்டதுபோல் தோன்றியது இதயசந்திரன் கண்களுக்கு. வயதுகூட மேலும் இரண்டு ஏறியிருப்பது போன்ற பிரமையும் ஏற்பட்டது.

அவன் தன்னை வெறித்து வெறித்துப் பார்ப்பதை அவளும் கவனித்து இதழில் குறுநகை கொண்டாள். ''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்'' என்று வினவினாள்.

''கோலம் புதுக் கோலமாயிருக்கிறது'' என்றான் இதயசந்திரன்.

''இப்படி நான் உடுப்பதில் உங்களுக்கு ஆட்சேபணை என்ன?'' என்று வினவினாள்.

''ஆட்சேபணையில்லை. பார்ப்பதற்குப் பாட்டி மாதிரி இருக்கிறது'' என்றான் அவன் எரிச்சலுடன்.

''அப்படியானால் குமரியுடன் தங்கியிருக்கலாமே?''

''எந்தக் குமரி?''

''அவள்தான் உங்கள் வெள்ளைக்காரி. சட்டையைக் கழற்றச் சொன்னாளே உங்களை அவள்தான்.''

இதைக் கேட்ட மாலுமிகள் நகைத்தார்கள் பெரிதாக. ''சபாஷ் மஞ்சு! சபாஷ்'' என்று ஹர்கோவிந்த் கூவினான்.

இதயசந்திரன் கோபம் எல்லை கடந்தது. வாயிற்படியிருந்து தடதடவென்று படிகளில் இறங்கி மஞ்சு இருந்த இடம் சென்று அவள் கையைப் பிடித்துச் சரசரவென்று இழுத்துக் கொண்டு படிகளில் ஏறினான். மஞ்சு தட்டுத் தடுமாறி அவனுடன் படிகளில் ஏறிய வண்ணம் பின்புறமாக மாலுமிகளைப் பார்த்துக் கண் சிமிட்டினாள். மாலுமிகள் மீண்டும் நகைத்தார்கள்.

இதயசந்திரன் வாயிற்படிக்கு வந்ததும் கீழ்த்தளத்துக் கதவைச் சரேலென்று சாத்தினான். பிறகு மஞ்சுவை நோக்கி, ''மஞ்சு! சீக்கிரம் போய் உடையை மாற்றிக் கொண்டு வா'' என்று உத்தரவிட்டான்.

''ஏன், இந்த உடைக்கென்ன!'' என்று கேட்டாள் அவள்.

''எனக்குப் பிடிக்கவில்லை.''

''உங்களுக்குப் பிடிக்கிற உடையைத்தான் நான் உடுத்த வேண்டுமா?''

''ஆம்.''

''என்ன அப்படி நிர்ப்பந்தம்? நான் உங்கள் மனைவியா?''

''ஆம்.''

''இன்னும் திருமணம் ஆகவில்லையே?''

''இல்லாவிட்டால் என்ன? மற்றது எது குறைந்தது?''

''உபதளபதி!'' வெட்கப்பார்வை பார்த்தாள் மஞ்சு.

இதயசந்திரன் கண்களில் கோபம் தணியவில்லை. ''சந்தேகமிருந்தால் உன் சிநேகிதியைக் கேட்டுப்பார்'' என்றான்.

''யாரவள்? என் சிநேகிதி?'' என்று வினவினாள் மஞ்சு புன்சிரிப்பு உதடுகளில் தவழ.



''வெள்ளைக்காரி.''

''அவள் சொல்ல என்ன இருக்கிறது?''

''அவள்தான் சொன்னாள் நீ என் மனைவியென்று.''

''அவள் எது சொன்னாலும் வேத வாக்குப் போலிருக்கிறது?''

''இந்த விஷயத்தில் வேத வாக்குத்தான்'' என்று கூறிய இதயசந்திரன் அவளை இழுத்து அணைத்தான்.

''பட்டப்பகல்! மாலுமிகள்!'' என்று கூவினாள் மஞ்சு.

அந்தச் சமயத்தில் அவர்களை நோக்கி நடந்து வந்த காதரைன் கூறினாள், ''நான் நினைத்தது சரி'' என்று.

''என்ன நினைத்தாய்? எது சரி'' என்று கூறினாள் மஞ்சு.

''அவரும் நீயும் புருஷன் மனைவி என்பது.''

''எந்த ருசுவைக் கொண்டு சொல்கிறாய் அதை?''

காதரைன் பெரிதாக நகைத்தாள், ''இதுதான் ருசு'' என்று அவர்களிருந்த நிலையைச் சுட்டிக் காட்டினாள்.

அதைக் கேட்டு வெகுண்ட இதயசந்திரன் மஞ்சுவை விடுவித்துவிட்டு நடந்தான் வேறொரு புறமாக. மஞ்சுவுக்கும் தனக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் சிக்கல் அனைத்துக்கும் இந்த வெள்ளைக்காரிதான் காரணம் என்று நினைத்து அவளை வெறுத்தான். ஆனால் வெள்ளைக்காரி தொந்தரவு தீரவில்லை. விஜயதுர்க்கத்தை அடைவதற்குள் பெரும் தொல்லைகளில் சிக்க வைத்தாள் இதயசந்திரனை அந்த வெள்ளை மகள். விஜயதுர்க்கத்தை அடைந்தபின் அவள் பின்னிய வலையில் இதயசந்திரன் மட்டுமல்ல, கனோஜியும் விழுந்தார்.

## அத்தியாயம் 8

# அச்சம் தவிர்

கப்பல்களிரண்டையும் காதரைனையும் பிடித்துக் கொண்டு கேரியா என்றழைக்கப்பட்ட விஜயதுர்க்கத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்த ஜலதீபத்திலிருந்த அனைவர்க்குமே அடுத்த இரண்டு நாட்களுக்குள் காதரைன் பெரும் பிரச்னைகளைக் கிளப்பி வைத்தாள். மஞ்சுவும் இதயசந்திரனும் இருந்த நிலையைச் சுட்டிக்காட்டி அவர்களிருவரும் கணவன் மனைவியென்பதற்கு அதுவே ருசு என்று கூறியதைத் தளத்திலிருந்த மாலுமிகள் கேட்டு லேசாக முதலில் நகைத்தார்கள். பிறகு சந்தேகப்பட்டார்கள். தளபதிக்கும் உபதளபதிக்கும் இருந்த உறவு உத்தியோக உறவைவிடச் சற்று அதிகப்பட்ட உறவு என்பதை மாலுமிகள் அறிந்தேயிருந்தாலும் கணவன் மனைவியாகும் அளவுக்கு அது முற்றவில்லையென்று நினைத்தார்களாதலால் காதரைன் விதைத்த சந்தேக வித்து, 'ஒருவேளை அப்படியும் இருக்குமோ' என்ற எண்ணத்தை விளைவித்தபடியால் அதைப் பற்றித் தனிப்படப் பேசவும் முற்பட்டார்கள். வெள்ளைக்காரி சொன்னதை, சுக்கான் திருப்புவதில் முனைந்திருந்தது போல கள்ளத்தனமாகக் கேட்டு கொண்ட இப்ரஹீம், தளத்து மாலுமிகளுடன் நகைத்ததல்லாமல், கீழறையிலிருந்த ஹர்கோவிந்தின் துடுப்புத் துழாவும் கோஷ்டிகளிடையேயும் அதைப் பற்றித் தெரியப்படுத்தினான். அதைத் தவிர, உபதளபதியாரை நட்ட நடுத்தளத்தில் கட்டியணைத்த காட்சியையும் சற்று அளவுக்கு அதிகமாக வர்ணித்தான். இத்தகைய சந்தேகமும் வதந்தியும் மாலுமிகளிடையே உலாவியதை மஞ்சுவோ இதயசந்திரனோ அறியாமலில்லை. மாலுமிகளின் பார்வை தங்களிடத்தில் அதிகமாகி விட்டதையும், தாங்கள் பாய்மரத்தடியில் தனித்து உட்கார்ந்திருந்த சமயங்களில் முன்பெல்லாம் லட்சியம் செய்யாமல் அருகில் வந்து பேசிய மாலுமிகள் தங்களைத் தனித்துவிட்டு விலகிச் செல்வதையும், தங்களிடம் சாதாரணமாகச் சிரித்துச் சிரித்துச் சம்பாஷித்த மாலுமிகள் திடீரென அதிக மரியாதை காட்ட ஆரம்பித்து விட்டதையும் கண்ட உபதளபதிக்கும் தளபதிக்கும் அவர்கள் போக்குக்குக் காரணம் புரியாமலில்லை. அதனால் இருவரும் முன்போல் நெருங்கிப் பழகாமல் சற்று விலகியிருக்க முற்பட்டார்கள். அதற்கும் மாலுமிகள் அர்த்தம் கற்பித்தார்கள். அந்த அர்த்தத்தின் சுருதியை அதிகமாக மீட்டினாள் வெள்ளைக்காரி காதரைன்.

இரண்டு நாள்கள் கழித்துத் தளத்தின் அடியறையில் மேல் கதவைச் சாத்திக்கொண்டு உட்கார்ந்த இப்ரஹீம், ''ஹர்கோவிந்த்! தளபதியும் உபதளபதியும் இரண்டு நாள்களாக ஒருவருக்கொருவர் பேசவில்லை'' என்றான் மெல்ல.

''ஆமாம்! நானும் கவனித்தேன். இருவருக்கும் ஏதாவது சண்டையா?'' என்று கேட்டான் ஹர்கோவிந்த்.

''இத்தனை நாளில்லாத சண்டை இப்பொழுது ஏன் வந்தது ஹர்கோவிந்த்?'' என்று வினவினான் இப்ரஹீம்.

''எல்லாம் அந்த வெள்ளைக்காரியால்தான் வந்திருக்க வேண்டும் இப்ரஹீம்'' என்றான் ஹர்கோவிந்த்.

வெள்ளைக்காரியைச் சொன்னவுடன் பர்னாண்டோ சீறினான். ''அவளுக்கும் இவர்கள் உறவுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று.

''அப்படிக்கேள் பர்னாண்டோ,'' என்ற குரல் மாலுமிகளைத் திகைக்க வைத்ததன்றித் திரும்பவும் வைத்தது.

கதவருகில் படிகளின் உச்சியில் நின்றிருந்தாள் காதரைன் கறுப்பு உடையில். அவள் இதழ்களில் இளநகை அரும்பி நின்றது. மாலுமிகள் பயத்துடன் எழுந்தார்கள். அவர்களைக் கையமர்த்தி உட்காரச் செய்த காதரைன், ''ஒரு விதவையின்மீது ஏன் அபாண்டமாகப் பழி சுமத்து

இறீர்கள்? அவர்கள் உறவை நான் எப்படி வெட்டவோ ஒட்டவோ முடியும்?'' என்று வினவினாள்.

அப்பொழுது அவள் மராத்தியில் பேசினாள். மராத்தி நல்ல மராத்தியாகவுமிருந்தது. ''மன்னிக்க வேண்டும். தவறாக நினைக்கவேண்டாம். நீங்கள் வந்தபின் உப தளபதியும் தளபதியும் பேசுவதை நிறுத்திக் கொண் டார்கள்'' என்று குறிப்பிட்டான் ஹர்கோவிந்த்.

''அவர்கள் பேச்சும் சிரிப்புமில்லாதது கப்பலில் ஏதோ இல்லாதது மாதிரித் தெரிகிறது'' என்றான் இப்ரஹீம்.

தளபதியிடமும் உபதளபதியிடமும் மாலுமிகள் வைத் திருந்த அன்பைக் கண்டு பிரமித்தாள் காதரைன். ஜலதீபத் தின் பல வெற்றிகளைப் பற்றி அவள் கேள்விப்பட்டிருந் தாள் கார்வாரிலிருந்த காலத்தில். அதைப் பற்றிப் பெருவியப்பும் அடைந்திருந்தாள். ஆனால் அந்த வியப்பு அன்று அந்தக் கீழ்த்தளத் துடுப்புத் துழாவும் அறையில் அடியோடு அகன்றது. இதயசந்திரனும் மஞ்சுவும் மாலுமி களின் இதயங்களின்மீது அடைந்துள்ள அபரிமிதமான வெற்றிக்கு ஜலதீபத்தின் போர் வெற்றி ஒரு வெற்றியா என்று நினைத்தாள்.

தளபதியும் பெரும் செயல்களைப் புரிய முடியுமென்ப தைப் புரிந்துகொண்ட காதரைன் கூறினாள் மெதுவான குரலில், ''அவர்கள் சிரிக்காததைப் பற்றிக் கவலைப்படா தீர்கள்'' என்று.

''அவர்கள் பேசாததைப் பற்றி?'' என்று வினவினான் ஹர்கோவிந்த்.

''அதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்'' என்றாள் காதரைன். மேலும் சொன்னாள்: ''அவர்கள் மௌனமும் சண்டையும் துக்கமும் உங்களுக்குப் புரியாது. அத்தனையும் அவர்கள் காதலின் அஸ்திவாரங்கள், அப்படிச் சண்டை போடுபவர்கள் முந்தாநாளன்று அப்படிக் கட்டிக்கொண்டு நிற்பானேன், அத்தனைபேர்



எதிரிலும் வெட்கமில்லாமல்? இல்லை ஹர்கோவிந்த்! காதலின் வழிகள் உங்களுக்குப் புரியாது. அது விளைவிக் கும் சிந்தனைப் போராட்டங்களை நீங்கள் உணர முடியாது. உங்கள் உபதளபதியும், தளபதியும் துன்பப் படவில்லை, இன்பமே படுகிறார்கள்.''

''அப்படியா?'' என்று எல்லா மாலுமிகளும் ஏககாலத் தில் கேட்டார்கள்.

''வேண்டுமென்றால் கவனித்துப் பாருங்கள். என்மீது வீண்பழி போடாதீர்கள்'' என்று கூறிவிட்டு எழுந்து மேல் தளம் சென்றாள் காதரைன்.

அந்த வினாடியிலிருந்து மாலுமிகள் பார்வையெல் லாம் கள்ளப் பார்வையாயிற்று. மஞ்சுவும் இதயசந்திர னும் ஓரிரு முறை கப்பல் சம்பந்தமான விஷயங்களைப் பேசியபோது கூட அவர்கள் பார்வையில் ஏதோ விசேஷ மிருப்பதாக நினைத்தான் இப்ரஹீம். இந்த இரண்டு நாள்களிலும் இருவரும் காதரைனிடமிருந்து விலகியே நின்றதையும் மாலுமிகள் கவனிக்கத் தவறவில்லை. மஞ்சு காதரைனுக்குத் தனது அறையைக் கொடுத்துவிட்டு உபதளபதி அறையைத் தான் வைத்துக்கொண்டாள். காதரைன் தனது துயரத்தைத் தனிமையில் கழிக்கட்டும் என்று. ஆகவே, உபதளபதி இதயசந்திரன் கீழ்த் தளத்தில் துடுப்புத் தள்ளும் அறையில் ஒருபுறம் படுத்தான். அப்படிப் படுத்த சமயத்தில் இரவில் ஒருமுறை மேல்தளத் திற்குச் சென்றபோது மாலுமியொருவன் அரைக் கண்ணால் பார்த்தான். ஜலதீபம் பாய்களை விரித்து ஓடிக் கொண்டிருந்ததால் துடுப்புத் துழாவும் வேலையும் இல்லாத சமயம் அது. ஆகவே, இதயசந்திரன் மேல்தளம் சென்றதும் கண் விழித்த மாலுமியும் மெள்ள அவனைப் பின்பற்றிச் சென்று கதவிடுக்கில் அவனைக் கவனித்தான். நேராக உபதளபதி அறைக்கு இதயசந்திரன் சென்று கொண் டிருந்ததைக் கவனித்த உடனே கீழே வந்து மற்றவர்களுக்கு அதைத் தெரிவித்தான்.

உண்மையில் இதயசந்திரன் மஞ்சு படுத்திருந்த் தனது அறைக்குச் செல்லவில்லை. உறக்கம் பிடிக்காததாலும் பலப்பல சிந்தனைகள் சித்தத்தை உலுக்கியதாலும், மன நிம்மதிக்காக ஜலதீபத்தின் தீப முகப்பை நோக்கிச் சென்றான். வழியிலிருந்தது அவள் அறை அவ்வளவுதான். ஆனால் சந்தேகத்தின் சிறகுகள் பலபலவென அடித்தன. ஜலதீபத்தில் அந்தச் சந்தேகங்கள் மஞ்சுவுக்கு மகிழ்ச்சியா யிருந்ததென்றாலும் சற்று அச்சமும் விளைவித்ததால் அவள் ஒருக்களித்த கதவு வழியாக இதயசந்திரன் போவதைக் கவனித்தும் மஞ்சத்திலிருந்து எழுந்திருக்கவு மில்லை. வெளிவந்து அவனை அழைக்கவுமில்லை. கதவைக் காலால் நன்றாகச் சாத்தவே செய்தாள்.

இதயசந்திரன் முகப்பு நோக்கிப் போவதைப் பார்த்துக்கொண்டிருந்தது அவள் மட்டுமல்ல, காதரைனும் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அறைக் கதவும் ஒருக்களித்துத் தானிருந்தது. இதயசந்திரன் தீவிர சிந்தனை யுடன் செல்வதை ஒருக்களித்த கதவின் மூலமே கவனித்தாள் அவள். அவனுடைய வீரத்திருமேனி அவளைப் பெரிதும் வியப்புக்கு உள்ளாக்கியது. பின்னால் நடந்து சென்ற உறுதியான கால்கள் அவன் மனஉறுதிக்கு அத்தாட்சியா யிருந்தாலும், இடுப்புக்கு மேல் அசைந்த உடல் அவன் உள்ளக்கலக்கத்தை நிரூபித்தது. 'அப்பா! என்ன புருஷன்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் காதரைன். கணவன் இறந்த இரண்டு நாட்களில் தான் இத்தகைய எண்ணங்களைக் கொள்வது தவறென நினைத்தாள். இருப்பினும் தனது வாழ்வை எண்ணினாள். 'பதின்மூன்று பிராயத்தில் அறுபது வயதுக் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு மூன்று ஆண்டுகள் எந்தச் சுகமும் காணாமல், வாலிபனைக் கைப்பிடித்த ஓராண்டுக்குள் அவனையும் இழந்த நிலையில் நான் வேறு எப்படியிருக்க முடியும்?' என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். ஏதோ நினைத்துக் கொண்டு ஒரு போர்வையை எடுத்துப் போர்த்துக்



கொண்டு இதயசந்திரன் நின்றிருந்த இடத்தை நாடி அவனை, ''வீரரே'' என்று மெல்ல அழைத்தாள்.

திடுக்குற்றுத் திரும்பிய இதயசந்திரன், ''நீயா!'' என்று கேட்டான்.

''ஆம்'' என்றாள் அவள் மெதுவாக.

''இங்கு ஏன் வந்தாய்?'' என்று கேட்டான் மறுபடியும் ஜலதீபத்தின் முகப்பையும் அப்பாலிருந்த அலைகளையும் நோக்கிக் கொண்டு.

''ஏன், வரக்கூடாதா?'' என்று கேட்டாள் மெதுவாக.

''இரவு இப்பொழுது.''

''தெரியுமே எனக்கு.''

''இங்கு நீ தனித்து வருவது...''

''தவறு என்கிறீர்களா?''

''ஆம்.''

காதரைன் துயரம் சொட்டும் குரலில், ''அபலை! ஒரு கைம்பெண்! அவள் அலங்கோலமடைந்து இரண்டே நாட்கள் ஆகியிருக்கின்றன. இதற்குள் அவள்மீது அபவாதமா? இது என்ன உலகம்?'' என்று கூறினாள்.

இதயசந்திரன் அவளை நோக்கித் திரும்பினான். ''மிஸஸ் சௌன்!'' என்று அழைக்கவும் செய்தான்.

''ஏன்?'' என்று கேட்டாள்.

''என் மாலுமிகளின் மனோபாவம் மாறிவிட்டது'' என்று சுட்டிக் காட்டினான் இதயசந்திரன்.

''மாறிவிட்டதா!''

''ஆம். என்னைச் சந்தேகிக்கிறார்கள்...''

''உங்களையா!''

''ஆம். மஞ்சுவைக்கூடச் சந்தேகிக்கிறார்கள்.''

''என்ன சந்தேகம்!''

''எங்கள் உறவு முற்றிவிட்டதாக.''

''கணவன் மனைவிக்குள் உறவு முற்றினால் தவறென்ன!''

''இதயசந்திரன் அவளை எரித்துவிடுவது போல் பார்த்தான். ''அவள் என் மனைவியல்லவென்று எத்தனை முறை சொல்வது உனக்கு?'' என்று சீறவும் செய்தான்.

காதரைன் முகத்தில் வியப்பைக் காட்டினாள். ''எப்பொழுது சொன்னீர்கள் என்னிடம்? அவள் உங்கள் மனைவியென்று நான் சொன்னபோதுகூட நீங்கள் மறுக்க வில்லையே!'' என்று கூறி வியப்பைக் குரலிலும் காட்டினாள்.

இதயசந்திரன் சிந்தித்தான். உண்மையில் அவளிடம் தான் அப்படி ஏதும் மறுக்கவில்லையென்பதைப் புரிந்து கொண்டான். இருப்பினும் கணவன் மனைவி உறவுக்கு ருசு காட்டியவள் அவள்தானே என்று நினைத்து, ''நீதான் நாங்கள் நின்ற நிலையை ருசுவாகக் காட்டி இல்லாத உறவைக் கிளப்பியது'' என்று கூறிக்கொண்டேயிருக்கை யில் காதரைன் குறுக்கிட்டாள்.

''கணவன் மனைவியை அணைப்பதைவிட வேறு ருசு என்ன வேண்டும்?''

''காதலர்கள்...''

''அணைப்பதுண்டு. ஓகோ... அப்படியா...''

பேசத் தெரியாமல் தவித்த இதயசந்திரன், ''இரு இரு- மறுபடியும் ஏதாவது முடிவு கட்டிவிடாதே'' என்று குழறினான்.



''உபதளபதி! என் அறைக்கு வாருங்கள்'' என்றழைத் தாள் காதரைன்.

''எதற்கு?'' என்று வினவினான் இதயசந்திரன் குழப்பத்துடன்.

''இங்கு நான் தனித்து உங்களுடன் பேசுவதை மாலுமிகள் பார்த்தால் தவறாக நினைப்பார்கள்'' என்று தளபதி அறையை நோக்கி நடந்தாள்.

இதயசந்திரன் ஒரு விநாடி சிந்தித்தான். சுற்றுமுற்றும் பார்க்கவும் செய்தான். கப்பல் தளத்தில் முகப்பு விளக்கைத் தவிர மற்ற விளக்குகள் அணைந்து கிடந்தன. இப்ரஹீம் சுக்கானைப் பிடித்துக் கடலைப் பார்த்துக் கொண்டிருந் தான். பாய்மரத்தடியிலிருந்த பர்னாண்டோ குனிந்து ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். இன்னும் இரு மாலுமிகள் பீரங்கிகளைச் சுற்றிலும் உறங்கிக் கொண் டிருந்தார்கள். இதையெல்லாம் பார்த்த இதயசந்திரன் சற்று வேகமாக நடந்து தளபதி அறைக்குள் சென்றான்.

காதரைன் அப்பொழுது தனது போர்வையை நீக்கி மஞ்சத்தில் எறிந்துவிட்டு மஞ்சத்தின் முனையில் உட்கார்ந் திருந்தாள்.

உபதளபதி உட்காரவில்லை. நின்றுகொண்டே கேட்டான், ''எதற்காக என்னை வரச் சொன்னாய்?'' என்று.

''என்ன அவசரம்? சற்றுப் பொறுங்கள்'' என்று கூறி முதுகை அவனை நோக்கி திருப்பி, ''இந்தக் கயிற்றைச் சற்று அவிழ்த்து விடுங்கள்'' என்றாள்.

இதயசந்திரன் அவளை நெருங்கவில்லை. ''அதை நீயே அவிழ்த்துக் கொள். சொல்லவேண்டியதைச் சொல்'' என்றான்.

''இதோ பாருங்கள், முதுகுப்பக்கம் கை எட்டவில்லை'' என்று தனது கைகளைக் கொண்டுபோய்க் காட்டினாள்.

''கட்டியது யார்?'' என்று சீறினான் உபதளபதி.

''மஞ்சு'' என்றாள் காதரைன்.

''அவளையே அவிழ்க்கச் சொல்.''

''அவள் இங்கில்லையே?''

''கூப்பிட்டு வா.''

''இப்பொழுது போனால் நன்றாயிருக்குமா?''

''ஏனிருக்காது.''

''நான் முதலில் போவேன் அறையிலிருந்து. பிறகு நீங்கள் வெளியில் வருவீர்கள். இப்படி ஒருவர் பின் ஒருவராய் இந்த அறையிலிருந்து வெளியே போனால், உங்கள் மாலுமிகளில் ஒருவன் பார்த்துவிட்டால் போதும், ஆனால் உங்களுக்குப் பயமில்லையென்றால் எனக்கென்ன?'' என்று காதரைன் எழுந்தாள்.

''இரு இரு'' என்று தடுத்தான் இதயசந்திரன்.

''அப்பொழுது நீங்களே...'' என்று இழுத்தாள் காதரைன்,

''உதவுகிறேன்'' என்றான் அவன்.

''உதவுங்கள், உதவுங்கள்'' என்ற அவள் முதுகைத் திருப்பினாள். கௌனின் மேல் முடிச்சை அவன் அவிழ்த்தான்.



''உதவி இத்துடன் முடிவா?'' அவள் அவனை நோக்கித் திரும்பினாள்.

உபதளபதி மேலே உதவத் தயார்தான் என்பது அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. அத்துடன் கண்களில் அச்சமும் படர்ந்து நின்றது.

காதரைன் தனது கண்களை அவன் கண்களுடன இணைத்தாள். ''அச்சம் தவிர்!'' என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

## அத்தியாயம் 9

# "முடியாது"- ஸார்கேல்

கணவனை இழந்த இரண்டே நாட்களுக்குள் காதற் கணைகளைத் தொடுக்கும் துணிவு எந்தக் காரிகைக்கும் வர முடியாதென்பதை உணர்ந்ததால் காதரைனின் விபரீதப் போக்கைப் பற்றி அச்சமும், அல்லி மலரைப்போல் வெளுத்துக் கிடந்த அவள் அழகிய மேனியின் அழைப்பி னால் ஏற்பட்ட ஆர்வமும் கலந்து என்ன செய்வதென்று தெரியாமல் பிரமித்துவிட்ட இதயசந்திரனை நெருங்கி வந்து நின்று கொண்ட அந்த வெள்ளை யுவதி "அச்சம் தவிர்" என்ற தமிழ்ப் பழமொழியைச் சொல்லவில்லை யென்றாலும் 'கெட் ரிட் ஆஃப் யுவர் பியர்' என்ற அவள் கூற்றுக்குச் சரியான மொழிபெயர்ப்பு அந்தத் தமிழ்ப் பழமொழியே என்று தனக்குள் சொல்லிக் கொண்ட தமிழக வீரன் அவளுக்குப் பதிலேதும் சொன்னானில்லை. அவனருகில் வந்து கௌனைத் தலைக்குமேல் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு அவள் நின்றபோதும் அவன் பேசச் சக்தியின்றிச் சிலையென நின்று கொண்டேயிருந் தான். கௌனைக் கழற்றிய பின் உள்ளேயும் அவள் வேறு உடையொன்று அணிந்திருந்ததை இதயசந்திரன் கண்டா னானாலும், அவளது சமீபத்தாலும் உள்ளுடை விளக்கிய அழகிடங்களாலும் அவன் கிட்டதட்ட விட்டில் பூச்சி போலானான். சற்று அண்ணாந்து அவனைப் பார்த்த கழுத்தின் வெண்மை, முகவெள்ளியில் பதிக்கப்பெற்ற நீலக் கற்களிரண்டு, அத்தனையும் சுற்றி அலங்கோலமாக விழுந்திருந்த தங்கக் குழல்கள், உள்ளுடையின் இரு பாகங் களுக்கிடையே வெள்ளை வெளேரென்ற சிற்றிடை அனைத்தும் அவனைப் பைத்தியமாக அடித்தன. அத்துடன் தனது கைகளிலொன்றைத் தூக்கி அவன் தோள்மீது வைத் தாள். அதிகமாக நெருங்கி மீண்டும் கேட்டாள்:



"ஏனிப்படி பயப்படுகிறீர்கள்? நான் என்ன செய்து விட்டேன்?" என்று.

ஒரு கோடியிலிருந்த மங்கலான அறை விளக்கு அவள் பொற்குழல்களில் பட்டுப் பெருமெருகு கொடுத்ததால் பள பளத்த பொன்னாபரணம்போல் அவள் தலைகாட்சி அளித் தது. ஆண் மகனின் சமீபத்தினால் வெள்ளைக்கன்னங்களில் ஏறிவிட்ட வெட்கச் சிரிப்பு அவளழகைப் பதினாயிரம் மடங்கு அதிகப்படுத்தியிருந்தது. அவள் உடல் அவன்மீது மட்டும் படாமலிருந்தாலும் அவற்றின் அழகுகளை எண்ணியதாலேயே இதயம் வெடித்துவிடும் போலிருந்தது உபதளபதிக்கு. ஆழ்ந்து மட்டும் அவளை அவன் கவனித் திருந்ததால் அவள் கண்களில் காமத்தின் வெறியிருப்பதை அவன் உணர்ந்து கொண்டிருப்பான். அப்படி உணர்ந்து கொண்டிருந்தால் அவன் உணர்ச்சிகள் அவன் செய்கைக்கு வேலியும் போட்டிருக்கும். ஆனால் ஆழப் பார்க்கச் சக்தி யற்ற கண்கள், அளவில் அடங்காத உணர்ச்சி, சிதைந்து கிடந்த சித்தம், இரட்டைக் குதிரை ரதம்போல் வேகமாக ஓடிய இதயம், இவை அவனைப் பலபடி தூக்கியெறியவே உண்மை நிலை உணராத அவன் கைகள் அவள் அழகிய சிற்றிடையை லேசாகச் சுற்றின. கைகள் இறுக்கவில்லை சிற்றிடையை. அதுவே வழவழவெனத் தவழ்ந்து வந்தது அவன் கை வளையத்துள். அவன் முதலில் உள்ளே வந்த வேகத்தில் அறைக் கதவை முழுதும் மூடாததால் இடை வெளி மூலம் வந்த காற்றில் அறை விளக்குப் படபடத்தது. இதயசந்திரன் இதயம் அந்த விளக்குடன் போட்டி போட் டது. அந்தப் போட்டியில் உணர்ச்சிகளும் கலந்து கொண்டன.

அந்த நிலையில் அந்தக் கட்டழகி பேசவில்லை நீண்ட நேரம். இடையில் தவழ்ந்த கை அப்படியே நின்றுவிட்ட தைக் கவனித்தாள். நிலை தடுமாறிய நிலையிலும் தமிழன் நின்ற இடத்தைவிட்டு நகராமல் நின்றுகொண்டிருந்ததை யும் கவனித்தாள், அவனுடைய உள்ளத்து உணர்ச்சி

களுடன் பண்பாடு போராடிக் கொண்டிருப்பதையும் கவனித்தாள். மெல்லத் தலையை அவன் மார்மீது சாய்த்துப் பெருமூச்சும் விட்டாள். அந்தப் பெருமூச்சு துக்கத்தின் மூச்சா, காதலின் மூச்சா என்பது புரியவில்லை தமிழனுக்கு. இரண்டும் அதிக வித்தியாசமில்லையென்பதையும் காதலும் ஒருவகைத் துன்பம்தான் என்பதையும் நினைத்த அவன், அவள் தலைக்குழல்களைக் கோதிவிட்டான். ''கால் வலிக்கிறது, அப்படி உட்காரட்டுமா?'' என்று மெல்லக் கேட்டாள். அவள் அப்படிக் கேட்டபோது அவள் இதழ்கள் சொல்லைக் கூட்ட இருமுறை மார்பில் பிரிந்து மூடின. அதனால் உணர்ச்சிகளுக்குப் பலியான இதயசந்திரன் அவளுக்குப் பதிலேதும் சொல்லாமல் அவளை அழைத்துச் சென்று மஞ்சத்தில் உட்கார வைத்தான். அவள் அங்கிருந்த தலையணையில் சாய்ந்து கொண்டாள். இதயசந்திரனைக் கையைப் பிடித்துப் பக்கத்தில் உட்கார்த்தவும் செய்தாள்.

மந்திரத்தால் இயக்கப்பட்ட பதுமைபோல் அவள் காமத் தந்திரங்களுக்குத் தக்கபடி அசைந்த இதயசந்திரன் உட்கார்ந்ததும் செயலற்றிருந்தான். அவள் மெல்லக் கேட்டாள். ''என்மீது கோபமா உங்களுக்கு?'' என்று.

''இல்லை.'' யந்திரம்போல் உதிர்ந்தது ஒற்றைச்சொல்.

''பயமா?'' அவள் காம உதடுகள் உதிர்த்தன அச் சொல்லை விஷம ஒலியில்.

''எதற்குப் பயம்?'' என்று கேட்டான் அவன் அவள் மோகன சரீரத்தின்மீது கண்களை ஓட்டி.

''எதற்கா!'' இதைச் சொல்லி நகைத்தாள் அவள்.

''ஆம். எதற்கு?''

''ஐயோ! புருஷர்களுக்கு எதுவும் தெரிவதில்லை.''

''என்ன தெரிய வேண்டும்?''

''பெண்ணின் இதயம்.''



''அதற்கென்ன இப்பொழுது?''

''இதென்ன அசட்டுக் கேள்வி?'' என்ற அவள், ''இந்தக் கால் நிரம்ப வலிக்கிறது'' என்று தனது பாதத்தில் அவன் கையொன்றைத் தூக்கி வைத்தாள்.

அந்த ஒரு தவறை அவள் செய்திராவிட்டால் இதயசந்திரன் அன்று பூச்சியாயிருப்பான். அவள் அழகிய பாதத்தில் தன் கைப்பட்டதும் அதைத் தடவிக்கொண்டே யோசனையில் இறங்கினான். தடவிய அவன் விரல்களை அவள் பாத விரல்கள் நெறித்தன. இதயசந்திரன் வேறு வாழ்க்கைக்கு, இரண்டரை ஆண்டுகளுக்கு முந்திய வாழ்க்கைக்குச் சென்றான். பரசுராமபுரத்தின் கோபுர விளக்கு எழுந்தது அவன் கண்களில். அதிலிருந்து தென்புறம் தள்ளியிருந்த பரசுராம மலைச் சரிவு, அதிலிருந்த அந்தக் காடு, அந்தக் காட்டிலிருந்த மரம்—அத்தனையும் எழுந்தன சித்தத்தில். மரத்தடியில் உட்கார்ந்திருந்த பானுதேவி தனது கால்களை நீட்டிக் கொண்டிருந்தாள். அந்தப் பாதத்தில் தவழ்ந்தது அவன் கை. கைவிரல்கள் அவள் பாதவிரல்களில் புகுந்தன. அவள் பாதவிரல்கள் அவன் கைவிரல்களை நெறித்தன. சற்று ஏறெடுத்து நோக்கினான் இதயசந்திரன். பானுதேவியின் கம்பீர விழிகள் அவன் விழிகளைக் கௌவின. ''பானு! பானு!'' என்று இதயம் வாய் திறந்து அழைத்தது. பிறகு ஏற்பட்ட சலசலப்பு, அவள் எழுந்து விரைந்து யார் வந்திருக்கிறானென்று ஆராய்ந்த திறமை, பிறகு தனக்கிட்ட உத்தரவு அனைத்தும் விரிந்தன அவன் இதயக் கண்களில்.

பானுதேவியைச் சந்தித்ததிலிருந்து ஏற்பட்ட வாழ்க்கை அனுபவங்களை, மனக்கிளர்ச்சிகளை, போராட்டங்களை அனைத்தையும் அந்தச் சமயத்தில் எண்ணிப் பார்த்தான் தமிழன். அஞ்சன்வேல் கோட்டையில் ஒரே ஒருநாள் சந்தித்த முகத்தில் கத்தி வெட்டுள்ள, கிராதகனையும் நினைத்தான், அவனை இரண்டரை ஆண்டுகள் தேடியும்

கிடைக்கவில்லையே என்ற நினைப்பால் பெருமூச்சும் விட்டான். 'வந்தது ஒரு பெண்ணின் கண்ணீரைத் துடைக்க. சிக்கியது அரசியலில் விளையாடிய பானுதேவியிடம், பிறகு மயங்கியது மாலுமி மஞ்சுவிடம். இப்போது இவளொருத்தி' என்று நினைத்த இதயசந்திரன், 'நான் எத்தனை பலவீனமடைந்து விட்டேன் இந்த இரண்டரை ஆண்டுகளில்!' என்று நினைத்துக் கொண்டான். பிறகு காதரைனின் காலை ஒரு முறை அழுத்திப் பிடித்துவிட்டு எழுந்திருந்தான்.

''ஏன் எழுந்து விட்டீர்களா?'' என்று காதரைன் கொஞ்சினாள்.

''வேலை இருக்கிறது'' என்றான் இதயசந்திரன் அவளுக்கு முதுகைத் திருப்பிக்கொண்டு.

''கொஞ்ச நேரங்கூட காத்திருக்காது போலிருக்கிறது அந்த வேலை?''

சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான் இதயசந்திரன், ''காத்திருக்காது'' என்று கூறிவிட்டு நடக்க முற்பட்டான் வெளியே.

''வீரரே'' என்று அவள் பஞ்சணையில் சாய்ந்தபடியே அழைத்தாள்.

கதவுக்கருகில் சென்று அவன் திரும்பிப் பார்த்தான். ''ஏன்?'' என்றும் முரட்டுத்தனமாகக் கேட்டான்.

''நான் மட்டும் காத்திருக்கலாமா?'' என்று கேட்டாள் காதரைன் புன்முறுவலுடன்.

''காத்திருக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டுக் கதவைத் தடாலென்று அடித்துச் சாத்திவிட்டு வெளியே நடந்து விட்டான் தமிழன். காதரைன் கலகலவென நகைத்தாள். அவன் அடித்து மூடியதால் நன்றாகத் திறந்துவிட்ட கதவைப் பார்த்தாள். ''இந்தக் கதவு போல்தான் நீங்களும்'' என்று கூறி மேலும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தாள்.



''இந்த ஆண்பிள்ளைகளுக்கு இந்த முரட்டுத்தனம் இல்லாவிட்டால் எந்தப் பெண்ணுக்கும் காதலென்பதற்கு அர்த்தமே புரியாதே!'' என்றும் கூறிக்கொண்டாள்.

அறையைவிட்டு வெளியே சென்ற இதயசந்திரன் கப்பல் தளத்தைச் சுற்றுமுற்றும் ஆராய்ந்தான். பீரங்கிப் பக்கத்திலிருக்கவேண்டிய பர்னாண்டோ சுக்கான் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு இப்ரஹீமுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். பேச்சு சுவாரஸ்யத்தில் இதயசந்திரனை அவர்கள் பாராததால் திடீரென எதையோ பேசிச் சிரித்தார்கள். அருகே வந்த இதயசந்திரன் கேட்டான், ''சிரிப்பு எதற்கு?'' என்று.

திடுக்குற்றுத் திரும்பிய பர்னாண்டோ கூறினான்: ''வேடிக்கையாகப் பேசிக்கொண்டோம்'' என்று.

''சரி சரி, பீரங்கியிடம் போ. அவரவர்கள் பணியை அவரவர் கவனிப்பது நல்லது'' என்று கூறிய இதயசந்திரன் துடுப்புத் துழாவும் கீழறைக்குச் சென்று திரும்பினான். பிறகு பாய்மரத்தடியில் உட்கார்ந்து தண்டில் சாய்ந்து கொண்டான். அப்படியே உறங்கியும் விட்டான். பீரங்கி யிடத்திலிருந்த பர்னாண்டோ இப்ரஹீமுக்கு ஏதோ சைகை செய்தான். இப்ரஹீம் தலையசைத்தான். இந்த பரஸ்பரச் சைகைகள் அடுத்த இரண்டு நாட்களில் அதிகப்பட்டன.

அடுத்த இரண்டு நாட்களில் மஞ்சு அடியோடு மாறுபட்டிருந்தாள். அவளது துணிவு எங்கோ பறந்துவிட்டது. ''என்னை முத்தமிடுங்கள்'' என்று ஜலதீபத்தின் தளத்தில் ஆதியில் கேட்ட மஞ்சு, அபரிமிதத் துணிவைப் பெற்ற மஞ்சு, துணிவை அறவே இழந்து கிடந்தாள். ''யார் காத்திருக்கச் சொன்னது?'' என்று கேட்டவள், ''எது குறைந்துவிட்டது?'' என்று சீண்டியவள், திடீரெனக் குணம் மாறி சிந்தனை படர்ந்த முகத்துடன் கப்பலில் நடமாடிக் கொண்டிருந்தாள். அவன் எப்படியும் தனது மணாளன் என்று உறுதிப்பட்டதும் எத்தனை பயம் பெண்

களுக்கு? மனைவிப் பட்டம் ஏற்படப் போகிறது என்ற நினைப்பில் மகிழ்ச்சியுடன் அச்சமும் கலந்து வருகிற தல்லவா! இந்த மனோதத்துவம் தானே மிக நெருங்கிய மஞ்சுவையும் இதயசந்திரனிடமிருந்து விலக வைத்தது! இல்லாவிட்டால் பகிரங்கமாகவும் துணிவுடனும் இதய சந்திரனுடன் இரண்டரை ஆண்டுகள் பழகியவளுக்குத் திடீரென மாலுமிகள் சந்தேகப் பார்வைகள் சலனத்தை விளைவிக்குமா? இரண்டரை ஆண்டுகளாக இதய சந்திரனை நெருங்கியும், பிறகு விலகியும் பதைபதைக்க விட்ட மஞ்சு, இப்பொழுது திடீரென மாற்றமடைந்து கலங்கவேண்டிய காரணமென்ன? மாலுமிகள் கேலியா! அதுவுமிருக்கலாம். ஆனால் அத்தனைக்கும் காரணம் காதரைன். இந்த நிலையில் கச்சிதமாக வர்ணித்தான் இப்ரஹீம். ஓர் உறையில் இரண்டு கத்திகள் இருக்க முடியாது ஒரு கப்பலில் இரண்டு பெண்கள் இருக்க முடியாது'' என்று.

பர்னாண்டோ அதை ஒப்புக்கொண்டான். ஆனால் வேறு கோணத்தில் பார்த்தான் நிலையை. ''இப்ரஹீம்! ஒரு கப்பலில் ஒரு பெண்ணிருந்தாலே உபத்திரவம் இரண்டு பெண்களிருந்தால் கேட்கவேண்டியதில்லை. இனி இந்தக் கப்பலில் மகிழ்ச்சி, வேடிக்கை, பாட்டு எல்லாவற்றுக்கும் முடிவு கட்ட வேண்டியதுதான்'' என்றான்.

பர்னாண்டோ சொன்னது உண்மையாயிற்று. அடுத்த சில நாள்களில் மஞ்சு பேசவில்லை. இதயசந்திர னும் சற்று எட்டவே போய்க் கொண்டிருந்தான். எல்லார் மனத்திலும் கஞ்சலம் இருந்து கொண்டிருந்தது. ஆனால் சஞ்சலமில்லாத ஒருத்தியுமிருந்தாள். காதரைனின் நுண்ணிய அறிவு நிலைமையை நன்றாகப் புரிந்து கொண்டதால் அவள் சர்வ சாதாரணமாக எல்லோரிடத் திலும் நடந்து கொண்டாள். பிரதி தினம் காலை யிலிருந்து மாலைவரை கறுப்புடை அணிந்தாள். கணவன் பிரிவுக்குத் துக்கம் கொண்டாடினாள். சில வேளைகளில்



கடலைப் பார்த்துக்கொண்டு மணிக்கணக்கில் நின்று கொண்டிருந்தாள். சில வேளைகளில் மஞ்சுவிடம் தனது துயரங்களைக் கூறிக் கொண்டிருந்தாள். பழைய காதல் உணர்ச்சிகள் மறைந்துவிட்டதை உணர்ந்தான் இதய சந்திரன். அவனும் அவற்றை அறவே மறக்க முயன்றான். ஆனால் அது அத்தனை எளிதில்லை என்பதையும் புரிந்து கொண்டதால் கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்தான். விஜயதுர்க்கத்தில் இறங்கியதும் மஞ்சுவின் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டிவிட்டால் காதரைன் தொல்லை தீரு மென்றும். தன் சித்தமும் திட சித்தமாகுமென்றும் தீர்மானித்தான். ஆனால் எந்த விதி அவனைக் கொங்கணிக் கரையில் தள்ளியதோ, அது வேறு விதத்தில் அவன் கதியை நிர்ணயித்திருந்தது. விஜயதுர்க்கம் சேர்ந்ததும் அவன் கனோஜி ஆங்கரேயிடம் கேட்டான், ''மஞ்சுவை மணந்து கொள்ள அனுமதி வேண்டும் எனக்கு'' என்று.

கனோஜி ஆங்கரேயின் பதில் திட்டமாகக் கிடைத்தது. ''இப்பொழுது முடியாது'' என்று சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறினார் ஸார்கேல்.

## அத்தியாயம் 10

# விஜயதுர்க்கம்

பம்பாயிலிருந்து தென்கிழக்கில் நூற்று எழுபது மைல் தூரத்திலுள்ளதும், மகாராஜா சிவாஜியால் கண்ணைப் போல் பாதுகாக்கப்பட்டதும் பிரிட்டிஷ் போர்ச்சுகீஸ் டச்சு வெள்ளைக்காரர்களையும் மொகலாயரையும் அணுக முடியாமல் அடித்ததும் எப்பொழுதும் வெற்றி கொண்டு நிமிர்ந்து நின்றதால், விஜயதுர்க்கம் எனப் பெயர் பெற்றதுமான கேரியா துறைமுகத்தைச் சென்ற ஆண்டுகளில் அடைந்தபோதெல்லாம் இதயசந்திரன் ஜலதீபத்தின் தளத்தில் நின்று அதைப் பார்த்து ஆனந்தித்த வண்ணமே துறைமுகத்தில் கப்பலைச் செலுத்துவான். கண்ணுக்கு விஜயதுர்க்கத்தைவிட, அதிக விருந்தளிக்கும் துறைமுகம் எதுவும் மேலைக் கடற்கரையில் கிடையாது மட்டுமென்பதல்ல, அதில் எந்தக் கப்பலும் பிரவேசித்துப் பாதுகாப்புப் பெறலாம் என்ற உண்மையும் அக் கோட்டையின் திண்மையும் அமைப்புங்கூட இதயச்ந்திரன் இதய ஆனந்தத்துக்குக் காரணமாயிருந்தன.

துறைமுகத் தென்கிழக்கில் எழுந்துள்ள ஸஹ்யாத்ரி தொடரின் பெரும் பாறையின் கழுத்தில் நிர்மாணிக்கப்பட்ட விஜயதுர்க்கத்தின் கம்பீரமான கோட்டை வாகோத்தன் நதியின் நீர்மட்டத்திலிருந்து 100 அடி உயரத்தில் பிரும்மாண்டமான மதிள் சுவர்களுடன் இருபத்து ஏழு பாதுகாப்பு அரண்களுடனும் பீரங்கி முனைகளுடனும் காட்சியளிப்பதைப் பார்த்துத் தமிழக வீரன் பரவசப்படாத நாளில்லை.

கோட்டைக்கு மேற்கே கடல் உடைத்துவிட்ட பல பாறை நிலங்களில் மரங்களும், புதர்களும் பெருங்கொடிகளும் வளர்ந்து கோட்டைக்குக் கடலரசன் சூட்ட வந்த



ஆரம் போல் காட்சியளித்ததும், விஜயதுர்க்கக் கோட்டைக்குள்ளே மூவரிசைக் கொத்தளங்களும் பல மாளிகை மகுடங்களும் அவற்றின் நடுவே ஆகாயமளாவி எழுந்த வட்டமான ஸ்தூபியும் தமிழக வீரனுக்கு என்றும் ஒரு பெருமிதத்தையும் வெற்றி வேட்கையையும் அளித்து வந்தன. ஒவ்வொரு முறையும் அவன் அந்தத் துறைமுகத்தில் நுழையும் போதெல்லாம் ஸஹ்யாத்ரிமலை உச்சிகளையும் கோட்டை மகுடங்களையும், பாறைப் புதர்ச் செடிகளையும், பார்த்து மகிழாமலோ, ஸஹ்யாத்ரியின் மூலிகைக் காற்றை இழுத்து முகர்ந்து திருப்தியடையாமலோ இருந்ததில்லை. இந்த இயற்கை அழகுகள் தவிர விஜயதுர்க்கத்தைச் சதா பாதுகாத்துக் கொண்டு துறைமுகத்தில் நிற்கும் குராப், மஞ்ச்வா காலிவாத் முதலிய பல்வகைப் போர்க் கப்பல்களையும் அவன் பார்த்துப் பேரானந்தமடைவான்.

ஆனால் இம்முறை அவன் விஜயதுர்க்கத்தில் நுழைந்தபோது இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கவுமில்லை, கோட்டை மகத்துவத்தை நினைத்து மகிழவுமில்லை; ஸஹ்யாத்ரியின் மூலிகைக் காற்றை மூச்சிழுத்து மெய்மறந்து நிற்கவுமில்லை. ஜலதீபம், கனோஜியின் மிகப் பிரசித்தியான அந்தத் துறைமுகத்தில் நுழைந்தபோது அதன் தளத்தில் நின்ற உபதளபதியின் கண்கள் அதன் அழகைப் பார்க்கச் சக்தியற்றுக் கிடந்தன. அவன் இதயம் மகிழும் தன்மையை இழந்து கிடந்தது. மூக்கு மலைக் காற்றை இழுப்பதற்குப் பதில் கவலைப் பெருமூச்சை வெளியில் விட்டது.

உபதளபதியின் நிலை மட்டுமல்ல இப்படி, தளபதியின் நிலை அதைவிட மோசமாயிருந்தது. வளர்ப்புத் தந்தையின் இருப்பிடத்துக்கு அவள் வரும்போதெல்லாம் அவளுக்காகப் படகு கட்டுமிடத்தில் நிற்கும் தந்தைக்கு ஜலதீபத்தின் தளத்திலிருந்தே கைளை ஆட்டுவாள். சில வேளைகளில் நீரில் குதித்து நீந்திச் சென்று நனைந்த

உடையுடன் கடற்படைத் தளபதியைக் கட்டிக் கொள்ளவும் செய்வாள். இன்று அவள் ஜலதீபம் நங்கூரம் பாய்ச்சிய பிறகு தளத்துக்கு வந்தாள்.

கயிறுகள் கொண்டு தழைத்து நீரில் இறக்கப்பட்ட படகில் ஏறித் துறையை நோக்கிச் சென்றுவிட்டாள். ஜலதீபத்தின் மாலுமிகளிடம்கூட இம்முறை அதிக உற்சாகம் காணப்படவில்லை. கடைசி இரண்டு நாட்களில் தளபதிக்கும், உபதளபதிக்கும் இடையே இருந்த மௌனத்தாலும், துயரத்தாலும் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக, ஏதோ இயங்கும் இயந்திரங்கள்போல் மாலுமிகள் வேலைகளைக் கவனித்தார்கள்.

துறைமுகத்தை நெருங்கும்போது ஊதப்பட்ட சங்கும், அடிக்கப்பட்ட டமாரங்களும், உள்ளே வரலாம் என்று துறைமுகத்திலிருந்து உத்தரவுச் சைகை கிடைத்ததும் பாய்கள் இறக்கப்பட்டுத் துடுப்புகள் துழாவப்பட்டதும், எல்லாம் வழக்கம்போல் நன்றாக நடக்கவே செய்தாலும், மாலுமிகளின் வழக்கமான கூச்சல் எக்காளம் இவை ஏதுமில்லை அன்று.

தளத்தில் நின்ற இதயசந்திரன் பிடிபட்ட இரு கப்பல்களையும் ஜலதீபத்தைப் பின்தொடர்ந்து இழுத்து வர குராப்புகளுக்கு உத்தரவிட்டு, ஜலதீபம் நங்கூரம் பாய்ச்சியதும் காதரைனை அழைத்து வரச்சொல்லி அவளுடன் தானும் ஒரு படகில் துறைமுகக் கரையோரத்துக்குச் சென்றான்.

ஜலதீபத்தில் தளபதி, உபதளபதி, மாலுமிகளிருந்த நிலையில் விஜயதுர்க்கக் கோட்டைவாசிகள் இல்லாமையால் பிடிபட்ட இரு கப்பல்களைக் கண்டதும் பெரும் கோஷம் ஏற்பட்டது. கோட்டையில் கோட்டையின் பிரதானக் கதவைத் திறந்ததும் ஆண் பெண் குழந்தைகள் பலர் கரை நோக்கி ஓடிவந்தார்கள். விஜயதுர்க்கத்தின் வெற்றி முரசு கொட்டப்பட்டது. வெற்றிக்கு அடையாள



மாக இரண்டு பீரங்கிகள் சம்பிரதாயத்துக்குச் சப்தித்தன. இரண்டு கொம்புகள் பலமாக ஊதப்பட்டன. கோட்டை பாதுகாப்பு வீரர்களும், மாலுமிகளும் தங்கள் அலுவல் இடங்களிலிருந்து எட்டிப் பார்த்தனர். அன்று ஓய்வு உள்ள வீரர்கள் மக்களுடன் கரைக்கு வந்தார்கள். எல்லோருக்கும் முன்பாக மக்களோடு மக்களாக கனோஜி ஆங்கரே ஆயுதம் ஏதுமின்றித் திறந்த சட்டையில் மார்பின் முரட்டுக் கேசங்கள் தெரிய, வாரப்படாத தலை முடி இதழ்கள் இங்கும் அங்குமாக முரடு முரடாகத் தொங்க, காலில் மாலுமிச் சராயணிந்து கச்சையில் வழக்கமான இரு கைத் துப்பாக்கிகள் காட்சியளிக்க நின்றிருந்தார். முதல் படகில் வந்த மஞ்சுவைப் படகுக் கரையில் கை தூக்கி விட்டுத் தமது பக்கத்தில் நிறுத்திக் கொண்டார். பிறகு அவரது பெரு விழிகள் நங்கூரம் பாய்ச்சிய ஜலதீபத்தையும் அதற்குப் பின்னால் குராப்புகளால் இழுத்து வரப்பட்ட இரண்டு பிரிட்டிஷ் கப்பல்களையும் பார்த்தன. அவற்றைப் பார்த்ததால் பெருவியப்போ பெரு மகிழ்ச்சியோ தெரியவில்லை. மஞ்சுவை ஒரு கையால் கட்டியவண்ணம், ''மஞ்சு, கவர்னர் கப்பலையே பிடித்து விட்டாயே'' என்று சிலாகிக்க மட்டும் செய்தார்.

மஞ்சு அவரை ஏறெடுத்துப் பார்த்தாள். ''அது கவர்னர் கப்பலென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள்.

''அதோ அதன் முகப்பில் பார் பிரிட்டிஷ் கொடி. அதில் இரண்டு மூன்று ராணுவ அடையாளங்கள் இருக்கின்றன பார். தவிர பக்கப் பலகையில் திட்டமாக எழுதியே யிருக்கிறார்களே'' என்றார் ஆங்கரே.

அவர் கழுகுப் பார்வையும், நுண்ணிய அறிவும் மஞ்சுவுக்குத் தெரிந்தேயிருந்தாலும் விநாடி நேரத்தில் பிடித்த கப்பல்களை எடை போட்டு விடுவார் என்று அவள் நினைக்கவில்லை. ஆகவே அவர் கேட்பதற்கு முன்பு

அவளே சொன்னாள், ''இன்னொன்று வணிகக் கப்பல்'' என்று.

''ஆம். சிறு கப்பல். கெட்ச் வகையைச் சேர்ந்தது'' என்று அலட்சியமாகச் சொன்ன கனோஜி ஆங்கரேயின் கண்களில் திடீரென புத்தொளி தெரிந்தது. ''மஞ்சு'' என்று அழைத்த அவர், ''அதோ கப்பலிலிருந்து படகில் இறங்குகிறாளே அவள் யார்?'' என்று வினவினார்.

''அவள் ஒரு வெள்ளைக்காரி'' என்றாள் மஞ்சு.

''பணக்காரியா?'' என்று வினவினார் கனோஜி ஆங்கரே.

''அப்படித்தான் தெரிகிறது'' என்றாள் மஞ்சு எரிச்சலுடன்.

''பலே பலே! அந்த வணிகக் கப்பலைவிட இவள் முக்கியம்'' என்று குதூகலப்பட்டார் ஆங்கரே.

மஞ்சு வெறுப்புடனும் சினத்துட.னும் தந்தையைப் பார்த்தாள். கனோஜி அவள் வெறுப்பையோ சினத்தையோ லட்சியம் செய்யவில்லை. ''மஞ்சு! உபதளபதி எப்படிக் கையைக் கொடுத்து அவளை இறக்கு கிறான் பார். பலே கைக்காரன். பெண்களைக் கண்டால் விடமாட்டான்'' என்று கூறி மஞ்சுவின் முதுகில் தட்டினார்.

மஞ்சுவின் சினம் எல்லையைக் கடந்ததால், ''நான் கோட்டைக்குப் போகிறேன்'' என்று கூறிவிட்டு விடுவிடு வெனப் பாறைப் பாதையில் ஏறிச் சென்றுவிட்டாள்.

அவள் சென்றதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் நின்றிருந்த கனோஜி இதயசந்திரன் வந்ததும் அவனைப் பாராட்ட மக்களிட்ட கோஷத்தில் தானும் கலந்து கொண்டார். படகிலிருந்து அவன் இறங்கியது, அவனைத் தனது பக்கத்தில் இழுத்துவிட்டுக் காதரைன் இடுப்பை இருகைகளாலும் பிடித்துப் படகிலிருந்து ஒரே தூக்காகத்



தூக்கிக் கரையில் நிறுத்தினார். இதைக் கண்ட மக்கள் பெரும் ஆரவாரம் செய்தார்கள். அவர்கள் ஆரவாரத்தைக் கனோஜியும் தமது கை உயர்த்தி ஏற்றுக்கொண்டார். அவரது இன்னொரு கை அந்த வெள்ளைக்காரி இடுப்பி லேயே நின்றுவிட்டது.

கறுப்பு உடையணிந்திருந்த காதரைன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை. பிரிட்டிஷார் முதல் போர்ச்சுகீஸ் வரை எந்த ஐரோப்பிய அரசுகளையும் அரபிக்கடலில் உலாவ விடாமல் அடித்தவரும், அரபிக் கடலைத் தனியரசன் போல் ஆண்டுவந்தவரும், கொள்ளைக்காரனென மாற்றாராலும் ஸார்கேல் என மகாராஷ்டிரர்களாலும் அழைக்கப்பட்டவருமான கனோஜி ஆங்கரேயை ஏறெடுத்து நோக்கினாள் காதரைன். சாட்சாத் கடல் ராட்சதன்போல் நின்றிருந்த கனோஜியின் முகத்தில் நிரம்பி வழிந்து கொண்டிருந்த வீரமும், கண்களில் ஒளியிட்ட அலட்சியம் கலந்த நகைப்பும் அவர் இணையற்ற வீரரென்பதை வலியுறுத்தவே, ''நீங்கள்தான் ஆங்கரே என்று நினைக் கிறேன்'' என்றாள் காதரைன்.

''உன்னைப் போன்ற அழகி நினைப்பதில் தவறு எப்படி இருக்கமுடியும்?'' என்று கூறிய ஆங்கரே தலையை அவளை நோக்கிக் குனிந்தார்.

''கனோஜி!'' என்ற அவள் அதிகாரக் குரல் அவரை அடக்கியது.

''என்ன அழகி?'' என்று கேட்டார் அவர்.

''உம்மைக் கொள்ளைக்காரர் என்று நான் சொன்னால்...?'' என்றாள் அவள்.

''அதிலும் தவறிருக்காது, உன் அழகிய உதடுகளி லிருந்து அந்தச் சொற்கள் உதிருவதால்...'' என்று ஆங்கரே பெரிதாக நகைத்தார்.

காதரைன் முகம் சுளித்தாள். ''நீ ஒரு மிருகம்'' என்று சீறினாள் காதரைன்.

விஜயதுர்க்கத்தில் யாரும் பேச முடியாத பேச்சு அது. அதைக் கேட்ட பக்கத்திலிருந்தவர்கள் திகைத்தார்கள். ஆனால் கனோஜி அதைக் கேட்டும் நகைத்தார். ''அழகான பெண்ணைப் பார்த்துவிட்டால் எந்த ஆண் மகனும் மிருகம்தான்'' என்று கூறிய ஆங்கரே அவளை இடது கையால், இடுப்பைப் பிடித்துத் தூக்கி, ''இந்தா உபதளபதி, நீ இவளைப் பிடித்தாய். நீயே இவளைக் கொண்டு போ'' என்று அவனிடம் நீட்டினார்.

இதயசந்திரன் என்ன செய்வதென்று தெரியாமல் இரண்டு கைகளையும் நீட்டி அவளை வாங்கினான். கனோஜி பெரிதாக நகைத்தார். ''பலே பலே!'' என்று மற்றவர்களும் நகைத்தார்கள். ''இப்பொழுது புரிகிறது! இப்பொழுது புரிகிறது'' என்று கூவினான் கனோஜி.

இதயசந்திரன் குரல் பலமாக எழுந்தது, ''தலைவரே!'' என்று.

''என்ன உபதளபதி?''

''இதில் புரிவதற்கு ஏதுமில்லை. இவளைச் சிறை பிடித்தேன்.''

''நீயா! இவளையா?''

''ஆம்.''

''பிறகு இவள் உன்னைச் சிறை பிடித்தாளா?''

இதைக் கேட்ட இதயசந்திரன் சற்றுக் கோபத்துடன், ''இவளைப்பற்றி அப்படிப் பேசுவது தவறு. இவள் விதவை'' என்று சுட்டிக் காட்டினான்.

''நல்லதாகப் போய்விட்டது. தொந்தரவு ஏதுமில்லை'' என்ற கனோஜி அவனிடம் வேறு எதுவும் பேசாமல் படகிலேறி, பிடிபட்ட கப்பல்களைப் பார்க்கச் சென்றார். இதயசந்திரன் காதரைனை மஞ்சுவிடம் சேர்ப்பிக்கப் பக்கத்திலிருந்த வீரர்களுக்குக் கட்டளை



யிட்டுத் தானும் ஒரு படகிலேறி கனோஜியைப் பின் தொடர்ந்தான். இரு கப்பல்களிலும் தானும் அவரைத் தொடர்ந்து சென்று வணிகக் கப்பலிலிருந்த வர்த்தகச் சரக்குகளையும், பணப்பெட்டிகளையும் காட்டினான். கவர்னர் ஆயுதக் கப்பலையும் காட்டி அதன் பகுதிகளைச் சேதம் செய்ததற்கான காரணங்களையும் கூறினான். கனோஜி இரு கப்பல்களையும் மௌனமாகப் பார்வை யிட்டார். பிறகு அக்கப்பல்களில் சிறைப்பட்டிருந்த மாலுமிகளைக் கோட்டைச் சிறையில் கொண்டு போய் அடைக்குமாறும், வணிகக் கப்பலிலிருந்த பொருள்களைக் கோட்டைக் கிடங்கில் சேர்க்குமாறும் உத்தரவிட்டார். பணப்பெட்டியைத் தமது படகில் ஏற்றுமாறும் பணித்து விட்டுக் கிளம்பினார். இதயசந்திரனும் தனது படகில் அவரைத் தொடர்ந்தான். இரு படகுகளும் துறைக்கு வந்ததும் துறையில் அனாயாசமாகத் தாவிக் குதித்த ஆங்கரே இரு மாலுமிகளை விட்டு, ''இந்தப் பணப் பெட்டியை எனது மாளிகைக்குக் கொண்டு செல்லுங்கள்'' என்று ஆணையிட்டு, ''உபதளபதி! நீ சென்று இளைப் பாறு. நாளை சந்திப்போம்'' என்று இதயசந்திரனை நோக்கிக் கூறிவிட்டு அவன் பதிலுக்குக் காத்திராமல் சென்றுவிட்டார்.

இதயசந்திரன் நீண்ட நேரம் நீர்க் கரையில் நின்று கொண்டிருந்தான். சிந்தனை உள்ளத்தில் அலைபாய பிறகு கோட்டைக்குள் நுழைந்த உபதளபதிகள் தங்கும் மாளிகைக்குச் சென்றான். உபதளபதிக்கு மாலுமிக ளிருவர் சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தபடியால் நீராடிச் சிற்றுண்டி அருந்திப் பஞ்சணையில் சாய்ந்தான். அவன் கனோஜியை அன்றும் பார்க்க முடியவில்லை. இந்த இரண்டு நாட்களும் இரண்டு யுகமாயிருந்தது அவனுக்கு. காதரைனைக் கனோஜி எங்கே வைத்திருக்கிறார் என்ற கேள்வி அவன் மனத்தில் எழுந்தது. கனோஜி பெண்களிடம் ஏதாவது விளையாடுவாரே தவிர அவர்கள் கௌரவத்

திற்கு எந்தக் குறையும் வராதென்பதை அவன் உணர்ந் திருந்தபடியால் அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை யென்றாலும், ஜலதீபத்தின் நிகழ்ச்சிகள் அவன் மனக் கண்ணில் திரும்பத் திரும்பத் தோன்றிக்கொண் டிருக்கின்றன. அவள் அழகிய உடலின் கவர்ச்சிகள் அவனை அலைக்கழிக்கவே செய்தன. அதற்கு ஒரு முடிவு கட்ட மஞ்சுவை மணந்து அவளை மறப்பதே வழியென்று தீர்மானித்த தமிழன் மூன்றாவது நாள் தானாகவே சென்று கனோஜி ஆங்கரேயைச் சந்தித்தான்.

கனோஜி அப்பொழுது மகாராஷ்டிரக் கடற்புறப் பகுதிகளை விளக்கும் படத்தைப் பார்த்துக்கொண்டிருந் தார். இன்னும் சில உபதளபதிகளும் அவரைச் சுற்றி நின்றிருந்தார்கள். நீண்ட நேரம் அவனைக் கவனிக்காமலே யிருந்த கனோஜி திடீரெனத் தலையைத் தூக்கி, ''வா தமிழா. உனக்கு நானே சொல்லியனுப்ப நினைத்தேன். வா இப்படி, இதைப் பார்'' என்று தமது கையிலிருந்த குறுவாளின் நுனியை ஒரு படத்தின் இடத்தில் சுட்டிக் காட்டினார்.

''அது கொலாபாவல்லவா?'' என்றான் தமிழன்.

''ஆம். அங்குதான் நீ போகவேண்டும்'' என்றார் ஆங்கரே.

''அதற்குமுன் தங்களிடம் ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும்'' என்றான் இதயசந்திரன்.

''அந்தப் பெண்ணைப் பற்றித்தானே! பயப்படாதே. அவளும் உன்னுடன் வருகிறாள். அதுவும் தனித்து வருகிறாள்'' என்று ஆங்கரே மற்ற உபதளபதிகளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார்.

இதயசந்திரன் முகம் கல்லாயிருந்தது. ''நான் தங்க ளிடம் தனிமையில் பேச வேண்டும்'' என்று விண்ணப்பித் தான்.



கனோஜி கண்ணைக் காட்ட மற்ற உபதளபதிகள் வெளியே சென்றதும் ஒளிவு மறைவின்றிக் கூறினான் இதய சந்திரன், ''நான் போகுமுன்பு எனக்கு முக்கியமாக ஒன்று தேவை'' என்று.

''என்ன?''

''மனைவி.''

''அடைவதை யார் தடுத்தது?''

''மஞ்சு வேண்டும் எனக்கு. உடனே நீங்கள் மண முடித்துத் தரவேண்டும்.''

கனோஜி அவனை வினோதமாகப் பார்த்தார். ''அது முடியாது'' என்று கூறி அதற்கான காரணங்களையும் கூறினார்.

காரணங்கள் இதயசந்திரனுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தன. அவன் இதயத்தைச் சுட்டெரிக்கவும் செய்தன.

# அத்தியாயம் 11

# பாரதத்தைப் பார்! அதன் வாழ்வைப் பார்!

பிரிட்டிஷ் பூகோள நிபுணனொருவனால் வரையப்பட்ட இந்திய மேலைக் கடற்கரையின் படமொன்று பெரிய மேசை மீது விரிந்து கிடக்க, அதன்மீது கொலாபாவைக் காட்டியவண்ணம் குறுவாளைப் பிடித்த கை ஊன்றி நிற்க சுவர்களிலெங்கும் துறைமுகப் படங்களும் கோட்டைகளை விளக்கும் படங்களும் கத்தி கேடயங்கள் துப்பாக்கிகளும் பொருத்திக் கிடக்க, அவற்றின் முன்னணியில் எழுந்த திடகாத்திர உருவம், கம்பீரத்துக்கும் பௌருஷத்துக்கும் வீரத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்க, இதயசந்திரனை உற்று நோக்கிய கனோஜி ஆங்கரே, ''தமிழா, உனக்குத் திருமண ஆசை எப்பொழுது வந்தது?'' என்று வினவினார்.

இதயசந்திரன் கண்கள் அவர் கண்களைத் தைரியத்துடன் சந்தித்தன. இதழ்கள் உறுதியுடன் சொற்களை உதிர்த்தன. ''திடீரென உண்டானதல்ல, நீண்ட நாளாகவே இருந்துவருகின்றது'' என்றான் இதயசந்திரன் உறுதி மிகுந்த குரலில், அவரை எப்படியும் தனது இஷ்டத்துக்கு இணங்க வைக்கும் எண்ணத்துடன்.

கனோஜி ஆங்கரேயின் பெருவிழிகள் விஷமச் சிரிப்பைக் கக்கின. ''இந்த அவசரம் இத்தனை நாள் இல்லை போலிருக்கிறது?'' என்றார் ஏளனம் ஒலித்த குரலில்.

''இல்லை'' என்றான் இதயசந்திரன் சற்றுச் சினத்துடன்.

''இப்பொழுது அவசரத்துக்குக் காரணம்?'' அவரது இதழ்கள் ஒரு கோடிக்கு இகழ்ச்சியுடன் இழுபட்டதால் பயங்கர மீசையும் இழுபட்டது.



''காரணம் திட்டமாக ஏதுமில்லை'' என்றான் தமிழன் உண்மையை மறைத்து.

''இருக்கிறது'' ஆங்கரே இதைச் சொல்லிப் புன்முறுவல் காட்டினார்.

''என்ன காரணமோ?'' தமிழன் குரலில் வெறுப்பு தொனித்தது.

''காதரைன்.''

''காதரைனா?''

''ஆம். அந்த இளம் விதவை?''

''அவளுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''அதைத்தான் நானும் அறிந்துகொள்ளப் பார்க்கிறேன்'' என்ற கனோஜி ஆங்கரே கலகலவென நகைத்தார்.

இதயசந்திரன் கோபம் பன்மடங்கு அதிகப்படவே, ''ஸார்கேல்! இதில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்று வினவினான்.

''பலவீனமாயிருக்கிறது.''

''பலவீனமா?''

''ஆம். உன் பலவீனம்'' என்ற ஆங்கரே அதைப் பற்றித் தெளிவாகவே விளக்கினார். ''தமிழா! நீயும் இரண்டரை ஆண்டுகளாக மாலுமியாயிருக்கிறாய். உன்னுடன் மஞ்சுவை அனுப்பினேன். இன்னும் அவள் கன்னியாயிருக்கிறாள். நீயும் பிரம்மசாரியாயிருக்கிறாய். சென்ற இரண்டரை ஆண்டுகளில் பல கப்பல்களைப் பிடித்திருக்கிறாய். பல துறைமுகங்களில் இறங்கியிருக்கிறாய். பல பெண்களைப் பார்த்திருக்கிறாய். இருப்பினும் உன்மேல் எந்தப் பழுதும் சொல்ல முடியாது. மாலுமிகளின் குணம் ஏதும் உன்னிடமில்லை. எதற்கும் பயப்படுகிறாய். மற்ற மாலுமிகள் கரைக்குச் செல்லும் போதெல்

லாம் நீ மஞ்சுவுடன் கப்பலில் தங்கிவிடுவதாக மாலுமிகள் கூறியிருக்கிறார்கள். ஆனால் நீயும் திருமணத்தைப் பற்றிக் கேட்கவில்லை, அவளும் ஏதும் சொல்லவில்லை. ஆனால் இப்போது வந்துவிட்டது திடீரென ஞானோதயம். திருமணம் முடித்துத் தரக் கேட்கிறாய். காரணம் எனக்குத் தெரியும். அந்த வெள்ளைக்காரி அளித்த மயக்கத்தைக் கண்டு பயப்படுகிறாய். அவள் அழகு உன் நெஞ்சை, உன் உறுதியை, உன் சீரிய எண்ணங்களைப் பலவீனப்படுத்தி விட்டது. தாமதித்தால் அவள் அழகுக்குப் பலியாகி விட்டால் என்ன செய்வதென்று பயப்படுகிறாய்'' என்று விளக்கிய கனோஜி ஆங்கரே அவனை உற்றுப் பார்த்தார்.

அவர் சொன்னது அத்தனையும் சரியென்பதை உணர்ந்தான் தமிழன். ஒரு மனிதனைப் பார்த்தவுடனே அவனை எடை போட்டுவிடக்கூடிய அவரது நுண்ணிய அறிவை அவன் என்றோ உணர்ந்துகொண்டதால் அன்று ஏதும் பேசாமல் மௌனமே சாதித்தான்.

அவன் மௌனத்தைக் கண்ட கனோஜி, ''தமிழா! நான் சிறு வயதில் கடலோடிய காலத்தில் எந்த அழகியைக் கண்டாலும் விடமாட்டேன். சதா அபாயமான மாலுமி வாழ்க்கையின் வழி அது. நிலம்போல் எப்படி நீர் திடம் இல்லாததோ அதேபோல்தான் நீரின்மீது வாழ்பவன் நிலைமையும். ஆகவே, அவன் நிலத்தைப் பார்க்கும் போது ஆசைகளை அனுபவித்துவிட எத்தனிக்கிறான். ஆனால் அதற்கு முற்றும் விலக்காக நீ இருந்திருக்கிறாய். நீ லட்சத்தில் ஒருவன். ஆனால் நீயும் திடமற்றவன். முதலில் பானுதேவியிடம் மையல் கொண்டாய். இரவில் காட்டில் தனித்து அவளிடம் நீ பேசிக் கொண்டிருந்த காலத்தில் உன்னைப் பார்த்தேன். பிறகு, பரசுராமபுரத் திலும் உன் போக்கைக் கவனித்தேன். பிறகு பானுவின் கரங்களிலிருந்து என் வளர்ப்பு மகள் கரங்களில் பாய்ந்தாய். இப்போது இந்த வெள்ளைக்காரியிடம் பாய்ந்திருக்கிறாய்...'' என்று கூறினார்.



அவரை இடைமறித்த தமிழன், ''தவறு, தவறு'' என்று கூவினான் ஆத்திரத்துடன்.

''எது தவறு?''

''கடைசியில் சொன்னது.''

''வெள்ளைக்காரியைப்பற்றிச் சொன்னதா?''

''ஆம்.''

கனோஜி சிரித்தார். ''தமிழா! முடிச்சவிழ்ப்பது நல்லதா கெடுதலா?'' என்றும் கேட்டு, நகைப்பைப் பலப்படுத்தினார்.

இதயசந்திரன் அசைவற்று நின்றான். அவன் திகைப்பு எல்லை கடந்தது. 'இருக்கிற ஆயிரம் போர்த் தொல்லை களில் ஜலதீபத்தில் நடந்ததை எப்படி அறிந்தார்? யார் சொல்லியிருப்பார்கள்? மஞ்சுவா? இருக்காது, இருக்காது, மாலுமிகளாகத்தானிருக்க வேண்டும். ஆனால் அவர்களும் அதைப் பார்க்கவில்லையே' என்று தனக்குள் கேட்டுக் கொண்டு பிரமித்து நின்றான்.

எதிரே நின்ற கனோஜி மேஜையைச் சுற்றி வந்து அவன் தோள்மீது கையை வைத்து, ''முட்டாள்! விதவை யான இரண்டாம் நாளே உன்னைத் தீண்டியவளை நீ ஏன் தீண்ட மறுக்கவேண்டும்? நமது அரசர்களைப் பார், எத்தனை சம்சாரங்கள்! எத்தனை ஆசை நாயகிகள்! அவர் களுக்காகப் பிராணனை விடும் நாம் மாத்திரம் எதற்காக வாழ்க்கையின் சுகங்களை மறுக்கவேண்டும், அவை தானாக வலுவில் வரும்போது?'' என்று முதுகில் பேயறைவதுபோல் அவனைத் தட்டிக் கொடுத்தார்.

இதயசந்திரன் பதில் சொல்லவில்லை. தலைகுனிந்து நின்றான் பல நிமிடங்கள். ''காதலரைனிடம் நான் மயங்கியது உண்மை. அதற்காகத் திருமணத்தை நாடுவதும் உண்மை. காலாகாலத்தில் கால் கட்டுப் போட வேண்டும் என்று எங்கள் ஊரில் சொல்வார்கள். மனைவி என்று

ஒருத்தியிருந்துவிட்டால், புருஷன் நெஞ்சில் பயமிருக்கும். நெறி தவற அஞ்சுவான் என்பது எங்கள் வழக்கு'' என்று மெல்லக் கூறவும் செய்தான்.

''அத்தகைய வலுக்கட்டாயம் நெறியே அல்ல. தவிர, ஒரு மனைவி நம்மை நெறியில் நிறுத்தவும் முடியாது தமிழா! எனக்கு மூன்று மனைவிகள் இருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியும். அவர்களில் ஒருத்திகூட என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களைத் தவிர என்னைப்பல அழகிகள்...'' என்ற ஸார்கேஸ் இடிபோல் நகைத்தார்.

அதற்குமேல் அந்தச் சம்பாஷணையை வளர்த்த இஷ்டப்படாத இதயசந்திரன் கேட்டான். ''ஸார்கேல், இந்த விஷயத்தில் நமக்குள் கருத்து ஒற்றுமை ஏற்படாது! நான் கேட்டதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்று.

''முடியாது என்றுதான் முன்பே கூறிவிட்டேன்'' என்றார் ஸார்கேலும்.

''காரணம் சொல்லலாமா?''

''சொல்லலாம். முதலில் அவள் என் மகளல்ல.''

''இருந்தாலென்ன? வளர்ப்பு மகள் மகளுக்குச் சமானந்தானே?''

''ஆம். அவள் தந்தை இறந்திருந்தால்...'' இதைச் சொன்ன ஸார்கேலின் முகத்தில் நகைப்பு மறைந்து சிந்தனை குடிகொண்டது.

இத்யசந்திரன் இதயத்தில் அந்தக் கடைசிச் சொற்கள் விளைவித்த உணர்ச்சிகள் எத்தன்மையானவை என்பது விவரணத்துக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. பல விநாடிகள் அவன் அவரைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். ''அவளுக்குத் தாய் தந்தையரில்லை, அனாதை என்று இது வரை நம்ப வைத்தீர்களே!'' என்று வினவவும் செய்தான் இறுதியில்.



''நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் ஒரு தந்தை இப்பொழுது முளைத்திருக்கிறார்'' என்றார் ஸார்கேல்.

''எப்பொழுது?''

''சென்ற இரண்டு மாதங்களில்.''

''எங்கிருக்கிறார் அவர்?''

''ஜன்ஜீராவில்''

''ஜன்ஜீராவிலா! ஸித்தியிடமா?''

''ஆம். ஸித்திரஸூல் யாகூத்கானிடம். யாகூத்கானே எனக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறான் மஞ்சுவை அங்கு அனுப்பி வைக்கும்படி.''

''ஒரு வேளை அது சூதாயிருந்தால்?''

''இருக்காது. ரஸூல் யாகூத்கான் ஒரு நாளும் பொய் சொல்லமாட்டான். தவிர சில்லறைத் தந்திரங்களால் யாரையும் பிடிக்கவோ தொந்தரவு செய்யவோ மாட்டான். அவன் வழி நேர்வழி. சிறந்த வீரன். இணையற்ற மாலுமி, அவன் கடிதம் என்ன சொல்கிறது பார்'' என்று மேஜை மீது விரிந்து கிடந்த படத்திற்கடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார் ஆங்கரே.

இதயசந்திரன் கடிதத்தைப் படித்தான். ''என்னிடம் அலுவல் புரியும் ஒரு மாலுமி தங்கள் வளர்ப்பு மகளைத் தன் மகள் என்று கூறுகிறான். அதற்கான அடையாளங்களையும் கூறுகிறான். முக்கியமாக அவளது இடது மார்பில் பெரு மச்சம் குழந்தையிலிருந்து இருப்பதாகத் தெரிவிக்கிறான். தவிர அவளுக்குக் குழந்தைப் பருவத்தில் பட்ட நீண்ட வெட்டுக் காயமொன்று தொடையில் இருப்பதாகவும் சொல்கிறான். அவள் குழந்தையாயிருந்த சிறு படத்தையும் கொடுத்திருக்கிறான். அதையும் இதோ அனுப்பியிருக்கிறேன். இவை சரியாயிருந்தால் மஞ்சுவை ஜன்ஜீராவுக்குத் தகுந்த பாதுகாப்புடன் அனுப்பி

வைக்கவும். இப்படிக்கு ரஸூல்'' என்று எழுதப்பட்டிருந்தது கடிதத்தில்.

இதயசந்திரன் ஆங்கரேயை நிமிர்ந்து நோக்கினான். ''இந்த அடையாளங்கள்...'' என்று இழுத்து ஏதோ சொல்லவும் முயன்றான்.

''அப்படியே இருப்பதாக மஞ்சு கூறுகிறாள்'' என்றார் கனோஜி.

இதயசந்திரன் சிந்தனையில் இறங்கினான். மேலே மெல்லக் கேட்டான், ''இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று.

''மஞ்சுவை இங்கேயே இருத்திக் கொள்ளப் போகிறேன். அந்தத் தகப்பனை இங்கு அனுப்பும்படி ஸித்திக்குக் கடிதம் எழுதிவிட்டேன். அவன் வந்தபின், மேலே ஆக வேண்டியதைத் தீர்மானிப்பேன். இந்த நிலையில் அவளை நான் மணம் முடித்துக் கொடுத்தால் ஸித்திக்கும் எனக்குமுள்ள விரோதத்திற்கு இது இன்னொரு காரணமாகும். ஆகவே, உன் திருமணம் பிறகுதான். இப்பொழுது நீ காதரைனையும் சிறைப்பட்ட மாலுமிகளையும் அழைத்துக் கொண்டு கொலாபாவுக்குச் செல். அங்கிருந்து இந்தக் கடிதத்தைப் பம்பாய் கவர்னருக்கு அனுப்பு'' என்று தமது கச்சையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

''அனுப்பி விடுகிறேன். பிறகு என்ன செய்ய வேண்டும்?''

''பம்பாய் கவர்னரின் பதிலுக்குக் காத்திரு.''

''பிறகு?''

''முப்பதினாயிரம் ரூபாய் அவர்கள் கொடுத்தால் காதரைனை அனுப்பிவிடு'' என்ற கனோஜி, ''அதாவது அவள் உன்னிடமிருந்து போக ஒப்புக் கொண்டால்'' என்ற வாசகத்தையும் தொடுத்துப் புன்முறுவல் செய்தார்.



''நான் எப்பொழுது புறப்படவேண்டும்?''

''நாளைக்கு'' என்ற கனோஜி ஆங்கரே, ''கொலாபாவுக்கு நீ ஜன்ஜீராவைத் தாண்டித்தான் செல்லவேண்டும். மிகுந்த எச்சரிக்கையுடன் தாண்டு. கரையிலிருந்து நீண்ட தூரம் விலகியே ஜலதீபத்தை நடத்து. ஜன்ஜீராவின் கண்களில் பட்டால் நீயோ ஜலதீபமோ, காதரைனோ கொலாபா போய்ச் சேரமுடியாது'' என்றும் எச்சரித்தார்.

விதி தன் வாழ்வில் தீவிரமாக விளையாடுகிறதென்பதைப் புரிந்து கொண்ட இதயசந்திரன் பெருமூச்செறிந்தான். வழியிலுள்ள ஆபத்தைப்பற்றி ஜன்ஜீராவைப்பற்றி ஸித்திரஸூல் யாகூத்கானைப்பற்றி அவன் பயப்படவில்லை. அதன் காரணமாகப் பெருமூச்செறியவும் இல்லை. காதரைன் கூட வருகிறாளே தனித்து என்ற எண்ணம் அவன் சித்தத்தைப் பெரிதும் ஆட்டிப் படைத்தது.

கனோஜி ஆங்கரே அவனை வெறுப்புடன் பார்த்தார். ''தமிழா! சரித்திரப் பெரும் ஏடுகளில் தனி மனிதர்களின் ஆசாபாசங்கள், குற்றம் குறைகள் கருதப்படுவதில்லை. அவர்களின் வீரச் செயல்கள், அவற்றால் ஏற்படும் விளைவுகளே இடம் பெறுகின்றன. ஆகவே உன் பாச பந்தங்களை உதறி, பாரதத்தைப் பார், அதன் வாழ்வைப் பார். அதன் மக்களின் நலனைப் பார். உன் கடமை உனக்கு விளங்கும்'' என்று கூறிவிட்டு, ''செல் தமிழா! நாளைக்குப் புறப்பட்டு விடு'' என்று கட்டளையிட்டு அவனை வெளியே செல்லக் கைகாட்டினார். வேறெதுவும் சொல்லச் சக்தியற்ற இதயசந்திரன் கட்டளைக்குத் தலைவணங்கி அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

## அத்தியாயம் 12

# கஹினாவின் கடிதம்

விஜயதுர்க்கத்தின் நட்ட நடுவில் வட்ட ஸ்தூபியுடன் அரபிக்கடலை அலட்சியத்துடன் நோக்கிக் கொண்டிருந்த கனோஜியின் மாளிகையிலிருந்து உணர்ச்சிகள் அரபிக் கடலின் அலைகளைவிடப் பயங்கரமாக எழுந்து சித்தத்தில் மோதிச் சிதற, கண்கள் கனவு கண்டவைபோல் குழம்பி நோக்க, கால்கள் இஷ்டப்படி இழுத்துச் செல்ல வெளிப் போந்து நடந்த இதயசந்திரன் போகிற இடம் தெரியாமல் நடந்து சென்றான்.

அப்பொழுது மாலைவேளை நெருங்கிக்கொண்டிருந்ததால் விஜயதுர்க்கம் பெரும் உல்லாசத்தில் இருந்தது. பல நாட்டு வணிகர்களும், பிரயாணிகளும் கடைத்தெருவில் பல மொழிகளில் பேசி வியாபாரம் செய்துகொண்டிருந்தனர். பல நாட்டுப் பெண்கள் நாட்டு வழக்கங்களுக்குத் தக்கபடி பலபடி ஆடையணிந்து சிங்காரித்துக்கொண்டு கடைகளில் பேரம் செய்வோரும் கடலை நோக்கிச் செல்வோருமாக விஜயதுர்க்கத்துக்குப் பெரும் கவர்ச்சியை அளித்துக் கொண்டிருந்தனர். அந்தக் கவர்ச்சிக்குக் கம்பீர மெருகு கொடுக்கக் கிழக்கிலும், மேற்கிலும் ஸஹ்யாத்ரியும் நித்ய யாத்ரியான சூரியனும் முயன்று கொண்டிருந்ததால், ஒரு புறம் பச்சைப் பசேலென்ற பின்னணியையும் மறுபுறம் தங்க ஜோதியுடன் கூடிய முன்னணியையும் அம் மாபெரும் கோட்டை பெற்றுக்கொண்டிருந்தது. மகாராஷ்டிர கொங்கணியின் வடக்குக் காவலுக்குக் கொலாபாவைப் போல தெற்குக் காவலின் பேரரணாக விளங்கிய விஜயதுர்க்கத்தின் மகிமையையோ முக்கியத்தையோ அழகையோ ரசிக்கச் சக்தியற்றவனாகக் கடைத் தெருவில் நடந்து சென்றான் இதயசந்திரன்.

பல நாட்டுக் கப்பல்களிலிருந்து கவரப்பட்ட பலப்பல பொருள்கள் கடைவீதியில் காட்சியளித்தன. சிறு



துப்பாக்கிகள், சுழல் துப்பாக்கிகள், வெளிநாட்டு வாள்கள், குறுவாள்கள், கேடயங்கள் இவையும் விற்பனைக்குக் குவிந்து கிடந்தன. கலவரப்பட்ட ஆயுதங்களில் புதுமையானவையும் முக்கியமானவையும் கனோஜியின் கிடங்குக்குச் சென்று விட்டாலும், விற்பனைக்கு வந்த ஆயுதங்களும் அப்படிச் சாதாரணமானவையல்ல; கடைகளில் திரிந்து கொண்டிருந்த வெள்ளையர், பார்சிகள், அராபியர், மராட்டியர், தெலுங்கர், வங்கர் முதலிய பலரும் அந்த ஆயுதங்களைப் பார்த்துக் கொண்டும், வாங்கிக் கொண்டுமிருந்தார்கள். ஆபரணக் கடைகளில் தனிப் பெண்களும் காதலர்களுடனோ, கணவர்களுடனோ வந்த பெண்களும் கும்பல் கூடி நகைகளைக் கையிலெடுத்து நோக்கியும் அணிந்து அழகு பார்த்தும் விலை பேசியும் கூச்சலைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். இடையே மாலுமிகள் சிலர் அன்றைக்கு ஜோடி சேர்த்துக் கொண்ட பெண்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்க அப்பெண்களை பகிரங்கமாக அணைத்துக் கொண்டும் இழுத்துக் கொண்டும் சென்றனர்.

கடை வீதியை விட்டுத் தன் மாளிகையை நோக்கிச் சென்ற இதயசந்திரனைத் தாண்டி அரபுப் புரவிகள் பல பாய்ந்து சென்றன. அவற்றைப் பழக்கும் வீரர்கள் அவற்றின் இடக்கை ஆங்காங்கு சமாளித்தும், கதியை நிதானப்படுத்தியும் சென்று கொண்டிருந்தனர். இக் காட்சியைச் சாதாரண காலத்தில் பார்த்து மனத்தைப் பறிகொடுக்கக் கூடிய இதயசந்திரன் அன்று அவற்றைப் பார்க்காமலே நடந்தான். விஜயதுர்க்கத்தின் மகிழ்ச்சியில் அவன் பங்கு கொள்ள முடியவில்லை. இதயத்தின் சிக்கலுக்கு அத்தனை தூரம் பலியாகியிருந்தான். விஜயதுர்க்கத்தின் இரண்டு அரண்களையும் இவ் வண்ணமே கடந்து கடலை அணைத்திருந்த மூன்றாவது அரணிலிருந்த தனது மாளிகைக்கு வந்து நேராகத் தனது

அறைக்குச் சென்று பஞ்சணையில் தடாலென்று வீழ்ந்து மோட்டுவளையைப் பார்த்தவண்ணமிருந்தான்.

அவன் சிந்தனை சிதைந்து கிடந்தது, உள்ளம் உடைந்து கிடந்தது, மஞ்சு கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றம் அவனைச் சித்திரவதை செய்தது. காதரை னுடன் தனித்துச் செல்ல வேண்டுமே என்ற திகில் அவனை உலுக்கு உலுக்கு என்று உலுக்கியது. ஒரு கணம் அவன் நினைத்தான், 'ஆங்கரேக்கு எத்தனையோ ஆசை நாயகி களிருக்கிறார்களே, இந்த ஒரு வெள்ளைக்காரியை நான் ஏற்றுக்கொண்டால் என்ன?' என்று. பிறகு 'சீச்சீ! என் மதி என்ன இப்படிக் கெட்டுவிட்டது! மஞ்சு அப்புறம் என்னை விழித்தும் பார்க்க மாட்டாளே!' என்று சரிப்படுத்திக் கொண்டான். 'ஆங்கரேயின் மூன்று மனைவிகள் மதுரா, லஷ்மி, கஹினா இம்மூவரும் அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லையே, என்னை மட்டும் இந்த ஒரே ஒரு மஞ்சு கட்டுப்படுத்த முடியுமா?' என்று கேட்டுக் கொண்டு பிறகு அது வீண் வீம்பே தவிர வேறொன்றுமில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

'இந்த 1712-வது டிஸம்பர் என்னை எதற்காக இப்படி அலைக்கழிக்க வேண்டும்? எனக்கும் மஞ்சுவுக்கும் குறுக்கே இந்த வெள்ளைக்காரியை ஏன் கொண்டு வந்து விட வேண்டும்? டிஸம்பர் மாதமே ஒரு சனியன்' என்று டிஸம்பரைத் தூற்றினான். ஏற்கனவே சிரித்த சிரிப்பை டிஸம்பர் அடக்கவில்லை. அது முடியும் தருவாயிலிருந்த தாலும் கடைசியாக அவனைப் பார்த்து நகைத்துவிட்டுச் செல்லவே தீர்மானித்தபடியால் பெரும் பிரச்சினைகளைக் கிளப்பி வைத்தது.

அன்றிரவு அவனுக்கு மீண்டும் கனோஜி ஆங்கரேயின் மாளிகையிலிருந்து அழைப்பு வந்தது. ஆனால் ஆங்கரே யிடமிருந்து வரவில்லை, அந்த அழைப்பு யார் அழைத் தார்கள் என்பதைச் சொல்லவும் மறுத்தான் அழைக்க ... வாயும் நிலை



யில் இல்லாத இதயசந்திரன் வீரனிடம் கேள்விகள் ஏதும் கேட்காமலே அவனைத் தொடர்ந்து சென்றான். கனோஜி மாளிகையை அடைந்ததும் அவர் பேட்டி கொடுக்கும் அறைப் பக்கம் செல்லாமல் மாளிகையைச் சுற்றிச் சென்ற காவலன், பின்புற வாயிலாக அவனை அழைத்துச் சென்று ஒரு பெரும் அறையின் முன்பு நிறுத்தி அங்கிருந்த காவல னிடம், "உபதளபதி வந்துவிட்டாரென்று சொல்" என்று கூறினான். அதை அறிவிக்கச் சென்ற காவலன் அரை விநாடியில் திரும்பி வந்து அறையை மறைத்திருந்த சீலையை விலக்கித் தலை வணங்கி உபதளபதியை உள்ளே செல்லச் சைகை காட்டினான்.

உள்ளே சென்ற உபதளபதி ஒரு விநாடி அந்த அறை யைக் கண்டு பிரமித்தான். ஒரு சயன அறையின் உல்லாசத் துக்கு எத்தனை உபகரணங்கள் தேவையோ அத்தனையும் இருந்தது அவ்வறையில். நடுவில் பெரும் பஞ்சணையும், சுற்றிலும் பெரும் நிலைக்கண்ணாடிகளும், அழகிய சீலை களும், சிலைகளும், கீழே விரிப்புக் கம்பளமும், ஒரு சித்திர வேலை மேஜையும், சாய்வு ஆசனங்கள் இரண்டும் இன்னும் பல அனுகூலங்களும் இருந்தன. மேலேயிருந்து தொங்கிய லஸ்தர் விளக்கு, அறையை மிக ரம்மியமாக அடித்திருந்தது. அந்த அறையிலிருந்த அத்தனை அழகு களுக்கும் சிகரம் வைத்ததுபோல் சிலையொன்று நடுப் பஞ்சணையில் அமர்ந்திருந்தது. அது சற்று அசைந்து புன்முறுவல் கொண்ட பிறகுதான் அது சிலையல்லவென்ப தைத் தமிழன் புரிந்துகொண்டான். புரிந்துகொண்டதும் நிலம் நோக்கித் தலை தாழ வணங்கினான்.

கனோஜி ஆங்கரேயின் மூன்றாவது மனைவியும் அவரால் அதிகம் விரும்பப்பட்டவளுமான கஹினா, இதய சந்திரனை ஓர் ஆசனத்தில் அமருமாறு கை காட்டினாள். அவளது திருமேனியில் பக்கவாட்டிலிருந்து எழுந்து ஆசனத்தைச் சுட்டிக் காட்டியது கையா, யானைத் தந்தத் தால் கடையப்பட்ட அழகுப் பொருளா என்று

மலைத்தான் தமிழன். அவன் பார்வையைக் கண்டு நகைத்த கஹினா, ''கொள்ளைக்காரத் தலைவருக்குத் தகுந்த சீடன் தான் நீ'' என்று கூறினாள்.

''கொள்ளைக்காரரா!'' என்று பிரமிப்புடன் சொற்களை உதிர்த்தான் தமிழன்.

''ஆம். என் கணவர். மகாராஷ்டிர ஸார்கேல்'' என்றாள் கஹினா.

''கணவரைப் பற்றி இப்படிக் கூறலாமா தாங்கள்!'' என்று குழறினான் இதயசந்திரன்.

''எனக்கு மாத்திரமல்ல கணவர் அவர். இன்னும் பல பேர் இருக்கிறார்கள் அவருக்கு. அந்தப் பெண் பித்து அரசியலிலும் விடவில்லை அவரை'' என்றாள் கஹினா வெறுப்புடன்.

''என்ன சொல்கிறீர்கள் தாயே!''

கஹினா பஞ்சணையைவிட்டு எழுந்திருந்தாள். ''இவர் யாருக்கு ஸார்கேல்? ஸார்கேலாக யார் நியமித்தது இவரை?'' என்று வினவினாள்.

''யார்?''

''தாராபாய்'' என்று முடித்தாள் கஹினா. ''இவரை ஸார்கேலாக்க தாராபாய்க்கு என்ன உரிமையிருக்கிறது? யார் மகாராஷ்டிரத்தின் அதிபதி? சத்ரபதியின் நேர்வழியில் வந்த பேரன் ஷாஹுவா அல்லது நாட்டுப் பெண் தாராபாயா?'' என்றும் வினவினாள்.

கஹினா அரசியல் பேசுகிறாளென்பதைப் புரிந்து கொண்ட இதயசந்திரன் அதற்குக் காரணத்தை ஊகிக்க முடியாததால், ''இதெல்லாம் பெரிய இடத்து விஷயம், நமக்கென்ன தாயே?'' என்றான்.

கஹினா கோபத்துடன் ராணிபோல் நிமிர்ந்து நின்றாள். ''நான் என்ன சிறிய இடமா தமிழா! அரபிக் கடல் அரசனின் மனைவி. யாருக்குக் குறைந்தவள் அந்தஸ்தில்'' என்றாள்.

அரபிக்கடல் அரசனைப்பற்றிக் குறிப்பிட்ட போது அவள் சொற்களில் ஒலித்த கம்பீரமும், பெருமையும் கனோஜியை அவள் பெரிதும் நேசிக்கிறாளென்பதைப் புலப்படுத்தவே இதயசந்திரன் சற்றுக் குழப்பத்துடன், ''உண்மை தாயே, அப்படியிருக்கத் தாராபாயைப்பற்றி நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்!'' என்று வினவினான்.

''அவள் நாட்டை இருகூறாக உடைத்துவிட்டதால், மகனுக்கு முடிசூட்ட மகாராஷ்டிரத்தையே பிளவுபடுத்தி நாசம் செய்ய துணிவதால், இந்த நாட்டு அரியணையில் சிவாஜியின் சந்ததியும், ஸம்பாஜியின் மகனுமான ஷாஹு தான் உட்காரலாம். அதற்குத்தான் நாம் முயல வேண்டும்'' என்றாள் கஹினா.

''நாமா!''

''ஆம். நீயும் நானும்'' என்றாள் கஹினா.

''தாயே! நான் கனோஜியின் அடிமை என்பது உங்களுக்குத் தெரியாதா?''

''உன்னைவிட அவருக்கு ஆயிரம் மடங்கு அதிக அடிமை அவர் மனைவியான நான். தவிர அவருக்காக என் உயிரையே அர்ப்பணிக்கும் உறுதி கொண்டவள்'' என்று சுட்டிக் காட்டினாள் கஹினா.

''அவருக்கெதிராக...''

''எதிராக எதுவும் செய்யவில்லை தமிழா. நாட்டுக்கு என் கடமையைச் செய்ய முற்படுகிறேன்.''

''எப்படி?''

''உன் துணை கொண்டு.''

இதயசந்திரனின் ஆச்சரியம் பன்மடங்கு அதிகப் பட்டது. ''என் துணை கவைக்கு உதவாது தாயே'' என்றான் வியப்பு தொனித்த குரலில்.

''அதைத் தீர்மானிக்க வேண்டியவள் நான்'' என்று கஹினா கூறினாள். ''உன்னை அந்த வெள்ளைக்காரி யுடன் தலைவர் கொலாபாவுக்கு அனுப்பப் போகிறார் அல்லவா?'' என்று வினவினாள்.

இதயசந்திரன் பிரமிப்பு அளவுக்கு மீறி அதிகப் பட்டது. தனித்துத் தலைவர் தன்னிடம் இட்ட உத்தரவு அதற்குள் மாளிகையில் எப்படிப் பரவியது என்று எண்ணினான். அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்ட கஹினா கூறினாள், ''தமிழா! என் கணவரை என்னால் புரிந்து கொள்ள முடியாதா? அல்லது அவர் உத்தரவுகளை அறியத்தான் எனக்கு வழியில்லையா! அவருடன் உடலும் உயிருமாகப் பழகியவளுக்கு அவர் யுக்திகளில் ஓரளவாவது இருக்காதா?''

மேலும் சொன்னாள் கஹினா, ''தமிழா! வெள்ளைக் காரியை அழைத்துக் கொண்டு போகப் போவதும், பம்பாய் கவர்னரிடம் முப்பதாயிரம் ரூபாய் அவளுக்கு ஈடு கேட்கப் போவதும் எனக்குத் தெரியும். இதிலெல்லாம் அவர் உத்தரவுப்படி நட. ஆனால் ஈடு கேட்க ஆளை அனுப்பாதே. நீயே போ.''

''நானா? என்னையே பம்பாய்க்குப் போகச் சொல் கிறீர்களா?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''ஆம்.''

''போய்?''

''அங்கு நான் ஒரு விலாசம் தருகிறேன்.''

''சரி.''



''அந்த விலாசத்திற்குச் சென்று நான் கொடுக்கும் கடிதத்தைக் கொடுத்துவிடு.''

இதயசந்திரன் சற்று சிந்தித்தான். ''அதற்கு நானே போக வேண்டுமா? வேறு நம்பிக்கையான யாரையும் அனுப்பக்கூடாதா?'' என்று வினவினான்.

''உன்னைவிட நான் நம்பக் கூடியவர் இங்கு யாரு மில்லை'' என்ற கஹினா, ''போய் வா தமிழா! உன் கப்பல் புறப்படும் முன்பு கடிதம் என் முத்திரையுடன் உனக்கு வந்து சேரும்'' என்று கூறி அவனுக்கு விடை கொடுத்தாள்.

இதயசந்திரன் அறையை விட்டுச் செல்லச் சிறிது தயங்கினான். ''என்ன தமிழா தயங்குகிறாய்? ஏதாவது சந்தேகமிருந்தால் கேள்'' என்றாள் கனோஜியின் மனைவி.

''பம்பாயில் யாரிடம் கடிதத்தைக் கொடுக்கவேண்டு மென்று கூறவில்லையே தாங்கள்'' என்றான் இதய சந்திரன்.

''கடிதத்தின் மீது பெயர் விலாசம் எல்லாம் தெளிவாக இருக்கும்'' என்றாள் கஹினா.

இதயசந்திரன் மேற்கொண்டு அவளிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்காதென்பதைப் புரிந்துகொண்டு வெளியேறினான். அறைக்கு வந்து உறங்காமலே இரவைப் போக்கினான்.

மறுநாள் முழுவதும் பயணத்துக்கு ஜலதீபத்தைத் தயார் செய்வதில் செலவழித்தான், நீண்ட பயணத்திற்குத் தேவையான குடிநீரைப் பீப்பாய்களில் நிரப்பவும், உணவுப் பொருள்களைச் சேகரித்துக் கப்பலில் சேர்க்கவும், பீரங்கிகள் முதலியவற்றுக்குத் தேவையான வாணப் பொடி, குண்டுகள் இவற்றைச் சேமிக்கவும் மாலுமி களுக்குக் கட்டளையிட்டான். இப்படிப் பிற்பகல் வரையில் விடாமல் ஏற்பாடு செய்து அஸ்தமனத்துக்கு

நாலைந்து நாழிகைகளுக்கு முன்பே ஜலதீபத்தின் நங்கூர மெடுக்கத் தீர்மானித்துத் தளத்தில் நின்று கரையை நோக்கினான்.

அன்று பூராவும் அவன் மஞ்சுவை சந்திக்கவில்லை. அவள் வழியனுப்ப ஒரு வேளை வருவாளோ என்று பார்த்துப் பார்த்து ஏமாந்தான். கடைசியில் கஹினாவின் கடிதம் மட்டும் வந்தது. அதை எடுத்துக்கொண்டு படகில் வந்த மாலுமியொருவன் ஒரு முத்திரைக் கடிதத்தைத் தளத்தில் நின்றிருந்த இதயசந்திரனிடம் நீட்டினான.

அதை வாங்கிய இதயசந்திரன் கை அசைவற்று நின்றது. இதயங்கூட அசைவற்று நின்றுவிடும் போலிருந்தது. விலாசத்திலிருந்த முதல் வரி, ''பானுதேவி.''

அத்தியாயம் 13

# கடிதமும் கலக்கமும்

கடிதத்தைப் பிடித்த கை பிடித்தபடியே நின்றது.. அதிலிருந்த விலாசத்தைப் பார்த்த கண்கள் பார்த்தபடியே நின்றன. அதுவரை எழுந்த உள்ளத்தில் உருண்டு கொண்டிருந்த உணர்ச்சிகள் அடியோடு உறைந்து விட்டன. உதடுகள் பானுதேவியின் பெயரை உச்சரிக்கும் சக்தியை இழந்து வியப்பில் விரிந்தது லேசாக விரிந்தபடியே இருந்தன. கடிதம் போய்ச் சேர வேண்டிய மகாராஜா ஷாஹுவின் மருமகளுக்காக இருக்க முடியும் என்பதைக் கனவில்கூட அவன் நினைக்காததால் ஏற்பட்ட பிரமை பல வினாடிகள் வரை அவனை விடவே இல்லை. விட்ட போதும் அவன் நிதானத்தில் இல்லை. ''எடுங்கள் நங்கூரத்தை'' என்று திடீரென அவன் கூறியதைக் கண்ட பர்னாண்டோ வாயைப் பிளந்தான். இப்ரஹீமின் கண்களும் வியப்பைக் கக்கின. தலைவன் ஒரு நிதானத்தில் இல்லையென்பதை இருவருமே உணர்ந்து கொண்டனர்.

நங்கூரம் எடுப்பதையோ விடுப்பதையோ விழியின் அசைவாலும் கையின் ஒரு சைகையாலும் சில சமயங்கள் தலையின் அசக்கலாலும் கம்பீரத்துடன் உணர்த்தும் கப்பல் தலைவன் அன்று திடீரென்று கூச்சலிட்டு உத்தர விட்டதும் அந்த இரு மாலுமிகள் மட்டுமின்றி மற்றவர்களும் ஆச்சரியமடைந்தார்களென்றாலும் அதை யாருமே வாய்விட்டுச் சொல்லாமல் தடதடவென அலுவல்களில் இறங்கினார்கள். கப்பலின் பின் பகுதியிலிருந்த உருளை சுற்றப்பட்டு நங்கூரம் மேலே ஏற்றப்பட்டதும் பாய்கள் விரிந்தன. துடுப்புக்கள் துழாவின. ஏதோ மந்திரத்தால் மயக்கப்பட்டவை போல் அந்தந்த அலுவல்கள் சட்சட்டென்று தாமதமின்றி நடந்ததால் ஜலதீபம் துறைமுக அலைகளைக் கிழித்துக்கொண்டு விஜயதுர்க்கத்திலிருந்து

அரபிப் பெருங்கடலின் பரந்த நீரை நோக்கி நகர்ந்தது. அது நகர்ந்ததால் ஏற்பட்ட பெரிய அசைவால் சற்றுச் சுரணை அடைந்த இதயசந்திரன் கடிதத்தைத் தனது கச்சையில் பத்திரப்படுத்திக்கொண்டு கப்பல் தளத்தின் குறுக்கே நடந்து பீரங்கிகள் இருந்த நிலை, மாலுமிகள் அலுவல் புரியும் முறை இவற்றைக் கவனித்துவிட்டுக் கீழேயும் இறங்கிச் சென்று துடுப்புத் தள்ளுவோரையும் பார்த்தான். அங்கிருந்த ஹர்கோவிந்திடம் கூறினான், ''ஹர்கோவிந்த்! அரைக்காதத்துக்கு மேல் துடுப்புத் துழாவ அவசியமிருக்காது. காற்று அனுகூலமாக இருக்கிறது. ஆகவே பாய்களே போதும் ஜலதீபம் ஓட'' என்று.

இதை ஹர்கோவிந்தும் அறிந்தேயிருந்ததால் இதை எதற்காக இதயசந்திரன் தன்னிடம் கூறுகிறானென்பதை உணர்ந்து கொள்ள முடியாத காரணத்தால் முகத்தில் முதலில் வியப்புக் குறியைக் காட்டினான். பிறகு சிறிது சினத்துடன், ''தலைவரே! நான் பதினைந்து ஆண்டுகளாக மாலுமித் தொழில் புரிகிறேன்'' என்றும் தெரிவித்தான்.

''இல்லையென்று யார் சொன்னது?'' இதயசந்திரன் கேள்வி உஷ்ணத்துடன் வந்தது.

''தாங்கள்தான்'' என்றான் ஹர்கோவிந்தும் உஷ்ணத் துடன்.

''நானா?'' என்று மீண்டும் வினவிய இதயசந்திரனின் குரலில் சீற்றம் குறையவில்லை.

''ஆம் தலைவரே! தாங்கள் இடும் உத்தரவைப் புதிதாக வரும் மாலுமிகளுக்கு இடுவதுதான் வழக்கம்'' என்றான் ஹர்கோவிந்தும் அடக்கத்துடனும் அதே சமயத்தில் கோபத்துடனும்.

இதயசந்திரன் அவனை வெறித்துப் பார்த்தான். பிறகு விடுவிடுவென்று படிகளில் ஏறி மேல் தளத்துக்குச் சென்று விட்டான். அவன் சென்றதை ஹர்கோவிந்த் மட்டுமல்ல;



மற்ற மாலுமிகளும் பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்! ஒருவினாடி துடுப்புத் துழாவுவதுகூட நின்றது. ''உம். துழாவுங்கள் துடுப்பை'' என்று மிரட்டிய ஹர்கோவிந்த் தானும் பலகையில் உட்கார்ந்து ஒரு துடுப்பைக் கைகளில் பற்றித் துழாவத் தொடங்கினான்.

அவனுக்குப் பக்கத்தில் எதிர்ப்புறத் துடுப்பைத் துழாவிக் கொண்டிருந்த மாலுமி கேட்டான். ''ஹர்கோவிந்த்! தலைவர் பெரும் கோபத்திலிருக்கிறார் போலிருக்கிறது?'' என்று.

''அப்படித்தான் தெரிகிறது'' என்றான் ஹர்கோவிந்த்.

''காரணம்?''

''தெரியாது.''

''நான் சொல்லட்டுமா?''

''சொல்.''

''தளபதி வரவில்லை.''

''இப்பொழுது இவர்தான் தளபதி.''

''இருக்கலாம். ஆனால் ஓர் அழகிய தளபதியிடம் வேலை செய்யும் உற்சாகம் இந்தப் பதவியில் அவருக் கில்லை!''

''சரி சரி, வேலையைப் பாருங்கள்'' என்று ஹர்கோவிந்த் மிரட்டிய பிறகுதான் அவர்கள் நகைப்பு அடங்கியது.

அவன் அன்று அடிக்கடி குறைகளைக் கண்டுபிடித்த போதும் அனாவசியமாக மிரட்டியபோதும் மாலுமிகள் அனுதாபப்பட்டார்களேயொழிய சிறிதும் பயப்படவு மில்லை, அவனிடம் கோபம் கொள்ளவுமில்லை. மாலுமி களின் அனுதாபத்தை அன்றிரவு உணவு வேளையில் பர்னாண்டோவிடம் இப்ரஹீம் நன்றாக வர்ணிக்கத் தொடங்கி, ''பர்னாண்டோ, ஸார்கேல் செய்தது மிகவும்

தவறு'' என்றான் ஆட்டிறைச்சியை லேசாகக் கடித்துக் கொண்டே.

அவனைவிடச் சிறிது நாசூக்காக ஒரு பீங்கான் தட்டில் மாமிசத் துண்டுகள் வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாக எடுத்து வாயில் வைத்துக்கொண்டு சுவைத்த பர்னாண்டோ, ''ஸார்கேல் தவறு செய்தாரென்று சொல்லலாமா?'' என்று கேட்டான் புன்முறுவலுடன்.

''தவறு யார் செய்தாலும் தவறுதானே பர்னாண்டோ?'' என்றான் இப்ரஹீம்.

இப்ரஹீம் எதைக் குறிப்பிடுகிறானென்று பர்னாண்டோவுக்கு தெரிந்திருந்தும் அதை அவன் வாயால் முழுக்கக் கேட்கப் பிரியப்பட்டு, ''என்ன தவறு செய்தார் ஸார்கேல்?'' என்றான்.

''மொகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா பர்னாண்டோ?''

''யார் கேள்விப்படாதிருக்க முடியும்?''

''மும்தாஜ் பிரிந்ததும் அவர் நிலை என்ன?''

''நரக வேதனை.''

''அந்த நிலைக்கு உபதளபதியைக் கொண்டு வந்து விட்டார் ஸார்கேல்'' என்று சொல்லி நகைத்தான் இப்ரஹீம்.

பர்னாண்டோ நகைக்கவில்லை. ''இப்ரஹீம்! நீ ஒரு முட்டாள்!''

''நானா? எப்படி?''

''போய்விட்ட மும்தாஜுக்கும் மஞ்சுவுக்கும் எடை கட்டுகிறாயே? இருப்பவளைப் பிரிவது இறந்தவளைப் பிரிவதைவிட ஆயிரம் மடங்கு அதிக வேதனை. தெரியுமா உனக்கு?''

இதைக் கேட்ட இப்ரஹீம், ''அச்சா, பர்னாண்டோ அச்சா!'' என்று இரைந்து நகைத்தான். பர்னாண்டோவும் அந்த நகைப்பில் கலந்துகொண்டான்.

இப்படிப் பல மாலுமிகளும் ஜலதீபத்தின் தளபதியைப் பற்றிப் பேசிக் கேலி செய்தாலும் கேலி செய்யாத ஒரு ஜீவனும் அந்தக் கப்பலில் இருந்தது கப்பலுக்கு வந்தது முதல் கடிதத்தைப் பெற்றது முதல் இதயசந்திரனின் பதட்டத்தையும் கோபத்தையும் தளபதியின் அறை வாயிற்படியிலிருந்தே பல வினாடிகள் கவனித்த கட்டழகி காதரைன் அவன் இதய உளைச்சலுக்குக் காரணத்தை நன்றாகப் புரிந்து கொண்டு இளநகை கோட்டினாள். அவன் பதட்டத்துக்குக் காரணம் தன்னுடன் அவன் தனிமையில் வர நேரிட்டதேயென்பதை அவள் நன்கு உணர்ந்தேயிருந்தாள். மஞ்சு வராதது பற்றி அவனுக்கு நேரிடையான ஏமாற்றமில்லாவிட்டாலும், அவள் வந்திருந்தால் தனக்கும் அவனுக்கும் ஒரு திரையிருக்குமென்பதையும், அந்தத் திரையில்லாததால் ஏற்பட்ட அச்சமே அவன் பதட்டத்துக்குக் காரணம் என்பதையும் அவள் புரிந்து கொண்டதுடன், அவனுக்கு வந்த கடிதத்தைப் பற்றிய எண்ணங்களும் எழவே, 'பார்த்ததும் தமிழன் பிரமிப்படையும்படி என்ன விலாசம் அந்தக் கடிதத்திலிருக்க முடியும்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அந்தக் கடிதத்தின் விலாச மர்மத்தை அறிந்துகொள்ள உறுதியும் கொண்டாள்.

அந்த உறுதியுடன் இரவு விளக்குகள் கொளுத்தப்படும் வரையில் மஞ்சத்தில் கிடந்த காதரைன், விளக்கு வைத்ததும் முகம் கழுவி மெல்லிய கௌனை அணிந்து கொண்டாள். தலை சீவி, குழல்கள் தோள்களை முத்தமிடும் வண்ணம் அலங்கரித்துக் கொண்டாள். அவள் அலங்கரித்து முடித்துக் கொண்டதும் மாலுமியொருவனை அழைத்து, ''நான் கப்பல் தலைவரைப் பார்க்கவேண்டும் வரச்சொல்'' என்று உத்தரவும் இட்டாள்.

நீண்டநேரம் காத்திருந்தும் அவன் வரவில்லை. உணவு வேளைக்கே உள்ளே நுழைந்தான் அவன். ''எதற்கு அழைத்தீர்கள்?'' என்று வினவவும் செய்தான் வெறுப்புடன்.

அவள் நீலக் கண்மணிகள் அவனை ஏறெடுத்து நோக்கின. ''இப்பொழுது அழைக்கவில்லை. நீங்கள் செல்லலாம்'' என்றாள் அவளும் குரலில் வெறுப்பைக் காட்டி.

அவள் பார்வையின் கவர்ச்சி, அவள் உதடுகள் அசைந்த அழகு முகத்தில் வெறுப்பு விரவிய சமயத்திலும் அவற்றுக்கிருந்த வசீகரம் இவை யாவும் அவன் வெறுப்பைச் சிறிது தணிக்கவே, ''ஒரு கப்பலின் தலைவன் வேலையற்றவனல்லன். பெண்ணொருத்தி அழைத்ததும் ஓடி வர முடியாது'' என்று கூறினான் வெறுப்புத் தணிய, கோபம் முந்திய குரலில்.

''அந்த வேறு அலுவல்களைப் பாருங்கள் தளபதி. ஒரு கைதி அதுவும் விதவை. அவள் துயரத்தைப் பற்றிப் பிறகு கவனிக்கலாம்.'' குரலில் சிறிது துயரத்தைக் காட்டிக் கூறினாள் காதரைன்.

இதயசந்திரன் இதயம் அவள் நிலையைக் கண்டு இரங்கவே அவன் அவள் படுத்திருந்த பஞ்சணையை அணுகினான். ''உங்களுக்கு நான் செய்யவேண்டியது ஏதாவதிருந்தால் சொல்லுங்கள் மிஸஸ் சௌன்'' என்றும் கேட்டான்.

''வர வர மரியாதை அதிகமாகிறது. இறந்துவிட்டவர் பெயரையும் சொல்லி என்னை வதைக்கிறீர்கள்'' என்ற காதரைன் கண்களில் நீர் திரண்டது.

பிரிட்டிஷ் குண்டுகளுக்கு அஞ்சாத இதயசந்திரனின் மனம் அவள் கண்களில் திரண்ட இரு துளிகளால் அடியோடு நெகிழ்ந்துவிடவே, அவளருகில் பஞ்சணையில் உட்கார்ந்து கண்ணீரைத் தனது கைகளால் துடைத்து, ''மன்னியுங்கள் என்னை'' என்றான்.



காதரைன் பேசாமல் சிலைபோல் கிடந்தாள் கட்டிலில். அவள் மௌனத்துக்குக் காரணம் துக்கம் என்று எண்ணிக் கொண்ட இதயசந்திரன், ''போனது வராது, சற்றுச் சாந்தி செய்து கொள்ளுங்கள்'' என்று ஆசுவாசப்படுத்தி அவள் நெற்றியில் கையை வைத்தான்.

''அப்படியே நெற்றியை அழுத்துங்கள்'' என்று கூறினாள் காதரைன்.

இதயசந்திரனின் இதழ்களில் இளநகை அரும்பியது. ''எனக்கு இதுதான் வேலையா?'' என்று வினவினான்.

''ஏன், கூடாதா?'' என்று முணுமுணுத்தாள் அவள். அத்துடன், ''சற்று குனியுங்கள்'' என்றாள் அவனை நோக்கி.

''எதற்கு?''

''ஒரு விஷயம் சொல்ல வேண்டும்.''

''இங்கு யாருமில்லை. சொல்லுங்கள்.''

''குனிந்தால்தான் சொல்லுவேன்.''

''பச்சைக் குழந்தை மாதிரிப் பேசுகிறாயே காதரைன்?'' என்றான் இதயசந்திரன் அவளிஷ்டப்படி குனிந்து.

அவன் காதில் சொன்னாள் அவள், ''காதரைன் என்று அழைக்காதீர்கள்'' என்று.

''வேறு எப்படி அழைப்பது உங்களை?''

''உம். உம். உன்னை.''

''சரி உன்னை?''

''கேட்டி அல்லது கேட்.''

''கூடாது கூடாது.''

''கூடும் கூடும்'' என்று நகைத்தாள் அவள். நெற்றியிலிருந்த அவன் கையை அவளின் ஒரு கை நன்றாக அழுத்தியது.

‘‘தவறு பெண்ணே, தவறு’’ என்று கெஞ்சினான் இதயசந்திரன். அவன் உதடுகள்தான் தவறைச் சொன்னதே தவிர, கை பெரும் தவறுகளைச் செய்து கொண்டிருந்தன.

‘‘இதுதான் சரி’’ என்று காதரைன் முணுமுணுத்தாள்.

‘‘எது காதரைன்?’’

‘‘இந்த நிலைதான்......’’

‘‘பெரும் தவறு, காதரைன் பெரும் தவறு’’ என்று உரைத்த அவன் கை, அவள் கன்னத்தையும் கழுத்தையும் தடவியது.

‘‘இல்லை. கேட் கேட்’’ என்று திருத்தினாள் அவள்.

அவள் இதயம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. அவன் சங்கடத்தைக் கண்டு அவள் மெள்ள நகைத்தாள். ‘‘தவறல்ல, இயற்கை’’ என்று முணுமுணுத்தாள் அவள். கழுத்தில் விளையாடிய அவன் கையைத் தனது இன்னொரு கையால் பிடித்துக் கொண்டாள். அவள் கண்களில் திடீரென ஒரு விபரீத ஒளி பரவியது. அவளுடைய மற்றொரு கை அவன் இடுப்பை நோக்கி நகர்ந்தது. இடுப்பின்மீது வழவழத்துத் தவழ்ந்தது. அங்கிருந்த கடிதத்தை வெகு லாகவமாக எடுக்கவும் செய்தது.

## அத்தியாயம் 14

# மூன்றாவது காதலி

கட்டழகி காதரைனின் கையொன்று தன் கச்சையை நோக்கிச் சென்றதையோ, கச்சையிலிருந்து வெகு லாகவமாக எடுத்து விட்டதையோ காமக் கணைகளின் வசப்பட்டிருந்த கப்பல் தளபதி கவனித்தானில்லை. உற்ற தகப்பனையும் உடன் பிறந்தாளையும் தவிர காதலன் ஒருவனே ‘கிறிஸ்தவப் பெயர்’ எனப்படும் சொந்தப் பெயரான காதரைன் என்ற சொல்லை உச்சரிக்க உரிமை பெற்றிருக்க அந்தப் பெயரைத் தன்னை அழைக்க அனுமதித்ததன்றி, கேட்டி என்றும் கேட் என்றும் அதைக் குறுக்கிச் செல்லமாக அழைக்க அழைப்பு விடுத்த அந்த ஆரணங்கின் துணிவைக் கண்டு பெரிதும் வியப்படைந்த நிலையில் எதையும் கவனிக்கும் திறனில்லாது போயிற்று ஜலதீபத்தின் தலைவனுக்கு. உள்ளேயிருந்த விளக்கொளியில் தகதகவெனத் தங்கக் கம்பிகள் போல் பிரகாசித்த அவள் தலைக்குழல், நல்ல வெளுப்பில் உணர்ச்சிக் குருதி பாய்ந்துவிட்டதால் குங்குமச் சிவப்பாகச் சிவந்து ஒளி விட்ட கன்னக்கதுப்புகள், அரைப் பார்வையாகப் பார்த்த நீலக் கண்கள், கெம்பினும் சிவந்து நீர் துளிர்த்து அழைத்துக் கொண்டிருந்த பெருதடுகள் சற்றே இடைவெளி கொடுத்த உதடுகளின் உள்ளே மெல்லத் தலைகாட்டிய இரு வெண்முத்துக்கள், வெண்சங்குக் கழுத்து, கழுத்துக்குக் கீழே முட்டி எழுந்த அழகுகள், அவற்றை லேசாக வெளிப்படுத்திய வெண்ணிற இடை, இவை தொடுத்த ஒவ்வொரு கணைக்கும் இரையான இதயசந்திரன், அவள் தலையைப் பிடித்த வண்ணமே, அவள் மீது குனிந்த வண்ணமே கூறினான்: ‘‘மாட்டேன் காதரைன், மாட்டேன்’’ என்று.

காதரைன் அவனது இரு கன்னங்களையும் தனது இரு கைகளில் பிடித்து அவன் முகத்தைத் தனது முகத்தை

நோக்கிச் சட்டென்று திருப்பினாள். நெற்றியைப் பிடித்திருந்ததால் உட்கார்ந்திருந்த நிலையிலிருந்த இதயசந்திரன் அந்த ஊன்றுகோலும் விலகிவிட்டதால் அவள்மீது சட்டென்று விழுந்தானானாலும், ஒரே விநாடியில் கையை அவளுக்கு மறுபுறத்தில் ஊன்றித் திடப்படுத்திக் கொண்டான். ஆனால் அந்தத் திடத்தை ஆயிரம் காமக் கணைகள் உடைத்தெறிந்தன. அவன் கன்னங்களைப் பிடித்த கைகள் அன்புடன் அழுந்தின. அவள் முகத்தின் இரு நீலாம்பரங்களும் அவனுடைய இரு கரு நெய்தல்களுடன் கலந்தன, ஈர்த்தன. ''ஏன் மாட்டேன், எதை மாட்டேன்?'' என்று முணுமுணுத்த அவள் உதடுகள் எதற்கோ ஏங்குவது போலிருந்தன. அந்த ஏக்கம் அவன் இதயத்தில் கிளம்பிய ஏக்கமும் தாபமும் இணையற்றதாயிருந்தன. ''வேண்டாம் கேட்க வேண்டாம்'' என்று அவன் உதடுகள் உதிர்த்த சொற்களில் உறுதி லவலேசம் கூட இல்லை.

''எது வேண்டாம்!'' என்று அவள் கேட்டு அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''இதுதான்...'' என்று அவன் தடுமாறினான், அசைந்தான் பஞ்சணையில்.

''இதுதானென்றால்?'' அவள் சொற்கள் குழைந்தன. அவளுடைய ஒரு கால் பஞ்சணையில் உதைத்துக் கிளப்பியதால் சீராக இருந்த படுக்கை விரிப்புக் கலைந்தது, ஆடையும் குலைந்தது.

அவன் உடல் நடுங்கியது. ''இது சரியல்ல, முறையல்ல...'' என்று அவன் கெஞ்சி அவள் கைகளைக் கன்னத்திலிருந்து எடுத்தான்.

''ஏனிப்படி நடுங்குகிறீர்கள்?'' என்று அவள் வினவினாள்.



''இல்லை. நடுங்கவில்லை. நடுக்கமெதற்கு எனக்கு? என்ன குற்றம் செய்துவிட்டேன்?'' என்று தளடுதடுமாறித் தடுமாறிப் பேசினான்.

''அதைத்தான் நானும் கேட்கிறேன்...''

''எதை, எதைப்பற்றி?''

''இதைப்பற்றி...''

''இல்லை, இல்லை. ஒன்றுமில்லை'' என்று கூறி, ''சரி, நான் வருகிறேன்'' என்று எழுந்திருக்க முயன்றான் அவன்.

அவள் இடது கை அவன் கழுத்தைச் சுற்றியது. ''ஏன் அவசரமா?'' என்றாள் மெள்ள.

''ஆம்.''

''என்ன அவசரமோ?''

''கப்பல் வேலை.''

''ஏன்? போர் வந்துவிட்டதா?''

''போரா?''

''ஆம்.''

''அது வராவிட்டாலென்ன?''

''வேறென்ன வரும்?''

''பேர் வரும். போரைவிடப் பேருக்கு அஞ்சுகிறேன்.''

காதரைன் தனது இளமை அஸ்திரங்கள் நெகிழ ஒரு முறை அசைந்து படுத்தாள். நகைத்தாள் மெல்ல.

''ஏன் நகைக்கிறாய்?'' என்று செல்லமாகச் சீறினான் தமிழன்.

''நீ சொன்னது சிரிப்பு வந்தது.''

''நீயென்று பேசுகிறாயே?''

''காதல் ஆட்சியில் மரியாதை கிடையாது.''

''சரி சரி. நகைத்ததற்குக் காரணம்?''

''நீ பெயரைப் பற்றிப் பயப்படுகிறாயே.''

''வேறெதைப் பற்றிப் பயப்பட வேண்டும்?''

''செயலைப் பற்றி.''

''விளங்கவில்லை.''

''விளங்காததற்கு என்ன இருக்கிறது தமிழா? என்னுடன் இருப்பதில் உனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் அது தெரிந்து மாலுமிகள் பெயர் கட்டிவிட்டால் என்ன செய்கிறதென்று பயப்படுகிறாய்? அதாவது...''

''அதாவது?''

''உன் திருட்டுத்தனம் யாருக்கும் தெரியக்கூடாதென்கிறாய்...?''

இதைக் கேட்ட இதயசந்திரன், ''காதரைன்...'' என்று சீறினான்.

''அப்பா! உண்மையைச் சொன்னால் என்ன கோபம் வருகிறது!'' என்று மீண்டும் நகைத்தாள். அவள் கை அப்பொழுதும் அவன் கழுத்தைச் சுற்றியிருந்தது. இடது கை அந்தக் கடிதத்தை வெகு ஜாக்கிரதையாகக் கலைந்துவிட்ட படுக்கை விரிப்பின் கீழ் மறைத்துவிட்டது.

உணர்ச்சிகளை அடியோடு காற்றில் பறக்கவிட்டு இதயம் படக்படக்கென அடித்துக் கொள்ள, காமத்தாலும் அது கிளப்பிவிட்ட அச்சத்தின் விளைவாலும் நிலைகுலைந்திருந்த இதயசந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவள் சொன்னது அத்தனையும் உண்மையென்பதை அவன் உணர்ந்திருந்தான். கழுத்தைச் சுற்றியிருந்த அவள் இடது கையின் வழவழப்பும், அழுத்தமும் அவன் புத்தியை அழுத்தியிருந்தாலும், அவன் திடத்தை உடைத்திருந்தாலும் அவன் மனத்தில் எங்கோ பதுங்கியிருந்த அறிவின் ஒரு சிறு பொறிமட்டும், 'நீ செய்வது தவறு' என்று உறுத்திக் கொண்டிருந்தது. அந்த உறுத்தல் அவள் மோகனாஸ்திரங்களில் அடிக்கடி மறைந்து தலையை நீட்டிக்கொண்டிருந்தது.



வெள்ளத்தைத் துரும்பு எதிர்க்குமா? அலையைச் சிறு இலை எதிர்க்குமா? காற்றைப் பஞ்சு எதிர்க்குமா? மிஞ்சும் உணர்ச்சியை நெஞ்சும் எதிர்க்குமா? எதிர்க்காது எதிர்க்காது என்று அறிவுறுத்தியது அவன் புத்தி. புத்தி மேம்படும் நிலை புருஷனுக்கு ஏது, பெண்ணின் கண் வலையில் அவன் சிக்கும்போது? ஆகவே அதிலிருந்து விடுபட முடியாமலே கிடந்தான் இதயசந்திரன். எந்த நிலைக்கும் ஓர் இடையூறு உண்டு. அந்த இடையூறு அந்த நிலையிலும் வந்தது. திடீரெனப் பலமாக எழுந்த காற்று அந்த அறைக்கதவைப் படேரெனத் திறந்து பக்கப் பலகையில் மோத வைத்துப் பேரொலியைக் கிளப்பவே உணர்ச்சிகளை உதறிக் கொண்டு சரேலென எழுந்தான் இதயசந்திரன்.

அவன் எழுந்த வேகத்தில் அவன் கழுத்தைச் சுற்றிய, அவள் கை படுவேகத்தில் பிரிந்தது. அதனால் ஏற்பட்ட வலியால், ''ஓ.ஓ'' என்று கூவினாள் காதரைன்.

அவள் கூவுவதை அவன் காதில் வாங்காமல் கதவை நோக்கி நடந்து வெளியே சென்றுவிட்டான். தளத்தில் வேகமாக நடந்து அந்த அறைக்கு நேர் எதிரேயிருந்த முனைக்கு நடந்தான் ஓடினான் என்று சொல்ல முடியாத நிலையில் சென்று கடலைப் பார்த்துக்கொண்டு நின்றான். அரபிக்கடல் எங்கும் கறுத்துக் கிடந்தது. வானத் தாரைகள் அழகாக மின்னிக் கொண்டிருந்தன. பெருங்காற்று பெரிய அலைகளைக் கிளப்பி அலைகளையும் தொட்டு அவனையும் தொட்டது. ''அப்பாடா'' என்று ஏதோ ஆபத்திலிருந்து விடுபட்டவன் போல் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். அறையிலிருந்து இயற்கை அழுத்திய அழுத்தத்தையும் வெளியிலிருந்த பரந்த இயற்கை அகற்றிவிட்டபடியால் இரு கைகளையும் பக்கவாட்டில் நீட்டி மடக்கி உதறிக்கொண்டான் தமிழன். அந்த உதறலால் காதரைனை உதறிவிட்டதாக நினைத்ததால் ஏமாந்தே போனான்.

காதரைனின் அழகிய முகம் அவன் சித்தத்தைவிட்டு அகலவில்லை. மீண்டும் மீண்டும் பானுதேவி, மஞ்சு இருவரின் சீரிய அரசியல் முகத்தோடு, மஞ்சுவின் மந்தகாச மாலுமி முகத்தோடு, கணவனை இழந்த துயரம் சொட்டும் அந்தக் காரிகை முகமும் எழுந்து நின்றது. 'இவர்களில் யார் என் மனதைக் கொள்ளை கொண்டது?' என்று தன்னைத்தானே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டான் இதயசந்திரன். ஆனால் அதற்கு விடை கண்டானில்லை. இத்தனைக்கும் காரணம் கனோஜி ஆங்கரேதானென்று அவரைக் கடிந்து கொண்டான். 'ஆங்கரே மட்டும் பரசுராமபுரம் வராதிருந்தால் பானுதேவியோடு நான் அங்கிருந்து கொண்டே மகாராஷ்டிர வாரிசைத் தேடியிருப்பேன். ஆங்கரே வந்ததால் அவரைக் காட்டிக் கொடுக்க என்னை அனுப்பினாள் பானுதேவி. அதற்கு இஷ்டமில்லாததால் நான் ஸாத் ஸித்தியை எதிர்த்தேன். எதிர்த்ததால் அவன் வீரர்களிடம் சண்டையிட்டு ஓட வேண்டியதாயிற்று. ஓடியதால் மஞ்சுவைச் சந்தித்தேன். மஞ்சுவைச் சந்தித்ததால் மாலுமியானேன். பிறகு உபதளபதியுமானேன். மஞ்சுவை மணமுடித்திருந்தால் இந்த வெள்ளைக்காரியிடம் அகப்பட்டுக்கொண்டிருக்க மாட்டேன். அதுவும் தனியாக' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் தமிழன். அத்தனைக்கும் கனோஜிதான் காரணமென்று முடிவுகட்டி அவரை வெறுத்தான். 'ஆனால், அவர் நிலைமட்டுமென்ன வாழ்ந்தது? அவர் மனைவியே அவருக்கு எதிரி. பானுதேவிக்குக் கடிதம் கொடுத்திருக்கிறாள்' என்று உற்சாகப்பட்டுக் கச்சைக்குள் கைவிட்டான். ஒரு வினாடி அசந்துபோனான். அடுத்த வினாடி காதரைன் அறையை நாடி ஓடினான் வேகமாக.

அறைக்கதவு திறந்திருந்தது. அப்பொழுதும் காதரைன் பழையபடி பஞ்சணையில் மல்லாந்து படுத்துக் கிடந்தாள். அவள் கௌனும் படுக்கை விரிப்பும், குழல்களும் அப்பொழுதும் கலைந்து கிடந்தன. வேகமாக



அறைக்குள் நுழைந்த தளபதியைப் புன்முறுவலுடன் நோக்கி, ''வாருங்கள் தளபதி!'' என்றழைத்தாள்.

''நான் உன்னுடன் விளையாட வரவில்லை'' என்று சுட்டிக் காட்டினான் தமிழன்.

''யார் அப்படிச் சொன்னது?'' என்று நகைத்தாள் காதரைன்.

''சொல்ல வேண்டியதில்லை. செயலிலிருந்தே புரிந்து கொள்ளும் சக்தி எனக்குண்டு'' என்று சினத்துடன் கூறிய இதயசந்திரன் பஞ்சணையை அணுகி அவளைப் புரட்டிப் பஞ்சணை விரிப்பை அலட்டி அலட்டிப் பார்த்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டாள் காதரைனும் படுக்கையில் புரண்டு கட்டிலின் ஓரத்தில் குனிந்து.

''ஒரு கடிதம்.'' இதயசந்திரன் பதிலில் அவசரமிருந்தது. ஆத்திரமுமிருந்தது.

''எதையும் பார்க்கிற இடத்தில் பார்க்க வேண்டும் தளபதி'' என்றாள் காதரைன்.

''எங்கு பார்க்கச் சொல்கிறாய்?'' என்று கேட்டான் இதயசந்திரன் கட்டிலுக்கு அடியிலிருந்து நிமிர்ந்து.

''இங்கு'' என்று தனது தலையணையைச் சுட்டிக் காட்டித் தலையையும் தூக்கினாள் காதரைன்.

தலையணைக்கடியிலிருந்த கடிதத்தை எடுத்துக் கொண்ட இதயசந்திரன் அதன் முத்திரைகளை ஒருமுறைக்கிருமுறை பார்த்துக் கச்சையில் செருகிக் கொண்டான். ''நன்றி'' என்றும் அவளை நோக்கிக் கூறினான்.

''எதற்கு நன்றி? முத்திரைகளை உடைக்காததற்கா?'' என்று வினவினாள் காதரைன் குறும்பாக.

''ஆம்.''

''வேண்டாம். நன்றியைத் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள்.''

''ஏன்?''

''விலாசத்தைப் படித்துவிட்டேன்.''

''ஏன் படித்தாய்?''

''கண்ணிருந்ததால்.''

''கண்ணில் காண்பதையெல்லாம் பார்த்துத்தான் ஆக வேண்டுமா?''

''கண்ணின் வேலை அது. ஆனால் நான் பார்த்ததைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.''

இதைக் கேட்ட இதயசந்திரன் அவளை வியப்புடன் நோக்கினான். பரம ரகசியமாக இருக்கவேண்டிய விலாசத்தைப் பார்த்துவிட்டு அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று கூறிய காதரனைப்பற்றி என்ன நினைப்பதென்று அவனுக்குப் புரியவில்லை. ''நீ பார்த்ததில் என்ன விசேஷம்?'' என்று வினவினான் அவன்.

''உங்களுக்கு லாபமுண்டு'' என்றாள் காதரைன்.

''என்ன லாபம்?''

''உங்கள் காதலி தற்சமயம் தங்கியிருக்கும் விலாசம் எனக்குத் தெரியும்!''

''என் காதலியா?''

''ஆம். பானுதேவி, ஷாஹூவின் மருமகள்.''

''அவள் என் காதலியென்று யார் சொன்னது உனக்கு?''

''உபதளபதி.''

''என்ன!''

''ஆம். உங்கள் இரண்டாவது காதலி'' என்றாள் காதரைன்.

''என் காதல் கதையில் உனக்கு ரொம்ப அக்கறை போலிருக்கிறது?'' என்று இகழ்ச்சியுடன் வினவினான் இதயசந்திரன்.

''ஆம்'' என்று திட்டமாகக் கூறினாள் அவள்.

''என்ன அக்கறை உனக்கு?'' என்று கேட்டான் சினத்துடன் தளபதி.

''இருக்கவேண்டிய அக்கறை'' என்று குறிப்பிட்டாள் காதரைன்.

இதயசந்திரன் கோபம் எல்லை கடந்தது. ''என்னைப் பற்றி அக்கறை காட்ட, என் காதல் விவகாரங்களை அலச நீ யார்?'' என்று சீறினான் தமிழன்.

அவள் சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னாள். ''உங்கள் மூன்றாவது காதலி'' என்ற சொற்கள் புன்னகை பூத்த உதடுகளிலிருந்து மிக இன்பமாக உதிர்ந்தன.

# அத்தியாயம் 15

# பருவத்தின் கூச்சல்

**அவள்** உரைத்த சொற்களால் உணர்ச்சிகள் உறைய அசைவற்றுப் பல விநாடிகள் நின்றுவிட்டான் இதய சந்திரன். கல்லாய்ச் சமைந்துவிட்ட அந்தக் கப்பல் தலைவனை நோக்கி, களுக்கென்று ஒருமுறை நகைக்கவும் செய்தாள் அந்த அல்லி மலர். அவள் நகைப்பு அவனுக்கு நாராசமாயிருந்ததால் அவன் ஒருமுறை முகத்தைச் சுளித்தான். ஆனால் நகைத்தது அவள் மட்டுமல்லவே! பேரிரைச்சலுடன் எழுந்த அலைகள் ஓவென்று நகைத்தன. கதவின் மூலம் ஊடுருவி வந்த ஊதல் காற்றும் ஊவென்று ஊதிப் பரிகசித்தது அவனை. அறை விளக்குகூடச் சுடர் முகத்தைக் காற்றில் குலுக்கி நகைத்தது. உலகமே தன்னைப் பார்த்து நகைப்பதுபோன்ற நினைப்பால் பிரமை பிடித்து நின்ற இதயசந்திரன் ஆத்திரத்திற்கு இலக்காகித் திடீரெனக் கூவினான்: ''உனக்கென்ன பைத்தியமா?'' என்று.

அந்தக் கூச்சல் அவள் மந்தகாசத்தை அதிகமாக முகத்தில் படரவிட்டன. அவள் கண்கள் சிரித்தன அவனை உற்று நோக்கி. உதடுகள் உரைத்தன, ''யாருக்கும் பைத்தியமில்லை?'' என்று.

இதயசந்திரன் குனிந்து கட்டிலின் பக்கத்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு சுட்டுவிடுபவன் போல் அவளைப் பார்த்தான். ''உன்னைத் தவிர வேறு யாருக்கும் பைத்தியமில்லை'' என்று சீறினான்.

''தவறு காதலரே தவறு'' என்றாள் காதரைன் சிரித்து.

''என்னை அப்படி அழைக்காதே இன்னொரு முறை'' என்று கூடச்சுடச் சொன்னான் இதயசந்திரன்.



''எப்படி?''

''இப்பொழுது அழைத்தாயே அப்படி.''

''எப்படி அழைத்தேன்?''

''அதுதான்... காதலரே...'' என்று அந்த வார்த்தையைச் சொல்லமுடியாமல் தத்தளித்தான் தமிழக வீரன்.

காதரைனின் நீலவிழிகள் அவனை மீண்டும் நிமிர்ந்து நோக்கின. ''ஒரு சொல்லைச் சொல்ல இத்தனை பயமா?'' என்று வினவவும் செய்தாள் விஷமப் புன்முறுவல் காட்டி.

''பயமொன்றுமில்லை'' என்ற இதயசந்திரன் குரலில் தைரியமில்லை, வெறும் வியப்பு இருந்தது.

''பயமிருக்கிறது. அதற்குக் காரணமிருக்கிறது'' என்றாள் அவள்.

''என்ன காரணம்?''

''நான் உங்களைக் காதலிக்கும் அளவுக்கு நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்கள்.''

''இல்லை, இல்லை, பொய்.''

''மனத்தைத் தொட்டுப் பாருங்கள். காதல் பலவித பயங்களை உற்பத்தி செய்கிறது. பல பொய்களைச் சிருஷ்டிக்கிறது. ஓரளவு ஆண்களை உளறவும் வைக்கிறது'' என்ற காதரைன் மேலும் சொன்னாள், ''தாங்கள் என்னைக் காதலிப்பதில் தவறில்லை. காதலிப்பது இயற்கை. அது இல்லையென்றால்தான் வியப்படைவேன். இயற்கைக்கு விரோதமானவர் நீங்கள் என்று நினைப்பேன். இது ஒருவித பைத்தியம். ஆனால் இன்பமான பைத்தியம்.''

''பைத்தியமென்பது புரிகிறது'' என்றான் இதய சந்திரன் அவளைக் குத்திக் காட்டும் பாவனையில்.

''மெள்ள ஒரு விஷயம் ஒப்புக் கொண்டீர்களா? இன்னொரு விஷயத்தையும் கவனியுங்கள். பைத்தியம் நாமிருவர் மட்டுமல்ல. அந்த மஞ்சு, அந்தக் கொள்ளைக் கார கனோஜி, எல்லோருமே பைத்தியங்கள்'' என்றாள்.

இதயசந்திரன் அவளைக் கூர்ந்து நோக்கினான். ''உலகத்தில் உன்னைத் தவிர எல்லோருமே பைத்தியக் காரர்கள் போலிருக்கிறது?'' என்று வினவினான் எரிச்சல் குறைந்த, குழப்பம் மிகுந்த குரலில்.

அவள் தனது விழிகளை அவனது விழிகளுடன் கலக்க விட்டாள். பிறகு மெல்லச் சொன்னாள்: ''தளபதி! நான் மட்டும் மஞ்சுவாயிருந்து என்னைப் போன்ற ஒரு பெண் உங்களுடன் தனித்துக் கப்பலில் செல்வதானால் அதை நான் ஒருநாளும் ஒப்பமாட்டேன். நிலத்தில், சமுதாயத்தின் பல கட்டுப்பாடுகளுக்கிடையில், ஏராளமான மனிதர் களுக்கிடையிலேயே ஆணையும் பெண்ணையும் நெருங்க விடாதிருப்பது கஷ்டமாயிருக்கிறது. சில மாலுமிகளுள்ள கப்பலில் இஷ்டப்படி எதையும் செய்ய அதிகாரம் படைத்த தலைவனுடன் வயதுப் பெண் ஒருத்தியைத் துணிந்து அனுப்பலாமா? அதற்கு ஒப்புக்கொண்ட மஞ்சு பைத்தியமல்லவா? தன் மகளின் காதலன் கையில் இன்னொரு பெண்ணைத் தனித்து அழைத்துச் செல்ல உத்தரவிட்ட ஆங்கரேயைப் பைத்தியமென்று சொல்ல லாம். இல்லை போக்கிரியென்று சொல்லலாம். எதைச் சொல்ல விரும்புகிறீர்கள்?''

இதயசந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. நிற்க முடியாமல் அவன் கட்டிலின் முகப்பில் உட்கார்ந்தான். படுத்திருந்த அந்தப் பைங்கிளி



சற்றே நகர்த்து இடம்விட்டு, ''நன்றாக நகர்ந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்று கூறவும் செய்தாள்.

இதயசந்திரன் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவனைப் போல நகர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவள் வீசிய மோகனாஸ்திரங்கள் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவன் எண்ணங்களைக் குழப்பின. அவனை ஈர்த்தன அவள் பக்கம். இந்த எண்ணங்களுடன் உள்ளூர ஓடிக் கொண்டிருந்த நல்லுணர்ச்சியும் போரிட்டது. ஒரு கையை மடியில் போட்டுக்கொண்டு ஒரு கையைப் பஞ்சணையில் ஊன்றி அவன் உட்கார்ந்திருந்ததால் அவன் கையை நாடிய அவள் கை அவன் கைமீது பதிந்தது. அவன் உடலுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு கதவுக்கு வெளியே நோக்கிக்கொண்டிருந்த அவன், ''இது முறையல்ல'' என்று மெல்லச் சொன்னான்.

''எது?'' என்று மெல்ல அவளும் வினவினாள்.

''நாமிப்படி பழகுவது.''

''ஏன்?''

''நீ விதவை.''

''ஆம்.''

''விதவையாகி முழுதாக ஒரு மாதங்கூட ஆகவில்லை.''

''ஆம்.''

''அதற்குள்... இது...'' என்று குழறினான் இதய சந்திரன்.

அவள் ''வீரரே'' என்று அழைத்தாள்.

''சொல்.''

''உணர்ச்சிகளுக்கு ஒரு சுபாவம் உண்டு.''

''என்ன அது?''

‘‘நமது சுபாவத்தை அழித்துவிடுவது.’’

‘‘அழிக்க முடியுமா?’’

‘‘முடியும். சுபாவத்தை அழிக்க முடியும், காலத்தை மறக்க முடியும், விளைவுகளுக்கு நமது கண்களை மூடிவிட முடியும்.’’

‘‘அப்படியா!’’

‘‘ஆம். காதலுக்குக் காலமில்லை. புது விதவையா பழம் விதவையா என்ற கேள்வியில்லை. கேள்வியெல்லாம் பருவம் சரியானதுதானா என்பதுதான்’’ என்று தர்க்க ரீதியாகப் பேசினாள் காதரைன்.

இதயசந்திரன் அவள் தர்க்கத்தை நினைத்து வியந்தான். மனிதன் எந்த அநியாயத்தையும் தர்க்க ரீதியில் நியாயம்போல் காட்ட வல்லவன் என்பதை நினைத்ததால் பிரமிக்கவும் செய்தான். ‘‘அப்படியானால் மிஸ்டர் சௌளன்...’’ என்று அவளது இறந்த கணவனைப் பற்றிப் பேச்செடுத்துத் திரும்பி அவளைத் தைரியத்துடன் நோக்கினான்.

காதரைன் முகத்தில் எந்த மாறுதலுமில்லை. ‘‘அவர் அழிக்கப்பட்டார்’’ என்ற குரலில் மட்டும் சிறிது வேதனை தெரிந்தது.

அதை அவன் கவனித்ததால் சொன்னான், ‘‘போரில் அழிக்கப்பட்டார்!’’ என்று.

காதரைன் அவன் கை மீதிருந்த தனது கையை நன்றாக அழுத்தினாள். ‘‘நான் இப்பொழுது அனாதையென்பது புரிகிறதா உங்களுக்கு’’ என்றும் மெல்லக் கேட்டாள்.

அனுதாபம் பூர்ணமாக ஆட்கொண்டது இதயசந்திரன் இதயத்தை. ‘‘வருந்தாதே காதரைன். உனக்கு மீண்டும் நல்ல புருஷன் கிடைப்பான். உங்கள் ஜாதியில்



தான் பெண்கள் மறு விவாகம் புரியலாமே?’’ என்று கூறிய அவன் தனது கையை அவள் நெற்றியில் ஆறுதலாக வைத்தான்.

அவன் பக்கவாட்டிலிருந்த தனது இரு கைகளையும் எடுத்த காதரைன் அவன் கையை இரு கைகளாலும் சேர்த்துப் பிடித்து நெற்றியிலிருந்து இழுத்துக் கன்னத்தில் அழுத்திக் கொண்டாள். ‘‘இன்னொரு புருஷன் எனக்குக் கிடைப்பானென்கிறீர்களா?’’ என்று வினவினாள் உதடுகளை வெகு அழகாக அசைத்து.

‘‘நிச்சயமாகக் கிடைப்பான்’’ என்றான் இதயசந்திரன் அவள் துயரத்தை உடைக்க.

‘‘நிச்சயமாகவா?’’

‘‘ஆம்.’’

‘‘அவன் வீரனாயிருப்பானா?’’

‘‘இருப்பான்.’’

‘‘பெரும் கொள்கைகளுக்குப் போராடுவானா?’’

‘‘போராடுவான். ஏன் இதையெல்லாம் கேட்கிறாய்?’’

காதரைனின் நீலக்கண்கள் அவன் கண்களோடு கலந்தன, நிலைத்தன. செவ்விய உதடுகள் நீர் சொட்டும் கெம்பு போல் அசைந்தன, வேட்கையுடன் கூறவும் செய்தன, ‘‘அப்படியானால் கிடைத்துவிட்டான்’’ என்று. உதடுகள் இப்படிச் சொல்ல அவள் பட்டுகைகள் கன்னத்தில் அழுத்தியிருந்த அவன் கையை மெல்ல இழுத்துக் கழுத்துக்குக் கீழே இருத்திக் கொண்டன.

உணர்ச்சிகள் பயங்கரமாக அசைவதை உணர்ந்து கொண்டான் இதயசந்திரன். தவிர தனது சக்தி மெல்ல மெல்ல உணர்ச்சிகள் பக்கம் பாய்வதையும் புரிந்து கொண்டான். கழுத்துக்குக் கீழே இருந்த தனது கை மூலம் ஏதேதோ அலைகள் மின்சாரம் போல் உடலில் பரவிச்

செல்வதை அறிந்தான். இதனால் ஏற்பட்ட குழப்பத்துடன், ''கிடைத்துவிட்டானா!'' என்றான்.

''கிடைத்துவிட்டான், அவன் கை இதோ'' என்று கையை அழுத்தினாள் அவள்.

''நானா?''

''வேறு யார்?''

''நான் எப்படி?''

''இதற்கெல்லாம் காரணம் கிடையாதென்று முன்னமே சொன்னேனே?''

''சரி சரி.''

''இதோ பாருங்கள் என்னை.''

''ஊஹும்.''

''ஏன்?''

''பார்க்கச் சக்தியில்லை எனக்கு'' என்று கூறித் திணறினான் தமிழன்.

அவன் கையை விட்ட அவள் கைகள் அவன் முகத்தை மீண்டும் தன்னை நோக்கி நன்றாகத் திருப்பின. ''இப்படிப் பார்'' என்று மரியாதையைக் கைவிட்டு அழைத்தன அவள் உதடுகள்.

இதயசந்திரன் கண்கள் அவளை வெறித்து நோக்கின. அவள் குரலில் ஏதோ பெரும் சக்தியிருப்பதாகத் தோன்றியது அவனுக்கு. குரலை வெளிக்கொணர்ந்த உதடுகளின் அமுதச் சிவப்பு அவனை எங்கோ அழைத்துச் சென்றது. ''வேண்டாம்'' என்றான் அவன் மெதுவாக.

''ஏன் வேண்டாம்? என்ன பயம் உனக்கு? கேட் என்ன கசக்கிறாளா உனக்கு?'' என்று தழுதழுத்த அவள் குரல் அவன் காதில் சொர்க்க அலைபோல் நுழைந்தது.



''கேட், கேட்டீ, வேண்டாம். இது சரியல்ல...'' என்றான் அவன்.

''இதுதான் சரி. அந்த இரண்டு பேரைப் போல் என்னை நழுவவிட நான் பைத்தியமா?'' என்று அவள் இதழ்கள் மெல்லச் சொற்களை வெளியிட்டன. அவள் கையொன்று முகத்திலிருந்து இறங்கியது.

இன்னொரு கை அவன் கழுத்தைச் சுற்றி இழுத்தது.

அவள் முகத்திடமிருந்து தப்ப தன் முகத்தை அவள் பக்கத்தில் தலையணையில் புதைத்தான். அப்படிப் புதைத்ததால் வளைந்த அவன் உடல் அவள் உடல்மீது சிறிதும் படாமலிருந்தாலும் அதன் வாளிப்பை அவனால் பார்க்க முடிந்தது. அதனால் காமம் தலைக்கேறிய அவள் பெருமூச்சு விட்டாள். முகத்தைத் திருப்பி அவன் காதுக் கருகில் ''கதவு திறந்திருக்கிறது'' என்றாள் மெதுவாக.

இதயசந்திரன் வெகு வேகமாக நடந்து சென்று கதவைச் சாத்தித் தாழிட்டுத் திரும்பினான் கட்டிலுக்கு. திரும்பியவன் உட்காரவில்லை அதில். வெள்ளைக்காரியை உற்றுப் பார்த்துக் கொண்டே நீண்ட நேரம் நின்றான். பிறகு, ''இயற்கை உன்னை ஏன் இத்தனை அழகாகப் படைத்திருக்கிறது?'' என்று கேட்டான் முரட்டுத்தனமாக.

''உனக்காகத்தான்.''

''எனக்காகவா?''

''ஆம்.''

''எப்படித் தெரியும் உனக்கு?''

''இல்லையேல் முதலிருவரை நான் இழக்க மூன்றாம் முறையாக உன்னிடம் தள்ளுவானேன் என்னை?''

''வேதாந்தம் பேசுகிறாயா?''

‘‘ஏன் பேசக் கூடாது?’’

‘‘நமது நிலைக்கும் வேதாந்தத்துக்கும் என்ன சம்பந்தம்?’’

‘‘வேதாந்தம் சிருஷ்டி தத்துவம் ’’

‘‘அதனால்?’’

‘‘காதலும் சிருஷ்டியைப் பற்றியது. ஆகவே அதுவும் ஒரு வேதாந்தம்தான்.’’

இதயசந்திரன் அவள் பக்கத்தில் மீண்டும் உட்கார்ந்து அவள் உடல் குறுக்கே கையைப் போட்டுக் கொண்டான். ‘‘சென்னையில் ஒரு வெள்ளைக்காரர் எனக்குச் சொல்லி யிருக்கிறார்...’’ என்று கூறினான்.

‘‘என்ன சொல்லியிருக்கிறார்?’’

‘‘பிசாசும் வேதாந்தம் பேச முடியுமென்று.’’

‘‘நான் பிசாசு என்கிறாயா?’’

‘‘ஏதோ மோகினிப் பிசாசு என்று ஒன்று உண்டாம். அது அழகாயிருக்குமாமே. நான் பார்த்ததில்லை...இல்லை இல்லை... இப்பொழுதுதான் பார்க்கிறேன்.’’

அவள் கலகலவென நகைத்தாள். திடீரென வளைந்த அவள் தன்னிடம் அவனை இழுத்துக் கொண்டாள், ‘‘இதயசந்திரா! உனக்கு யார் இந்தப் பெயரை வைத்தார் கள்? பெண்களின் இதயங்களுக்குள் உன் நிலவு வெகு விரைவில் பாய்ந்து விடுகிறதே...’’ என்ற சொற்களைக் காதுக்கருகில் கூறினாள்.

அவள் சித்தத்தில் உணர்ச்சிகள் பேரிரைச்சலாக இரைந்தன. வெளியே அலைகள் இரைந்தன. பெருங்காற்று கூச்சலிட்டது. ‘‘அப்பா! என்ன இரைச்சல்! என்ன கூவல்!’’ என்று அவள் பற்களில் அழுந்திய உதடுகளிலிருந்து



சொற்கள் வெளிவந்தன. அவள் கைகள் நன்றாக வளைத்தன அவனை. உதடுகள் காதுக்கருகில் புதைந்தன. ‘‘கூவுவது காற்று மட்டுமல்ல வேறு கூச்சலும் கேட்கிறது’’ என்றாள் மிக இரகசியமாக.

‘‘என்ன அது?’’ என்று அவனும் ரகசியமாகக் கேட்டான்.

‘‘பருவத்தின் கூச்சல்’’ என்று அவள் உதடுகள் முணு முணுத்தன.

## அத்தியாயம் 16

# பூட்டு கதவை

பருவத்தின் கூச்சலென்று பஞ்சணையில் தன் கைகளில் சிக்கிக் கிடந்த பைங்கிளி முணுமுணுத்ததும் சுரணையை அறவேயிழந்து காம இச்சையின் வேகத்தில் நிலைகுலைய முற்பட்ட இதயசந்திரனை காதரைனின் கொச்சை மொழிகள் மீண்டும் மீண்டும் அதள பாதாளத்தில் இறக்கிக் கொண்டிருந்தன. ''பார் இதயசந்திரா! என்னை வதைக்க இதுதான் சமயமா? இச்சையின் வேகத்தில்கூட அச்சத்தை உதறவில்லையே நீ?'' அவள் காதில் முணுமுணுத்துக் கொண்டு, தன் கழுத்தில் புதைந்த அவன் உதடுகள் மேலும் கழுத்தில் புரளும்படி கழுத்தைத் திருப்பவும் செய்தாள் இருமுறை.

இதயசந்திரனின் கொள்கைக் கோட்டைகள் உடைந்து கொண்டிருந்தன. அவளைச் சுற்றி தவழ்ந்த கைகள் அவளை நெருக்கின. அவள் காமத் தீ அவனைத் தகித்து விடும் போலிருந்தது. அந்தத் தீயை அணையவிடாதிருக்க அவள் புரண்டும், நெகிழ்ந்தும் ஏதோ பேசியும், அனாவசியமாக ஊம் கொட்டியும் அந்த அக்கினிக்கு அவிஸைச் சொரிந்து கொண்டிருந்தாள். அக்னி வளர்ந்தது. அதில் அடியோடு தீய்ந்து போகும் சமயத்தில் அறைக் கதவு மீண்டும் தடதடவெனத் தட்டப்பட்டது. ''காப்டன்! காப்டன்!'' என்ற பர்னாண்டோவின் கூச்சலும், ''ஸாஹிப்! ஸாஹிப்!'' என்ற இப்ரஹிமின் இரைச்சலும் பலமாகக் கேட்டன. இருவர் கூச்சலைக் கேட்டதும் சற்றுச் சுரணையடைந்த இதயசந்திரன் ஏதோ பதில் சொல்ல வாய் திறந்தான். காதரைனின் காம வெறிக் கண்கள் அறைக் கதவை உஷ்ணத்துடன் நோக்கின. பிறகு அவனைத் தழுவிய கையொன்று அவன் உடலிலிருந்து பிரிந்து அவன் வாயைப் பொத்தின. ''இதயசந்திரா!



பேசாதே! கதவையும் திறவாதே?'' என்று அவன் காதில் முணுமுணுத்து அந்தக் காதில் உதடுகளைப் புதைத்து மேலும் ஏதோ கூறினாள்.

எழுத்ததகாத சொற்களைக் கூறினாள் காதரைன். அவை அவனை மீண்டும் மயக்கத்தில் ஆழ்த்தின. அவற்றைச் சொல்லிவிட்டு அவனைத் தன் நீலக் கண்களால் உற்று நோக்கி ''என்ன இப்படிப் பேசுகிறேனே என்று பார்க்கிறாயா! நாகரிகம் கடந்த நிலை இது. சொர்க்கத்தை அடைய முயலுகிறோம் தமிழா! அதில் சமுதாயப் பண்பாடுகள் அர்த்தமற்றவை. வா, அவர்கள் கூச்சல் கிடக்கட்டும்'' என்று கூறினாள். அமுதம் திரண்ட உதடுகளைச் சிறிது அசைக்கவும் செய்தாள், லேசாகச் சிரிக்கவும் செய்தாள். இந்தக் கணைகளிலிருந்து தப்பமுடியாமல் தத்தளித்த தளபதியை மூன்றாவது குரலொன்றும் வெளியிலிருந்து அழைத்தது. ''தளபதி! ஸார்கேலின் பெயரால் அழைக்கிறேன். உடனடியாகக் கதவைத் திறவுங்கள்'' என்ற ஹர்கோவிந்தின் குரல் பலமாகக் கேட்டது. கதவு மிகக் கடுமையாகத் தட்டவும் பட்டது.

ஸார்கேலின் பெயரால் அழைப்பு வந்ததும் காதரைனை உதறிப் பஞ்சணையில் தள்ளிவிட்டு எழுந்து தரையில் காலூன்றி நின்ற இதயசந்திரன் தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு கழன்று கிடந்த அங்கியை மீண்டும் அணிந்து கொண்டு கதவைத் திறந்தான். கதவு திறந்ததும் தடதடவென உள்ளே நுழைந்த அந்த மூன்று மாலுமிகளும் காதரைனை ஒருமுறை வெறுப்புடன் நோக்கினர். பிறகு தளபதியை நோக்கினர் ஒரு வினாடி. கடைசியாக ஹர்கோவிந்த் கேட்டான், ''தங்கள் அறைக்குப் போகலாமா?'' என்று.

இதயசந்திரன் மனநிலை விவரிக்க இயலாததாயிருந்தது. வேண்டுமென்றே கதவு இடித்துத் தன்னைக் கிளப்பிய அவர்கள் மீது சீற்றமிருந்ததா? அல்லது

சமயத்தில் தப்பினோமே, இன்னும் சில வினாடிகளில் தன் நன்னடத்தை பறந்திருக்குமே என்ற நினைப்பால் உள்ளே ஆசுவாசமும் அவர்களிடம் நன்றியுமிருந்ததா? காரணம் எதுவாயிருந்தாலும் பெரும் புயலிலிருந்து தப்பினோமே என்பதால் சாந்தியிருந்ததா? எதையுமே நிர்ணயிக்க முடியவில்லை அவனால். இருப்பினும் கோபத்தை மட்டும் காட்டிக் கேட்டான் தமிழன், ''இது யார் அறை?'' என்று.

''தளபதியின் அறைதான்'' என்றான் ஹர்கோவிந்த் மேலுக்குப் பணிவும் உண்மையில் துணிவும் நிரம்பிய குரலில்.

''நான் யார்?'' என்று மீண்டும் வினவினான் இதயசந்திரன்.

''இக் கப்பலின் தளபதி'' என்ற ஹர்கோவிந்தின் குரலில் திடமேயிருந்தது.

''அப்படியானால் இங்கு என்ன தடை?''

''மூன்றாவது நபர் முன்னிலையில் பேசக்கூடிய விஷயமல்ல அது'' என்றான் பர்னாண்டோ உரையாடலில் குறுக்கிட்டு.

இதயசந்திரன் கண்கள் உஷ்ணத்துடன் உறைந்தன. அந்த வெள்ளையனின் முகத்தில், ''மூன்றாவது நபர் யார் இங்கு?'' என்று சீற்றத்துடன் உதிர்த்தன சொற்களை.

''தவறு தலைவரே! ஐந்தாவது நபர் என்று சொல்லியிருக்க வேண்டும். நாங்கள் மூன்று பேர். நீங்கள் நான்காவது, கைதி ஐந்தாவது'' என்றான் பர்னாண்டோ.

''காதரைனைக் கைதி என்று சொல்ல யார் அனுமதித்தது உன்னை?'' என்றான் இதயசந்திரன்.

''போரில் பிடித்தோம். இவளுக்குப் பிரிட்டிஷாரிடம் முப்பதாயிரம் ரூபாய் ஈடு கேட்கப் போகிறோம். வேறென்ன பதவி இவளுக்கு?'' என்று கேட்டான் ஹர்கோவிந்த்.



'இவள்' என்ற சொல்லைக் ஹர்கோவிந்த் உச்சரித்தது பேரதிர்ச்சியைத் தந்தது தமிழனுக்கு. அதன் விளைவாக, ''ஹர்கோவிந்த்!'' என்ற சொல் மிகச் சீற்றத்துடன் வெளி வந்தது அவன் உதடுகளிலிருந்து.

தலைவன் கண்ணசைவுக்கே அதுவரை பயப்பட்டு வந்த ஹர்கோவிந்த் சிறிதும் அச்சமற்ற கண்களால் தலைவனை ஏறெடுத்து நோக்கினான். ''தலைவரே!'' என்ற பதிலும் சாதாரணமாக, திடமாக உதிர்ந்தது அவன் வாயிலிருந்தும்.

''இவள் பதவியை நிர்ணயம் செய்ய வேண்டியது நான்'' என்று கடுமையுடன் துவங்கிய தளபதியை இடைமறித்த ஹர்கோவிந்த், ''இல்லை'' என்றான் திடமாக.

''வேறு யார் நிர்ணயம் செய்யவேண்டியது?'' என்று கேட்டான் தமிழன்.

''ஸார்கேல். அவர் ஏற்கெனவே நிர்ணயம் செய்தாகி விட்டது'' என்றான் ஹர்கோவிந்த்.

''அதை நான் மாற்ற இஷ்டப்பட்டால்?''

''நாங்கள் எதிர்ப்போம்.''

''கலகம் செய்வீர்களா?''

''கலகம் செய்யமாட்டோம். எங்கள் உரிமையை நிலைநாட்டுவோம்.''

''என்ன உரிமை அது?''

''உங்கள் கேள்வி விசித்திரமாயிருக்கிறது தளபதி! எதிரி கப்பல் பிடிபடும்போது, அதிலுள்ள பொருள்களின் மதிப்பில் மாலுமிகளுக்கும் பங்கு கொடுக்கிறார் ஸார்கேல். பிடிபடும் கைதிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலும் ஒரு பங்கு மாலுமிகளுக்கு உண்டு. ஆகவே, அந்தக் கைதி வீணாகாமல், யாரையும் கைக்குள் போட்டுக்கொண்டு

தப்ப முயலாமல் போகவேண்டிய இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது மாலுமிகளின் கடமை.'' இதை ஹர்கோவிந்த் மளமளவெனச் சொன்னான். பர்னாண்டோ, இப்ரஹீம் இருவர் முகங்களிலும் ஹர்கோவிந்தை ஆதரிக்கும் பக்குவம் நடமாடியதை இதயசந்திரன் கண்கள் கண்டன.

மாலுமிகளின் எதிர்ப்பு இதயசந்திரன் இதயத்தைக் கடினமாக்கவே, ''தலைவனுக்கு எதிராக நடக்கும் மாலுமிகளுக்கு என்ன தண்டனை?'' என்று வினவினான்.

''மரண தண்டனை?'' என்றான் ஹர்கோவிந்த்.

''சிறை செய்யலாமல்லவா?''

''செய்யலாம்.''

''உங்களைச் சிறை செய்கிறேன்'' என்று கூறிய இதயசந்திரன், ''யாரங்கே?'' என்று இரைந்து கூவினான்.

அவன் கூவலைக் கேட்டு ஓடி வந்த இரண்டு மாலுமிகளை நோக்கி, ''இவர்களை கைது செய்து கீழ்த்தள அறையில் அடையுங்கள்'' என்று உத்தரவிட்டான். உத்தரவிடப்பட்ட மாலுமிகள் இருவரும் விழித்தார்கள். ஆனால் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. நிலைமை தன்னை மீறிப் போய்விட்டதை இதயசந்திரன் அறிந்தான். காதரைனையும் ஹர்கோவிந்தையும் மாறிமாறிப் பார்த்தான். பிறகு வெகுவேகமாக அந்த அறையிலிருந்து வெளியே சென்றான். அவன் வெளியே சென்றதும் காதரைனை நோக்கிய ஹர்கோவிந்த், ''காதரைன்! உயிருடன் நீ பம்பாய் போய்ச் சேர இஷ்டமிருந்தால் இனி தளபதியை அணுகாதே'' என்று எச்சரித்தான்.

காதரைன் அவனை நோக்கி நகைத்தாள் இரைந்து. ''ஹர்கோவிந்த்! நீ ஒரு முட்டாள். அலைகளுக்கு அணை போடப் பார்க்கிறாய்'' என்று கூறி மீண்டுமொருமுறை நகைத்தாள். ஹர்கோவிந்த் அவளை முறைத்துப் பார்த்து



விட்டு அறையிலிருந்து மற்ற இருவருடன் வெளியே வந்தான், வந்தவன் பர்னாண்டோவை விளித்து, ''இந்தக் கதவைப் பூட்டிவிடு, சாவியை என்னிடம் கொடு'' என்று கூறிவிட்டுச் சென்றான் இப்ரஹீம் பின்தொடர.

ஆனால் இந்த உத்தரவையோ அது நிறைவேற்றப் பட்டதையோ கவனிக்காமல் தனது அறை சென்றுவிட்ட இதயசந்திரன், பஞ்சணையில் நீண்ட நேரம் உட்கார்ந்து யோசிக்கலானான். ஹர்கோவிந்த் சொன்னதில் உண்மைகள் பல இருப்பது அவனுக்குத் திடமாகத் தெரிந்தன. கடற்போரில் பிடிபடும் கைதிகளைப் பாதுகாத்துக் கொண்டுபோய் பணஈடு கேட்பதுதான் கொள்ளைக்காரர் சம்பிரதாயம். அந்தப் பண ஈட்டில் ஒரு பகுதி, அந்தக் கைதிகளைப் பிடித்த கப்பல் மாலுமிகளுக்கும் உண்டு என்பதும் உண்மையே. அந்தச் சம்பிரதாயத்தின் காரணமாக, சென்ற இரண்டரை ஆண்டுகளில் தனக்கும் செல்வம் திரண்டிருப்பதை இதயசந்திரன் உணர்ந்திருந்ததால் கைதியைப் பற்றி ஹர்கோவிந்த் கூறியதில் தவறேதுமில்லையென்பதும் தெளிவாகத் தெரிந்தது அவனுக்கு. தன் அழைப்புக்கு ஓடி வந்த இரு மாலுமிகள் ஹர்கோவிந்த், பர்னாண்டோ, இப்ரஹீம் இவர்களைக் கைது செய்யாததும் விசித்திரமாயில்லை அவனுக்கு. ஆனால் ஒன்று மட்டும் விசித்திரமாயிருந்தது. சட்டம் எதுவாயிருந்தாலும் வழக்கம் எதுவாயிருந்தாலும், தனது உத்தரவுகளை மறு கேள்வியோ ஆட்சேபணையோ, சமாதானமோ இன்றிக் கேட்டுவந்த ஹர்கோவிந்த் தன்னை எதிர்க்க முற்பட்டது பெரும் விசித்திரமாயிருந்தது இதயசந்திரனுக்கு.

பல கடற்போர்களில் வெற்றியை ஜலதீபத்துக்கு வாங்கிக் கொடுத்ததாலும், பலமுறை ஹர்கோவிந்த் உயிரைத் தானே காப்பாற்றியதாலும், தனது அடியைக் கண்ணில் ஒற்றிக்கொள்ளும் ஹர்கோவிந்த், அன்று கேவலம் இந்த ஒரு கைதிக்காக அதுவும் முப்பதினாயிரம் ரூபாய்க்காக தன்னை எப்படி எதிர்க்கத் துணிவு கொண்

டான் என்பதை நினைத்து நினைத்து விடை காணாமல் தவித்தான். இந்தக் கைதியையும் முப்பதினாயிரம் ரூபாயையும் விட வேறு சீரிய காரணம் ஏதோ இருக்க வேண்டும். ஹர்கோவிந்தின் நடத்தைக்கு என்று முடிவில் தீர்மானித்தானானாலும் அந்தக் காரணம் என்ன என்பது மட்டும் புரியவில்லை அவனுக்கு. அது புரியாததால் தளபதி ஆடைகளையும், ஆயுதங்களையும், களைந்துவிட்டுப் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டும் சிந்தனைக் குதிரையை ஓடவிட்டுக் கொண்டும் அன்றிரவைக் கழித்தான்.

மறுநாள் பொழுது விடிந்து அறையைவிட்டு வெளியே வந்தபோது கப்பல் தளத்தில் வழக்கப்படி அலுவல்கள் நடந்து கொண்டிருந்தன. மாலுமிகள் அவனைக் கண்டதும் வழக்கப்படி தலைதாழ்த்தி வணங்கினார்கள். பர்னாண்டோவும், இப்ரஹீமும்கூட முந்திய நாளிரவில் ஏதோ சம்பவம் நடந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் மட்டுமென்ன, காதரைனும் சர்வ சாதாரணமாகவே நடந்துகொண்டாள். அறையைவிட்டு வெளியே வந்ததும் தளத்தின் ஓரத்திற்குச் சென்று அலைகளைக் கவனித்தாள். பிறகு இப்ரஹீமை அழைத்து, குளிக்க வெந்நீர் கொண்டுவரக் கட்டளையிட்டாள். பழையபடியே அனைவரிடமும் பல பணிவிடைகளை வாங்கிக் கொண்டாள். இதயசந்திரனிடமும் சர்வசகஜமாக நடந்து கொண்டாள். பர்னாண்டோ, இப்ரஹீம் இவர்கள் எதிரில், ''தளபதி! இரவு நன்றாகத் தூங்கினீர்களா?'' என்று விசாரிக்கவும் செய்தாள்.

இதயசந்திரன் முகத்தில் வியப்புக் குறி விரிந்தது. அவள் சகஜபாவம் அவனை அசரவைத்தது. ''உம்... தூங்கினேன்'' என்றான் இதயசந்திரன் தடுமாற்றத்துடன்.

''அதை இவர்கள் எதிர்க்கவில்லையா?'' என்று வினவி பர்னாண்டோவையும் இப்ரஹீமையும் சுட்டிக் காட்டி நகைக்கவும் செய்தாள்.



''எதைக் கேட்கிறாய்?''

''நீங்கள் தூங்குவதை இவர்கள் எதிர்க்கவில்லையா என்று கேட்டேன்'' என்று கூறிவிட்டு மிக ஒய்யாரமாக நடந்து சென்றாள் அறை நோக்கி.

தனது சுதந்திரம் பறி போய்விட்டதைக் காதரைன் குறிக்கிறாளென்பதை அவன் நன்றாக உணர்ந்து கொண்டிருந்தான். ஆனால் ஏதும் செய்யும் நிலையில் இல்லாததால் கலக்கமடைந்த உள்ளத்துடன் பொழுதைக் கழித்தான்.

அன்று மாலை நேரம் மிக மயக்கம் தருவதாயிருந்தது. பட்சி ஜாலங்கள் அருகே பறந்து சென்றதால் கரையோரத்தில் கலம் செல்வது புரிந்தது இதயசந்திரனுக்கு. அப்பட்சிகளின் அழகு அவனது மனத்தைக் கொள்ளை கொண்டதால் கப்பலின் தீபமுகத்தில் சாய்ந்தவண்ணம் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த இதயசந்திரனை நாடி வெள்ளைப் பறவையொன்றும் வந்தது. அதன் கையொன்று அவன் கையுடன் பிணைந்தது. அண்ணாந்திருந்த தலை குனிந்தது. வெள்ளை உடையுடன் இருந்த காதரைனின் மோகன உருவம் அப்படியே அவன் மனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தது. ''இடையை ஒரு கையால் வளைத்து அணைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் காதரைன் அவனிடம்.

''எல்லோர் எதிரிலுமா?'' என்று அவன் வினவினான்.

''ஆம்.''

''எதற்கு?''

''உங்கள் மாலுமிகளுக்குப் பாடம் கற்பிக்க.''

அவள் சொற்படி அவள் இடையை இடது கையால் அணைத்தான் இதயசந்திரன்.

அந்த இருவர் இணைந்து நின்ற காட்சியை பர்னாண்டோ, இப்ரஹீம் இருவரும் பார்த்தாலும் அதை

அவர்கள் லட்சியம் செய்யவில்லை. ஹர்கோவிந்தும் கவலைப்படவில்லை.

இதையெல்லாம் ஓரக் கண்ணால் பார்த்த காதரைன் கூறினாள், ''உங்கள் எதிரிகள் அடங்கிவிட்டார்கள்'' என்று.

ஹர்கோவிந்த், பர்னாண்டோ, இப்ராஹீம் இவர்கள் போக்கை இதயசந்திரனும் கவனித்தாலும் அதைப்பற்றிப் பதிலேதும் சொல்லவில்லை.

''இன்றிரவு வருகிறீர்களா?'' என்று கேட்டாள் காதரைன்.

அவன் பதிலேதும் சொல்லாவிட்டாலும் அவன் வருவானென்று அவள் உணர்ந்திருந்தாள். ஆகவே, சிறிது நேரம் கழித்து அவனிடமிருந்து பிரிந்து சென்றாள்.

இரவும் முதிர்ந்து, உணவை முடித்துக் கொண்ட இதயசந்திரன் ஹர்கோவிந்தை வரவழைத்து, ''ஹர்கோவிந்த், நான் படுக்கப் போகிறேன். என் கதவை வெளியில் பூட்டி விடு'' என்று உத்தரவிட்டான்.

ஹர்கோவிந்த் நிதானமாகப் பதில் கூறினான்: ''தேவையில்லை தலைவரே'' என்று.

''ஏன்?'' என்று வினவினான் தளபதி.

''அவள் அறைக் கதவைப் பூட்டிவிட்டேன். சாவி என்னிடமிருக்கிறது'' என்று கூறிய ஹர்கோவ்ந்த் தளபதியைத் தலைதாழ்த்தி வணங்கினான்.

அத்தியாயம் 17

# உடைந்த பூட்டு, உடைந்த உள்ளங்கள்

ஹர்கோவிந்தின் பதிலில் நிதானமிருந்தது, பணிவிருந்தது, அபரிமிதமான உறுதியுமிருந்தது. காதரைனின் அறையைப் பூட்டி விட்டதாகச் சொன்ன அவன் குரலில் துணிவும் அதிகமிருந்ததைக் கவனித்த இதயசந்திரன் அவன் போக்கை நினைத்துப் பெரிதும் வியந்தான். கப்பலில் தலைவன் எண்ணத்துக்கு எதிராகச் செய்யப்படும் எந்தச் செய்கையையும் கட்டளைக்கு எதிராக நடக்கும் ஒவ்வொரு சம்பவமும் துரோகமெனக் கருதப்படுமென்பதையும் அதற்குத் தண்டனை மரண தண்டனையே என்பதையும் உணர்ந்திருந்த அந்தத் தமிழக வீரன் வியப்பும் கவலையும் நிரம்பிய விழிகளை எதிரே நின்ற ஹர்கோவிந்தின்மீது படரவிட்டான். பிறகு மெல்லக் கேட்டான், ''ஹர்கோவிந்த்! உன் செயல்களின் விளைவு தெரியுமல்லவா உனக்கு?'' என்று.

''தெரியும் தளபதி!'' ஹர்கோவிந்தின் பதில் எந்தச் சலனமுமின்றி உதிர்ந்தது அவன் வாயிலிருந்து.

இதயசந்திரன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்றான். ''நாம் கொலாபாவை அடைய எத்தனை நாட்கள் இருக்கின்றன?'' என்றும் வினவினான்.

''காற்று இப்படியே அனுகூலமாயிருந்தால், நான்கு நாட்கள், சற்று மாறினால் ஐந்து நாட்கள்'' என்று விடையளித்தான் ஹர்கோவிந்த்.

''காதரைனை இப்படியே ஐந்து நாட்களும் பூட்டி வைத்திருக்கப் போகின்றாயா?''

''இல்லை. இரவில் மட்டும் பூட்டி வைப்பேன்.''

''ஏன் பகலில் அவளை நான் அணுக மாட்டேனா?''

''அணுகலாம். ஆனால் எங்கள் கண்காணிப்புப் பகலில் அதிகமிருக்கும். இரவில் அவ்வளவிருப்பது சாத்திய மல்ல.''

''கொலாபா சென்றதும் என்ன செய்ய உத்தேசம்?''

''அவளுக்கு ஈட்டுப் பணம் வந்து அவள் கவர்னரிடம் போய்ச் சேரும் வரையில் பாதுகாப்பதாக உத்தேசம்!''

''என்னிடமிருந்து?''

''ஆம்.''

''என் ஒழுக்க முறைகளை நிர்ணயிக்க உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?''

''யாரும் கொடுக்கவில்லை.''

''நீயாக அந்தப் பணியை ஏற்றுக் கொண்டாயா?''

''ஆம்.''

ஹர்கோவிந்தின் பதிலில் எந்தவிதச் சந்தேகமு மில்லை. எப்படியும் காதரைனிடம் தன்னை அணுக விடுவதில்லை என்று உறுதி கொண்டு விட்டானென் பதைப் புரிந்து கொண்டான் இதயசந்திரன். காதரைன் சம்பந்தப்பட்ட வரையில் அவளுக்கிருந்த சுதந்திரந்தான் தனக்குமுண்டு என்று தீர்மானித்துக் கொண்ட தமிழன் மேலும் இரண்டொரு சந்தேகங்களைக் கேட்டான்: ''ஹர்கோவிந்த்! ஜலதீபத்தை எதிரிக் கப்பல்கள் ஓரிரண்டு தாக்கினால் அதை யார் தலைமை வகித்து நடத்துவது?'' என்று முதல் கேள்வியைத் தொடுத்தான்.

ஹர்கோவிந்த் முதன்முதலாகச் சிறிது சங்கடத்திற்குள் ளானான். இதயசந்திரன் போக்கு அவனுக்கு மிக நன்றாகப் புரிந்திருக்கிறது. தன்னைப் பூரண குற்றவாளி யாக்க எந்தப் பதில்களை அடையவேண்டுமோ அத்தனை யும், அடையத் தமிழன் தீர்மானித்துவிட்டதை உணர்ந்து



கொண்டதால் சிறிது சங்கடப்பட்டாலும் பிறகு சமாளித்துக் கொண்டு, ''தாங்கள்தான், தளபதி தாங்கள் தானே?'' என்று கூறினான்.

''என் தளபதிப் பதவி நேற்றிரவோடு போய்விட்டது'' என்று திட்டமாக அறிவித்தான் தமிழன்.

''கப்பல் விஷயத்தில் நாங்கள் தங்கள் சொல்லைத் தட்டவில்லையே!'' என்று சுட்டிக் காட்டினான் ஹர்கோவிந்த்.

''என்னிடம் அலுவல் புரிய விரும்பும் மாலுமிகள் எதற்கு என்னிடம் பணியலாம், எதற்கு எதிர்க்கலாம் என்று தீர்மானிப்பதை நான் விரும்பவில்லை. ஒன்று பணிவு பூரணமாயிருக்கவேண்டும் அல்லது அடியோடு இருக்கக் கூடாது. கப்பலிலுள்ள கைதிகளை எப்படி நடத்தவேண்டும், எப்படி நடத்தக்கூடாது என்பதற்கு இலக்கணம் வகுக்கும் மாலுமிகள் எனக்குப் பயனில்லை. ஆகவே நீயோ அல்லது பர்னாண்டோவோ அல்லது இப்ரஹீமோ இந்தத் தளபதிப் பதவியை ஏற்றுக்கொள்ளுங் கள்...'' என்றான் இதயசந்திரன் சர்வ சாதாரணமாக.

ஹர்கோவிந்தின் சங்கடம் சற்று அதிகப்பட்டது. ''அப்படியானால் நீங்கள்...'' என்று தடுமாறினான்.

''ஒரு கைதி'' என்று கூறிய இதயசந்திரன் தன் மஞ்சத் தின் ஒரு கோடியைச் சுட்டிக் காட்டி, ''அதோ, என் வாள், கைத்துப்பாக்கிகள், எடுத்துக்கொள்'' என்று திட்டமாகச் சொன்னான்.

ஹர்கோவிந்த் சிலைபோல் நின்றான். அவன் இதழ்கள் வெறுப்புடன் மடிந்து உட்புறம் பற்களில் சிக்கி நின்றன. ''தளபதி!'' என்று அவன் அழைத்த குரலில் மெல்ல பயமும் இருந்தது.

''என்ன ஹர்கோவிந்த்?'' என்று வினவினான் தளபதி.

‘‘இது நியாயமல்ல...’’ தழுதழுத்த குரலில் விண்ணப்பித்துக் கொண்டான் ஹர்கோவிந்த். அவன் முகத்தைப் போலவே குரலிலும் திகில் இருந்தது.

‘‘எது?’’

‘‘ஒரு பெண்ணுக்காகக் கப்பலைத் தியாகம் செய்வது.’’

‘‘கப்பலைத் தியாகம் செய்யவில்லையே!’’

‘‘வேறென்ன செய்கிறீர்கள்?’’

‘‘என் பதவியைக் கைப்பற்றியவர்களிடம் கப்பலை ஒப்படைக்கிறேன்.’’

‘‘உங்கள் பதவியை யாரும் கைப்பற்றவில்லை.’’

‘‘ஆம் ஆம். அதன் அதிகாரத்தை மட்டும் கைப்பற்றியிருக்கிறாய்’’ என்ற இதயசந்திரனின் இதழ்களில் இகழ்ச்சி மண்டியது.

ஹர்கோவிந்த் சில வினாடிகள் தளபதி எதிரில் தலை கவிழ்ந்து நின்றான். பிறகு மெல்லச் சொன்னான்: ‘‘தளபதி உங்களுக்கு நன்றாகத் தெரியும், எனக்கோ பர்னாண்டோவுக்கோ இப்ரஹீமுக்கோ கப்பலைத் தலைமை வகித்து நடத்தத் தெரியாதென்பது. நல்ல மாலுமிகள் வேறு, நல்ல தளபதிகள் வேறு. இது நீங்கள் அறியாததல்ல’’ என்று.

இதயசந்திரன் கண்கள் அவனை அனுதாபத்துடன் நோக்கின. பிறகு அவன் உதடுகள் மெல்லத் திறந்து, ‘‘ஹர்கோவிந்த்! நீ ஸார்கேலுடன் கடற்பயணம் செய்திருக்கிறாயல்லவா?’’ என்று வினவினான்.

குழப்பம் நிரம்பிய கண்களை இதயசந்திரனை நோக்கி உயர்த்தினான் ஹர்கோவிந்த். இந்தக் கேள்வியை எதற்காகக் கேட்கிறார் தளபதி என்பது புரியாததால் குழப்பத்துடனேயே பதில் சொன்னான், ‘‘இரண்டு ஆண்டுகள் பயணம் செய்திருக்கிறேன்’’ என்று.



‘‘அந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனைக் கப்பல்களை ஸார்கேல் பிடித்திருப்பார்?’’ என்று மீண்டும் கேட்டான் தமிழன்.

‘‘பல கப்பல்களைப் பிடித்திருப்பார்.’’

‘‘அந்தக் கப்பலில் யாராவது...’’

‘‘பலபேர் இருந்திருக்கிறார்கள் பிடித்திருக்கிறோம்.’’

‘‘அவர்களையெல்லாம் ஸார்கேல்...?’’ என்று கேட்டு அரைகுறையாக வாசகத்தை நிறுத்தினான் தமிழன்.

ஹர்கோவிந்த், ‘‘பலரை அனுபவித்திருக்கிறார்’’ என்று முணுமுணுத்தான்.

‘‘உங்கள் கடற்படை விதிகள் விசித்திரமாயிருக்கின்றன. ஹர்கோவிந்த் ஸார்கேலுக்கு ஒரு சட்டம், மற்றத் தளபதிகளுக்கு ஒரு சட்டமா?’’ என்று கேட்ட இதயசந்திரன், ‘‘ஹர்கோவிந்த்! உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?’’ என்றும் வினவினான்.

ஹர்கோவிந்தின் நிலை பரிதாபமாயிருந்தது. ‘‘என்ன விஷயம் தளபதி?’’ என்று வினவினான்.

‘‘ஸார்கேல் எனக்குச் சொல்லித் தந்திருக்கிறார், கிடைக்கும்போது பெண்களை அனுபவிக்கும்படி’’ என்று கூறிய இதயசந்திரன் குரலில் வெறுப்பு மிதமிஞ்சி ஒலித்தது. பண்பாட்டின் சிகரமான அவனுக்கு ஸார்கேலின் உபதேசங்களே பிடிக்கவில்லை. அவர் இல்லாத சமயத்தில் அவர் சொன்ன வார்த்தைகளைச் சொல்வதும் வேப்பங்காயாயிருந்தது அவனுக்கு.

குரலிலிருந்த வெறுப்பைக் கவனிக்கத் தவறவில்லை ஹர்கோவிந்த். பதிலும் ஏதும் சொல்லவில்லை அவன். சில வினாடிகள் யோசித்துவிட்டு விர்ரென்று வெளியே சென்று விட்டான். இதயசந்திரனும் தனது அறையை விட்டு வெளியே தளத்தில் நடந்தான். ஏதோ சிந்தித்த

வண்ணம் கப்பலை இருமுறை சுற்றி வந்தான். பற்பல எண்ணங்கள் சித்தத்தில் வலம் வந்தன. தஞ்சையை நினைத்துக் கொண்டான் கடைசியில், 'தமிழ்நாடு எத்தனை அமைதியுள்ளது! அதை விட்டுவிட்டு இங்கு எதற்காக வந்தேன்?' என்று தன்னைத்தானே வினவிக் கொண்டான். வந்ததற்காகத் தன்னை வெறுத்தும் கொண்டான். 'வந்துதான் என்ன சாதித்தேன்? அந்த முக வெட்டுக்காரனை அஞ்சன்வேல் கோட்டையில் பார்த்தேன். அவனைப் பிடிக்க முடியவில்லை. அவனுடன் பேசவும் முடியவில்லை. மகாராஷ்டிர வாரிசையும் பிடிக்கவில்லை. பிடித்ததெல்லாம் பெண்களைத்தான். முதலில் பானுதேவி, பிறகு மஞ்சு. இப்பொழுது இந்த வெள்ளைக்காரி! அப்பா, இவர்கள் என்னைப் படுத்தியபாடு என்ன? படுத்தும் பாடு என்று சொல்லலாம். யாரை மறக்க முடிகிறது இவர்களில்?' என்று நினைத்துப் பெருமூச்செறிந்தான். இப்படி எண்ணி எண்ணிப் பெருமூச்சுவிட்டு, சித்தம் பலபடி அலையக் கப்பலைச் சுற்றிச் சுற்றி, கடைசியில் அறைக்கு வந்து பஞ்சணையில் விழுந்தான்.

மாலையில் ஏற்றியிருந்த விளக்கு மண்ணெண்ணெய் இல்லாததால் அணைந்திருந்ததால் அறையில் இருள் மண்டிக் கிடந்தது. இருட்டே அவன் மனக் கிளர்ச்சிக்கு மருந்தாயிருந்ததால் படுக்கையில் அவன் சட்டையைக் கழற்றி எறிந்து தானும் விழுந்தான். அப்பொழுதும் காதரைனின் மோகன உருவம் அவன் எண்ணத்தைவிட்டு அகலவில்லை. அவள் அங்கு அப்பொழுதும் படுத்திருப்பது போலவும் வழவழத்த அவள் கைகள் தனது கழுத்தைச் சுற்றி வளைப்பது போலும் அவள் உடல் தனது உடலுடன் பின்னி விளையாடுவது போலும் பிரமை தட்டிக் கிடந்தான் இதயசந்திரன். தான் எத்தனை பலவீனமுள்ளவன் என்பதை நிரூபிக்கவே காதரைன் தன்னை நாடி ஆன் கெட்சில் வந்ததாகத் தோன்றியது அவனுக்கு. "காதரைன்! கேட்டி! கேட்!" என்று உரக்கப்



பைத்தியம்போல் சொல்லிக் கொண்டான் அவன். அப்படி நினைத்துத் தடுமாறி நித்திரை வசப்பட்டான்.

அடுத்த இரண்டு நாள்கள் எந்தச் சம்பவமுமின்றி ஓடின. ஆனால் ஜலதீபம் பயணத்தைத் தொடங்கியபோது இருந்த சூழ்நிலை அதில் இரண்டு நாட்களாக இல்லை. தளபதி கப்பல்களைச் செலுத்துவதுபற்றி எந்த உத்தரவும் இடவில்லை. மாலுமிகள் கேட்ட கேள்விகளுக்கு ஏதும் பதில் சொல்லவும் இல்லை. பர்னாண்டோவும் இப்ராஹீமும் இதர மாலுமிகளும் ஹர்கோவிந்தின் உத்தரவைக் கேட்டு நடந்தார்கள். மாலுமிகளின் கூச்சலும் சிரிப்பும் மிகுந்து அமர்க்களமாகக் காட்சியளிக்கும் ஜலதீபத்தில் அந்த இரண்டு நாட்களிலும் விபரீத அமைதி குடிகொண்டிருந்தது. மாலுமிகள் முகத்தில் மகிழ்ச்சியுமில்லை உரையாடலில் உற்சாகமுமில்லை. தளபதி தன்னைச் சுற்றிப் பெரும் வேலியைப் போட்டுக் கொண்டான். முகம் கல்லாக, நடை அசட்டையாக, ஆயுதமில்லாத வெறும் ஆடையணிந்து கப்பலில் ஏதாவதொரு முறை உலாவினான்; மற்ற வேளைகளில் அறையிலேயே தங்கினான். இந்தப் போக்கு மாலுமிகளுக்குப் பெரும் வேதனையாயிருந்ததால், ஹர்கோவிந்திடம் அதைப் பற்றித் தெரியப்படுத்தினார்கள். மூன்றாம் நாளிரவில் மாலுமிகளின் அக்கூட்டம் கீழ்த் தளத்தில் துடுப்புத் துழாவும் அறையில் நடந்தது. "ஹர்கோவிந்த்! தளபதியின் போக்கு எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்றான் ஒரு மாலுமி.

"எனக்குந்தான் பிடிக்கவில்லை" என்றான் ஹர்கோவிந்த் துயரம் ததும்பிய குரலில்.

"நாம் ஜன்ஜீராவுக்கருகில் வந்து கொண்டிருக்கிறோம்" என்று சுட்டிக் காட்டினான் இன்னொரு மாலுமி.

"தெரியும் எனக்கு" என்று ஹர்கோவிந்த் உஷ்ணத்துடன் பதில் கூறினான்.

''ஸித்திகள் தாக்கினால் போரிடவும் கப்பலைக் காப்பாற்றவும் தெரியுமா உனக்கு?'' என்று கேட்டான் மற்றொரு மாலுமி.

''தெரியாது.'' திட்டமாக வந்தது ஹர்கோவிந்தின் பதில்.

''பின் எந்தத் தைரியத்தில் நீ தளபதிக்கு எதிராக அலுவல்களைப் புரிந்தாய்?'' என்று வினவினான் இன்னொரு மாலுமி.

ஹர்கோவிந்த் பதிலேதும் சொல்லவில்லை. இப்ரஹீமையும் பர்னாண்டோவையும் மாறி மாறிப் பார்த்தான். அவர்கள் முகங்களில் ஈயாடவில்லை. ஜன்ஜீராவின் கண்களில் ஜலதீபம் பட்டால் அதை நடத்த இதயசந்திரன் இல்லையேல் அதன் கதி அதோகதி என்பதை அவர்கள் எல்லோருமே உணர்ந்திருந்தார்கள். ஆகவே ஓரளவு அச்சத்தை அடைந்த ஹர்கோவிந்த் மெல்ல அதை மறைத்துக்கொண்டு கூறினான், ''ஜன்ஜீராவின் கண்களில் கப்பல் படாது, அதிலிருந்து விலகிச் செல்வோம்'' என்று.

''ஒருவேளை பட்டுவிட்டால்?'' என்று இன்னொரு மாலுமி கேட்டான் கூட்டத்தின் ஒரு மூலையிலிருந்து.

''ஹர்கோவிந்த் காப்பாற்றுவார்!'' என்று கூறினான் இன்னொருவன் எங்கிருந்தோ.

மாலுமிகள் நகைத்தார்கள். ''தளபதியற்ற மரக்கலம் திசைதிருப்பியில்லாத மரக்கலம் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா ஹர்கோவிந்த்?'' என்றொருவன் வினவினான்.

அதற்குப் பதிலேதும் சொல்லவில்லை ஹர்கோவிந்த். விடுவிடுவென்று இப்ரஹீமும் பர்னாண்டோவும் பின்தொடர மேல்தளம் சென்றான். அங்கு நடுக்கொடி மரத்தினடிக்கு வந்த மூவரும் மிக இரகசியமாகப் பெருமூச்செறிந்து பேசத்தொடங்கினர். பர்னாண்டோவே பெருமூச்செறிந்து ''இப்பொழுது என்ன செய்வது'' என்று



''தெரியவில்லை'' என்றான் ஹர்கோவிந்த்.

''இன்னொரு நாள் தாமதிக்கலாமா?'' என்று வினவினான் இப்ரஹீம்.

''தாமதித்தால் மாலுமிகள் புரட்சி செய்வார்கள்'' என்று சுட்டிக்காட்டினான் ஹர்கோவிந்த்.

''வேறு வழி!'' என்று வினவினான் பர்னாண்டோ.

''உண்மையைத் தளபதியிடம் கூறிவிடுவது?'' என்றான் ஹர்கோவிந்த்.

''உண்மையையா?'' என்றான் பர்னாண்டோ அச்சத்துடன்.

''ஆம்.''

''அதில் கஷ்டங்கள் பல இருக்கின்றன.''

''என்ன கஷ்டங்கள்?''

''நம்மைத் தூண்டியவர் யார் என்பதையும் சொல்ல வேண்டும்.''

''ஆம்.''

''சொல்லலாமா?''

''கூடாது. கூடாது'' என்றான் ஹர்கோவிந்த். அந்தக் 'கூடா'தில் இப்ரஹீமும் சேர்ந்து கொண்டான்.

''பின் என்ன செய்வது?'' என்று வினவினான் பர்னாண்டோ.

''அந்த வெள்ளைக்காரி அறைச் சாவியைத் தளபதியிடம் கொடுத்துவிடுவது...''

''பிறகு?''

''நம் செயலுக்கு மன்னிப்பு கேட்பது.''

''கிட்டத்தட்ட கைதி மாதிரி வைத்துவிட்டு மன்னிப்புக் கேட்டால் தளபதி மன்னிப்பாரா?'' இந்தக் கேள்வியை இப்ரஹீம் கேட்டான்.

தளபதி மன்னிக்கமாட்டான் என்பது அம் மூவருக்கும் தெரிந்தேயிருந்தது. இருப்பினும் கடைசியாக பர்னாண் டோவே யோசனை கூறினான். "நம்மை வேறொருவர் தூண்டியதாக ஏன் வெளிக்குக் காட்டவேண்டும்? தவறை நம்மீதே போட்டுக் கொள்வோம். ஆரம்பத்திலிருந்து அப்படித்தானே செய்து வருகிறோம்" என்றான் பர்னாண்டோ.

அதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அறிந்த ஹர்கோவிந்த் மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு தளபதியின் அறைக்குச் சென்றான். அறைக் கதவு திறந் திருந்தது. உள்ளே விளக்கு இல்லை. விளக்கை பர்னாண்டோ ஏற்றினான். பஞ்சணையில் தளபதி இல்லை. அறையிலிருந்து மூவரும் வேகமாக வெளிவந்து தளக்கோடிகளில் பார்த்தும் தளபதி அகப்படவில்லை. கடைசியாக காதரைன் இருந்த அறைக்கு வந்தனர். அந்த அறையின் பூட்டு உடைக்கப்பட்டு தாழ்ப்பாள் மரக்கதவி லிருந்து பெயர்க்கப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. கதவிலிருந்த பிகுவில் உட்புறம் தாளிடப்பட்டிருந்ததை அம்மூவரும் உணர்ந்தனர். கதவைத் தட்ட தீர்மானித்து ஹர்கோவிந்த் ஓர் அடி எடுத்து வைத்தான். அவனை மற்ற இருவரும் கையைப் பிடித்து நிறுத்தினர். கையை உதறிக் கொண்டு ஹர்கோவிந்த் கதவை அணுகி ஒரு விநாடி நின்றான். பிறகு உடைந்து தொங்கிய பூட்டில் தனது மடியிலிருந்து சாவியை எடுத்துப் பொருத்திவிட்டுக் கீழ்த்தளத்தை நோக்கி நடந்தான். சாவியுடன் பூட்டு ஆடிக்கொண்டிருந்தது. கப்பலும் ஜன்ஜீராவை அணுகிக் கொண்டிருந்தது. வெளியே பயங்கரச் சூழ்நிலை சிருஷ்டியாகிக் கொண்டிருந்தது. உள்ளே?

## அத்தியாயம் 18

# காதலும் மோதலும்

உடைந்து தொங்கிய பூட்டில் சாவியைப் பொருத்தி விட்டு உள்ளே நேர்ந்துவிட்ட விபரீதத்தை எண்ணிப் பார்க்கவும் விரும்பாதவனாய், உடைந்த உள்ளத்துடன் அங்கிருந்து அகன்றுவிட்ட ஹர்கோவிந்தின் நிலையிலேயே இருந்த இப்ரஹீமும், பர்னாண்டோவும் அவனுடன் செல்லாமல் அந்த அறை முன்பாகவே சில விநாடிகள் நின்றனர். பிறகு தளத்தில் தங்கள் அலுவல்களைப் பார்க்கச் சென்றனர். அப்படிப் போகும்போது இப்ரஹீம், "சுக்கானை வடமேற்கு நோக்கி நன்றாகத் திருப்பி விடுகிறேன். அப்பொழுதுதான் ஜலதீபம் ஜன்ஜீராவை விட்டு நன்கு விலகிச் செல்லும்" என்று கூறிக்கொண்டே சென்றான். ஜன்ஜீராவின் பெயரைக் கேட்டதுமே பர்னாண்டோ, "யார் உத்தரவின் மேல் சுக்கானைத் திருப்புகிறாய்?" என்று வினவினான்.

"என் உத்தரவின் மேல்" என்றான் இப்ரஹீம் வெறுப்புடன்.

"நீ என்ன கப்பல் தலைவனா உத்தரவிட?" என்று சீறினான் பர்னாண்டோ.

"இப்பொழுது நாம் எல்லோருமே தலைவர்கள். சுக்கானுக்கு நான் தலைவன். பீரங்கிகளுக்கு நீ தலைவன். துடுப்புக்களுக்கு ஹர்கோவிந்த் தலைவன். யார் யார் இந்தக் கப்பலில் என்ன வேலை செய்கிறார்களோ அந்தந்த வேலைக்கு அவர்கள் தலைவர்கள்" என்று விளக்கினான் இப்ரஹீம் எரிச்சலுடன்.

"நீ இப்பொழுது வடமேற்கில் ஜலதீபம் செல்லும்படி சுக்கானைத் திருப்பப் போகிறாய்?"

"ஆம்."

''அப்படியும் ஸித்தி பார்த்துவிட்டால்?''

''நீ பீரங்கியால் சுடு.''

''நான் பீரங்கியால் சுட அது போதுமா?''

''போதாது. மற்ற பீரங்கிகளை இயக்க மற்றவர்களுக்குக் கட்டளையிடு.''

''அவரவர் பீரங்கிகளுக்கு அவரவர்கள் தலைவர்களாகி விட்டால்?''

''சுட்டால் சுடட்டும். சுடாமற் போனால் போகட்டும்.''

இப்ராஹீம் இப்படிச் சொல்லிவிட்டுத் திசை திருப்புவதற்கான முயற்சிகளைச் செய்யலானான். அதே சமயத்தில் ஜன்ஜீராவின் முன்புற மலைப்பகுதி லேசாகக் கண்ணுக்குத் தெரிந்தது. அந்த மலைமீது அணையாமல் எரிந்து கொண்டிருந்த ஒரே ஒரு சிவப்பு விளக்கு ஜலதீபத்தைத் தூரத்தில் பார்த்ததுமே தீ விழி விழித்தது. அது மட்டுமல்ல, ஜலதீபத்தின் தளபதி அறைக்குள்ளேயிருந்த அழகி காதரைனும் தீ விழி விழித்துக் கொண்டிருந்தாள். பஞ்சணையில் கிடந்த இதயசந்திரனை எரித்து விடுவது போல் பார்த்து, ''நீ ஆண்பிள்ளைதானா?'' என்றும் சீறினாள்.

இரவு இரண்டாம் ஜாமத்தைச் சற்றே தாண்டியிருந்த சமயம் அது. அவள் கண்கள் அவள் லேசாகக் குடித்திருந்ததால் சிவந்து கிடந்தன. மேலாடை நழுவிக் கட்டிலில் கிடந்ததால் அதன் முனையில் உட்கார்ந்திருந்த அவளுடைய அழகிய மேனியின் முன்புற பகுதிகள் இழுத்து விடப்பட்டிருந்த அறை விளக்கின் மங்கலான ஒளியிலும் அழகை அள்ளிக் கொட்டின. அவிழ்ந்துவிட்ட பொன்னிறக் குழல்கள் தாறுமாறாகத் தொங்கின. அவள் அழகிய முகத்துக்குக் கோபம் அதிக அழகைக் கொடுத்தது. அவள் கேள்வியிலிருந்த சீற்றங்கூடச் சொற்களை அழகுடன்



ஒலிக்கச் செய்தது. அவள் கேள்விக்குப் பதில் சொல்லாமலே கிடந்தான் இதயசந்திரன்.

''தமிழா'' என்றாள் காதரைன் கடுமையுடன் மீண்டும்.

''ஏன் கேட்டி?'' என்றான் அவன் செல்லமாக.

அந்தப் பதில் அவளுக்குச் சிறிது ஆறுதலை அளித்திருக்கவேண்டும். ''நீ அழைப்பது அழகாயிருக்கிறது'' என்றாள் அவள் சீற்றத்தை தணித்துக்கொண்டு.

''வேறு எது அழகாயில்லை?''

''நீ இப்படிக் கட்டிலில் கட்டைமாதிரிப் படுத்திருப்பது.''

''நீதானே படுக்கச் சொன்னாய்?''

''ஆம். சொன்னேன்.''

''சொன்னபடி செய்தேன்.''

''இப்படிப் படுத்துக் கிடக்கவா பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தாய்?''

''அதுவும் ஒரு காரணம்.''

மீண்டும் காதரைன் வதனத்தில் சீற்றம் அதிகமாகச் சுடர்விட்டது. ''வேறு காரணமும் இருக்கிறதா?'' என்று வினவினாள் அவள் பல்லைக் கடித்துக்கொண்டு.

''இருக்கிறது கேட்டி'' என்றான் தளபதி.

''என்ன காரணமோ?'' என்று அவள் வினவினாள்.

நன்றாகப் படுக்கையில் கால்களை நீட்டி, கைகளையும் பக்கவாட்டில் போட்டுக்கொண்டு சவாசனம் துவங்கும் யோகி போல் அவளை நோக்கிக் கொண்டே கூறினான். ''ஹர்கோவிந்த், இப்ராஹீம், பர்னாண்டோ மூவரும் உன் கதவைப் பூட்டி என்னை, உள்ளே நுழைய விடாமல் அடித்தார்கள் சென்ற இரண்டு இரவுகளும்'' என்று சிறிது

தாமதித்து விட்டு ''கேட்டி! எனக்கு ஒரு சுபாவமுண்டு...'' என்றும் சொன்னான்.

காதரைன் அவனிடம் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள். கையொன்றை அவன் மார்மீது போட்டாள். ''என்ன சுபாவம்?'' என்று வினவினாள் கோபத்தைச் சற்றே மறைத்து.

''என் இஷ்ட விரோதமாக யார் என்னைக் கட்டுப்படுத்த முயன்றாலும் அதற்குப் பணிவதில்லை'' என்றான் தளபதி.

''அதனால்?''

''இரண்டு நாள் ஆறப்போட்டுப் பூட்டை உடைத்தேன்.''

''இரண்டு நாள் தாமதிக்க வேண்டிய அவசியம்?''

''எப்பொழுதும் முதல் இரண்டு நாள்தான் எந்த அதிகாரமும் மும்முரமாயிருக்கும். மூன்றாவது நாள் அசிரத்தை அதிகமிருக்கும் கண்காணிப்பு அதிகமிருக்காது. ஆகையால் நள்ளிரவு நெருங்கியதும் குறுவாளை எடுத்து வந்து தாழ்ப்பாளைப் பெயர்த்துப் பூட்டையும் உடைத்தேன்.''

இதைக் கேட்ட அவள் மெல்ல அவனை நோக்கிக் குனிந்து, ''நன்றே செய்தீர்கள்'' என்றாள்.

இதயசந்திரன், குனிந்த அவள் தலையிலிருந்து தொங்கிய குழல்களைக் கண்டான். சிவந்த கண்களைக் கண்டான். வெண்மைக் கழுத்தைக் கண்டான், அந்தக் கழுத்தில் அவள் தடவியிருந்த ரோஜா அத்தரை முகர்ந்தான். இத்தனையும் அனுபவித்தான். பதில் மட்டும் சொல்லவில்லை அவளுக்கு.

அவளே கேட்டாள்: ''உங்கள்மீது மாலுமிகள் ஏற்படுத்திய கட்டுப்பாட்டை உதறத்தானே இத்தனையும் செய்தீர்கள்!'' என்று.



''ஆம்.'' மெள்ள அவன் பதில் சொன்னான். அவளைப் பார்த்த கண்கள் மெல்ல மூடிக்கொண்டன.

காதரைன் அவனை நோக்கி நன்றாகக் குனிந்தாள். ''நீங்கள் தலைவராகப் பதவி வகிக்கவே பிறந்தவர்கள்'' என்று காதுக்கருகில் சொல்லவும் செய்தாள். காதின் நுனியை லேசாக இதழ்களால் தொடவும் தொட்டாள்.

''உம்'' என்ற ஒலி மட்டும் எழுந்தது தமிழன் இதழ்களிலிருந்து.

''மாலுமிகளின் எண்ணத்திற்கு நேரெதிராக நடப்பது நமது கடமை. அது நமது உரிமை.''

இதற்கு அவன் பதில் சொல்லவில்லை.

காதரைன் அவனிடம் குழைந்தாள். ''தளபதி, உங்களை என்னிடம் அணுகாமல் ஹர்கோவிந்தும் பர்னாண்டோவும் அந்த இப்ராஹீமும் தடுத்தார்களே. அதற்கும் நீங்கள் பதில் சொல்ல வேண்டாமா?'' என்று.

''என்ன பதில் சொல்ல வேண்டும் கேட்டி?'' என்று கேட்டான் அவன்.

''பூட்டினார்களில்லையா இதயசந்திரா!'' காம வெள்ளத்தில் மிதந்த காதரைன் ஆசையால் அவனிடம் செல்லமாகக் கெஞ்சினாள்.

''ஆமாம் கேட்டி'' என்று முணுமுணுத்தான் அவன்.

''சந்திரா!'' என்றாள் அவள் செல்லப் பேச்சை உயர்த்தி மரியாதையைக் கைவிட்டு. அவன் பெயரையும் பாதியாக்கி.

''ஏன் கேட்டி?''

''உன்னை நான் இனிமேல் சந்திரா என்றுதான் அழைப்பேன்.''

''அழையேன்.''

''என்னை அறையில் வைத்துப் பூட்டினான் ஹர்கோவிந்த். நீ பூட்டை உடைத்தாய்.''

''ஆம்.''

''என்னிடம் அணுகக் கூடாதென்றானோ?''

''ஆம்.''

''அதையும் உடைக்க வேண்டியதுதானே?''

''இங்கு நான் படுத்திருப்பதற்கு என்ன அர்த்தம்?''

காதரைன் அவன் கழுத்தில் தன் நிலையைப் புதைத்துக் கொண்டாள். ''இது போதுமா...'' என்ற அவள் உடலில் உணர்ச்சி அலைகள் பாய்ந்து சென்றன.

''ஏன் போதாது? பூட்டு உடைந்து கிடக்கிறது. தாழ்ப்பாள் போடப்பட்டிருக்கிறது. அம்மூவரில் யார் பார்த்தாலும் என்ன நினைப்பார்கள்?''

''அவர்கள் நினைப்பது உண்மையாயிருக்க வேண்டாமா சந்திரா?'' என்ற அவள் தன் கையொன்றை அவன் உடலுக்குக் குறுக்கே போட்டாள்.

''கேட்டி! நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை'' என்றான் இதயசந்திரன் அவளைத் தடை செய்யாமல். அந்த விபரீத நிலையில்கூட அவன் கைகள் செயலற்றுக் கிடந்தன.

''என்ன புரிந்துகொள்ள வேண்டும் சந்திரா?''

''அவர்கள் நினைப்பது எதையும் நான் செய்ய மாட்டேன். கதவைப் பூட்டி என்னைத் தடுக்கப் பார்த்தார்கள். பூட்டை உடைத்தேன். உன்னிடம் தற்சமயம் நான் சரசமாடுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



ஆனால் அதற்கு மாறாக நடக்கப் போகிறேன்'' என்ற அவன் வாசகத்தைப் பூர்த்தி செய்யவில்லை.

காதரைன் அவன் கழுத்திலிருந்து முகத்தை நிமிர்த்தினாள். ''அப்படியானால் நீ...'' என்று விம்மினாள்.

''உன்னை இன்றிரவு தொடமாட்டேன்'' என்றான் அவன்.

''எங்கே பார்ப்போம்?'' என்றாள் அவள் பதிலுக்கு. அதைச் சொல்லி அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை ஊகிக்கு முன்பாகத் திடீரென்று அவன் மீது விழுந்து அவனை இறுக அணைத்தாள்.

அடுத்த வினாடி செயலற்றுக் கிடந்த அவனுடைய இரு கரங்களும் எழுந்தன. இரும்புப் பிடியாக அவளைப் பிடித்து விலக்கி மீண்டும் கட்டிலின் முனையில் உட்கார வைத்தன, சீறினாள் அவள், ''நீ ஆண்பிள்ளைதானா?'' என்று.

அதற்கும் அவன் அசையவில்லை. மெல்லப் படுக்கையை விட்டு எழுந்திருந்தான். அவளைத் தூக்கி நிறுத்திப் பளேரென்று கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு, ''இப்பொழுது புரியும் நான் யார் என்று. இன்னொன்றும் உனக்குச் சொல்கிறேன் பொழுது விடிந்ததும். அதுவரை காத்திரு. உன்னை விட கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் இருக்கிறது'' என்று கூறிவிட்டுத் தாழ்ப்பாளைத் திறந்து கொண்டு வெளியே சென்றான்.

பஞ்சணையில் விழுந்த அந்த வெள்ளைக் கிளி அதிர்ச்சி நிறைந்த விழிகளை வாயிற்படியின் மீது நிலைக்க விட்டாள். தமிழன் வெளியே சென்று தடாலென்று கதவைச் சாத்தியதும், கன்னத்தை ஒரு கையால் மெள்ளத் கடவிக் கொண்டாள். கண்களில் நீர் வழிந்தது. ஆனால்

அந்த நீரின் ஊடே ஆனந்தமும் வழிந்தது. ''இவன் நூற்றுக்கு நூறு ஆண்மகன். என்ன உறுதியான கை!'' என்று உடம்பெல்லாம் புல்லரிக்கச் சொல்லிக் கொண்டாள். 'ஒரு பெண் உன்மீது விழுந்து அவள் அழகுகளைப் புதைக்கும்போது கட்டையாகக் கிடக்க உன்னால் எப்படி முடிகிறது தமிழா! நீ என்ன முனிவனா? இல்லை இல்லை பிடிவாதக்காரன். முனிவனாயிருந்தால் முந்திய நாள் என் கைகளில் சிக்கிக் கிடந்தாயே. இப்படி இதுவரை யாரும் என் கன்னத்தில் அறையவில்லை. ஆனால் இந்த அறை எத்தனை அழகாயிருக்கிறது! வேண்டியவர்கள் செய்தால் அடியோ அணைப்போ இரண்டும் இன்பம்தானே' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் காதரைன்.

அறைக்கு வெளியே சென்ற இதயசந்திரனின் நிலை சொல்லத் தரமில்லாததாயிருந்தது. அதுவரை மிகுந்த சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திய உணர்ச்சிகள் பெரும் பிரவாகமாகப் புறப்பட்டு அவனை ஓர் உலுக்கு உலுக்கின. அவள் முகத்தை புதைப்பது போலும், மேலே நெகிழ்வது போலும், காதைச் சுவைப்பது போலும் பிரமை அவன் இதயத்தைச் சூழ்ந்து கிடந்தது. வெளியே தளத்தில் நின்றுவிட்ட அந்தச் சமயத்தில் கூட, அரபிக்கடலின் இன்பக் காற்று அவன் குழல்களைப் பிய்த்து உடலையும் தழுவிய அந்தச் சமயத்தில் கூடப் பக்கத்தில் காதரைன் நிற்பது போன்ற பிரமை அவனுக்கு இருந்து கொண்டேயிருந்தது. ஜன்ஜீரா முகப்பு மலையின் சிகப்பு விளக்கு மட்டும் அவன் கண்களில் படாதிருந்தால் அவன் அந்தக் கட்டழகியைப்பற்றிய எண்ணங்களிலிருந்து விடுபட்டிருக்க மாட்டான்.

ஆனால் காதரைனின் விழிகளைப் போலவே சிவந்து விழித்த அந்த விளக்கையும் பார்த்து ஜலதீபம் போகும் திசையையும் பார்த்தான். பிறகு தனது அறைக்குச் சென்று தூரதிருஷ்டிக் கண்ணாடியை எடுத்து வந்து ஜன்ஜீராவின்



துறைமுகப் பிரவேசத் துவாரத்தை நோக்கினான். அதில் இரண்டு படகுகள் அசைந்து கொண்டிருந்தன. ஒன்றில் சிறு விளக்கு மினுக்மினுக்கென்று பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அடுத்த விநாடி வெகு வேகமாகத் தளத்தில் ஓடிய தளபதி, ''இப்ரஹீம்'' என்று கூவினான்.

''என்ன தளபதி?'' என்று ஓடி வந்தான் இப்ரஹீம்.

''ஜலதீபத்தின் விளக்குகள் அனைத்தையும் அணைத்து விடு.''

''அணைத்து விட்டோமே ஏற்கெனவே'' என்றான் இப்ரஹீம்,

''கீழ்த்தளத்திலுள்ள விளக்குகளையும் அணைத்துவிடு. பீரங்கி துவாரங்கள் வழியாகக்கூட விளக்கொளி தெரியக் கூடாது'' என்று கூறிவிட்டு அவன் திடுதிடுவென்று காதரைனிருந்த அறையை நோக்கி ஓடி அங்கிருந்த விளக்கையும் ஊதி அணைத்தான். விளக்கு அணைந்தது. அவனைப் பின்புறமிருந்து காதரைனின் கைகளும் அணைத்தன.

''காதலுக்கு நேரமில்லை, இப்பொழுது'' என்றான் தளபதி.

''வேறு எதற்கு நேரம்?''

''மோதலுக்கு.''

''காதலிலும் மோதல் உண்டு.''

''நேரமில்லை இப்பொழுது.''

''எப்பொழுது கிடைக்கும் நேரம்?''

''போரில்லாத போழ்து சிறிது காதலுக்கும் ஈயப் படும்'' என்று கூறிய இதயசந்திரன் அவள் கைகளையும் பிரித்து விடுவித்துக் கொண்டு தளத்திற்குச் சென்றான். சென்றதும் பர்னாண்டோவை அழைத்து,''பர்னாண்டோ! ஜன்ஜீரா காவலர் நம்மைப் பார்த்துவிட்டார்கள்?'' என்று அறிவித்தான்.

திக்பிரமை பிடித்து நின்றான் பர்னாண்டோ.

## அத்தியாயம் 19

# நயவஞ்சகம்

திக்பிரமை பிடித்த பர்னாண்டோ கேட்டான் ''எப்படித் தெரியும் உங்களுக்கு?'' என்று. இதயசந்திரன் பதில் ஏதும் சொல்லாமல் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்களில் பொருத்தி ஜன்ஜீரா துறைமுகத் துவாரத்தை நீண்டநேரம் கவனித்தான்.

ஜன்ஜீரா வடமேற்கில் மலையை உடைத்துக் கடல் உட்புகுந்திருந்ததால் வாயைத் திறந்து கொண்டிருந்த அந்தப் பயங்கர நீர்க் கணவாய், வரும் கப்பல்களை விழுங்கக் காத்திருக்கும் எமனுடைய வாயைப் போல் பயங்கரமாகக் காட்சியளித்தது. அதற்கு அப்புறமிருந்த ஜன்ஜீரா தீவுக் கோட்டை தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குக் கூடத் தெரியவில்லையென்றாலும் அது எங்கிருக்கிறது என்பதை இதயசந்திரன் அறிந்திருந்தான். சென்ற இரண்டரை ஆண்டுகளில் ஜன்ஜீராவின் அந்தக் கடல் மார்க்கத்தில் அவன் பலமுறை சென்றிருக்கிறான். பல முறை அதன் வலுவையும் யாரும் அணுக முடியாத அதன் இயற்கை அமைப்பையும் பலர் சொல்லக் கேட்டிருக் கிறான். கனோஜியே பலமுறை அதைப் பாராட்டிப் பரவசப்பட்டு அவனிடம் பேசியிருக்கிறார். ''இப்படி யொரு இடமிருப்பதை நமது பாரதக் கடலோடிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. எங்கிருந்தோ வந்த அபிஸீனியர் கண்டுபிடித்திருக்கிறார்கள். இல்லையேல் ஸித்திகள் மேலைக்கடலை நானூறு ஆண்டுகளாக ஆள முடியுமா'' என்று பெருமூச்சும் விட்டிருக்கிறார். மேலைக் கடலோர சிவாஜியால்கூடப் பிடிக்க முடியாத ஜன்ஜீராத் தீவுக் கோட்டை என்பது ஒரே ஒரு கோட்டை பரம பிரசித்தமாயிருந்ததை எண்ணிப் பார்த்த இதய சந்திரன் [illegible] பெருமூச்சு விட்டான். தூரதிருஷ்டிக்

கண்ணாடி மூலம் அந்த முகத்துவாரத்தைப் பார்த்துக் கொண்டே.

கடற்பாதையில் வந்தால் பம்பாயிலிருந்து முப்பதாவது மைலில் உள்ள ஜன்ஜீராவை, தரைப் பாதையில் அடைய வேண்டுமானால் சுமார் இருபத்தியொரு மலைகளையும் பயங்கரக் காடுகளையும் தாண்டி அடைய வேண்டுமாதலால் நிலப் பகுதியிலிருந்து அதை அடைவதோடு தாண்டுவதோ பிரும்மப் பிரயத்தனமாதலால் நிலத்தின் மூலம் அதை யாரும் தாக்க முடியாதிருந்தது. மேலைக் கரையோரத்தில் இப்பொழுது முருடு என்றழைக்கப்படும் தண்டா ராஜபூர் என்ற சிறு நகரத்திலிருந்து கடலரசன் கரத்தால் நிலம் வெட்டி விடப்பட்டதால் நகர்புறமும் கடல் ஏரி போல சூழ, அந்த ஏரியை முப்புறத்தில் மலைத் தொடர் பாதுகாக்க, மலைகளின் முகப்பு நண்டுவாக்கிளி யின் நீள் கரங்களைப் போல் நீண்டு கௌவும் நிலையில் அமைந்திருந்ததால், இரு மலை முகப்புக்களுக்குமிடையில் நுழையும் எந்தக் கப்பலும் அரை வினாடியில் ஸித்திகளால் அழிக்கப்படும் சக்தியைப் பெற்றிருந்தது ஜன்ஜீராத் தீவு.

மலைகளுக்கிடையே ஏரிபோலிருந்த கடல் பகுதிக்கு நடுவில் ஏதோ ஒரு கருமாணிக்கக் கல்லால் செதுக்கப்பட்ட சிறு மேரு போல விளங்கும் ஜன்ஜீரா இன்றுகூடப் பார்ப்பவர் கண்ணைப் பறிக்கிறது. முருடு நகரத்திலிருந்து இறங்கியோடும் மலைச்சரிவில் சென்று, சிறிது சுழன்று பயணம் செய்ததும் தோன்றும் படகுத் துறையிலிருந்து ஜன்ஜீராவைப் பார்த்தால் அழகும் பயங்கரமும் ஒரு தீவில் எப்படி இணைய முடியும் என்பதைப் புரிந்துகொள்ள லாம். கடல் பிராந்தியத்திலிருந்து கண்ணுக்குத் தெரியாத வண்ணம் அமைந்துள்ள ஜன்ஜீராவையும் பார்த்து அதை மறைத்துள்ள மலையையும் பார்த்தால், மலை மறைவில் பதுங்கி இரை மீது பாயத் தயாராயுள்ள புலி போல் அது காட்சியளிப்பது தெரியும். அது அப்படி மறைந்திருந்தாலும் அதன் துறைமுகம் அதன் வடமேற்கில்



வாயைத் திறந்து கடலலைகளை உள்ளே வாங்கி வாங்கி நிரப்பி, கோட்டைக்குக் கடலகழி அமைத்திருப்பதாலும் ஜன்ஜீரா யாரும் அணுக முடியாத பயங்கரக் கோட்டை யாகவே இருந்து வருகிறது.

சுமார் ஒரு மைல் அகலமுள்ள ஜன்ஜீரா தீவுக் கோட்டையின் திடமதிள்கள் பேரலைகள் தாக்கும் சமயங் களில் கூட அலை வட்டத்திலிருந்து நாற்பது அடிக்கு மேலே தெரிவதாயிருப்பதால் கடல் கொந்தளிப்புக் காலங் களில் தவறி உள்ளே நுழையும் படகுகளும் சிறு கலங்களும் அதன் சுவர்களில் தாக்குண்டு சிதறிப் போய்விடும். அத்தகைய பலத்த சுவர்களிடையில் வீடுகள் அதிக நெருக்க மாகவும் படிப்படியாக உயர்ந்து கொண்டும் நின்றன. இப்படி உயர்ந்த கட்டிடங்களுக்கு அதிகமாக மேலே தெரிவது பலேகில்லா என்ற பெரும் பீரங்கி. இந்த பீரங்கி ஒரு பெண் பிரதிமையின் மீது அமைக்கப்பட்டு நேரே துறைமுகக் கடல் துவாரத்தை நோக்கிக் கொண்டிருக் கிறது. அந்தப் பீரங்கியின் வாயில் விழாமல் அந்தக் கடல் வாயில் யாரும் நுழைய முடியாதென்பது பிரசித்தம்.

இதையெல்லாம் கண்ணாடியில் பார்க்கையில் சிந்தித்த தால் ஜன்ஜீராவின் அழகை நினைத்து மயங்கிய இதயசந்திரன், ''என்ன தளபதி! பார்த்துக் கொண்டே யிருக்கிறீர்களே?'' என்று பர்னாண்டோ கேட்ட பிறகு தான் சுய நினைவை அடைந்தான். அடைந்த பிறகுகூட அவன் பர்னாண்டோவுக்குப் பதில் சொல்லவில்லை. பர்னாண்டோவிடம் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொடுத்து, ''நீயே பார்'' என்று கூறினான்.

பர்னாண்டோ கண்ணாடியை வாங்கிக் கண்களில் பொருத்தி ஜன்ஜீரா துறைமுக வாயிலைக் கவனித்தான். திறந்த அந்த வாயிலில் இரண்டு படகுகள் இருந்தன. ஒன்றில் சிறு விளக்கு மின்னிக் கொண்டிருந்தது. ஆனால் இரு படகுகளும் இருந்த இடத்தில் நின்றிருந்தன. யாரும்

அவற்றைத் துடுப்பு கொண்டு துழாவுவதாகவும் தெரியவில்லை. துறைமுக வாயிலுக்குள் நுழைந்த கடலலைகள் அவற்றை அப்புறம் இப்புறம் அலைக்கழித்தனவேயொழிய வேறு சலனம் அவ்விரண்டுக்கும் இல்லை. இரண்டு படகுகளிலுமிருந்த நாலைந்து ஸித்திகள்கூடக் கடற்புறம் பார்க்காமல் கடலுக்கு முதுகு காட்டித் திரும்பி ஜன்ஜீரா கோட்டையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இதையெல்லாம் கவனித்த பர்னாண்டோ கூறினான். ''தளபதி! நம்மை அந்தப் படகிலுள்ள மாலுமிகள் யாரும் பார்க்கவில்லை'' என்று.

''ஆம்'' என்றான் தளபதி.

''அப்படியானால் அபாயம் எங்கிருந்து வருகிறது'' என்று வினவினான் பர்னாண்டோ.

''பர்னாண்டோ? சரியாகப் பார்'' என்றான் தளபதி.

''சரியாகத்தான் பார்க்கிறேன் தளபதி'' என்றான் பர்னாண்டோ.

''பர்னாண்டோ, துறைமுகத் துவாரத்திலிருந்து ஜன்ஜீரா கோட்டை தெரியுமா?'' என்று வினவினான் தளபதி.

''தெரியாது.''

''ஏன்?''

''தீவு உள்ளடங்கி இருக்கிறது.''

ஆனால் அந்தத் தீவின் தீபங்கள், முக்கியமாக பலேகில்லாவின் மீதுள்ள பெருவிளக்கு இவற்றின் வெளிச்சம் துறைமுகத் துவாரங்களில் விழுந்திருப்பது தெரியுமா?''

''தெரியும். இங்கிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தால் கோட்டையின் பக்கவாட்டில் தீபங்களின் ஒளி தெரியும்?''



''தெரிகிறதா?''

''தெரியவில்லை. இல்லை இல்லை. அதோ ஒன்று மட்டும் தெரிகிறது. இல்லை இல்லை. அதுவும் மறைந்து விட்டது'' என்ற பர்னாண்டோ கண்களிலிருந்து கண்ணாடியை எடுத்து விட்டுத் தளபதியைப் பார்த்தான்.

இதயசந்திரன் முகம் சுரணையற்றிருந்தது. ''பர்னாண்டோ! நான் பார்க்க ஆரம்பித்தபோது வெளிச்சம் நாலைந்து இடங்களில் தெரிந்தது. பிறகு ஒவ்வொன்றாக மறைந்தது. நீ பார்த்தபோது கடைசி வெளிச்சமும் மறைந்துவிட்டது. இதற்கென்ன அர்த்தம்?'' என்று வினவினான் தளபதி சுரணையற்ற குரலில்.

''புரியவில்லை தளபதி!'' பர்னாண்டோ பிரமை பிடித்த குரலில் கூறினான்.

''கோட்டையின் விளக்குகள் ஒவ்வொன்றாக அணைக்கப்படுகிறதென்று அர்த்தம். ஏன் அணைக்கப்படுகிறது என்பதை அறியத்தான் துறைமுகப்புப் படகுக் காவலர் கோட்டையைக் கவனிக்கிறார்கள்'' என்றான் இதயசந்திரன்.

''நாம் கோட்டையை இங்கிருந்து பார்க்க முடியாதென்றால் கோட்டையிலிருந்து மட்டும் நம்மைப் பார்க்க முடியுமா?'' என்று கேட்டான் பர்னாண்டோ.

''கோட்டையிலிருந்து பார்க்க முடியாது...'' என்று இழுத்தான் பர்னாண்டோ.

''வேறு எங்கிருந்து பார்க்க முடியும்?'' என்று வினவினான் பர்னாண்டோ.

''தண்டாராஜபூரிலிருந்து தண்டாராஜபூர் மலையின் உயரத்திலிருக்கிறது. அங்கிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஜலதீபத்தைப் பார்க்கலாம். ஜலதீபத்தை யாரோ அங்கிருந்து பார்த்திருக்கிறார்கள். அங்கிருந்து தீபத்தின்

மூலம் ஜன்ஜீராவுக்குச் சைகை செய்திருக்கிறார்கள். ஜன்ஜீரா எச்சரிக்கையடைந்து விளக்குகளை அணைத்துக் கொள்கிறது. இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் நம்மை நோக்கிப் போர்க் கப்பல்கள் வரும்'' என்று விளக்கிய இதயசந்திரன் கீழே ஹர்கோவிந்தையும், இப்ரஹீமையும் அழைத்து வரக் கட்டளையிட்டான். அவர்கள் வந்ததும் தளபதியின் உத்தரவுகள் சரசரவென்று பிறந்தன.

''ஹர்கோவிந்த்! இன்னும் ஒரு நாழிகைக்குள் ஸித்திகளின் போர்க்கப்பல்கள் அதோ அந்தக் கடல் ஏரியிலிருந்து வெளியே வந்து நம்மை எதிர்நோக்கி வரும், அப்படி வரும் போது நாம் அவற்றை எதிர்நோக்கிச் செல்வோம்...'' என்ற இதயசந்திரனை இடைமறித்த ஹர்கோவிந்த், ''என்ன, எதிர்நோக்கியா?'' என்று கேட்டு வாயைப் பிளந்தான் வியப்பால்.

''ஆம். எதிர்நோக்கி'' என்றான் தளபதி திட்டமாக.

''அதைவிட நாம் அவர்களிடம் சரணடைந்து விடுவது நல்லதாயிற்றே'' என்றான் ஹர்கோவிந்த், சிறிது வியப்புக் குறைந்து கோபம் துளிர்த்த குரலில்.

அவன் கோபத்தைக் கவனிக்கவே செய்தான் தளபதி. ''நீ இந்தப் போரைச் சாமளிப்பதாயிருந்தால் என்ன செய்வாய்?'' என்று வினவவும் செய்தான் இகழ்ச்சியுடன்.

''போருக்கு முதலில் இடம் கொடுக்கமாட்டேன்.''

''எப்படி இடம் கொடாதிருப்பாய்? அவர்கள் பீரங்கி மூலம் குண்டுகளை வீசினால்...''

''அந்த நிலை வராது.''

''ஏன்?''

''நான் பாய் விரித்து மேற்கே ஓடுவேன்.''

''உன் வேகம் எவ்வளவு?''



''இப்பொழுது நாழிகைக்குக் கால் காதம். மூன்று பாய்மரங்களையும் அவிழ்த்து விட்டால் அரை காதம் போகலாம்.''

''ஸித்திகளின் கப்பலின் வேகம் தெரியுமா உனக்கு?''

ஹர்கோவிந்த் பதில் கூறவில்லை, மௌனம் சாதித்தான்.

ஜலதீபத்தைவிட ஒன்றரை மடங்கு வேகமுள்ளவை. ஒன்றரை மடங்கு அதிக பீரங்கிகளை உடையவை. நாம் ஓட முற்பட்டால் விடியுமுன்பு ஸித்திகளின் கப்பல்கள் நம்மை வளைத்துவிடும். வளைத்துக் கொண்டால் நாம் அழிவது திண்ணம். நமக்கிருப்பது ஒரு கப்பல். எதிரிகள் பல கப்பல்களைக் கொண்டு வரமுடியும்'' என்று சுட்டிக் காட்டினான் தளபதி.

ஹர்கோவிந்த் தாழ்த்திய தலையை நிமிர்த்தவில்லை. அவன் மேற்கொண்டு பேசுவதற்குக்கூட அவகாசம் கொடுக்காமல் கூறினான் இதயசந்திரன்: ''ஹர்கோவிந்த்! கீழறைக்குச் செல். மாலுமிகளைக் கொண்டு துடுப்புகளைத் துழாவு மெதுவாக. இப்ரஹீம், சுக்கானைச் சுழற்றி ஜன்ஜீராவை நோக்கி ஜலதீபத்தைத் திருப்பு. பர்னாண்டோ, பாய்களை அவிழ்த்து இறக்கிவிடு. கப்பல் அபாயத்தில் சிக்கியிருப்பதை அறிவிக்கச் சிவப்புக் கொடியொன்றை ஏற்றி விடு கொடிமரத்தின்மீது'' என்று உத்தரவுகளைப் பிறப்பித்த இதயசந்திரன், ''யாரும் கப்பலில் பேச வேண்டாம். இப்பொழுது இதோ எரியும் முகப்பு விளக்கு எரியட்டும். வேறு விளக்குகள் தேவையில்லை. அந்த வெள்ளைக்காரியை என் அறையில் அடைத்துப் பூட்டிவிடு'' என்றும் கட்டளையிட்டான்.

அவன் கட்டளைகளை நிறைவேற்ற அவரவர் பறந்தனர். ஜலதீபம் பாய்களை அவிழ்த்துத் தளத்தில் போட்டுக் கொண்டு மெதுவாக நகர்ந்தது ஜன்ஜீராவை நோக்கி. முகத்துவாரத்தில் தெரிந்த சிறு விளக்கு நகர்ந்தது ஜலதீபத்தை நோக்கி. ஜலதீபம் ஜன்ஜீராவை நோக்கி

நகர முற்பட்டதும் முகப்பு மலையிலுள்ள சிவப்பு விளக்கு அணைந்தது. திடீரென்று பலே கில்லா பெரிதாகச் சப்தித்தது. இரு போர்க்கலங்கள் தலை காட்டின துறைமுக வாயிலில். இதயசந்திரன் மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்றான் தளத்தில். அவன் இரு கைகளும் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்களில் பொருத்திக் கொண்டிருந்தன. கண்கள் ஜன்ஜீரா துறைமுக வாயிலைத் துருவி ஆராய்ந்தன. போர்க் கலங்கள் மெள்ள மெள்ள முழுப் பார்வைக்கு வந்தன. போர் நிகழக்கூடிய நிலை பயங்கரமாக உருவாகிக் கொண்டிருந்தது. இதயசந்திரன் திடீரென மடியிலிருந்து எதையோ எடுத்தான். வாயில் வைத்து பலங்கொண்ட மட்டும் ஊதினான். அதைக் கேட்ட ஜலதீபத்தின் மாலுமிகள் அனைவரும் உயிர்த் துடிப்படைந்தனர். "இது நயவஞ்சகம்" என்றான் ஹர்கோவிந்த் கீழ்தளத்தில். மேல் தளத்திலிருந்த மாலுமிகளுக்கும் அதே நினைப்புத்தான். அதையேதும் லட்சியம் செய்யாத இதயசந்திரன் இன்னொரு முறை பெரிதாக ஊதினான். அந்த ஊதலிலிருந்து கிறீச்சென்ற ஒலி கடலை வெகுவேகமாக ஊடுருவிச் சென்றது. அதன் விளைவும் மெள்ள மெள்ளத் துவங்கலாயிற்று.

"நயவஞ்சகத்திற்குப் பரிசு இருக்கத்தான் இருக்கிறது" என்று பர்னாண்டோவும் முணுமுணுத்தான்.

## அத்தியாயம் 20

# கடலே, நீ சொல்!

**க**ற்கும் கலைக்கு அழிவு கிடையாது. உடனடியாக அது பலனளிக்காவிட்டாலும் என்றோ ஒருநாள் பலனை அளிக்கத்தான் செய்கிறது. அத்தகைய ஒரு பலன் கிடைக்கவே செய்தது ஜன்ஜீராவை நோக்கி, அதாவது அபாயத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த இதயசந்திரனுக்கும். கொங்கணிக் கரையில் தான் ஒதுக்கப்பட்ட நாளன்று பிரும்மேந்திரஸ்வாமி வலம்புரிச் சங்கெடுத்துக் கிறீச்சென்று பலமாக ஊதி பானுதேவியை அழைத்ததையும் அந்த சிறு சங்கு இன்பமாகப் பெரு ஓசை கிளப்பியதையும் மறக்கவேயில்லை தமிழகத்தின் வாலிப வீரன். தமக்கு வேண்டியவர்களை அழைக்கத் தபோநிதி கையாளும் வழி அதுதானென்பதை அறிந்த இதயசந்திரன் உபதளபதியாயிருந்த இரண்டரை ஆண்டுகளில் பல சங்குகளைத் தானும் சேர்த்து அவற்றில் சிறந்த ஒன்றைப் பொறுக்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டுமிருந்தான். சங்கு பொறுக்கும் அவன் வழக்கத்தைப்பற்றி இரண்டொரு முறை மஞ்சுவும் அவனைக் கேலி செய்திருக்கிறாள். "குழந்தைகள் கிளிஞ்சல் பொறுக்கும், நீங்கள் சங்கு பொறுக்குகிறீர்கள்" என்று சொல்லிச் சிரித்துமிருக்கிறாள். "பிரும்மேந்திரஸ்வாமி மட்டும் பொறுக்குகிறாரே, அவரென்ன குழந்தையா?" என்று பதில் கேள்வி கேட்டிருக்கிறான் அவன். "அவர் துறவி. சங்காபிஷேகம் செய்யச் சங்கு பொறுக்குகிறார். நீங்கள் ஆண்டவனுக்கு என்ன அபிஷேகம் செய்வீர்கள்?" என்று அவள் தொடர்ந்திருக்கிறாள்.

"கீதாபிஷேகம் செய்தேன்" இது அவன் பதில் அவளுக்கு.

"கீதாபிஷேகமா?"

"ஆம். சங்கீதாபிஷேகம்."

''செய்யுங்கள் பார்ப்போம்.''

அவன் சங்கெடுத்துக் கீழ் ஸ்தாயியில் இன்பமான நாதம் கிளப்புவான். அதில் மெய் மறந்திருப்பாள் மஞ்சு. அதில் ஓங்கார நாதம் கிளப்புவான். அவள் சொக்கிச் சுருண்டு விழுவாள். ''நீங்கள் பெரிய சுவாமிதான். ஒப்புக் கொள்கிறேன்'' என்று அவன்மீது சாய்வாள். ''சுவாமிக்குப் பெண்வாடை உதவாது. தள்ளிப்போ'' என்று அவளைத் தள்ளுவான் அவன். அவள் நகைத்துக்கொண்டே அவன் மடியில் விழுவாள்.

இத்தகைய வேடிக்கை விநோதங்கள் நிகழ்ந்திருக்கின்றன அந்தச் சங்கால் முன்பு. இப்பொழுது வேடிக்கையுமில்லை, விநோதமுமில்லை. பெரும் ஆபத்தை நோக்கிச் செல்கையில் அந்தச் சங்கை எடுத்து ஊதினான். இன்பக் கீழ் ஸ்தாயி இசை ஒலி அல்ல அது; ஓங்கார நாதமுமல்ல. வேண்டியவரை அழைக்க பிரும்மேந்திரஸ்வாமி கிளப்பி வந்த கிறீச்சொலி அது. அந்த ஒலி பலனளிக்குமென்பது அவனுக்குத் தெரியும். ஒரே ஒரு கப்பலான ஜலதீபத்தைக் கொண்டு ஸித்திகளை எதிர்க்க முயலுவதைப்போல் பைத்தியக்காரத்தனம் வேறெதுவுமில்லை என்பதையும் அவர்களிடத்திலிருந்து தப்பிச் செல்வதைத் தவிர வேறு வழி கிடையாதென்றும் உணர்ந்துகொண்ட இதயசந்திரன் பாய்களை இறக்கச் சொன்னதற்கும் சிவப்புக்கொடி ஏற்றச் சொன்னதற்கும் காரணங்கள் உண்டு.

பாய் இறக்கிச் சிவப்புக்கொடி ஏற்றிவரும் கப்பல் வேகம் சிறிதுமின்றி நொண்டிக் கப்பலாகத் தட்டுத் தடுமாறித் துறைமுகம் நோக்கிச் செல்லுமாகையால் உடனடியாக அதன்மீது எதிரிகள் போர் தொடுக்க மாட்டார்கள். ஆகையால் ஜலதீபம் சிறிது ஆசுவாசப் படுத்திக்கொள்ள அவகாசம் கிடைக்கும். தான் சங்கையும் ஊதிவிட்டதால் அந்தச் சங்கொலி வரும் மரக்கலத்தில் பிரும்மேந்திரஸ்வாமியிருக்கிறார் என்ற பொய்யையும் வலியுறுத்துமாகையால் உதவிக்கு வருவது கப்பலாயிராது,



படகுகளாகத்தானிருக்க முடியுமென்பதையும், ... எதிரிக் கப்பல்கள் நங்கூரமெடுத்திருந்தாலும், மறுபடியும் அவை நங்கூரத்தைப் பாய்ச்சிவிடுமென்பதையும் உணர்ந்த இதயசந்திரன் கண்ணிலிருந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலம் எதிரியின் ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டே ஜலதீபத்தைச் செலுத்தினான்.

அவன் எதிர்பார்த்தது மிகவும் சரியாயிருந்தது. முகத்துவாரத்துக்கு வந்த ஸித்திகளின் இரு போர்க் கப்பல்கள் மீண்டும் மெள்ள மெள்ளக் கோட்டையை நோக்கிப் பின் வாங்கின. துறைமுகப்பிலிருந்த இரண்டு படகுகளுடன் இன்னுமிரு படகுகளும் சேர்ந்துகொண்டு முகத்துவாரத்தில் வரிசையாய் நின்றன. அந்த நான்கு படகுகளின் தலைவர்கள் பரஸ்பரம் ஏதோ விடுவிடுவென்று பேசிக் கொள்வதையும் கவனித்த இதயசந்திரன், எத்தப் பக்கத்தில் யார் வந்து எப்படி ஜலதீபத்துக்கு உதவலாமென்று யோசனை நடப்பதாகத் தீர்மானித்தான். அப்படி அவர்கள் யோசனை செய்து கொண்டிருக்கையில் பர்னாண்டோவை அழைத்த அவன், ''பர்னாண்டோ! தளத்து பீரங்கிகளை, அது நான்கு படகுகளையும் நோக்கிக் குறி வைத்து அவை நகருமுன்பு சுட்டுவிடு'' என்று உத்தரவிட்டான். பிறகு இப்ரஹீமிடம் சென்று, ''பர்னாண்டோவின் பீரங்கிகள் முழங்கியதும் நான்கு நிமிடங்கள் இடைவேளை கொடு. பிறகு சுக்கானை வேகமாகத் திருப்பு, ஜலதீபம் மேற்கு நோக்கி ஓட வேண்டும்'' என்று கூறிவிட்டுக் கீழ்த்தளம் செல்லும் வாயிலுக்குச் சென்று ''ஹர்கோவிந்த்! ஹர்கோவிந்த்!'' என்று கூவினான். தளத்துக்கு ஓடிவந்த ஹர்கோவிந்திடம், ''பர்னாண்டோ பீரங்கிகளை முழங்கியதும் நான்கு நிமிடங்கள் இடைவேளை கொடுத்து, ''கீழ்த் துடுப்புக்கள் வெகு வேகமாகத் துழாவட்டும். அதற்கு ஏற்பாடு செய்து மேல்தளம் வந்து இந்தப் பாய்களனைத்தையும் ஏற்றிவிடு'' என்று கூறினான். ஹர்கோவிந்த் ...

உத்தரவிற்குக் காரணம் புரியாமல். பிறகு வேகமாக இறங்கி ஓடினான் கீழ்த்தளத்துக்கு.

இதயசந்திரன் கண்ணில் பொருந்திய கண்ணாடியைக் கீழே இறக்கவேயில்லை. பர்னாண்டோவின் பீரங்கிகள் பயங்கரமாக டுமில் டுமில் என்று ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து இடைவெளியின்றி அலறியதும் முகத்துவாரப் படகுகள் ஒவ்வொன்றாக மூழ்கின. அதே சமயத்தில் ஜலதீபம் மேல்திசை நோக்கித் திரும்பியது. ஜன்ஜீராத் துறை முகப்பில் மலைப் பகுதியிலிருந்த வீரர்கள் பலவிதமாக ஒலி கிளப்பினார்கள். முதலில் வந்த இரு மரக் கலங்கள் துறைமுக வாயிலுக்கு வந்து நின்றன. பெரும் பீரங்கிகளிரண்டையும் வெடித்தன. அதற்குள், ஜலதீபம் முழுக் காற்றில் மூன்று பாய்களையும் விரித்து மேற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்ததால் அந்த பீரங்கி வீச்சு அதைத் தொடவில்லை. திடீரென ஜன்ஜீராவின் விளக்குகள் பிரகாசமாக எரிந்தன. மலைமீது ஒரு பெரிய பீரங்கியில் மருந்து திணித்து வீரர்கள் பீரங்கியை அலறவிட்டனர். ஜன்ஜீராவிலிருந்து நூறு கஜ தூரத்தில் மட்டும் ஜலதீபமிருந்தால் இந்த அத்தனை வெடி வீச்சுக்கும் அர்த்தமிருந்திருக்கும். ஆனால் பீரங்கி வீச்சு எல்லைவிட்டு ஓடிவிட்ட ஜலதீபம் அலட்சியமாகப் பாய்ந்து சென்றது. மேலைக் கடலில் மேல் திசை நோக்கி இரண்டு நாழிகை நேரம் கழித்துக் கண்ணிலிருந்து தூரதிருஷ்டிக் கண்ணாடியை அகற்றிய இதயசந்திரன் பர்னாண்டோவின் முதுகில் மகிழ்ச்சியுடன் தட்டிக்கொடுத்து, ''பர்னாண்டோ! சரியாகக் குறி வைத்தாய். ஒரு குண்டு கூட வியர்த்தமாக வில்லை'' என்று பாராட்டினான்.

ஆனால் பர்னாண்டோ அந்தப் பாராட்டுதலை ஒப்புக் கொள்ளவில்லை. ''பருந்து குருவியின்மீது பாய்வதில் வீரமென்ன இருக்கிறது தளபதி'' என்று வினவினான் அலுப்புடன்.



அவன் கூறியது புரிந்தது தளபதிக்கு. ஆகவே அவன் உவமையிலேயே பதில் கூற முற்பட்டு, பருந்துகளை அடக்கக் குருவி தேவையானால் குருவிக்குப் பருந்துகளை விட முக்கியத்துவம் ஏற்படுகிறது'' என்று பதில் சொன்னான்.

குருவிகளா, முக்கியமா!'' என்றான் பர்னாண்டோ.

''ஆம், பர்னாண்டோ! துறைமுகத்துக்குள்ளிருந்து இரு பெரும் கப்பல்கள் நம்மைத் தாக்கத் தலை நீட்டின வல்லவா?''

''ஆம்.''

''அவை வெளியே வந்து நம்மைத் தாக்கியிருந்தால்?''

''ஜலதீபம் பிடிபட்டிருக்கும்.''

''நாம்?''

''ஸித்திகளிடம் கைதிகளாயிருப்போம்.''

''நாம் இந்த வெள்ளைக்காரிக்கு ஈட்டுப்பணம் கேட்பதற்குப் பதிலாக நமக்கு ஸித்தி ஈட்டுப் பணம் கேட்பான்'' என்று பதில் கூறிய இதயசந்திரன், ''பர்னாண்டோ! ஹர்கோவிந்த் விவரம் தெரியாமல் ஜலதீபத்தைப் போகிற வழியில் விட்டு ஜன்ஜீராவிடம் கொண்டு வந்து விட்டதைக் காலங்கடந்த பின்புதான் அறிந்தேன். ஜன்ஜீரா காவலர் நம்மைப் பார்த்து விட்டதையும் உணர்ந்தேன். அதற்கு மேல் என் சொந்தச் சச்சரவுகளை நினைப்பது நியாயமில்லையென்று உணர்ந்தே மீண்டும் தளபதிக்கு உண்டான கடமைகளை ஏற்றேன். அந்தச் சமயத்தில் எதிரித் துறைமுக முகப்புப் படகுக் காவலர் கோட்டைக்கு விளக்குகள் கொண்டு சைகை செய்ததைப் பார்த்தேன். இரு கப்பல்கள் நம்மை நோக்கி நகருவதையும் கவனித்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் எதிரியை ஏமாற்றுவதைத் தவிர வேறு வழியில்லையாதலால் சேதமடையும் கப்பல்கள் உயர்

அறிவிப்புக் கொடியை உயர்த்தச் செய்தேன். பாய்களையும் அவிழ்க்கச் சொன்னேன். எதிரி தொலைவிலிருந்து ஜலதீபத்தைப் பார்க்கும் போது பாயின்றி, அபாயக் கொடி பறக்க அலைமீது அசைந்து வரும் கப்பல்தான் தெரியும். தவிர பிரும்மேந்திர ஸ்வாமி ஊதும் சங்கையும் ஊதினேன்'' என்று சொல்லிக்கொண்டு போன இதய சந்திரனை இடைமறித்த பர்னாண்டோ, ''தெரியும். அது பெரிய நயவஞ்சகம். இந்தக் கப்பலில் பிரும்மேந்திர ஸ்வாமி வருகிறார் என்று ஸித்திகள் நினைப்பார்கள். ஸித்திகளோ பிரும்மேந்திர ஸ்வாமியின் சீடர்கள்'' என்றான்.

''ஆம் பர்னாண்டோ, பிரும்மேந்திர ஸ்வாமி வரும் கப்பலெதற்கும் ஸித்திகள் தீங்கு விளைவிக்க மாட்டார்கள். உதவவும் முன்வருவார்கள்'' என்று ஒப்புக்கொண்ட தளபதி, ''அப்படித்தான் அவர்களை நம்ப வைத்தேன். நம்பவும் நம்பினார்கள். தாக்க வந்த கப்பல்கள் பின் சென்று நங்கூரம் பாய்ச்சின. உதவ இரு படகுகளுக்கு நான்கு படகுகளாக முகப்பில் வந்தன. முகத்துவாரத்தை அடைத்து நின்று கொண்டன. படகுகள் கிட்டத்தட்ட சிறு கப்பல்கள் முகத்துவாரத்தை அடைந்திருந்தன. அவற்றை மூழ்கடித்து விட்டால்...'' என்றான்.

அவன் வாசகத்தை முடிக்கவில்லை. இருப்பினும் பர்னாண்டோ புரிந்து கொண்டான். ''அந்தப் படகுகள் முகத்துவாரத்தில் மூழ்கிவிட்டன. ஆகையால் முகத்துவாரம் அடைபட்டு விட்டது. எதிரிக் கப்பல்கள்...'' என்றான் அவன்.

''துறைமுகத்தில் சிறையிருக்கின்றன. தற்சமயம் மூழ்கிய படகுகளை அவர்கள் சங்கிலி கொண்டு அகற்றி வெளிவருமுன்பு ஜலதீபம் அவர்கள் கைக்கெட்டாத தூரத்திலிருக்கும். சரியான போரில்லைதான். வேறு வழியில்லை'' என்று தளபதி மீண்டும் தனது அறையை நோக்கி நடந்தான்.

பர்னாண்டோ அவன் போவதைப் பார்த்துக்கொண்டே நின்றான். கீழ்த்தளத்தில் துடுப்புகள் துழாவ ஏற்பாடு செய்துவிட்டு அங்கு வந்த ஹர்கோவிந்திடம் எரிந்து விழுந்தான் பர்னாண்டோ, ''எல்லாம் உன்னால் வந்தது ஹர்கோவிந்த்'' என்று.

''எனனால் மட்டுமா?'' என்று கேட்டான் ஹர்கோவிந்த்.

''அந்த வெள்ளைக்காரி விஷயத்தில் நீ தலையிடாதிருந்தால் தளபதி உன்னிடம் கப்பல் தலைமையை ஒப்படைத்திருக்க மாட்டார். ஒப்படைத்திருக்காவிட்டால் ஜலதீபம் ஜன்ஜீராவுக்கு இத்தனை அருகில் வந்திராது. வந்திராவிட்டால் இத்தனை அதர்ம யுத்தத்தில் தளபதி ஈடுபட்டிருக்கமாட்டார்'' என்றான் பர்னாண்டோ.

அந்தச் சமயம் சுக்கானை மாலுமியொருவனிடம் கொடுத்துவிட்டு அவர்களிடம் வந்த இப்ரஹீம், ''ஆம் ஹர்கோவிந்த்! உண்மையில் இப்பொழுது எதிரியை ஏமாற்றித்தான் வந்திருக்கிறோம்'' என்றான்.

''அதற்காக நான் என்ன செய்யட்டும்?'' என்று வினவினான் ஹர்கோவிந்த்.

''நீதானே தலைமைப் பதவி ஏற்றாய்?'' என்றான் இப்ரஹீம்.

''நான் எங்கே ஏற்றேன்? நீங்களும்தானே தளபதி நம்மீது பொறுப்பைச் சுமத்தியபோது இருந்தீர்கள்?''

''இருந்தோம். ஆனால் வெள்ளைக்காரியிடமிருந்து அவரைப் பிரிக்க நீதானே எங்களுக்கு யோசனை சொன்னாய்?''

''ஆம், சொன்னேன். மஞ்சுதானே தலைவரைக் கவனிக்கும்படி உத்தரவிட்டது. அதற்காக என்னை ஆணையிடச் செய்தாளே.''

‘‘ஆம். பர்னாண்டோ! கேவலம் ஒரு பெண்ணின் காதலுக்காக நாம் கடமையை இழக்கலாமா?’’ என்று வினவினான் இப்ரஹீம்.

‘‘யார் இழக்கச் சொன்னது! முதலிலேயே நீ தடுத்திருக்கலாமே வெள்ளைக்காரியிடம் நாம் தலையிட வேண்டாமென்று?’’ என்று சீறினான் ஹர்கோவிந்த்.

அம்மூவரும் இரைந்து பேசியதாலும் அவர்களிருந்த இடத்துக்கும் தளபதியின் அறைக்கும் அதிக தூரமில்லையாகையாலும் அவர்கள் பேசியது நன்றாகக் கேட்டது இதயசந்திரனுக்கு. அவன் புரிந்து கொண்டான் காரணத்தை. இரண்டரை ஆண்டுகள் தன்னைச் சிறிதும் எதிர்க்காமல் பணியாற்றிய அந்தச் சிறந்த மாலுமிகள் மூவரும் சில நாட்களாகத் தன்னிடம் காட்டிய விபரீதப் போக்குக்குக் காரணம் நன்றாகப் புரிந்தது அவனுக்கு. தான் தனியாகக் காதரைனுடன் கப்பலில் செல்லுவதால் தான் அவளிடம் சிக்காமலிருப்பதற்காக மஞ்சு இட்ட கட்டளையே அந்த மூன்று பேர் என்ன, எல்லா மாலுமிகளின் போக்குக்கும் காரணமென்பதையும், அதனாலேயே அவர்கள் தனது நடவடிக்கை ஒவ்வொன்றையும் கவனித்திருக்கிறார்களென்பதையும் புரிந்துகொண்ட இதயசந்திரன் மஞ்சுவின் காதல் வன்மையையும் அதற்காக அவள் தன்னைக் கண்காணிக்கவும் தயாராயிருந்த துணிவையும் எண்ணிப் பார்த்தான். அப்படி எண்ணிப் பார்த்ததால் அவள் காதலின் உறுதி அவனுக்குப் பெரும் சாந்தியை அளித்தது. அடுத்து அவன் இதயத்தில் தோன்றினாள் காதரைன் விரிந்த குழலுடன். திறந்த எழிலுடன் அடுத்து தான் ப்ம்பாயில் சந்திக்கவிருந்த பானுதேவியையும் மனக்கண்ணில் எழுப்பிக் கொண்டான் தளபதி. அவனை மூன்று பெண்களும் அழைத்தார்கள், ஆனால் ஒவ்வொருத்தியும் இருந்த நிலை வேறு.அதிகார ஆணவத்துடன் இணையிலா அழகையும் பெற்ற பானுதேவியின் கண்களில் காதலுமிருந்தது, கட்டளையுமிருந்தது. முத்தமிட்ட இருவரை வெட்டி



விட்ட மஞ்சுவின் அழகுக் கண்களில் வீரமிருந்தது! அசட்டையுமிருந்தது. காதரைன் அப்பா! அந்த நீலக் கண்களில் விரிந்த காமக் கடல்! அதில் அழுந்தாமலிருக்க யாரால் முடியும்! எழில்களை ஒருமுறை அசைத்தாள் அந்த அல்லி மலர். அல்லி இதழ்கள் வழவழத்து மனமுகத்தின் மீது தடவின. இப்படி ஏற்பட்ட கனவிலிருந்து மெள்ளத் தன்னை மீட்டுக் கொள்ள முயன்ற இதயசந்திரன் அறையைவிட்டு ஜலதீபத்தின் பக்கப் பலகையை நாடினான். எதிரில் இருளோவென்று விரிந்த ஆழ்கடலைக் கேட்டான் சற்று உரக்க, ‘‘ஆழ்கடலே! நீ சொல், இம்மூவரில் யார் சிறந்தவர்?’’ என்று.

கடல் பதில் கூறவில்லை. காற்று பதில் கூறிற்று. காற்றில் மெல்ல மிதந்து வந்தது அத்தர் வாசனை. அதைத் தாங்கிய மெல்லிய சல்லாவொன்று அவன் முகத்தை மறைத்தது. அதை விலக்கித் திரும்பிய இதயசந்திரனருகில் நின்றிருந்தாள் காதரைன்.

‘‘என் மேலாடைக்கும் உங்கள்மீது ஆசை பார்த்தீர்களா?’’ என்று கொஞ்சி அவன்மீது சாய்ந்தாள்.

வழவழத்த அவள் உடல் அவன் உடலுடன் இழைந்தது. அவன் கை அவள் இடையை அணைத்தது. வாய் மட்டும் பதிலேதும் கூறவில்லை. ‘‘ஏன் பேசவில்லை? கோபமா?’’ என்று வினவினாள் அவள்.

அதற்கும் அவன் பதில் கூறவில்லை. அவன் உணர்ச்சிகள் பொங்கிக் கொண்டிருந்தன, பொங்கு அலைகள் போல. அவள் இன்பமான குரலில் கூறினாள், ‘‘உங்கள் போர்த் திறனைப் பார்த்தேன். பெரும் தந்திரம், வெள்ளைக்காரரும் வெட்கும் தந்திரம். இத்தனை தந்திரம் எங்கு கற்றீர்கள்? அப்பப்பா? மெய் சிலிர்த்தது எனக்கு?’’ என்று.

அதற்கும் பதில் வரவில்லை அவனிடமிருந்து. அந்த மௌனம் அவளுக்கு எரிச்சலை விளைவித்தது. ‘‘நான்

இருக்கட்டுமா? போகட்டுமா?'' என்று கேட்டாள் அவள் கோபத்துடன். திடீரென அவளை நோக்கித் திரும்பிய அவன் அவள் பூவுடலை நொறுங்கும்படி கட்டிப் பிடித்தான். ''ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டேன்'' என்று முரட்டுத்தனமாகக் கூறவும் செய்தான்.

''என்ன முடிவு?'' என்று கேட்டாள் காதரைன். அவன் முரட்டுப் பிடி அவளுக்குப் பெரிதும் தேவையாயிருந்தது. இன்ப உணர்ச்சிகள் அவள் உடலை ஊடுருவிச் சென்றன. அவள் குரல் மிக ரகசியமாக, இன்பமாக, வேதனையும் கலந்ததாக உதிர்ந்தது.

முடிவை அவன் கூறினான்.

அவள் அதிர்ச்சியுற்றாள். இன்பம் திடீரென அறுந்து பயத்துக்கு இடங்கொடுக்கவே காதல் கண்ணில் அச்சம் உதயமாயிற்று. ''அது எப்படி முடியும் முட்டாள்?'' என்று சீறினாள் காதரைன்.

காதரைன் என்ன, மறுநாள் அம்முடிவைக் கேட்ட ஹர்கோவிந்த், பர்னாண்டோ, இப்ரஹீம், இவர்களும் அதிர்ச்சியுற்றார்கள். எதையும் லட்சியம் செய்யவில்லை இதயசந்திரன். முடிவைப்பற்றி அவன் கடலைத்தான் கேட்டான், ''கடலே சொல், முடிவு சரியா இல்லையா?'' என்று.

## அத்தியாயம் 21

# இனம், காதல், கடமை

கப்பலின் தளத்தில் காதரைனைக் கட்டிப் பிடித்து அவள் காதில் ஓதிய அந்த முடிவைக் கேட்டதும் வெள்ளைக்காரி தனது கொள்ளை ஆசையெல்லாம் விர்ரென்று அடித்த கடற்காற்றில் பறந்து போக அவன் அணைப்பிலிருந்து, திமிறி விலகியதுமல்லாமல் 'அதெப்படி முடியும் முட்டாள்!' என்று சீற்றம் மிகுந்த சொற்களையும் கொட்டினாள். கொட்டியதோடு நில்லாமல், விடுவிடு என்று அந்த இடத்திலிருந்து நடந்து செல்லவும் இரண்டடி எடுத்து வைத்தாள். ஆனால் இதயசந்திரனின் இரும்புக் கைகள் அவள் கையொன்றை இறுகப் பிடித்து மீண்டும் தன்னை நோக்கி இழுத்தன. ''இதில் முட்டாள்தனம் என்ன இருக்கிறது? ஏன்- முடியாது அது?'' என்ற சொற்களும் கடுமையுடன் உதிர்ந்தன அவன் வாயிலிருந்து.

அவன் கடுமைச் சொற்களையோ கைப்பிடித்த உறுதியையோ அவள் லட்சியம் செய்யாமல் சுதந்திரமாயிருந்த கையால் முகத்தில் புரண்ட தலைக்குழல்களைப் பின்னுக்குத் தள்ளி நிமிர்ந்து பார்த்தாள் அவனை. ''என்னைத் திருமணம் செய்து கொள்ளக் கேட்கிறாய் நீ'' என்று அதிர்ச்சி ஒலித்த குரலில் கூறினாள் அவள்.

இதயசந்திரன் அவள் சீற்றக் கண்களை உற்று நோக்கினான். அதிர்ச்சி பரந்து நின்ற வதனத்தையும் நோக்கினான். ''ஆம் திருமணம் செய்து கொள்ளத்தான் தீர்மானித்து இருக்கிறேன். அதுதான் என் முடிவு'' என்று திட்டவட்டமாகக் கூறவும் செய்தான் தமிழன்.

காதரைன் ஏதோ நம்பத்தகாததைக் கேட்டுவிட்டது போல் அவனைப் பார்த்தாள். ''தமிழா, உனக்குப் புத்திப் பிசகு ஏதுமில்லையே!'' என்று வினவினாள் இறுதியில்.

''இல்லையென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது'' என்று இதயசந்திரன் இதழ்களில் இளநகை தவழ்ந்தது.

''நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்'' என்றாள் அந்த அல்லி மலர்.

''எனக்குப் புத்தி பிசகு என்றா?''

''ஆம்.''

''உன் கட்டழகைக் கண்ட பிறகு, உன் பல நாள் அழைப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, எவனுக்குத்தான் புத்தி பிசகாமலிருக்கும்.''

''அதைச் சொல்லவில்லை நான்.''

''வேறு எதைச் சொல்லுகிறாய்?''

''ஒரு பிரிட்டிஷ் பெண்ணை இந்தியன் ஒருவன் திருமணம் செய்துகெர்ள்ள எத்தனிப்பதைச் சொல்லுகிறேன்.''

''வெள்ளைக்காரியை இந்தியன் தழுவலாம். அவளுடன் சரசமாடலாம். ஆனால் திருமணத்திற்கு மட்டும் தடை போலிருக்கிறது'' என்று கூறிய இதயச்சந்திரன் அவளை லேசாகத் தன்னை நோக்கி இழுத்தான். அவள் திமிறினாள். திமிறிக் கொண்டு அவனைத் தளத்தில் விட்டுத் தனது அறை நோக்கி நடக்கவும் செய்தாள். அவள் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற தமிழன் அவள் பின்னழகுகளில் தனது பார்வையை நிலைக்க விட்டான். மனத்தைத் திருமணத்தில் நிலைக்கவிட்டான். அவன் முடிவில் சந்தேகத்துக்குச் சிறிதும் இடமில்லாதிருந்தது. மறுநாள் ஹர்கோவிந்த், இப்ரஹீம், பர்னாண்டோ இம்மூவரையும் அழைத்து அவர்களிடம் மெள்ளத் தனது முடிவைக் கூறினான். அவன் கூறிய முறை மிகவும் கள்ளத்தனமானதாக இருந்ததால், ஆரம்பத்தில் அம்மூவரும் விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை. தனது அறையில் மஞ்சத்தில் அமர்ந்த வண்ணம் அம்மூவரையும் நோக்கிய



இதயசந்திரன், ''ஹர்கோவிந்த்! இப்ரஹீம்! பர்னாண்டோ! கப்பலின் தலைவன் காமக் கேளிக்கைகளுக்கு இடங்கொடுப்பது தவறு என்று உணர்ந்து கொண்டேன். அதற்கு உங்கள் மன்னிப்பைக் கேட்கிறேன்'' என்றான் மெள்ள.

மூன்று மாலுமிகளும் இதற்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கடைசியில் ஹர்கோவிந்த் மெல்லக் கூறினான்: ''தளபதியைப் போன்றவர்கள் கெட முடியாது. சில பலவீனங்களில் சிக்கினாலும் முடிவில் சரியான வழிக்கே வந்துவிடுவார்கள்'' என்று.

''வந்து விட்டேன் ஹர்கோவிந்த்!'' என்றான் இதயசந்திரன் தழுதழுத்த பரிதாபக் குரலில்.

''மிக்க மகிழ்ச்சி தளபதி, உங்களைப் போன்ற விவேகிகள் வேறு முடிவுக்கு வரமுடியாது'' என்றான் இப்ரஹீம்.

''ஒப்புக் கொள்கிறாயா இப்ரஹீம்?''

''ஒப்புக் கொள்கிறேன் தளபதி, முழுமனத்துடன் ஒப்புக் கொள்ளுகிறேன்.''

''நீ பர்னாண்டோ?'' என்று பர்னாண்டோவை நோக்கினான் இதயசந்திரன்.

''நான் மாத்திரம் விலக்கா தளபதி! தங்களை எங்களுக்குத் தெரியாதா? ஏதோ சூழ்நிலை தாங்கள் இந்த பிரிட்டிஷ்காரியிடம் சிக்கினீர்கள். அதுவும் அவள் பெரும் சாகசக்காரி. இரு கணவன்மாரைப் பறிகொடுத்தவள். மூன்றாமவர் கண்ணுக்குப் பட்டதும் அவரை வளைக்கப் பார்க்கிறவள்...'' என்றான் பர்னாண்டோ.

''நீ சொல்வது தவறு பர்னாண்டோ'' என்றான் இதயசந்திரன்.

''என்ன தவறு தளபதி?'' பர்னாண்டோவின் கேள்வியில் வியப்பு இருந்தது.

''இதில் குற்றவாளி காதரைன் மட்டுமல்ல...'' என்று இழுத்தான் இதயசந்திரன்.

''என்ன சொல்கிறீர்கள் தளபதி?''

''பர்னாண்டோ...''

''தளபதி!''

''அவள் கணவனைப் போரில் இழந்தவள். நம்மிடம் அகப்பட்டுக் கொண்டாள்...''

''உம்.''

''துயரத்தின் மிகுதியில் என் ஆதரவைத் தேடினாள்.''

''உம்!''

''ஆதரவளித்தேன். அத்துடன் நான் நின்றிருக்க வேண்டும். அடிக்கடி அவள் அறைக்கு நான் ஏன் போனேன்; அவளுக்கு வசதிகள் அளிக்க வேண்டுமானால் உங்களில் ஒருவரை அனுப்பியிருக்கலாம். செய்யவில்லை நான். நானே போனேன். என் மனத்தின் பலவீனத்தால் அவள் அழகில் ஈடுபட்டேன். திரும்பத் திரும்ப அவள் அறைக்குப் போனேன். திரும்பத் திரும்ப எந்தப் பெண் தான் எதிர்த்து நிற்க முடியும்? என் வலையில் மெள்ள வீழ்ந்தாள்...''

இப்படிச் சொல்லிக் கொண்டுபோன தளபதியை மூவரும் ஏக காலத்தில் ஒரே சமயத்தில் தடுத்து, ''தவறு தவறு. இல்லாத குற்றங்களை உங்கள்மீது சுமத்திக் கொள்கிறீர்கள்'' என்றார்கள்

தளபதி அம்மூவர் மீதும் தனது கண்களை நன்றாக நிலைக்க விட்டான். ''இல்லாத குற்றமா?'' என்றும் வினவினான் கடுமையான குரலில்.



''ஆம்'' என்றான் பர்னாண்டோ.

''எப்படி?'' இதயசந்திரனின் கேள்வி எழுந்தது கடுமையாக.

''அவள் சாகசம், அவள் நடத்தை இவைதான் உங்களை அழைத்தன. எது நடந்திருந்தாலும் அவள்தான் காரணம்'' என்றான் இப்ரஹீம்.

''சந்தேகமில்லை'' என்று பர்னாண்டோவும் ஒத்துப் பாடினான்.

தமிழனின் சண்கள் களித்தன. குரல் குழைந்து, ''என்னிடமுள்ள அன்பினால் பேசுகிறீர்கள் மாலுமிகளே, குற்றத்தை அவள் துவங்கியிருந்தாலும் நான் ஏன் அதற்கு இடங்கொடுக்க வேண்டும்! நமது கைதி நீங்கள் ஏற்கெனவே சுட்டிக் காட்டியபடி முப்பத்தினாயிர ரூபாய் ஈட்டுப் பணம் கொண்டு வரக்கூடியவள். அவளுக்கு அவள் நலனுக்கு வேலியாயிருக்க வேண்டிய நான் அவளறைக்குச் சென்றதும் கதவைத் தாழிட்டு அவளுடன் தங்கிவிட்டதும் எப்படிச் சரியாகும்! சுத்தத் தவறு, சந்தேகமில்லை'' என்று அறிவித்த இதயசந்திரன் பல விநாடிகள் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டான். கடைசியில் நிமிர்ந்து அவர்களை நோக்கி, ''இதற்குப் பரிகாரம் செய்ய முடிவு செய்துவிட்டேன்'' என்று கூறினான் உறுதியுடன்.

''என்ன பரிகாரம் தளபதி?'' என்று வினவினான் பர்னாண்டோ.

பர்னாண்டோவை உற்று நோக்கிய இதயசந்திரன், ''நீ கிறிஸ்தவன்தானே பர்னாண்டோ?'' என்று வினவினான்.

''ஆம் தளபதி.''

''நீ ஒரு பெண்ணைக் கெடுத்து விடுகிறாய். அல்லது அவளுக்கு மாசு வரும்படி நடந்து கொள்கிறாய். அந்தக்

கெடுதலை நிவர்த்திக்க— மாசை அகற்ற— என்ன செய்ய வேண்டும்?''

இதைக் கேட்ட பர்னாண்டோவின் விழிகள் அச்சத்தாலும், வியப்பினாலும் அகன்றன. மற்ற இருவரும் அவன் அச்சத்துக்கும் வியப்புக்கும் காரணமறியாமல் திகைத்தார்கள்.

இதயசந்திரன் முடிவில் கூறினான், ''ஆம் பர்னாண்டோ! அந்தப் பரிகாரத்தைச் செய்யத் தீர்மானித்து விட்டேன். காதரைனைத் திருமணம் புரிந்து கொள்ள முடிவு செய்துவிட்டேன்'' என்று.

அவன் குரலில் இருந்த உறுதியிலிருந்து முடிவு அழிக்க முடியாதென்பதை மூவரும் உணர்ந்தனர். தாங்க முடியாத அதிர்ச்சியால் திகைத்துப் பல விநாடிகள் நின்றுவிட்டனர். கடைசியில் இரைந்தான் ஹர்கோவிந்த், ''அப்படியானால் மஞ்சுவின் கதி?'' என்று.

''அதை அவள்தான் முடிவு செய்ய வேண்டும். விஜய துர்க்கத்தை அடைந்தவுடன் அவளைத் திருமணம் செய்து கொள்ளக் கேட்டேன் அவள் தந்தையை. மறுத்துவிட்டார் அவர். அதற்கு நானென்ன செய்யமுடியும்? மஞ்சு கிடைக்காததால் நான் துறவியாகிவிட முடியுமா? மொட்டையடித்துக் கொண்டு பிரும்மேந்திர ஸ்வாமி மடத்திலே சேர முடியுமா?'' என்று கேட்ட இதயசந்திரன் அவர்கள் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான்.

அதிர்ச்சி விவரிக்க இயலாதிருந்ததால் மூவரும் பேசச் சக்தியின்றி வெளியே வந்தனர். வெளியே சென்ற விநாடியிலிருந்து அவர்கள் சுயநிலையில் இல்லை. பீதியும் குழப்பமும் அவர்கள் உள்ளங்களை ஆட்டிப் படைத்ததால் சிலைகள் போல நடமாடிக் கொண்டிருந்தனர். அம் மூவரும் நினைத்துப் பார்க்கவும் முடியாத தமிழனின் முடிவு அவர்கள் மகிழ்ச்சிக்கு முடிவு கட்டிவிட்டது. மஞ்சுவை சொந்தக் குழந்தைபோல் பாவித்ததால் பெரும் கோபமும் அவர்கள் உள்ளங்களில் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அவர்கள் நிலை மட்டுமல்ல அப்படி. முதல் நாளிரவு அறைக்குச் சென்ற விநாடியிலிருந்து காதரைனின் நிலையும் அப்படித்தானிருந்தது. அந்த மூன்று மாலுமிகளுக்கிருந்த கோபம் அதிர்ச்சி பீதி அத்தனையும் அவள் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருந்தன. தமிழன் இத்தனை பெரிய கல்லை எடுத்துத் தலைமேல் போடுவானென்று தினையளவும் நினைக்கவில்லை அந்த வெள்ளைக்கார மகள். காரணம் அவள் நிறம், அவள் இனம்.

வெள்ளையர் இந்தியனை மணப்பது மாபெரும் கேவலம் எனக் கருதப்பட்ட காலம் அது. யாராவது வெள்ளைக்காரி இந்தியனை மணந்தால் தீண்டத்தகாதவளைப்போல் அவள் மற்ற வெள்ளைக்காரர்களால் நடத்தப்பட்ட காலம் அது. இந்தியனுடன் திருமணம் அவளை அவள் ஜாதியினின்று விரட்டியது. அவள் சகோதரிகள்கூட அவளைக் கேவலமாகப் பார்ப்பார்கள். தந்தைகூட அவளைத் தன் மகளென்று சொல்லிக் கொள்ளத் தயங்குவார். இந்த நிலையை நினைத்து நினைத்து அஞ்சினாள் அந்த அல்லிமலர். தமிழனிடம் உண்மையில் அவள் இதயத்தைப் பறிகொடுத்திருந்தாள். உடலையும் அர்ப்பணிக்கத் தயாராயிருந்தாள். ஆனால் திருமணம்? நினைக்கவும் அஞ்சினாள் அதைப்பற்றி. ஆகவே மறுநாள் மாலை இதயசந்திரன் அவள் அறைக்கு வந்தபோது அவள் அவனுடன் பேசவுமில்லை. அவனை வரவேற்க எந்தவித சைகையும் செய்யவுமில்லை. இதயசந்திரனே மெள்ளப் பேசத் துவங்கி, ''கேட்டி...'' என்று மிக மிருதுவாக அழைத்து அவள் உட்கார்ந்திருந்த கட்டிலில் அவளுக்கருகில் தானும் உட்கார்ந்து கொண்டான்.

''ஏன்?'' என்ற அவள் கேள்வி முரட்டுத்தனமா யிருந்தது.

''என் மேல் கோபம் போலிருக்கிறது...'' என்றான் இதயசந்திரன் அவள் தோள்மீது இடது கையைப் போட்டு.

அந்தக் கையைத் தள்ளினாள் அவள் வெறுப்புடன். ''என்னைத் தொடவேண்டாம்'' என்றும் சீறினாள்.

''ஏன்? இப்பொழுது என்ன நடந்துவிட்டது?'' என்று கேட்டான் அவன்.

''ஏதும் நடக்கவில்லை.''

''அப்படியானால் எதைப் பற்றிக் கோபம்?''

''நடக்கப் போவதாக நீங்கள் கனவு காண்பதைப் பற்றி.''

''திருமணத்தைப் பற்றியா?''

''ஆம்.''

''அது கனவா?''

''ஆம்.''

''ஏன்?''

''வெள்ளைக்காரி எப்படிக் கறுப்பு ஜாதியை மணந்து கொள்ள முடியும்?''

''மணந்து கொண்டாலென்ன. வெள்ளைக்காரியும் பெண்தான்; கறுப்பனும் ஆண்தான்.''

''பால் மாத்திரம் இதில் முக்கியமில்லை.''

''வேறு எது முக்கியம்?''

''ஜாதி, நிறம்.''

''நிறத்தில் என்ன இருக்கிறது?''



''என்ன இருக்கிறதென்பதை பம்பாயில் புரிந்து கொள்வீர்கள்.''

''என்ன புரியும் பம்பாயில்!''

''உங்களைக் கொன்று போடுவார்கள்.''

''உன்னைத் திருமணம் செய்து கொள்வதற்காகவா?''

''ஆம்.''

''அத்தனைப் பயங்கரமா உன்னை மணம் புரிந்து கொள்வது!'' என்று கூறிப் பலமாக நகைத்தான் இதய சந்திரன்.

காதரைன் கட்டிலிலிருந்து எழுந்து நின்றாள். ''தளபதி! வீணாகப் பிடிவாதம் பிடிக்காதீர்கள். என்னைப் பலவந்தமாகத் திருமணம் புரிந்தால் கொள்ளைக்காரரால் கொல்லப்படுவீர்கள். கொள்ளைக்காரர்கள் தங்கள் பெண்களைக் கறுப்பர் மணம் புரிவதை விரும்பவில்லை. ஆகவே, அந்த எண்ணத்தை விட்டு விடுங்கள்'' என்றாள்.

''என்னால் விடமுடியவில்லையே காதரைன்'' என்று பரிதாபமாகக் கூறிப் பெருமூச்சு விட்டான் இதயசந்திரன்

காதரைன் வெகு அருகில் வந்தாள். அவன் தலையைத் தன் இடுப்பில் அழுத்தி இரு கைகளாலும் அணைத்தாள். ''இதயசந்திரா! நீ பெரு வீரன். உண்மையில் உன்னை நான் நேசிக்கிறேன், மரணமடைந்த எனது இரு கணவர்களிடம் கூட எனக்கு இத்தனை நேசம் இருந்த தில்லை. ஆனால் நமது இனங்கள் வெவ்வேறு. இருவருக்கும் திருமணம் நடப்பது சமுதாய சம்மதமல்ல. இப்பொழுது என்ன குடி முழுகிப் போய்விட்டது? நான் உனக்கு எதை மறுக்கிறேன்?'' என்று குழைய குழைய இன்பநாதம் கொட்டிக் கூறினாள் காதரைன்.

அவள் இடையை இறுக வளைத்தன இதயசந்திரன் கைகள். அவளைத் தன் இரு கைகளாலும் உயரத் தூக்கி ஒரு முறை பார்த்துக் கீழே இறக்கினான். இன்ப அலை

பாயும் குரலில் கூறினான்: ''காதரைன்! நீ எதையும் மறுக்க வில்லை எனக்கு. இதயசந்திரன் இந்தியனாயிருந்தாலும் பெண்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் பண்பாடுள்ள இனத்தில் பிறக்கவில்லை அவன். நீ கொடுப் பதை நிச்சயம் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் இங்கல்ல...''

''வேறு எங்கு?'' என்றாள் காதரைன்.

இதயசந்திரன் பதில் மிகத் தெளிவாக வெளி வந்தது. சொற்கள் மிகத் திடமாக உறுதியாக உதிர்ந்தன. ''கொலாபாவில் திருமணம் செய்து கொண்ட பிறகு...'' என்றான் இதயசந்திரன்.

காதரைன் விவரிக்க இயலாத நிலையில் இருந்தாள். இதயசந்திரனின் சொற்கள் ஒவ்வொன்றும் அவள் இதயத் தின்மீது காய்ச்சிய ஈயத் துளிகள்போல் விழுந்தன.

## அத்தியாயம் 22

# குலாபி

அன்றும் மறுநாளும் கழிந்து மூன்றாவது நாள் விடியற் காலையில் ஜலதீபம் கொலாபாவை நெருங்கியபோது இதயசந்திரன் ஒருவனைத் தவிர, மற்ற அனைவர் உள்ளங் களும் நொறுங்கித்தான் கிடந்தன. கடற் கோட்டையான கொலாபா கண்ணுக்குப் பட்டதுமே தாரையொன்று பல மாக ஊதப்படவே கோட்டைப் பகுதியில் துரிதமான நடவடிக்கைகள் காணப்பட்டன. தாரை ஊதிய பின்பே அறையை விட்டு வெளியே வந்த காதரைனைப் பார்த்த இதயசந்திரன், ''காதரைன்! அதோ பார், நீர் மேல் ஒரு மலர்'' என்று குதூகலத்துடன் கூவினான்.

அவனுக்குக் கொலாபாவைக் கண்டால் எப்பொழு துமே ஒரு தனி குதூகலம் இருந்தது. மகாராஷ்டிரர் களின் மிகச் சிறந்த மிக வலுவான கடற் கோட்டைகளில் ஒன்றான கொலாபா பார்ப்பதற்கு மிக அழகாயிருந்ததால் அதை அணுகு முன்பாக தளத்திலிருந்தே அதைப் பார்த்துப் பார்த்து இதயசந்திரன் மகிழ்வது வழக்கம். பம்பாய்க்குத் தெற்கே பத்தொன்பது மைல் தூரத்திலிருந்தது கொலாபா. ஆலிபாக்கிலிருந்து உட்புகுந்த கடலால் வெட்டி விடப் பட்டதால் தீவாகிவிட்டதும் சுற்றிலும் கடலலைகள் மோதப் பல கோவில்களுடனும் மாளிகைகளுடனும், உயர்ந்த ஸ்தூபிகள் மூன்றுடனும், தாழ்ந்த கோட்டைச் சுவர்களுடனும், தென்னை மரங்களுடனும் காட்சியளித்த கடற்கோட்டையான கொலாபாவை அன்றும் அவன் பார்த்துப் பார்த்து இன்பமடைந்து நின்றான். அதைப் பார்த்ததாலேயே அவன் மாலுமி மனம் அதுவரை நடந்த நிகழ்ச்சிகளை மட்டுமின்றித் திருமணத்தையும்கூட மறந்து கொலாபாவின் மனோகர எழிலில் ஈடுபட்டதால் அவன்

கூறினான் காதரைனைப் பார்த்து, ''அதோ பார், நீர்மேல் ஒரு மலர்'' என்று.

கொலாபாவைப் பற்றிய மட்டற்ற அவன் மகிழ்ச்சியைப் பார்த்து அதில் பங்கு கொள்ள விரும்பாத அந்த வெள்ளை மகள் அவனுக்குப் பதிலேதும் சொல்லாமலே திரும்பிச் செல்ல முயன்றாள். ஆனால் ஒரே எட்டில் அவளைத் தாவிப் பிடித்த இதயசந்திரன், ''வெள்ளைக்காரி! நீ என்னை மணம் புரியு முன்பு என்னிடம் பணியக் கற்றுக் கொள்ள வேண்டும். நான் சொல்வதைச் செவி மடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும்'' என்று சீற்றத்துடன் சொற்களை உதிர்த்து அவள் கையைப் பிடித்துச் சரசரவென்று இழுத்துக் கொண்டு வந்து தளத்தின் முகப்பில் நிற்க வைத்து, ''சரியாகப் பார். உனது பிற்கால இருப்பிடத்தைச் சரியாகப் பார்த்துக் கொள். என்ன அழகாயிருக்கிறது பார். இதற்குக் கொலாபா என்று ஏன் பெயர் தெரியுமா?'' என்றும் வினவினான்.

அவள் பதிலேதும் சொல்லவில்லை. அவன் பிடியினின்று திமிறவுமில்லை. கொலாபாவை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவனே மேற்கொண்டு ஒரு கையால் அவளை இறுகப் பிடித்தவண்ணம் இன்னொரு கையால் அந்தத் தீவைச் சுட்டிக்காட்டி, ''காதரைன்! குல் என்றால் மலர், ஆப் என்றால் நீர். நீரில் இது ஒரு மலர்போல் துலங்குவதால் இதற்குக் குலாபா என்று பெயர். அதிலிருந்து மருவி வந்த சொல் கொலாபா. இந்தக் குலாபாவை ஆட்சி புரியும் தெய்வம் உண்டு. அவள் பராசக்தி. அவள் பெயர் குலாபி. மகிஷேசுவரி என்ற பெயரும் அவளுக்கு உண்டு. மகிஷத்தின் நாக்கைக் கீழ் இடதுக் கரம் இழுத்துப் பிடிக்க, வலது கீழ்க் கரம் அதன் வாள் கொண்டு கொல்ல, மேல் இடது வலது கரங்கள் ஒன்று கேடயம் தாங்க, இன்னொன்று மகிஷத்தின் வாலைப் பிடித்து முறுக்க, நான்கு கரங்களுடனும் பயங்கர கரமும் அழகும்



ஒன்று சேர்ந்த திருமுக மண்டலத்துடனும் விளங்கும் மகாசக்தியை இன்றிரவு விளக்கேற்றும்போது நாமிருவரும் வணங்கி அவளருளைப் பெறலாம். தவிர...'' என்று கூறிக்கொண்டே போனவனைச் சட்டென்று தடுத்தாள் காதரைன், ''நிறுத்து கறுப்பனே, நிறுத்து!'' என்று கூறி.

அவளைத் திரும்பி நோக்கிய இதயசந்திரன் கேட்டான்: ''நான் கறுப்பென்று யார் சொன்னது உனக்கு? நல்ல சிவப்பாயிற்றே நான்?'' என்று.

''இந்தியர்களுக்கு நீ சிவப்பாயிருக்கலாம். ஆனால் வெள்ளைக்காரர்களுக்கு நீ கறுப்புதான். எப்படி இருந்தாலென்ன, உன் துணிவு மிக அதிகம்'' என்று மேலும் கூறினாள் காதரைன்.

''கத்தாதே!'' சுள்ளென்று எரிந்து விழுந்தான் தமிழன்.

''கத்துவேன். காதரைனை மணக்கக் கனவு காணும் கறுப்பனே, கத்துவேன். அந்தக் கல்லுருவத்திடம் என்னை வணங்க வைக்கக் கனவு காணும் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று கூவினாள் காதன்ரன் மீண்டும் பதற்றத்துடன்.

இதயசந்திரன் அவள் கூச்சலையும் முகத்தில் விரிந்த கிலியையும் வெறுப்பையும் பார்த்து ஒரு விபரீதப் புன்முறுவல் கொண்டான். ''கல்லுருவமா?'' என்று கேட்டான் மெதுவாக.

''ஆம். கல்லுருவம். நீ ஏதோ தெய்வமென்றாயே, அது'' என்று மேலும் சீறினாள் அவள்.

''குலாபியா! பராசக்தியா! அவள் கல்லா?''

''ஆம். கல், கல், கல்.''

''அது வெறும் கல்? சக்தி கிடையாது?''

''கிடையாது.''

''கல்லாகையால் சக்தி கிடையாதென்கிறாயா?''

''ஆம்.''

இதயசந்திரன் சற்று நிதானித்துவிட்டுச் சொன்னான். ''கொலாபாவில் பாறையொன்றிருக்கிறது...'' என்று.

''இருக்கட்டும்.''

''அது வெட்டுப் பாறை. குற்றவாளிகளை வெட்டுவார்கள்.''

''அதனால்?''

''அந்த வெட்டுப் பாறையில் உன் தலையை மோதி உடைத்துவிடுகிறேன். அதுவும் கல்தான்!'' என்று இதயசந்திரன் ராட்சதக் கண்களுடன் அவளைப் பார்த்தான். அன்று வரை அத்தனை பயங்கரத்தை அந்தக் கண்களில் அவள் பார்க்கவில்லை.

''இது அநீதி!''

''இல்லை, எங்கள் தெய்வத்தை நிந்தித்ததற்காக உனக்கு தரப்படும் தண்டனை.''

''இது தண்டனையா? இல்லை! இல்லை. குரூரம்! கொலை...''

இதைக் கேட்ட இதயசந்திரன் அவளைக் கூர்ந்து நோக்கினான். ''காதரைன்! சென்னை வெள்ளைக்காரர்களுடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். உங்கள் மத சம்பந்தமான கதைகளைக் கேட்டிருக்கிறேன். ஸ்பானிஷ் இங்க்விசிஷன் என்ற விசாரணை முறையையும் தண்டனை முறைகளையும் கேட்டிருக்கிறேன். அந்தத் தண்டனை முறைகளையும் நான் கூறும் தண்டனையையும் இணைத்துப் பார். என் தண்டனை உனக்குப் பெரும் வரப் பிரசாதம் என்று தெரியும்'' என்று கூறி மேலும் சொன்னான்: ''உண்மையில் தத்துவங்கள் எல்லா மதங்களிலும் ஒன்றுதான். அவற்றைக் கையாளும் இனத்தின் வேற்று தத்துவங்களை அர்த்தமற்றதாக்குகின்றன. ஆகவே, காதரைன்! குலாபியைப் பற்றிப் பேசும்போது யோசித்துப் பேசு'' என்று கூறவும் செய்தான். மேலும் அவளை நோக்கி, ''காதரைன்! நீ இஷ்டப்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி, உனக்குச் சீக்கிரம் தாலி கட்டப் போகிறேன். கொலாபாவில் கனோஜியின் மாளிகையில் என் மனைவியாக அதிக அதிகாரத்துடன் நீ விளங்குவாய்!'' என்று சொல்லிவிட்டு அவள் கையை விடுவித்தான். மிகுந்த எரிச்சலாலும் பயத்தாலும் கலங்கிய கண்களுடனும் தனது அறையை அடைந்த காதரைன் கட்டிலில் விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

தமிழனைத் தான் அப்பொழுதும் காதலிப்பதை உணர்ந்தாள். 'காதல் வேறு, திருமணம் வேறு. இது புரியவில்லையே தமிழனுக்கு' என்று மனத்துள் சொல்லியும் கொண்டாள். அவன் மணம் புரிவதற்குள் ஏதாவது ஒரு வழியும் கிடைக்குமென்று எண்ணினாள். ஏதேதோ எண்ணிக் கட்டிலில் புரண்டாள். கோட்டைக்கு வெகு அருகில் சென்று நங்கூரம் பாய்ச்சத் தொடங்கியதால் அலைகளில் பெரிதாக ஆடிய கப்பல் அவள் கட்டிலையும் சேர்த்து ஆட்டவே சிறிது அயர்ந்தும் விட்டாள் அவள்.

ஜலதீபம் நங்கூரம் பாய்ச்சி, படகுகளை நீரில் இறக்குவதற்கும், கோட்டையிலிருந்து வந்த படகுகளும் வீரர்களும் ஜலதீபத்தில் ஏறி வந்து இதயசந்திரனை வணங்கிக் கட்டளைக்கு எதிர்பார்த்து நிற்பதற்கும் சுமார் அரை ஜாமத்திற்கு மேல் ஆகிவிட்டதால் கைதிகளையும் ஜலதீபத்தில் தங்கிவிட்ட இப்ரஹீம், பர்னாண்டோ, ஹர்கோவிந்த் இன்னும் சில மாலுமிகள் இவர்களையும் தவிர அனைவரும் கோட்டையை அடைவதற்கு உச்சிவேளை ஆகிவிட்டது.

இதயசந்திரன் காதரைனைக் கோட்டை நடுவிலுள்ள தோர்லாவாடாவின் அறையொன்றில் தங்கியிருக்க உத்தர

விட்டு, தனது அலுவல்களைக் கவனிக்கச் சென்றான். அந்தக் கோட்டையின் காவலனிடம் கோட்டைக் காவல் விவகாரங்களைப் பற்றி விசாரித்துவிட்டு, காதரைனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கப் பணித்துவிட்டு, ஜலதீபத்திலுள்ள மாலுமிகளுக்கு உணவு அனுப்பித் தேவையானதைக் கவனிக்குமாறும் உத்தரவிட்டுவிட்டுக் கடலில் நீராடச் சென்றான். நீண்டநேரம் கடலில் நீந்தித் துளைந்துவிட்டுத் தோர்லாவாடா*வுக்குத் திரும்பி, புத்தாடை அணிந்து உண்டு களைப்பாறினான். பிற்பகலில் ஒருமுறை கோட்டைக் காவலனையும் அழைத்துக்கொண்டு காவலைச் சுற்றிப் பார்த்தான்.

கொலாபாவின் கோட்டைக் காவல் ஆங்கரேயின் திட்டப்படி இருந்ததால் சரியான கெடுபிடியுடனேயே இருந்தது. வடக்குத் தெற்காக சுமார் 900 அடி நீளமேயிருந்த அந்தக் கற்கோட்டையில் வடகிழக்கில் இருந்து மகா தர்வாஜாவும் (பெரிய வாயிலும்) தெற்கிலிருந்த சிறு வாயிலும் நன்றாகக் காக்கப்பட்டிருந்ததன்றி மொத்தமிருந்த பதினேழு ஸ்தூபிகளில் பழுதில்லாமலிருந்த மூன்று ஸ்தூபிகளும் சரியாகக் காவல் செய்யப்பட்டிருந்ததையும் அவற்றின் மீதிருந்த காவலர் நாலா பக்கங்களிலும் கண்களைச் செலுத்தி உஷாராயிருந்ததையும் கவனித்துத் திருப்தி அடைந்தான் இதயசந்திரன். பிறகு அங்கிருந்த கணபதி, மாருதி, பத்மாவதி ஆகிய தெய்வங்களைத் தரிசித்துக் கொண்டு குலாபியின் கோவிலுக்குச் செல்லாமல் அதற்குப் பின்னிருந்த கட்டிடங்களை நோக்கிச் சென்றான்.

* 'தோர்லாவாடா' என்றால் பெரிய அரண்மனை, கனோஜியின் மாளிகை. இதற்கு ஐந்து மாடிகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இப்பொழுது மாடிகள் காணோம். கொலாபாவின் பல கட்டிடங்களைப் போல இம்மாளிகையும் இடிந்து கிடக்கிறது.

''குலாபியைத் தரிசிக்கவில்லையே நீங்கள்?'' என்று கோட்டைத் தலைவன் நினைவுபடுத்தினான்.

''இரவு தரிசிக்கிறேன்'' என்றான் இதயசந்திரன்.

''ஏன்?''

''அவளும் வருவாள் என்னுடன்.''

''யார் அது?''

''அந்த வெள்ளைக்காரி.''

''கைதியா?''

''ஆம்.''

காவலன் மலைத்து நின்றான் சில வினாடிகள். ''அவளை நாம் கோயிலுக்குள் அனுமதிக்க முடியாது'' என்றான் திடமாக.

''ஏன்?''

''அவள் பிற மதத்தவள்.''

''பராசக்திக்கு மத வேற்றுமை உண்டா?''

''இல்லை. ஆனால் பார்ப்பவர்கள் பராசக்தியிடம் பக்தியால் வரவில்லை. வேடிக்கை பார்க்க வருகிறார்கள். நமது தெய்வங்கள் கண்காட்சிப் பொருள்கள் அல்ல.''

இதைக் கேட்ட இதயசந்திரன் சற்று இரைந்து நகைத்துவிட்டுக் குலாபி கோயிலுக்குப் பின்னாலிருந்த கட்டிடங்களை நோக்கிச் சென்றான். அதைக் கண்ட கோட்டைக் காவலன் பெரிதும் வெறுப்புடன் ''அங்கு சண்டையிடும் ஆடுகள், மான்கள், கோழிகள் இவற்றைத் தான் வைத்திருக்கிறோம்'' என்று சுட்டிக் காட்டினான்.

''எனக்குத் தெரியும் அது'' என்றான் இதயசந்திரன்.

‘‘குலாபியைத் தரிசிக்க வேண்டாம், அவற்றைத் தரிசிக்க வேண்டுமா?’’ என்று சீறினான் காவலன்.

காவலன் சீற்றத்தைக் கண்டு சீற்றம் கொள்ளவில்லை ஜலதீபத்தின் தளபதி. கோட்டையின் நிர்வாகி சாதாரணத் தலைவன், தன்னை எதிர்த்துப் பேச என்ன உரிமை இருக்கிறதென்று நினைக்ககூட இல்லை. அவன் நேரிடையாக அந்தக் கட்டிடங்களுக்குச் சென்று அங்கிருந்த சண்டையிடும் விலங்குகளை நீண்ட நேரம் பார்த்தான். தடவிக் கொடுத்தான். உணவும் அவற்றுக்குத் தன் கையால் கொடுத்தான். பிறகு மீண்டும் வந்தான் தோர்லாவாடாவுக்கு.

குலாபியின் கோயில் மணியும் அந்தி பூஜை துவங்கி விட்டதைக் கணீர் கணீர் என்று அறிவித்தது. அதைக் காதில் வாங்கிக்கொண்டு கனோஜியின் பெரிய அரண்மனையில் கனோஜியின் பெரிய அறையில் பிரிட்டிஷாரிடமிருந்து கைப்பற்ற ஆசனமொன்றில் அமர்ந்திருந்த இதயசந்திரன் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தான். குலாபி கோயிலின் அர்ச்சகர் காத்திருக்கிறார் என்ற செய்தியைக் கொண்டு வந்த வீரனை வெறித்து நோக்கிய தமிழன் திடீரென்று எழுந்து, ‘‘சரி, போகலாம் வா’’ என்று வெளியே சென்றான்.

அவன் வேகத்தைக் கவனித்த வீரன் கேட்டான்: ‘‘அந்த வெள்ளைக்காரியை அழைத்துப் போக வேண்டாமா?’’ என்று.

‘‘இன்று வேண்டாம், நாளை அழைத்துப் போகலாம்.’’

அவனைப் பின்பற்றிச் சென்ற வீரன், ‘‘நாளைக்கு என்ன விசேஷம்?’’ என்று வினவினான்.

‘‘இன்று அவள் கிறிஸ்துவ மதம், நாளை ஹிந்து மதம்.’’



‘‘மன்னிக்க வேண்டும். ஏழை தலைவருக்குச் சுட்டிக் காட்டுவது தவறு. நமது மதத்தில் மதம் மாற முடியாது’’ என்றான் காவலன் திட்டமாக.

‘‘ஏன்?’’

‘‘நமது மதம் எல்லா மதங்களையும் உயர்ந்த மதங்களாக ஒப்புக் கொள்கிறது. ஆகையால் அங்கிருந்து யாரையும் இங்கு இழுக்கத் தேவையில்லை. தவிர...’’

‘‘என்ன?’’

‘‘இங்கிருப்பவர்களுக்கே மத நம்பிக்கை அதிகம் இல்லை. அங்கு நம்பிக்கையுடனிருப்பவர்களை இங்கு இழுத்து அவர்களையும் நாத்திகர்களாக அடிப்பானேன்?’’

வீரன் பேச்சு திட்டமாக இருந்தது. அதைப் பெரிதும் ரசித்தான் இதயசந்திரன். இருப்பினும் மேற்கொண்டு மத தர்க்கத்தை வளர்த்தாமல் குலாபியின் கோயிலுக்குள் நுழைந்தான். குலாபியின் உக்கிர சொரூபம் அவன் உள்ளத்தில் பக்தி, பயம் இரண்டையும் தோற்றுவித்தது. அந்தப் பயத்திலும் பக்தியிலும் நீண்ட நேரம் தோய்ந்து நின்ற தமிழன் தாயின் அடியிணைகளைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான். ‘‘காப்பாற்று தாயே’’ என்று மண்டியிட்டு வணங்கவும் செய்தான்.

குலாபியின் அருளும் உக்கிரமும் நிறைந்த பார்வை அவன்மீது பூரணமாக விழுந்தது. அவன் மனச் சிக்கல்களை அது மட்டும் உடைக்கவில்லை. அவள் அருளால் எதிர்பாராது ஏற்பட்ட நிகழ்ச்சியும் சிக்கலை உடைத்தது. கோயிலிலிருந்து அவன் வெளியே வந்ததும் ஒரு வீரன் காத்திருந்தான் அவனுக்காக.

‘‘என்ன விசேஷம்?’’ என்று வினவினான் தளபதி அவனை நோக்கி.

‘‘ஃபாதர் வந்திருக்கிறார்.’’

''யாரிடமிருந்து?''

''பம்பாய் கவர்னரிடமிருந்து.''

இதயசந்திரன் சற்றுச் சிந்தித்துவிட்டு, ''ஒரு விடுதியில் அவரையும் அவருடன் வந்திருப்பவரையும் தங்க வை. நாளை பார்க்கிறேனென்று சொல்'' என்று உத்தரவிட்டான்.

வீரன் நகரவில்லை. ''தங்களை உடனடியாகப் பார்க்க வேண்டுமாம். விஷயம் மிக அவசரமாம்'' என்றான்.

''என்ன அப்பேர்ப்பட்ட அவசரமாம்?'' என்று வினவினான் தமிழன்.

''கையில் ஒரு சிறு மூட்டை கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்.''

''என்ன அந்த மூட்டையின் விசேஷம்?''

''அதில் முப்பதினாயிரம் ரூபாய்கள் இருக்கின்றனவாம்.''

இதைக் கேட்ட இதயசந்திரன் அசைவற்று நின்றான்.

## அத்தியாயம் 23

# கவர்னரின் தூதுவன்

பம்பாய் கவர்னரிடமிருந்து தூதுவனொருவன் வந்திருக்கிறானென்பதையும் அவன் முப்பதினாயிரம் ரூபாயையும் கொண்டு வந்திருக்கிறானென்பதையும் கேட்ட மாத்திரத்தில் இதயசந்திரன் அதிர்ச்சியுற்று அசைவற்றுச் சில வினாடிகள் நின்றுவிட்டானென்றால் அதற்குக் காரணங்கள் பல இருந்தன.

கொலாபாவைத் தான் அடையுமுன்பாகவே கவர்னருக்குத் தன் வருகை தெரிந்ததோடு கொடுக்க வேண்டிய ஈட்டுப் பணமும் தெரிந்திருந்தது பெரும் வியப்பைத் தந்தது அவனுக்கு. 'நான் வந்து சிலமணி நேரங்களுக்குள் கவர்னர் தூதனும் வர முடிந்தது அகஸ்மாத்தாக நேர்ந்ததா, முன்பாகவே கணக்கிட்டுத் தீர்மானிக்கப் பட்டதா? முன்பே தீர்மானிக்கப்பட்டதென்றால் யாரால் அது தீர்மானிக்கப்பட்டது?' என்ற கேள்விகளை அவன் உள்ளத்தே எழுப்பிக் கொண்டாலும் அவற்றுக்கெல்லாம் விடை காணாமல் நின்ற இடத்தைவிட்டு ஏதும் பேசாமலே நடக்கத் தொடங்கி வந்த வீரனைப் பின்பற்றி தோர்லாவாடாவிற்குச் சென்றான். அந்தப் பெரிய அரண்மனையின் ஆஸ்தான மண்டபத்தின் நட்ட நடுவிலிருந்த பெரு மஞ்சத்தில் அமர்ந்து கொண்டதும் இரு வீரர்களை அழைத்துக் கவர்னரின் தூதரை அழைத்துவரக் கட்டளையிட்டான். வீரர்கள் சென்றதும் நாலைந்து வீரர்களுடன் உள்ளே நுழைந்த கோட்டைக் காவலன், வீரர்களை மஞ்சத்திலிருந்து எட்டக் காவல் வைத்து, ''தளபதி, தூதருடன் தாங்களே நேரில் பேசுகிறீர்களா அல்லது *பரஸ்னிஸை அழைக்கட்டுமா?'' என்று பணிவுடன் வினவினான்.

---

*பரஸ்னிஸ் என்பவர்கள் மொழிபெயர்ப்பாளர்கள். மற்ற மொழியாளருடன் பேச்சு வார்த்தை நடத்த மகாராஷ்டிரர்கள் இவர்களை நியமித்திருக்கிறார்கள்.

‘‘தேவையில்லை. நானே பேசுகிறேன். தூதரை அனுப்புங்கள்’’ என்று உத்தரவிட்டான் கோட்டைக் காவலனிடம் தளபதி.

அடுத்த நாலைந்து நிமிடங்களில் இரண்டு வெள்ளைக்காரர் ராணுவ உடையில் காவல் புரிந்துவர, ஆஜானுபாகுவான ஓர் ஆங்கிலேயன் ஆஸ்தான மண்டபத்துக்குள் நுழைந்தான். அவன் முகம் வெகு அழகாயிருந்ததையும், ராணுவ உடையில் அவன் வராது போனாலும் இடையில் ஒரு கைத்துப்பாக்கி செருகப்பட்டிருந்ததையும் அவன் கண்களில் கோபமோ தாபமோ சிறிதுமின்றி அவை வெகு நிதானத்துடன் தன்னை ஏறெடுத்து நோக்கியதையும் கண்ட இதயசந்திரன், எதையும் விழுங்கிவிடக் கூடிய ஒரு நுழைநரியிடம் தான் சிக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான். வந்த தூதன் இதயசந்திரனிருந்த மஞ்சத்துக்கு நாலடி தள்ளியே நின்று தலை வணங்கிவிட்டு சம்பிரதாயமெதற்கும் காத்திராமல் கூறினான் மிக இன்பமான குரலில், ‘‘ஈட்டுப் பணம் கொண்டு வந்திருக்கிறேன்’’ என்று. அத்துடன் பக்கத்திலிருந்த வெள்ளை வீரர்கள் ஆளுக்கிரண்டாக வைத்திருந்த உரமான முரட்டுப் பைகள் நான்கையும் சுட்டிக் காட்டினான்.

இதயசந்திரன் அவனைச் சற்று எட்ட இருந்த ஆசனத்தில் அமரச் சொல்லிவிட்டு அவனமர்ந்ததும் ஈட்டுப் பணம் யார் கேட்டது? யாருக்காகக் கேட்டது?’’ என்று வினவினான்.

கவர்னரின் தூதன் சிரிக்கும் விழிகளை அவன்மீது நிலைக்கவிட்டான் ஒரு விநாடி. பிறகு கடையிதழில் புன்முறுவலொன்றை லேசாகப் படரவிட்டுக் கொண்டு, ‘‘பிரிட்டிஷ் பெண்மணியொருத்தி உங்களிடம் கைதியாயிருக்கிறாள். அவளுக்காகவும் நீங்கள் கொள்ளையடித்துப் பிடித்த இரு கப்பல்களுக்காகவும் ஈட்டுப் பணம் கொண்டு வந்திருக்கிறேன். பிரிட்டிஷ் ரூபாய் முப்பதினாயிரம்

அப்படியொன்றும் லேசில் கிடைக்க...
என்று கூறினான் தூதுவன்.

இதயசந்திரன் கண்கள் தூதுவனைக் கூர்ந்து கவனித்தன. ‘‘அந்தத் தொகையை நான் ஏற்காவிட்டால்?’’ என்று வினவினான் இதயசந்திரன், தூதுவன் கடையிதழில் தெரிந்த புன்முறுவலுக்குக் காரணம் புரியாமல்.

‘‘ஏற்காதிருக்க முடியாதென்று நினைக்கிறேன்’’ என்றான் தூதுவன்.

‘‘யார் என்னைக் கட்டாயப்படுத்த முடியும்?’’ என்று மீண்டும் வினவினான் தளபதி.

‘‘நான்.’’

‘‘நீங்களா?’’

‘‘ஆம்.’’ தூதன் பதில் திட்டமாக இருந்தது.

இதயசந்திரன் அந்தப் பதிலைக் கேட்டு மெல்ல நகைத்தான். அந்தச் சிரிப்பைச் சிறிதும் லட்சியம் செய்யாத தூதுவன் கூறினான், ‘‘என் பெயர் வில்லியம் கிப்போர்ட்’’ என்று.

அந்தப் பெயரைக் கேட்டதும் சிறிது அசந்து போன இதயசந்திரன், ‘‘அஞ்சன்கோடு மிளகு ராணி*யின் நண்பரா’’ என்று வியப்புடன் வினவினான்.

அரபிக்கடல் பிராந்தியத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த ஆங்கிலேயரின் பெயர்களில் முதன்மை ஸ்தானம்

* மலையாளப்பகுதியில் உள்ள அஞ்சன்கோடு ராணி. அந்தப் பகுதியில் மிளகு அதிகமாக விளைந்ததால் மிளகு ராணி என்றழைக்கப்பட்டாள். அவளிடம் நட்புகொண்ட வில்லியம் கிப்போர்ட் அவளை மோசம் செய்ய முயன்று முடிவில் அவளாலேயே கொல்லப்பட்டான்.

வகித்தது வில்லியம் கிப்போர்ட்டின் பெயர். அவனும் கடற்போரை நன்கு அறிந்தவன். கவர்னரிடமும் உத்தியோகம் பார்த்தவன். சொத்தக் கப்பல் வைத்து வியாபாரமும் செய்து வந்தான். அஞ்சன்கோடு ராணியிடம் மிளகு வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்குத் தெரிந்தும் தெரியாமலும் நிரம்பப் பணம் சேர்த்திருந்தான். இந்திய மக்களிடம் நெருங்கிப் பழகக் கூடியவனென்றும், காரியம் எதுவானாலும் திட்டத்துடன் நிறைவேற்றக் கூடியவனென்றும் பிரசித்தி பெற்றவன். அவனைப்பற்றிப் பெரிதும் கேள்விப்பட்டிருந்ததால் இதயசந்திரன் அவனைப் பார்த்ததும் பெரு வியப்பெய்தினான். ஏனென்றால் வந்தவன் தன்னைவிடப் பெரியவனென்றாலும், அவனுக்குச் சுமார் முப்பத்தைந்து வயதுக்குள்ளேயே இருக்குமென்று கணக்குப் போட்டதால் இத்தனைச் சிறிய வயதில் அனுபவம் முதிர்ந்த வயோதிக, பிரிட்டிஷ் வர்த்தகர்கள்கூடச் செய்யமுடியாத எத்தனை வியாபாரங்களை கிப்போர்ட் செய்திருக்கிறானென்று தன்னைத்தானே வினவிக்கொண்ட தளபதி சற்று நிதானித்துக் கொண்டு கூறினான்: ''தூதுவரே! இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தால் இந்தத் தொகையை நான் ஏற்றுக் கொண்டிருப்பேன். காதரைனையும் அனுப்பியிருப்பேன். ஆனால் இன்றைய நிலைமை வேறு. காதரைனை நான் அனுப்ப முடியாது மற்ற கைதிகளை வேண்டுமானாலும் அனுப்புகிறேன். நாங்கள் பிடித்த கெட்ச், ஆன், கவர்னர் ஆயுதக் கப்பல் இரண்டையும் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்'' என்று.

தூதுவன் அனாவசியமாகப் பேச்சை வளர்த்தவில்லை. தனது ஆசனத்திலிருந்து எழுந்து இதயசந்திரனுக்கு அருகில் வந்து மடியிலிருந்து ஒரு சீலைச் சுருளை எடுத்து, ''இதைப் படியுங்கள்'' என்று அவனிடம் நீட்டினான்.

சீலையை பிரித்துப் பார்த்த இதயசந்திரன் கண்கள் [illegible] நின்றுவிட்டதால்



அவன் பேசச் சக்தியற்றவனானான். அந்தச் சீலையிலிருந்தது கனோஜி ஆங்கரே பம்பாய் கவர்னருக்கு எழுதிய கடிதம். ''கார்வாரிலிருந்து கிளம்பி எனது தஸ்தக்கின்றி மேலைக் கடலில் பயணம் செய்ததால் உங்கள் ஆயுதக் கப்பலும் ஆன் என்ற கப்பலும் எனது போர்க் கப்பலொன்றால் கைப்பற்றப்பட்டன. பிடிபட்ட கப்பலையும் அதிலிருந்த பிரிட்டிஷ் பெண் காதரைன், மற்றுமுள்ள மாலுமிகள் ஆகியோரையும் நீங்கள் முப்பதினாயிரம் ரூபாய் கொடுத்துத் திரும்பிப் பெற வேண்டியது. இந்தத் தொகையைக் கொலாபாவிலுள்ள எனது உபதளபதி இதயசந்திரனிடம் கொடுத்தால் உடனடியாகக் காதரைனையும், மற்ற கைதிகளையும் உங்களிடம் ஒப்படைக்க அவருக்கு உத்தரவிருக்கிறது—கனோஜி'' என்றிருந்த அந்தக் கடிதத்தின் வாசகத்தைப் படித்த இதயசந்திரன் கல்லென சில விநாடிகள் உட்கார்ந்து விட்டான். முடிவில் கூறினான், ''இதைப் பற்றிச் சிந்திக்க எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்'' என்று.

வில்லியம் கிப்போர்ட்டின் விழிகளில் இகழ்ச்சிச் சிரிப்பு உலாவியது. ''கனோஜி ஆங்கரேயிடம் உள்ள ஒரே ஒரு தமிழ்த் தளபதி நீங்கள்தானே?'' என்று வினவினான் கிப்போர்ட்.

இதை எதற்காகக் கேட்கிறான் கிப்போர்ட் என்பதை அறியாத இதயசந்திரன், ''ஆம், அதற்கென்ன?'' என்று பதிலுக்கு ஒரு கேள்வியை வீசினான்.

''நீங்கள் அறிவாளியென்று கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றான் கிப்போர்ட் இகழ்ச்சி மிகுந்த குரலில்.

''அப்படியா!'' என்ற இதயசந்திரன் குரலிலும் இகழ்ச்சி ஒலித்தது. கிப்போர்ட் தன்னைப்பற்றி இகழ்ச்சியாகப் பேசியதுமே சுரணைகள் பூராவையும் திரும்பப்

பெற்று விட்ட இதயசந்திரன் கிப்போர்ட்டை மிகுந்த அலட்சியத்துடன் நோக்கவும் செய்தான்.

இதயசந்திரன் குரலில் ஒலித்த இகழ்ச்சியையும் அவனது கண்கள் திடீரெனப் பளிச்சிடத் தொடங்கிவிட்டதையும் கண்ட கிப்போர்ட் சற்று எச்சரிக்கையடைந்து மிகத் தந்திரமாகப் பேச்சைத் தொடர முற்பட்டு, ''நீங்கள் கண்ணியவானென்றும் கேள்விப் பட்டிருக்கிறேன்'' என்றான்.

''மகிழ்ச்சி.'' இதயசந்திரனின் ஒற்றைச் சொல் மிகுந்த இகழ்ச்சியுடன் ஒலித்தது.

''எனக்கும் மகிழ்ச்சிதான். எனக்கென்ன, கவர்னருக்கும் மகிழ்ச்சிதான்'' என்றான் கிப்போர்ட்.

''எதற்கு உங்களுக்கு மகிழ்ச்சி?''

''காதரைன் உங்களிடம் சிக்கியதற்காக, உங்கள் பாதுகாப்பில் அனுப்பப்பட்டதற்காக.''

''அதிலென்ன விசேஷம்?''

''உங்களுக்கிருக்கும் நற்பெயர் உண்மையானால் காதரைன் சீரழிக்கப்படாமல் எங்களிடம் சேருவாளென்ற நம்பிக்கையிருக்கிறது.''

''நீங்கள் கூறியதில் ஒரு பாதி சரி. ஒரு பாதி தவறு'' என்று மெல்லக் கூறினான் இதயசந்திரன்.

கிப்போர்ட்டின் கண்கள் சற்றே உயர்ந்தன. அதுவரை அவற்றிலிருந்த விஷமச் சிரிப்பு மறைந்து கவலை லேசாகத் தெரிந்தது. ''எந்தப் பாதி சரி, எந்தப் பாதி தவறு?'' என்று வினவிய குரலிலும் கவலை தெரிந்தது.

''என் காவலில் வரும் காதரைன் சீரழிக்கப்பட [illegible] என்ற பகுதி சரி. உங்களிடம் அவள் சேரப்



போகிறாள்' என்ற பகுதி தவறு'' என்று விளக்கினான் இதயசந்திரன்.

கிப்போர்ட்டின் கண்களில் கவலையுடன் குழப்பமும் தெரிந்தது. ''இரண்டுக்கும் வேறுபாடு எப்படி முடியும்? பாதுகாத்துக் கண்ணியத்துடன் அழைத்து வரப்பட்ட காதரைன் எப்படி எங்களிடம் சேராதிருக்க முடியும்? அவளை அனுப்பச் சொல்லி கனோஜியின் உத்தரவும் இருக்கிறதே'' என்றான் கிப்போர்ட்.

இதயசந்திரன் சர்வ சாதாரணமாகச் சொன்னான், ''உத்தரவை மாற்ற அவசியமிருக்கிறது'' என்று.

''என்ன! மாற்ற அவசியமிருக்கிறதா?'' இதைக் கேட்ட கிப்போர்ட்டின் குரலில் பிரமிப்பு தெரிந்தது. ''கனோஜியின் உத்தரவை யார் மாற்ற முடியும்'' என்ற இரண்டாவது கேள்வியும் அவனிடம் தொடர்ந்தது.

''சந்தர்ப்பங்கள் மாற்ற முடியும்'' என்று பதில் கூறினான் இதயசந்திரன்.

''சந்தர்ப்பங்களா?''

''ஆம்.''

''என்ன அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள்?''

''காதலைப் பற்றியவை.''

''யாருக்குக் காதல்?''

''எங்களுக்குத்தான்.''

''எங்களுக்கென்றால்?''

''எனக்கும் காதரைனுக்கும்.''

இதைக் கேட்ட கிப்போர்ட் சில விநாடிகள் மிதமிஞ்சிய திகைப்பால் அசைவற்று உட்கார்ந்து விட்டான். பிறகு மெல்ல உறுதி மிகுந்த குரலில் கேட்டான், ''நீ காதரைனைக் காதலிக்கிறாயா?'' என்று.

“அவள்?”

“பூர்ணமாகக் காதலிக்கிறாள்.”

“அப்படியானால் அவளை மணம் செய்து கொள்வாயா?”

“செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டேன்.”

“அப்படியானால் முப்பதினாயிர ரூபாய்!”

“கடற்படைத் தலைவருக்கு நான் தந்துவிடத் தீர்மானித்திருக்கிறேன்.”

கிப்போர்ட் பல விநாடிகள் மௌனமாக உட்கார்ந்து விட்டான். பிறகு கேட்டான்: “உன் திருமணத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் சமுதாயத்தில் அவள் நிலை என்ன தெரியுமா?”

“தெரியும். அவளை உங்கள் சமுதாயம் பகிஷ்கரித்து விடும்” என்றான் இதயசந்திரன்.

“அதுமட்டுமல்ல தளபதி! அவளை பிரிட்டிஷ்காரர் மட்டுமல்ல, வெள்ளைக்காரரர் அனைவரும் வெறுப்பார்கள். உங்களிடம் பிடிபட்டதால் இப்பொழுதே அவள் பிரிட்டிஷ் வரலாற்றில் இடம் பெற்றுவிட்டாள். உன்னைத் திருமணம் செய்து கொண்டால் வரலாற்றில் இன்னும் நிரந்தரமான இடம் பெறுவாள். மிகவும் கேவலமான பிற்கால சந்ததிகளும் காறித் துப்பும்படியான இடத்தைப் பெறுவாள். இது உங்களுக்குச் சம்மதமா?” என்றும் கேட்டான் கிப்போர்ட் உணர்ச்சியுடன்.

“இதையெல்லாம் கேட்டியே சொன்னாள்” என்றான் இதயசந்திரன் பதிலுக்கு.

காதரைன் பெயரைச் செல்லமாக இதயசந்திரன் உச்சரித்ததைக் கேட்டதால் முகஞ் சுளித்தான் கிப்போர்ட்.



இத்தனை தூரத்துக்கு காதரைனுக்கும் இவனுக்கும் உறவு முற்றியிருக்கக் கூடுமா என்று தன்னைத்தானே ஒருமுறை கேட்டுக் கொண்டான். இருப்பினும் தனது சந்தேகத்தை வெளிக்குக் காட்டாமல் சற்று மரியாதையாகவே கேட்டான், “தளபதி! இதை அறிந்தும் அந்தப் பெண்ணை மணக்க விரும்புகிறீரா?” என்று.

“ஆம்.”

“இதில் அவள் தியாகம் எத்தனை தெரியுமா?”

“தெரியுமென்பதைத்தான் முன்பே கூறினேனே.”

“இத்தகைய தியாகத்தை வீரனான நீங்கள் ஏற்கப் போகிறீர்களா?” என்று கேட்டான் கிப்போர்ட்.

“கிப்போர்ட்!” என்றழைத்த இதயசந்திரன், “தியாகம் அவளுடையது மட்டுமல்ல, எனது தியாகமும் இதில் கலந்திருக்கிறது” என்று கூறினான்.

“ஆடவனுக்கு இதில் என்ன தியாகமிருக்க முடியும்?” என்று சற்று முகத்தை அதிகமாகவே சுளித்துக்கொண்டு கேட்டான் கிப்போர்ட்.

“கறுப்பனை மணந்தால் காதரைன் எப்படி உங்கள் சனாதனத்திலிருந்து பகிஷ்கரிக்கப்படுவாளோ அப்படி வெள்ளைக்காரியை மணந்தால் என் சமுதாயம் என்னை பகிஷ்கரிக்கும். என்னுடன் மற்ற இந்துக்கள் உணவருந்த மாட்டார்கள். எங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுடன் சம்பந்தம் செய்து கொள்ள மாட்டார்கள். ஆகவே எங்கள் இருவர் நிலையும் ஒன்றுதான்” என்று விளக்கினான் தளபதி.

கிப்போர்ட் சிந்தித்தான். “இன்னும் ஒரு கேள்வி தளபதி! காதரைன் உங்களைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறாளா?” என்று வினவினான் கிப்போர்ட்.

''இல்லை!'' இதயசந்திரன் திட்டமாகக் கூறினான் உண்மையை.

''உன்னைக் காதலிக்கிறாளா காதரைன்?'' என்று வீசினான் கிப்போர்ட் இன்னுமொரு கேள்வியை.

''ஆம்.'' இதயசந்திரன் பதில் தடங்கலின்றி வந்தது.

கிப்போர்ட் இதயசந்திரனுக்கு வெகு அருகில் வந்து நின்றுகொண்டான். ''காதலிப்பவள் உன்னை மணக்க ஏன் மறுக்கிறாள்?'' என்று வினவவும் செய்தான் நிதானத்துடன்.

''சமுதாயத்திற்கு அஞ்சுகிறாள்.''

''ஆனால் மணமின்றி உன்னைக் காதலிக்க இஷ்டப் படுகிறாள்?'' வெகு இரைந்து சீறினான் கிப்போர்ட்.

''ஆம்.''

இதைச் சொல்லி முடிக்கவில்லை இதயசந்திரன். மிகப் பயங்கர நிகழ்ச்சி நேர்ந்துவிட்டது அந்த ஆஸ்தான மண்டபத்தில். நிகழ்ச்சியைக் கண்டவர் சிலையெனச் சமைந்து நின்றனர்.

## அத்தியாயம் 24

# சிருஷ்டியும் அமைதியும்

**வே**கமான உணர்ச்சியால் வெள்ளைக்கார வில்லியம் கிப்போர்ட் செய்துவிட்ட விவேகமற்ற அந்தச் செய்கையால் என்ன நேரிடுமோ என்ற எண்ணத்தாலும் திகிலாலும் பெரும் நிசப்தம் உலாவியது கனோஜியின் ஆஸ்தான மண்டபத்தில் ஒரு விநாடி. அடுத்துக் கிறீச்சென்று எழுந்த காதரைனின் குரல் ஆஸ்தான மண்டபத்தின் விபரீத அமைதியைக் கிழித்து விடவே, மண்டபத்துள் காவல் புரிந்த மகாராஷ்டிர வீரர்கள் வாளை உருவிக்கொண்டு வெள்ளையனை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தனர். காதரைனும் மண்டபத்தின் கோடியிலிருந்த அறையின் முகப்பிலிருந்து விடுவிடுவென ஓடி வந்து இதயசந்திரன் ஆசனத்துக்கு எதிரே வந்ததும் மலைத்து நின்றாள். எதிரும் புதிருமாக இருந்த மகாராஷ்டிர உபதளபதியையும் கவர்னர் தூதுவனையும் மாறி மாறிப் பார்க்கவும் செய்தாள் ஒரு வினாடி. கிப்போர்ட்டுடன் வந்த வெள்ளைக் காவல் வீரர் இருவரும் கூட வாட்களை உருவிக் கொண்டனர்.

கண்ணிமைக்கும் நேரத்தில் வெடித்துவிடக் கூடிய விபரீத நிலை அது. வில்லியம் கிப்போர்ட்டும் வெள்ளை வீரரும் அங்கேயே வெட்டப்பட்டு, சிரங்கள் மண்டபத்துள் உருளும் பயங்கர நிலை அது. எல்லோர் இதயங்களும் மிதமிஞ்சிய கிலியால் குதிரை போல் ஓடிக் கொண்டு அவரவர்களை சம்மட்டி போல் அடித்த நிலை அது. அத்தகைய பயங்கர நிலையைச் சிருஷ்டித்துவிட்டான் வில்லியம் கிப்போர்ட் உணர்ச்சி மிகுதியால். காதரைன் மணக்க இஷ்டப்படவில்லை. மருவ இஷ்டப்படுகிறாள் என்ற இதயசந்திரன் சொல்லைக் கேட்டதும் அதைவிட ஒரு பெரிய அவமானத்தை ஒரு பிரிட்டிஷ் பெண்மணிமீது

...முடியாது என்ற நினைப்பாலும், அத்தகைய பேரவமானத்தை ஓர் இந்தியன் சுமத்திவிட்டானே என்ற ஆக்ரோஷத்தாலும், தனது கைகளில் அணிந்திருந்த உறைகளிலொன்றை எடுத்து இதயசந்திரன் முகத்தில் சரேலென்று வீசிவிட்டான் வில்லியம் கிப்போர்ட்.

அந்தத் துணிவுக்கு அப்பொழுதே மரணப் பரிசு கிடைத்திருக்கும் கிப்போர்டுக்கு, இதயசந்திரன் மட்டும் வீரர்களை நோக்கிக் கண்களைக் காட்டாதிருந்தால். அசாதாரண நிலைகளில் பெரும் நிதானத்தைக் காட்டும் பயிற்சியைக் கனோஜியிடமிருந்து கற்றிருந்த தமிழன் தன் முகத்தில் எறியப்பட்டு மடியில் விழுந்து கிடந்த அந்தக் கையுறையைத் தனது ஒரு கையால் எடுத்துக் கொண்டான். பிறகு எதிரே தீவிழி விழித்துக் கொண்டிருந்த தூதுவனைப் பார்த்து நிதானத்துடன் கூறினான், ‘‘கிப்போர்ட்! நீ மிகுந்த துணிவுள்ளவன்’’ என்று.

அந்த நிதானத்தைக் கண்ட கிப்போர்ட் பின்னுக்கு இரண்டடிகள் எடுத்து வைத்துக் கம்பீரமாக நின்றான். இதயசந்திரனை அச்சம் சிறிதுமில்லாத கண்களைக் கொண்டு நோக்கினான். ‘‘பிரிட்டிஷ் மக்கள் தங்கள் பெண்களின் மானத்தைப் பெரிதாக மதிக்கிறார்கள். அந்த மானத்திற்கு மாசு கற்பிக்கும்போது பிரிட்டிஷ் குடிமகன் எவனும் தனது உயிரைப் பெரிதாக நினைப்பதில்லை’’ என்றும் கூறினான்.

‘‘எந்த பிரிட்டிஷ் பெண்ணின் மானத்துக்கு மாசு ஏற்பட்டுவிட்டது இப்பொழுது?’’ என்று உணர்ச்சி சிறிதுமற்ற குரலில் கேட்டான் இதயசந்திரன்

கிப்போர்ட் காதரைனை நோக்கினான். அவளும் அவனை நோக்கினாள். அவள் கண்களில் தெரிந்த கிலியைத் தவறாகப் பொருள் கொண்டான் கிப்போர்ட். அவள் கிலியெல்லாம் வலுவில் தமிழனைத்தான் சரசத்துக்கு



அழைத்தது வெளியானால் தன் மானம் என்ன ஆவது என்பதால் ஏற்பட்டது. இதைப் புரிந்துகொள்ளாத கிப்போர்ட், கப்பலில் ஏதோ துராக்கிருதமாகத் தமிழன் நடந்து கொண்டிருக்கிறான் அவளிடம் என்றே நினைத்தான். கடற்போரில் இறந்து போன மிஸ்டர் சௌன் அவனுக்குச் சிறந்த நண்பனாதலாலும், காதரைனை மணப்பதில் பம்பாயில் சௌனிடம் போட்டி போட்டவனாதலாலும், காதரைனிடம் அவனுக்கு முன்பு ஏற்பட்ட காதல் இப்பொழுதும் பூர்ணமாக இருந்ததாலும், இதயசந்திரன் சொன்ன பதில்களிலெல்லாம் பெரும் பிழைகளையும் காதரைன் நடத்தையிலெல்லாம் பெரும் கறையுமே கண்ட கிப்போர்ட் அவள் முகத்திலிருந்த உணர்ச்சிகளைப் பார்த்து, ‘‘இவளுக்குத்தான் மாசு, அதுவும் உன்னால் தான்’’ என்றான் காதரைனைச் சுட்டிக் காட்டி.

இதயசந்திரன் மஞ்சத்தில் நன்றாகச் சாய்ந்துகொண்டு கிப்போர்ட்டின் கையுறையைத் தடவிக் கொடுத்தான். ‘‘கிப்போர்ட்! காதரைன் இதோ எதிரிலிருக்கிறாளே, என்னால் இவளுக்கு ஏதாவது களங்கம் உண்டா என்று நேரிடையாகவே கேட்டுப் பார்ப்பதுதானே?’’ என்றான் நிதானத்துடன்.

‘‘கேட்க வேண்டியதில்லை. அவள் முகம் சொல்கிறது’’ என்றான் கிப்போர்ட்.

‘‘கிப்போர்ட்! தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது’’ என்றான் தமிழன்.

‘‘பழமொழி எனக்குத் தேவையில்லை.’’

‘‘தேவை உண்டு. கேள். கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்.’’

‘‘விசாரணை தேவையில்லை. இவள் உன்னை மணக்க விரும்பவில்லை, ஆனால் அணைக்க விரும்புகிறாள் என்று சொல்கிறாய். அதுவே போதும் எனக்கு.’’

இதயசந்திரன் இதைக் கேட்டதும் கிப்போர்ட்டின் மீதிருந்த கண்களைக் காதரைனை நோக்கித் திருப்பி ''கேட்டி! நீ என்ன சொல்கிறாய் இதற்கு?'' என்று வினவினான்.

காதரைன் விழிகள் கிலியால் பெரிதும் மலர்ந்தன. அவள் புத்தி வெகு துரிதமாக வேலை செய்தது. இதய சந்திரன் சொல்வதை அடியோடு மறுக்கவும் முடியாது. மறுத்தால் அவன் ஹர்கோவிந்த், இப்ரஹீம், பர்னாண்டோ மூவரையும் கொண்டு தான் சொல்வது சரியென்று நிரூபிப்பான். உண்மையை ஒப்புக் கொண்டால் கிப்போர்ட்டும் மற்ற வெள்ளையரும் தன்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். ஆகவே மையமான ஒரு முறையைக் கையாண்டாள் காதரைன். பெண்ணின் சாகசத்துக்கு முன்னால் ஆணின் உண்மை எப்படிப் பயனற்றுப் போகும் என்பதைக் காட்டினாள். மெள்ள மரியாதையுடன் உரையாடலைத் தொடங்கி, ''கனோஜியைப்பற்றி உலகமறியும். அவர் தளபதியின் முயற்சிகளைப்பற்றி ஏழை என் சொல்ல? அதுவும் நான் உங்களிடம் கைதி...'' என்றாள் நிலத்தைப் பார்த்த வண்ணம் பரிதாபக் குரலில்.

இதயசந்திரன் அவள் தந்திரத்தைப் புரிந்து கொண்டான். கனோஜியின் நடத்தையைப் பற்றிப் பயங்கர வதந்திகள் உலாவிய காலத்தில் தன்னைப்பற்றி எது சொன்னாலும் எதிரி வட்டாரங்களில் எடுபடும் என்பதைச் சந்தேகமின்றிப் புரிந்து கொண்டான் ஜலதீபத்தின் தளபதி.

''உன் மானத்திற்கு மாசு விளைவித்ததாக கிப்போர்ட் கூறுகிறான். அது உண்மையா?'' என்று மீண்டும் வினவினான்.

''பெண்களைப்பற்றி புரட்டுகளைக் கிளப்புவதும், மாசு கற்பித்து மகிழ்ச்சி அடைவதும் புருஷர்களின் தனி



உரிமை...'' காதரைன் வாசகத்தை முடிக்காமல் மீதியை ஊகத்துக்கு விட்டாள்.

''நீ என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?''

''முடியாதென்று முன்னமே சொல்லிவிட்டேன்.''

''ஏன்?''

''காரணமும் சொல்லிவிட்டேன்.''

''என்னைக் காதலிக்கவில்லையா நீ?''

காதரைன் இதயசந்திரனைப் பார்க்காமல் பதிலுக்குக் கிப்போர்ட்டை நோக்கினாள். ''வில்லியம்! நான் இதற்குப் பதில் சொல்ல வேண்டுமா?'' என்று வினவினாள் துக்கம் தொண்டையை அடைக்க.

வில்லியம் கிப்போர்ட் அந்த ஆஸ்தான மண்டபமே அதிரும்படியாகக் கூவினான், ''வேண்டியதில்லை!'' என்று. ஒரு தாண்டில் சென்று காதரைனுக்கு அருகில் நின்றுகொண்டு அவளது இடுப்பைப் தனது கையால் இழுத்து அணைத்தும் கொண்டான். அத்துடன் கூறினான்: ''இவளை காப்பாற்ற என் உயிரையும் விடுவேன்'' என்று.

''அதற்கு அவசியமிருக்கும்'' என்று பதில் கூறிய இதயசந்திரன் வெள்ளைக்காரனும் வெள்ளைக்காரியும் இணைந்து நின்ற காட்சியைப் பார்த்தான். அத்தகைய இருவர், மணம்புரிவதில் அர்த்தமிருக்கிறது என்று நினைக்கவும் செய்தான். இருப்பினும் இந்தச் சாகசக்காரியிடம் வீரனான கிப்போர்ட் அகப்பட்டுக் கொள்ளப் போகிறானே என்று பரிதாபமும் கொண்டான். தனது கையிலிருந்த வெள்ளையன் கையுறையையும் பார்த்தான். பிறகு கேட்டான், ''கிப்போர்ட்! பிறரைச் சண்டைக்கு அழைக்க இப்படிக் கையுறையை முகத்திலெறிவது வெள்ளையர் வழக்கமா?'' என்று.

''ஆம். தொன்றுதொட்ட பழக்கம். இதற்கு எங்கள் மொழியில் 'சாலஞ்ச்' என்று பெயர்'' என்றான் கிப்போர்ட்.

''நான் உன்னிடம் சண்டையிட மறுத்தால்?'' என்று வினவினான் தமிழன்.

''நீ கோழை என்று உலகம் தூற்றும்.''

''உலகமென்றால்?''

''வெள்ளையர் உலகம்.''

''சரி. வெள்ளையர் உலகத்தில் தூதுவனைக் கொல்வது சரியென்று மதிக்கப்படுகிறதா?'' என்று மற்றுமொரு கேள்வியை வீசினான் தமிழன்.

இதைக் கேட்ட கிப்போர்ட் சிறிது சங்கடப்பட்டான். தூதுவரைக் கொல்லக் கூடாதென்ற சம்பிரதாயத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு தன்னுடன் போரிடத் தமிழன் மறுத்துவிட்டால் என்ன செய்வது என்றும் குழம்பினான். சிறிது சிந்தித்துவிட்டுக் கூறினான்: ''அதற்கு ஒரு வழி இருக்கிறது'' என்று.

''என்ன வழி?'' என்று வினவினான் ஜலதீபத்தின் தளபதி.

''இந்தச் சண்டையை நானே வலுவில் வரவேற்றதாகவும், விளைவுக்கு நீங்கள் பொறுப்பாளியல்லவென்றும் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அதை நீங்கள் கவர்னருக்கு அனுப்பினால் உங்கள் பெயருக்கு ஏதும் மாசு ஏற்படாது. ஆனால் அதற்கு அவசியமேது?'' என்றான் கிப்போர்ட்.

''ஏன் அவசியமில்லை?''

''போரில் நான் உங்களைக் கொல்வது நிச்சயம். உங்களைக் கொன்றதற்காக உங்கள் மாலுமிகள் என்னைக் கொன்று விடுவார்கள். ஆகையால் கடிதம் பயனற்றுப் போய்விடும்.''



இதைக் கேட்ட இதயசந்திரன் வியப்பில் வசப்பட்டான். வெள்ளையனின் தன்னம்பிக்கையை நினைத்தும் போர்த் திறமையில் அவனுக்கு இருந்த அவநம்பிக்கையை நினைத்தும் புன்முறுவலும் கோட்டினான். அவன் வீரத்தையும் துணிவையும் எண்ணி மரியாதையும் காட்ட முடிவு செய்து கிப்போர்ட்டை நோக்கி, ''கிப்போர்ட்! இரவு ஏறிவிட்டது! நன்றாக உண்டு படுத்துறங்குங்கள். நாளைக் காலையில் உங்களிஷ்டப்படி போரிடுவோம். உங்களுக்கு எந்த ஆயுதங்களில் நல்ல பயிற்சி உண்டோ அந்த ஆயுதங்களைக் கொண்டே போரிடுவோம்...'' என்று சொல்லிக்கொண்டே போனவனைத் தடை செய்த கிப்போர்ட், ''இல்லையில்லை. உங்கள்மீது கையுறை எறிந்தது நான். ஆகவே, உங்களுக்கிஷ்டமான ஆயுதங்களைக் கொண்டு போரிடுவது உங்கள் உரிமை'' என்று கூறினான்.

இதயசந்திரன் ஆசனத்திலிருந்து எழுந்தான். ''கிப்போர்ட்! அந்த உரிமையை நான் விட்டுக் கொடுக்கிறேன். நீங்கள் தூதுவர். என் கோட்டையில் இருக்கிறீர்கள். உங்களுக்கும் போரிடும் வசதியளிப்பது எனது கடமை'' என்று மிகுந்த மரியாதையுடனும் கண்ணியத்துடனும் கூறிய இதயசந்திரன் வீரர்களை அழைத்து, ''தூதுவருக்குச் சகல வசதிகளையும் செய்து கொடுங்கள்'' என்று உத்தரவிட்டான். அத்துடன் காதரைனைச் சுட்டிக் காட்டி, ''இந்தக் கைதியை அவள் அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்றும் உத்தரவிட்டான். கடைசி உத்தரவில் காதல் மறைந்து கடுமை துவங்கியது.

வீரர்கள் இருவரையும் அணுகினர். கிப்போர்ட் மகாராஷ்டிர வீரர் வழிகாட்ட தனது மெய்க் காவலர் தொடர, ஆஸ்தான மண்டபத்திலிருந்து வெளியே சென்றான். காதரைனை இரு வீரர்கள் அந்த ஆஸ்தான மண்டபத்தில் ஒரு கோடியிலிருந்த அறைக்கு அழைத்துச் சென்றனர். மற்ற வீரர்களையும் போகச் சொன்ன இதயசந்திரன் நீண்ட நேரம் தனித்து மஞ்சத்தில் உட்கார்ந்திருந்

தான் அந்தப் பெரும் ஆஸ்தான மண்டபத்தின் நடுவே, அன்றுவரை பெண்களிடமிருந்த மதிப்பெல்லாம் அவன் இதயத்திலிருந்து பறந்து கிடந்தது. காதரைனின் திடீர்த் திருப்பம் அவன் மனத்தை வெடிக்கச் செய்துவிடும் போலிருந்தது. 'வாழ்வில் பானுதேவி வந்தாள்; அரசியல் வேலைக்கு என்னை உபயோகித்துக்கொள்ள என்னிடம் சரசமாடினாள். மஞ்சு வந்தாள்; மணக்கும் சமயத்தில் மறைந்தாள். காதரைன் வந்தாள்; வெள்ளைக்காரனைக் கண்டதும் காதலை மறுக்கிறாள், மறைக்கிறாள். காதலென்ன பூசணிக்காயா சோற்றில் மறைக்க? சே சே! பெண்கள் எத்தனை விபரீத ஜன்மங்கள்!' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டான். 'கனோஜியின் வழிதான் சரி, அவருக்கு இன்றுவரை மூன்று மனைவிகள், எட்டு ஆசை நாயகிகள். அவர் என்ன கெட்டுவிட்டார்! நான் என்ன பயனடைந்துவிட்டேன்? ஆனால் கடமையிருக்கிறதே எனக்கு, மகாராஷ்டிரத்தின் மூன்றாவது வாரிசைக் கண்டு பிடிக்க?' என்றும் நினைத்தான் அவன்.

நித்திரை வராதிருக்கவே, அரை ஜாமம் கழித்து, கடலிலிருந்து கோட்டைக்குள் வரும்படி வெட்டிவிடப்பட்டிருந்த கால்வாய்க்குச் சென்று அங்கிருந்த படகொன்றை அவிழ்த்துக் கொண்டு அதைத் துழாவச் செய்து தூரத்தே நின்ற ஜலதீபத்தை அடைந்தான். ஜலதீபத்தின் நூலேணியில் திடீரென ஏறிவந்த தளபதியைக் கண்ட வீரனொருவன் ஓடிச் சென்று ஹர்கோவிந்தை அழைத்தான். திகிலுடன் அடித்தளத்திலிருந்து இப்ரஹீமுடனும், பர்னாண்டோவுடனும் ஓடிவந்த ஹர்கோவிந்த், ''தளபதி, என்ன இந்த நேரத்தில்...'' என்று துவங்கி மேலே ஏதும் கேட்க முடியாமல் வார்த்தைகளை விழுங்கினான்.

''ஒன்றுமில்லை ஹர்கோவிந்த், இங்கு உறங்க வந்தேன்'' என்றான் தளபதி.



''அதிக சௌகரியமிருக்கிறது. கப்பலில் படுத்துப் பழகிவிட்டதால் அங்கு உறக்கம் பிடிக்கவில்லை. நான் படுத்துக் கொள்கிறேன். விடியற்காலையில் சுக்ரோதயத்தின் போது என்னை எழுப்பிவிடு. நீங்கள் மூவரும் என்னுடன் கோட்டைக்கு வர ஆயுதம் தரித்துத் தயாராயிருங்கள்'' என்று உத்தரவிட்டுத் தனது அறையை நோக்கிச் சென்றான்.

அதுவரை அந்த அறை காதரைனுக்காக ஒழித்துவிட்டிருந்த அறை. அறைக்குள் நுழைந்ததும் அங்கிருந்த விளக்கை ஏற்றினான் இதயசந்திரன். அறையில் அந்தப் பஞ்சணை அவனை நோக்கி நகைத்தது. நடந்த கதையெல்லாம் திரும்பச் சொல்லி நகைத்தது. அவனும் நகைத்தான் மெல்ல, தனது வாழ்வின் விசித்திரப் போக்கை நினைத்து. பிறகு படுத்தான் பஞ்சணையில். அந்த நிலையிலும் அது அவள் படுத்த பஞ்சணையென்ற நினைப்பு அவன் அமைதியைக் குலைக்கவே செய்தது. ''ஆண்களின் அமைதியைக் குலைக்கவே பெண்கள் பிறக்கிறார்கள். இதற்காக ஒரு சிருஷ்டியா?'' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

## அத்தியாயம் 25

# கேலிக் கூத்து

அமைதியைக் குலைக்கும் சக்திகள் சிருஷ்டியில் அனந்தம். அவற்றை வெற்றி கொள்கிறவனுக்கே சாந்தி கிடைக்கிறது. அவற்றின் வழி செல்பவனுக்குச் சித்தத்தில் சலனமும், வாழ்வில் ஏமாற்றமுமே கிடைக்கின்றன. அத்தகைய சலனத்தையும், ஏமாற்றத்தையும் மூன்று பெண்கள் மூலம் அடைந்த இதயசந்திரன், ஜலதீபத்தின் தளபதி பஞ்சணையில் ஏதேதோ நினைத்த வண்ணமே கிடந்தான். கண்ணை எத்தனையோ இறுக மூடியும் உறக்கம் வரவில்லை அவனுக்கு.

'கண்ணை மூடுவதால் புலன்களை மூட முடிவதில்லை. புலன்கள் மூடினால் கண் தாமாகவே மூடும். அப்பொழுது தான் நித்திரை எனும் சாந்தி கிடைக்கும்' என்ற தத்துவம்கூட அந்தச் சமயத்தில் அவன் புத்தியில் உலாவலாயிற்று. இப்படிப் பெண்களையும் தத்துவங்களையும் அவன் நினைத்துப் படுத்துக் கிடந்தானே தவிர வில்லியம் கிப்போர்ட்டைப் பற்றியோ மறுநாள் ஏற்படவிருந்த சண்டையைப் பற்றியோ அவன் நினைக்கவில்லை. ஆகவே, விடியற்காலைக்குச் சற்று முன்பாகவே அவனையும் மீறி உறக்கம் ஆட்கொண்டபோது நன்றாகவே அயர்ந்து தூங்கினான். அவனை எழுப்பப் பலமுறை ஹர்கோவிந்த் கதவைத் தட்டவேண்டியதாயிற்று.

ஹர்கோவிந்த் மடமடவெனப் பலமுறை கதவைத் தட்டியதன் விளைவாக, எழுந்திருந்த இதயசந்திரன் பஞ்சணையில் உட்கார்ந்தபடியே கைகால்களை நன்றாக உதறி விட்டுக் கொண்டான். பிறகு வெளியில் வந்து அங்கு பூர்ணமாக ஆயுதங்களணிந்து நின்ற ஹர்கோவிந்த், இப்ரஹீம், பர்னாண்டோ மூவரையும் பார்த்துப்



புன்முறுவல் செய்துவிட்டு மாலுமியொருவனை விளித்து, பல் துலக்கவும் முகம் கழுவவும் நீர் கொண்டுவரச் சொல்லித் தன்னைத் தயார் செய்து கொண்டு புறப்படச் சித்தமாகவே, இப்ரஹீம் படகொன்றை இறக்கினான் நீர் மட்டத்துக்கு. நூலேணி மூலம் அதிலிறங்கிய நால்வரில் இப்ரஹீம் துடுப்புகளை எடுத்துத் துழாவவே படகு கோட்டையை நோக்கிச் சென்றது.

அன்று காலை மிக ரம்மியமாயிருந்தது. வெள்ளி மட்டுமே முளைத்த அந்த நேரத்தில், தும்பைப் பூவைப் போல் வெளிறிட்டுக் கிடந்த வெண்மதியின் நிலவும் குறைந்த அந்த நேரத்தில், கடல் நீர் கண்ணாடி போல் பளபளத்தது. காற்றும் மிகச் சுகமாக வீசிக் கொண்டிருந்தது. கோட்டைப் பாறையின்மீது தாக்கிய அலைகள் கூடப் பாறையைக் கண்ணாடியாக நினைத்து வெகு ஜாக்கிரதையாக மெல்லத் தாக்கிக் கொண்டிருந்தது. அந்த இன்பத்தையும் ஜில்லென்ற காற்றையும் அனுபவித்துக் கொண்டே படகில் உட்கார்ந்திருந்த இதயசந்திரனை நோக்கி மெல்லக் கேட்டான் ஹர்கோவிந்த், "கோட்டையில் ஏதாவது தகராறை எதிர்பார்க்கிறீர்களா?" என்று.

இதயசந்திரன் அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தான். பிறகு கூறினான், "இல்லை. எந்தத் தகராறையும் நான் எதிர்பார்க்கவில்லை" என்று.

"அப்படியானால் எதற்காக எங்களை ஆயுதமணிந்து வரச் சொன்னீர்கள்?" என்று வினவினான் பர்னாண்டோ.

"சாட்சியம் வேண்டும். அதற்காகத்தான்" என்று சர்வ சாதாரணமாகக் கூறினான் தளபதி.

அதுவரை ஏதும் பேசாமல் துடுப்புகளைத் துழாவிக் கரையை நோக்கிப் படகைச் செலுத்திக் கொண்டிருந்த இப்ரஹீம் கேட்டான், "எதற்கு சாட்சி தளபதி?" என்று.

‘‘இன்னும் சிறிது நேரத்தில் ஒருவனுடன் சண்டையிட வேண்டும்...’’ என்ற இதயசந்திரனை மேற்கொண்டு பேச விடாத அம்மூவரும் ஏககாலத்தில் மிகுந்த உற்சாகத்துடன், ‘‘சண்டையா? யாருடன்?’’ என்று வினவினார்கள்.

‘‘ஒரு வெள்ளைக்காரனுடன்’’ என்று கூறினான் தளபதி.

‘‘எதற்காகத் தளபதி?’’ என்று வினவினான் பர்னாண்டோ.

‘‘என்னிடம் முறை தவறி நடந்து கொண்டான்...’’

‘‘அதற்கு அவனுடன் சண்டையிடுவானேன்? காவலரை விட்டு வெட்டிப் போடுவதுதானே?’’

‘‘வெட்டிப் போடுவதற்கில்லை.’’

‘‘ஏன்?’’

‘‘அவன் உண்மையறியாதவன்.’’

‘‘அப்படியானால் கொல்ல வேண்டாம், சிறையில் தள்ளுவதுதானே?’’

‘‘அதுவும் முடியாது.’’

‘‘ஏன்?’’

‘‘அவன் பம்பாய் கவர்னரின் தூதன். தவிர, நமது ஸார்கேலிடமிருந்து கடிதத்துடன் வந்திருக்கிறான்.’’

இந்தப் பதிலைக் கேட்டதும் அதுவரை கேள்வி கேட்ட பர்னாண்டோ மட்டுமல்ல மற்ற இருவரும்கூடப் பிரமிப்படைந்தார்கள். அந்தப் பிரமிப்புடன் கலந்த அச்சத்தின் விளைவாகவும் இதயசந்திரனிடமிருந்த அன்பின் விளைவாகவும் மெள்ளக் கூறினான் பர்னாண்டோ, ‘‘தளபதி! அவன் கவர்னரிடமிருந்தென்ன, பிரிட்டிஷ் மன்னரிடமிருந்தே தூது வந்திருந்தாலும் கவலையில்லை. ஆனால் ஸார்கேலிடமிருந்து வந்துள்ள கடிதத்தை நீங்கள் புறக்கணித்தால் ஆபத்தாயிற்றே?’’ என்று.



பர்னாண்டோவின் அச்சம் ஹர்கோவிந்துக்குமிருந்ததால், ‘‘இது விஷயத்தில் நீங்கள் ஆலோசித்து எதுவும் செய்வது நல்லது’’ என்று எச்சரித்தான்.

அவ்விருவரையும் நோக்கி இதயசந்திரன் கூறினான், ‘‘பர்னாண்டோ! ஹர்கோவிந்த்! நீங்கள் நினைக்கிற அத்துணை ஆபத்தில்லை இதில். ஸார்கேலிடமிருந்து நேர்ப்பட எனக்குக் கடிதமில்லை; கவர்னருக்கும் அவர் எழுதிய கடிதத்தைக் கொண்டு வந்திருக்கிறான் தூதன். அதை நான் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் கடிதம் கனோஜியிடமிருந்து வந்திருந்தால்கூட அவரது ஆஸ்தான மண்டபத்தில் என் முகத்தின்மீது கையுறையை வீசியெறியும் வெள்ளைக்காரனை நான் மன்னிக்க முடியுமா? அவன் என்னைச் சண்டைக்கு அழைக்கும் போது பின்வாங்குவதுதான் வீரனுக்கு அழகா? இதில் எனக்கு மாத்திரமல்ல அவமானம். ஸார்கேலையும் இந்த அவமானம் விடாது. ‘ஸார்கேலின் கோட்டைக்குள்ளேயே சென்று அந்தக் கொள்ளைக்காரன் உபதளபதியை முகத்தில் அறைந்து திரும்பினான் நமது தூதன்’ என்று வெள்ளைக்காரர் கொக்கரித்தால், ஸார்கேலின் பெயருக்கு மீளா இழுக்கு ஏற்படும். ஆகவே இந்தச் சண்டை தவிர்க்கத் தக்கதல்ல’’ என்று.

மற்ற மூவரும் சில விநாடி நேரம் மௌனம் சாதித்தனர். நீண்ட யோசனைக்குப் பின்பு ஹர்கோவிந்த், ‘‘இந்தச் சண்டைக்கு நாங்கள் சாட்சிகளாயிருந்து என்ன செய்யப் போகிறோம்?’’ என்று வினவினான் மெள்ள.

‘‘சண்டை நேர்மையாக நடந்தது என்பதற்கு நீங்கள் சாட்சிகள்’’ என்றான் இதயசந்திரன்.

‘‘தங்கள் நேர்மையைப் பற்றி யாருக்கும் சந்தேகம் கிடையாதே?’’ என்று சுட்டிக் காட்டினான் இப்ராஹீம்.

‘‘உங்கள் கருத்து அப்படியிருக்கலாம். மூன்றாமவர் கருத்து வேறுபடலாம். தவிர, நான் கவர்னர் தூதுவருடன்

போரிடுகிறேன். தூதர்களிடம் போரிடுவதோ அவர்களை அவமானப்படுத்துவதோ, அரச தர்மமாகாது. ஆகவே இந்தச் சண்டையில் நான் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருக்கிறது'' என்றான் இதயசந்திரன்.

அதற்கு மேல் அந்த மூவரும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. தங்களுக்குத் தாங்களே பலபடி கேட்டுக்கொண்டு கோட்டைக்கு வந்து சேர்ந்தனர்.

கனோஜியின் பெருமாளிகையை அடைந்ததும் கோட்டைக் காவலர் தலைவனை அழைத்த இதயசந்திரன், ''காவலரே! கவர்னர் தூதரை எழுப்பி அவருக்குக் காலையில் வேண்டிய ஆகாரத்தைக் கொடுங்கள். பிறகு மிகுந்த மரியாதையுடன் நமது மாளிகைக்குப் புறம்பேயுள்ள இடத்தில் அவரை அழைத்து வாருங்கள். அங்கு சண்டை விஷயமாகச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை இவர்கள் மூவரும் கவனித்துக் கொள்வார்கள்'' என்று உத்தரவிட்டு அவனை அனுப்பிய பின்பு, பர்னாண்டோவை நோக்கி, ''பர்னாண்டோ! கவர்னரின் தூதுவர் சண்டை செய்யுமிடத்தை அடைந்ததும் அவர் எந்த ஆயுதம் கொண்டு போரிடப் பிரியப்படுகிறார் என்பதை விசாரித்தறிந்து கொள். அந்த ஆயுதம் கொண்டே போராடுகிறேன்'' என்றான்.

பர்னாண்டோ அந்த ஏற்பாட்டை எதிர்த்தான். ''இது சரியல்ல தலைவரே'' என்றும் கூறினான்.

''எது சரியல்ல பர்னாண்டோ?'' என்ற இதயசந்திரன் முகத்தில் வியப்புக்குறி தோன்றியது.

''தனி நபர் விரோதத்தின் மீது சண்டையிடும் முறை இதுவல்ல. யார் அவமானப்படுத்துகிறாரோ, அவரிஷ்டமல்ல போர் முறையோ, ஆயுதத் தேர்வோ. நீங்கள் இஷ்டப்படும் ஆயுதங் கொண்டுதான் அவர் போரிடலாம். இதுதான் ஐரோப்பாவில் பழக்கம்'' என்றான்.



இதயசந்திரன் முகத்திலிருந்த வியப்புக் குறி புன்முறுவலாக மாறியது. ''பர்னாண்டோ'' என்று விளித்த தளபதி குரலில் சற்றுக் கேலியும் இருந்தது.

''என்ன தளபதி?''

''இது ஐரோப்பாவல்ல. ஆசியா கண்டம், அதிலும் பாரதநாடு.''

''ஆம்.''

''தியாகத்துக்குப் பேர் போனது.''

''இருக்கட்டுமே.''

''நாம்தான் தூதனுக்குச் சிறிது விட்டுக் கொடுப்போமே'' என்ற இதயசந்திரன் பர்னாண்டோவின் பதிலுக்குக் காத்திராமல் தோர்லாவாடாவுக்குள் நுழைந்தான். நுழைந்தவன் ஆஸ்தான மண்டபத்தையும் தாண்டி காதரைன் இருந்த அறையின் கதவைத் தட்டினான். உள்ளிருந்து வந்தது காதரைனின் அதிகாரக் குரல், ''யாரது?'' என்று.

இதயசந்திரன் முகத்தில் இகழ்ச்சிக் குறி படர்ந்தது. ''நான்தான் உன் காதலன்'' என்ற சொற்களிலும் இகழ்ச்சி ஒலி தாண்டவமாடியது.

''யார், தளபதியா?'' காதரைன் குரலில் வியப்புமிருந்தது, அச்சமுமிருந்தது.

''ஆம் கேட்டி'' என்ற இதயசந்திரன் குரல் குழைந்தது.

உள்ளிருந்து பதிலேதும் நீண்டநேரம் வரவில்லை. பிறகு மெல்லக் கதவு மட்டும் திறக்கப்பட்டது. கதவு திறந்தபோது காதரைன் இரவு ஆடையைக் கழுத்திலிருந்து கால்வரை தொங்கும்படி அணிந்திருந்ததைக் கவனித்த இதயசந்திரன், ''அப்பா! இன்றுதான் இப்படிப் பார்க்கிறேன் கேட்டி'' என்றான்.

''எப்படி?'' குழப்பத்துடன் வந்தது அவள் கேள்வி.

''கழுத்திலிருந்து கால்வரை மூடியுள்ள வேடத்தில்.''

''இது வேடமா?''

''மாறுபட்டதெல்லாம் வேடந்தானே?'' இதைச் சொல்லி நகைத்தான் இதயசந்திரன்.

அவன் அப்பொழுது குறிப்பிட்ட மாறுபாடு உடையைப் பற்றியது மட்டுமல்ல என்பது அவளுக்குப் புரிந்திருந்தது. முதல்நாள் ஆஸ்தான மண்டபத்தில் தான் பூரணமாக நிலைமையைத் திருப்தி விட்டது, அபாண்டமான பொய் கூறியது— இவற்றைத்தான் தமிழன் குறிப்பிடுகிறான் என்பதைப் புரிந்துகொண்டதால், 'இவன் எதற்காக இங்கு வந்திருக்கிறான்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டாள். அவள் முகத்தில் அச்சம் நன்றாகத் துலங்கியது. அந்த அச்சத்துடன் சினமும் கலந்து கொள்ளவே, ''இங்கு எதற்காக வந்தாய் நீ?'' என்று கேட்டாள் மரியாதையைக் கைவிட்டு.

''உன்னைக் கடைசி முறையாகப் பார்க்க வந்தேன்'' என்றான் இதயசந்திரன் இகழ்ச்சி குரலில் ஒலிக்க.

''கடைசி முறையா? எப்படிக் கடைசி முறை?'' என்று கேட்டாள் கேட்டி.

''இன்று உன் நான்காவது காதலன்— ஒருவேளை, மூன்றாவது புருஷனும் ஆகலாம்— அவனுடன் உன்னை அனுப்பப் போகிறேன் பம்பாய்க்கு'' என்று குறிப்பிட்ட இதயசந்திரன் புன்முறுவல் காட்டினான்.

அல்லி மலரின் அழகிய கண்கள் அவனை உற்று நோக்கின. அவள் இதயத்திலிருந்து பெருமூச்சொன்று வந்தது. அவள் சொன்னாள், ''இதயசந்திரா, நீ மட்டும் நான் சொல்கிறபடி கேட்டிருந்தால் என்ன இன்பத்தில் நாமிருவரும் திளைத்திருப்போம், கொள்கை கொள்கை



யென்று கொள்கைகளைக் கட்டிக் கொண்டு திண்டாடினாய். அதைச் சற்றுத் தளர்த்தியிருந்தால் நம் வாழ்வு எத்தனை மாறுபட்டிருக்கும்? இன்று நீயும் நானும் சேர்ந்து பம்பாய் போவோம். அங்கு ஐரோப்பிய நாகரிகத்தின் மடியில் நீ விளையாடியிருப்பாய் பற்பல அழகிகளை நீ சந்தித்திருப்பாய். ஆனால் எல்லாவற்றையும் கெடுத்தாய். இன்று பிராணனையும் விடப் போகிறாய்!'' என்று.

இதயசந்திரன் மெல்ல நகைத்தான். ''பிராணனை விடப் போகிறேனா?'' என்றும் வினவினான் நகைப்பின் ஊடே.

''ஆம், வில்லியம் வாட்போரில் இணையற்றவன். கைத்துப்பாக்கியால் சுடுவதில் குறி தவறாதவன்'' என்றாள் காதரைன்.

''கேட்டி, நீ கூறியது எனக்குப் பலத்தைத் தருகிறது. அவன் ஒருவேளை சொல்வீரனோ என்று நினைத்தேன். செயல்வீரனாகவுமிருந்தால் மிக நல்லது. இன்னும் அரை ஜாமத்தில் புறப்படத் தயார் செய்து கொள்.''

''எங்கு?''

''உன் காதலன் கையால் என் மரணத்தைப் பார்க்க'' என்று கூறிவிட்டு இதயசந்திரன் சென்றான்.

அவன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு காதரைன் நீண்ட நேரம் நின்றாள். பிறகு பெருமூச்சு எறிந்து, ''இதயசந்திரா! நீ வெள்ளைக்காரனாயிருக்கக் கூடாதா? நீ கேட்டபடி உன்னை மணமே புரிந்து கொண்டிருப்பேனே'' என்று சற்று வாய்விட்டே சொன்னாள். பிறகு உள்ளே சென்று புறப்படத் தன்னைத் தயார் செய்து கொள்ளலானாள்.

சரியாக அரை ஜாமம் கழிந்ததும் அவளுக்கு அழைப்பு வந்தது. அவள் கதவைத் தட்டிய கோட்டைக் காவலன்,

''எல்லாம் தயாராகிவிட்டது. உங்களுக்காகத்தான் தளபதி காத்துக்கொண்டிருக்கிறார்'' என்று அறிவித்தான். காதரைன் பதிலேதும் சொல்லாமல் புறப்பட்டாள். அவளை அழைத்துக் கொண்டு சண்டை நிலத்துக்கு வந்த கோட்டைக் காவலன் அங்கு ஆயுதமேதுமின்றி வேடிக்கை பார்க்க வந்தவன்போல் நின்றுகொண்டிருந்த இதயசந்திரனிடம், ''இதோ அழைத்து வந்துவிட்டேன்'' என்று அவளை ஒப்படைக்கும் பாவனையும் கூறி, அவளைச் சுட்டியும் காட்டினான்.

இதயசந்திரன் வெள்ளைக்காரப் பாணியில் அவளை நோக்கி நன்றாகத் தலைதாழ்த்தினான். ''கேட்டி! உன் பொருட்டு ஏற்பட்டுள்ள சண்டை இது. ஆகவே இதைப் பார்க்க உன்னை அழைத்தேன். இந்தச் சண்டை உங்கள் நாட்டு விதிப்படி நடக்கிறது. இதோ இருக்கும் கோட்டைக் காவலரும் எனது உபதளபதிகள் மூவரும் இச்சண்டைக்குச் சாட்சிகள். இதில் நான் கொல்லப் பட்டால் உனக்கோ கிப்போர்ட்டுக்கோ அவரது மெய்க் காவலருக்கோ எந்தத் தீங்கும் விளையாமல் பாதுகாத்து உங்களைப் பம்பாய்க்கு அனுப்பிவைக்க இவர்கள் என்மீது ஆணையிட்டிருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டு விடுவிடு என்று நடந்து சற்றுத் தூரத்தில் நின்றிருந்த கிப்போர்ட்டிடம் சென்று, ''தூதுவரே! நீங்கள் வாட் போரையே விரும்பியதாகச் சொன்னார்கள். ஆகவே, வாட்களைக் கொண்டே போரிடுவோம். நீங்கள் தயாரானதும் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு அவனைத் தோளிலும் செல்லமாகத் தட்டிவிட்டுத் திரும்பத் தன் உபதளபதிகள் இருந்த இடத்துக்கு வந்த இதயசந்திரன் தனது சட்டையை அவிழ்த்துக் கீழே எறிந்து சராயுடனும் திறந்த உடம்புடனும் நின்றான். ''ஹர்கோவிந்த்! உன் வாளைச் சிறிது நேரம் கடன் கொடு'' என்று கேட்டு வாங்கிக் கொண்டான். மகாராஷ்டிரர்களின் அந்த வளைவு வாளை இருமுறை கூர்பார்த்துக் காற்றில் இருமுறை விசிறியும் பதம்



பார்த்தான். பிறகு தூரத்தே நின்ற எதிரியை நோக்கி னான்.

ஆஜானுபாகுவான வில்லியம் கிப்போர்ட் கோட்டைக் கழற்றி ஷர்ட்டுடன் மட்டும் நின்றான். தனது காலிலிருந்த பூட்ஸைத் தரையில் ஊன்றிச் சரிபார்த்தான். பிறகு இடையிலிருந்த கச்சையிலிருந்த வாளை உருவி எடுத்து உறையைப் பக்கத்திலிருந்த மெய்க்காவலனிடம் கொடுத்தான். பிறகு தனது நீண்ட வாளைக் கையால் நீட்டிப் பார்த்து எதிரியின் வாளையும் பார்த்தான். அந்தச் சிறிய வளைவு வாளைப் பார்த்த கிப்போர்ட் தனது வாளுடன் அந்த வாள் எப்படி இணைய முடியும். அதைக் கொண்டு எப்படிப் போராட முடியும் என்று நினைத்துப் பார்த்தான். தனது வாளின் நீளத்திடம் அணுகக்கூட எதிரியால் முடியாதென்ற நினைப்பால் இதயசந்திரனிடம் ஓரளவு அனுதாபங்கூட ஏற்பட்டது அவனுக்கு. இருப்பினும் கடமையைச் செய்யத் துணிந்த கிப்போர்ட் உருவிய வாளுடன் தமிழனை எதிர்நோக்கி வந்தான். சில வினாடிகளில் போரை முடித்து விடலாமென்ற நினைப்புடன்தான் வந்தான். கிப்போர்ட் நினைத்தது வேறு, நடந்தது வேறு. அவன் நினைத்தது சுலப வெற்றி. விளைந்தது வெற்றியுமல்ல, தோல்வியுமல்ல. வெறும் கேலிக் கூத்து.

## அத்தியாயம் 26

# அடுத்தது யார்?

ஆஜானுபாகுவாய் வெள்ளை வெளேரென்ற சட்டை சராய்களுடனும், நீலக் கண்களுடனும் நீண்ட வாளை உருவி நின்ற வில்லியம் கிப்போர்ட்டின் அழகையும், அவன் வாளைப் பிடித்திருந்த உறுதியையும், நிலத்தில் கால்கள் ஊன்றி நின்ற திடத்தையுங் கண்ட இதயசந்திரன் பெரு மகிழ்ச்சி கொண்டான். தன் முகத்தில் கையுறை வீசிய வெள்ளைக்காரன் வெற்றுத் துணிச்சல் கொண்டவனல்ல. உண்மையில் வீரன் என்ற நினைப்பு அவனுக்குப் பெரும் ஆறுதலும் அளித்தது. ஆகவே, கிப்போர்ட் ஏழெட்டு அடிகள் நடந்து வந்து மையத்திலிருந்த இடத்தில் நின்று, ''நான் தயார்'' என்று சொன்னதும் இதயசந்திரன் பரம சந்துஷ்டியுடன் அவனை நெருங்கியதும் வெள்ளைக்காரன் தனது தலையைத் தாழ்த்தி வணங்கி இரண்டடி பின்னுக்கு நகர்ந்து திடீரென வாளைத் தூக்கி இதயசந்திரன் தலையை நோக்கி இறக்கினான். வில்லியம் கிப்போர்ட்டின் நீண்ட அந்தப் பலமான வாள் மட்டும் தலையில் இறங்கியிருந்தால் இந்தக் கதை திரும்பும் பாதையே வேறு.

ஆனால் அந்த வாளின் கதி இதயசந்திரன் விதியை நிர்ணயிக்கச் சக்தியற்று ஒரு விநாடி அவன் தலைக்கு ஒரு அடி மேலேயே நின்றது. மறு விநாடி சுழன்றது. அது மட்டுமல்ல சுழன்றது, பிடித்திருந்தவனையும் சுழலச் செய்தது. தமிழன் திடீரெனத் தலைக்குமேல் தூக்கிய வளைவு வாள் அதனுடைய நட்ட நடுவில் தன் வாளைத் தடுத்து நிறுத்தியதும், பிறகு சர்ரென்று ஒரு மூலைக்கு அதை இழுத்துச் சுழற்றியதுமே அந்தச் சுழற்றலுக்குத் தான் சுற்றியிராவிட்டால் தனது வாட்கை மணிக்கட்டு எலும்பு முறிந்திருக்கக்கூடிய அளவுக்கு வலியைக்



கொடுத்ததும் ஏதோ செப்பிடு வித்தையாயிருந்தது வெள்ளைக்காரனுக்கு. வாளின் கனத்தையும் நீளத்தையுமே அவன் நம்பியிருந்தான். மெல்லிய வாளிலும் பலமிருக்கும். அதைச் சுழற்றுவதில் வித்தையிருக்கும் என்பதை அவனறியவில்லை. ஆகவே வாளை அந்த மகாராஷ்டிர வளைவு வாளிடமிருந்து விடுவித்துக் கொள்ளவும் மணிக்கட்டைக் காப்பாற்றிக் கொள்ளவும் மும்முறை சுழன்ற அவன் சிறிது தன்னைத் திடப்படுத்திக் கொள்ள ஒரு விநாடி பின்வாங்கினான். அப்படிப் பின்வாங்கிய நேரத்தை எதிரி பயன்படுத்திக் கொள்வானென்று எதிர் பார்த்திருந்ததால் அவன் ஏமாந்தே போனான்.

இதயசந்திரன் இருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. நீண்டகால மாலுமித் தொழிலாலும், வெய்யிலிலும், காற்றிலும் அடிபட்டதாலும் பழுப்பேறியிருந்த உடலுடனும் உடலுக்குச் சற்று அதிகமாகவே கருகியிருந்த முகத்துடனும், சர்வ சகஜமாக நின்றிருந்த அவன் தோரணையைக் கண்டு, காதரைன் அந்த விநாடியிலும் பிரமித்தாள். அவனிடம் பழையபடி ஆசையும் கொண்டாள். கிப்போர்ட்டின் வாளை அவன் தனது வாளால் அனாயாசமாகத் தடுத்துச் சுழற்றி விட்டதும் வாளுடன் ஆளும் சுழன்றதும் அவளுக்குப் பெரிதும் விந்தையாயிருந்தது. கப்பலில் அவனுடன் பயணம் செய்தபோதெல்லாம் அவன் வாள் திறமையைப்பற்றி மாலுமிகள் பேசியதைக் கேட்டிருந்தாள். இருப்பினும் பிரிட்டிஷ் வட்டாரங்களில் பெரிய வாள் வீரனென்று பெயர் பெற்ற கிப்போர்ட்டை இத்தனை அலட்சியமாக அவன் நடத்த முடியுமென்பதை அவள் முற்றும் எதிர் பார்க்கவில்லை. எதிர்பாராத அந்த நிகழ்ச்சி அவளை மீண்டும் தமிழனின் திறமையிலும், திறமையை விளக்கிய கம்பீர சரீரத்திலும் திளைக்க விட்டதால், 'அப்பா! என்ன இளைப்பான எத்தனை வலுவான சரீரம்! இவர் வளைந்து நிற்கும்போது வளைந்த மகாராஷ்டிரர் வாளைப்போல்

தானிருக்கிறார். இந்தியன் என்ற ஒரு பிழை மட்டுமில்லாவிட்டால்...' என்று நினைத்த காதரைன் மேற்கொண்டு நினைக்காமல் பெருமூச்சு மட்டும் விட்டாள்.

அவள் இத்தகைய நினைப்புகளில் ஆழ்ந்து கொண்டிருக்கையிலேயே நிதானப்பட்டுவிட்ட கிப்போர்ட் மீண்டும் போரைத் துவக்கினான். இம்முறை அவன் வாளைச் சுழற்றிக் கொண்டு இதயசந்திரனை நெருங்கிய போது மிகுந்த எச்சரிக்கையுடன் நெருங்கினான். வாளைச் சுழற்றி எதிரியின் மார்பை எட்டிவிட முயன்றானே தவிர வாளை உயரத் தூக்கவில்லை. மாறுபட்ட இந்தப் போர் முறையால் ஆரம்பத்தில் அவனுக்குச் சிறிது பலனும் கிடைத்தது. இரண்டு மூன்று முறைகள் அவன் வாளைத் தடுத்த தளபதியின் வாளில் முதலில் கண்ட வலு காணப்படவில்லை. அந்த வாளின் தடையையும் மீறி அவனது நீண்ட வாள் தமிழனின் உடலுக்கு வெகு அருகில் செல்வதும் சாத்தியமாயிற்று. ஆகையால் அந்தப் போர் முறையையே கையாண்ட கிப்போர்ட் தனது நீண்ட வாளை மார்பளவு உயரத்துக்கு மேலே செல்லவிடாமல் வளைத்து வளைத்துச் சுழற்றியே தாக்கினான். மெள்ள மெள்ள அதிலும் ஓர் உண்மை புலனாயிற்று அவனுக்கு. திரும்பத் திரும்ப, சுற்றிச் சுற்றித் தனது நீண்ட வாளை எதிரி மார்பை நோக்கிச் செலுத்திய கிப்போர்ட் தனது வாள் முதலிரண்டு மூன்று தடவைகளைப் போல் எதிரி வாளின் பாதுகாப்பை உடைக்க முடியவில்லையென்பதையும் தனது வாள் நுழைய முயன்ற இடங்களில் எதிரியின் வளைந்த வாள் முன்னதாகவே இருந்ததையும் உணர்ந்ததால் தமிழன் ஏதோ தன்னுடன் விளையாடுகிறானே தவிர உண்மையாகப் போரிடவில்லையென்பதைப் புரிந்து கொண்டான். அந்த உண்மையைப் புரிந்து கொண்டதால் அவன் முகத்தில் குறுவியர்வை துளிர்த்தது. வெகு சீக்கிரம் போர் முடியாவிட்டால் எதிரி தற்காப்புப் போரிலேயே தன்னைச் சளைக்க அடித்து விடுவா



னென்பதை உணர்ந்து கொண்ட கிப்போர்ட் வெகு மும்முரத்துடனும் வாளைத் தூக்கியும் சுழற்றியும் நீட்டியும் பாய்ந்து பாய்ந்து போரிட்டான்.

அந்த மும்முரச் சண்டையிலும் இருந்த இடத்தை விட்டு நகராமல் தன் வாளைக் கொண்டு எதிரி வாளைத் தடுத்துக் கொண்டே சில சமயங்களில் ஹர்கோவிந்திடமும், சில சமயங்களில் காதரைனுடனும் உரையாடத் தொடங்கினான் தளபதி. ''ஹர்கோவிந்த்! ஜலதீபம் உடனடியாக எங்கும் போகத் தேவையிராது. ஆகையால் முடிந்த வரையில் கோட்டையை நெருக்கிக் கொண்டு வந்தே நங்கூரம் பாய்ச்சிவிடு. அதைப் பாதுகாக்கச் சில காலிவாத்துக்களைச் சுற்றிலும் நிற்க வை. நீங்கள் மூவர் கூட அங்கு தேவையில்லை. ஒருவர் இருந்துகொண்டு மற்றவர் கோட்டைக்கு வந்துவிடலாம்'' என்று கூறினான்.

கிளிங் கிளாங் சர் என்ற வாட்களின் மோதல் ஒலிகள், உராய்ந்த ஒலிகள் இவற்றுக்கிடையே உதிர்ந்த அந்தச் சொற்களுக்கு ஹர்கோவிந்தும் பதில் கூறினான், ''அப்படியே செய்கிறேன். நான் இருந்துகொண்டு இவர்களை அனுப்புகிறேன் கோட்டைக்கு. இவர்களில் ஒருவர் திரும்பிய பிறகு நான் வருகிறேன்'' என்று.

''காதரைன்! இனி நீ போகலாம். உன்னையும் கிப்போர்ட்டையும் பாதுகாக்க இவர்களுக்கு உத்தரவு இருக்கிறது என்று இவர்கள் எதிரில் உனக்குக் கூறவே இங்கு அழைத்து வந்தேன். இனி நீ போய்ப் பயணத்துக்கு ஏற்பாடு செய்துகொள். இன்று பிற்பகல் நீ புறப்பட்டு விடலாம் கிப்போர்ட்டுடன்'' என்று கூறி அவளைச் செல்லும்படி, இடதுகையால் சைகை செய்தான்.

கை ஏதோ அவனுக்குச் சம்பந்தப்படாததுபோல் வாளைச் சுழற்ற, வாய் மற்றவர்களுக்குச் சேதி சொல்ல, நடந்த அது போரா விளையாட்டா என்பது புரியவில்லை காதரைனுக்கு. அவள் கண்கள் வியப்பால் பெரிதும்

மலர்ந்தன. கண்களைகூடத் தமிழன் எதிரிமீதும் அவன் வாள்மீதும் ஊன்றி வைக்காமல் அரைப் பார்வையிலே போரிட்டு வந்தது அவளுக்கு விசித்திரமாயிருந்தது. அந்த விசித்திரம் அவள் இதயத்தில் மீண்டும் காம வேட்கையைக் கிளப்பிவிடவே அவள் பதிலேதும் சொல்லவில்லை.

அந்தச் சண்டையைப் பற்றி அவன் மட்டுமின்றி அவனுடைய உபதலைவர்களும் அதிகமாகச் சட்டை செய்யாதது அவளுக்கு வியப்பாயிருந்தது. ஆரம்பத்தில் நின்று அந்தச் சண்டையைப் பார்த்த உபதளபதிகள் மூவரும் சிறிது நேரத்திற்கெல்லாம் சற்று எட்ட இருந்த பாறைமீது உட்கார்ந்து ஏதோ பேச முற்பட்டதைக் கண்ட காதரைன் ஜலதீபத்தின் தளபதி, உபதளபதிகள் சம்பந்தப்பட்ட வரையில் இது சண்டையே அல்ல என்று தீர்மானித்துக் கொண்டாள். இதயசந்திரன் பெரும் கடல் வீரன் என்பது அவளுக்குத் தெரிந்ததுதான். அதை அவள் அனுபவித்துமிருந்தாள். ஆனால் தனிப் போரில் நிலத்தில் அவன் இணையற்ற வாள் வீரன் என்பதை அன்று உணர்ந்ததால் அவன்மீது அவளுக்கிருந்த இச்சை அதிகமாயிற்று. ஆகவே அவன் போகச் சொன்ன பிறகும் போகவில்லை அவள். ''போரின் முடிவுக்குப் பிறகு போகிறேன்'' என்று கூறினாள் அவள் கோபத்துடன்.

''அப்படியானால் போரை முடித்து விடுவோமா?'' என்று கேட்டான் இதயசந்திரன் கிப்போர்ட்டை நோக்கி.

இந்தக் கேள்வியால் அதிக உக்ரமடைந்த கிப்போர்ட் தன் வாளை எழுப்பித் தன் பலம் முழுவதையும் உபயோகித்து இதயசந்திரன் தலைமீது இறக்க முயன்றான். அடுத்த விநாடி 'உச்' என்ற துன்ப ஒலி அவனிடமிருந்து வந்தது. அந்த 'உச்'சைத் தொடர்ந்து அவன் நீளவாள் தரையை நோக்கித் தொங்கியது. காதரைன் விழிகள் அகல விரிந்தன. கிப்போர்ட்டின் மணிக்கட்டிலிருந்து குருதி மெல்ல வந்து கொண்டிருந்தது. கிப்போர்ட்



தனது உதட்டை அவமானத்தால் கடித்துக் கொண்டிருந்தான். எந்த மந்திரத்தால் தன் வாள் விலகியது? எந்த விநாடியில் தனது வாள் கை மணிக்கட்டு எதிரி வாள் நுனியால் குத்தப்பட்டது என்பதை உணர முடியாத காரணத்தால் அவன் முகத்தில் பிரமிப்பும் குடிகொண்டிருந்தது.

எதிரி வாள் நிலத்தில் தொங்கியதும், ''இந்தா வாள் எடுத்துக்கொள்'' என்று ஹர்கோவிந்திடம் வீசி எறிந்தான் இதயசந்திரன். அந்த வாளை அவன் பிடித்து அதன் நுனியில் மட்டுமிருந்த சிறு ரத்தக் கறையைப் பார்த்து, ''லேசாகத்தான் குத்தியிருக்கிறீர்கள் தளபதி! இது எப்படி முடிந்தது? வாளின் வேகத்தை வாள் பாயும் போது எப்படிக் குறைவுபடுத்த முடியும்?'' என்று வினவினான் வியப்புடன். அவன் கூறியதைக் கேட்டதும் பர்னாண்டோவும், இப்ரஹீமும் அதை ஒரு விநாடி ஆராய்ந்தனர். மறுவிநாடி பிரமை தட்டிய கண்களைத் தளபதியின் மீது திருப்பினர்.

தளபதி அதற்கப்புறம் அங்கு நிற்காமல், ''கிப்போர்ட்டின் காயத்துக்குக் கட்டுப் போடுங்கள். அவர்களை அழைத்து வாருங்கள்'' என்று கூறிவிட்டு, ''கேட்டி, வா! வா போவோம் மாளிகைக்கு'' என்று கூறிவிட்டு நடந்தான் தோர்லாவாடாவை நோக்கி.

காதரைன் நடந்து சென்ற இதயசந்திரனைப் பார்த்தாள். சற்று எட்ட மணிக்கட்டில் குருதி பெருக நின்று கொண்டிருந்த கிப்போர்ட்டைப் பார்த்தாள். ஓடிவந்து அவன் வாளை வாங்கிக்கொண்டு கைக்குட்டையால் காயத்தைக் கட்ட முனைந்து கொண்டிருந்த இப்ரஹீமைப் பார்த்தாள். ஏதும் செய்யாமல் பிரமை பிடித்து நின்ற பிரிட்டிஷ் மெய்க்காவலரையும் பார்த்தாள். பிறகு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க இதயசந்திரனைத் தொடர்ந்து சென்றாள். அவனைத் தொடர்ந்து வேகமாகச் சென்ற காதரைன் அவனையும் தாண்டி விடுவிடு

லாவாடாவை அடைந்து தனது அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுப் படுக்கையில் படுத்தாள்.

நடந்ததெல்லாம் மந்திர வித்தை போலிருந்தது அவளுக்கு. அன்று வரை அவள் வில்லியம் கிப்போர்ட்டை பெரிய வாள் வீரனென்று நினைத்திருந்தாள். பம்பாயில் இரண்டு மூன்று முறை அவன் தனக்காக வாட்போரிட்டு எதிரிகளை எமனுலகு அனுப்பியிருந்ததை அவள் கண்கூடாகப் பார்த்திருக்கிறாள். தாமஸ் சௌனுடன் தனக்குத் திருமணம் நடக்குமுன்பு சௌனும் கிப்போர்ட்டும் நெருங்கிய நண்பர்களாயிருந்ததையும், தான் சௌனை மணந்தது அவனுக்குப் பெரிய ஏமாற்றமென்பதையும், அந்த ஏமாற்றத்தையும் அவன் கண்ணியமாக ஏற்று விலகியிருந்தாலும் தன்னைப் பார்த்த போதெல்லாம் காதல் அவன் கண்களில் வீசியதையும் நினைத்துப் பார்த்த காதரைன் அப்பொழுதெல்லாம் வியாபாரியான சௌனை விட்டு இந்தப் பெரிய வீரனை மணந்தாலென்ன என்று நினைத்தேனே. இவன் வீரம் இவ்வளவுதானா?'' என்று நொந்து கொள்ளவும் செய்தாள்.

அதே சமயத்தில் இதயசந்திரனின் சிரித்த முகம் அவள் மனக்கண்முன் எழுந்தது. இன்று பிராணனை விடப் போகிறாயே என்று தான் சொன்னபோது 'பிராணனை விடப் போகிறேனோ?' என்று கேட்டு அவன் நகைத்தது அப்பொழுதும் தத்ரூபமாக எழுந்தது அவள் மனக்கண் முன்பு. ''உன் காதலன் கையால் என் மரணத்தைப் பார்க்க வா'' என்று ஒரு ஜாமத்திற்கு முன்பு அவன் அழைத்தது, ஒருவேளை சண்டையில் மரணம் ஏற்பட்டால் கிப்போர்ட்டையும், தன்னையும் பாதுகாக்க உபதளபதிகளை ஆணையிடச் சொன்னது எல்லாம் வெறும் நாடகம்; கேலிக்கூத்து என்பதை உணர்ந்ததால் அவள் உள்ளத்தில் மிதமிஞ்சிய சினமும் எழுந்தது.

அந்தச் சினம் நிலைத்தது ஒரு விநாடி. மனம் ஜலதீபத்தின் அறைக்குச் சென்றது. அங்கு அவன்



கைகளின் தழுவல் எத்தனை ஆனந்தத்தைத் தந்தது அவளுக்கு. 'அவன் இந்தியனாயிருந்தாலென்ன, வீர புருஷன்தானே' என்று எண்ணினாள் காதரைன். படுக்கையில் கிடந்த இந்த நேரத்திலும் சாதி காதலைவிடப் பெரியதா என்றுகூடத் தன்னைக் கேட்டுக்கொண்டாள். ஆனால் உறுதியற்ற அவள் மனம், வலுவற்ற அவள் சிந்தை, இந்தியனை வதுவை செய்துகொள்ள மறுத்தது. அந்த மறுப்பினாலும் கிப்போர்ட்டிடம் ஏற்பட்ட வெறுப்பினாலும் வாட்டப்பட்டுப் படுக்கையிலே கிடந்தாள் காதரைன். இரண்டு நாழிகைகளுக்குப் பிறகு தோழிகளிருவர் வந்து நீராட அழைத்தபோதும் அவள் கொஞ்சத்தில் எழுந்திருக்கவில்லை. ''நீங்கள் பிற்பகல் கிளம்ப வேண்டுமாம். இப்பொழுது நீராடினால்தான் சரியாயிருக்கும்'' என்று தோழியொருத்தி வலியுறுத்திய பிறகுதான் காதரைன் நீராடச் சென்றாள்.

நீராடியதும் அவள் உடைகளை இரு பெரும் தகரப் பெட்டிகளில் சேடிகள் அடைத்தார்கள். அத்தனை உடை அவளுக்குக் கிடையாதாகையால், ''இரண்டு பெட்டிகள் எதற்கு?'' என்று வினவினாள் அவள்.

''ஒரு பெட்டியில் நீங்கள் ஏற்கெனவே ஜலதீபத்தில் உடுத்திய ஆடைகள் இருக்கின்றன. இன்னொன்றில் தளபதி உங்களுக்குப் பரிசாகக் கொடுத்த ஆடைகள்'' என்றாள் தோழியொருத்தி.

''எங்கே, அந்தப் பெட்டியைத் திற'' என்ற காதரைன் தோழிகள் பெட்டியைத் திறந்ததும் அந்தப் பெட்டியிலிருந்த ஆடைகளை எடுத்தாள். அதில் பல நாட்டவர் ஆடைகள், பல பட்டாடைகள், பல பஞ்சாடைகள், வண்ண வண்ண ஆடைகள் இருந்தன. ''இவை ஏது?'' என்று வினவினாள் தோழிகளை நோக்கிக் காதரைன்.

''அரண்மனை பொக்கிஷ அறையிலிருந்தவை. பல கப்பல்களிலிருந்து கைப்பற்றப்பட்டவை'' என்றாள் தோழி.

கொள்ளை அடிக்கப்பட்ட அந்த ஆடைகளிலொன்றை எடுத்துத் தன்மீது சேர்த்துப் பார்த்தாள் காதரைன். அளவு சரியாயிருந்தது. கௌன் ஒன்றை எடுத்துப் போட்டுப் பார்த்தாள். கச்சிதமாயிருந்தது அவளுக்கு. வியப்படையும் விழிகளைச் சேடிகள்மீது நிலைக்கவிட்ட காதரைன், ''சரியாக அளவு பார்த்துப் பொறுக்கி யிருக்கிறீர்கள்'' என்றாள்.

''நாங்கள் பொறுக்கவில்லை'' என்றாள் ஒருத்தி.

''வேறு யார் பொறுக்கியது?'' என்று வினவினாள் காதரைன்.

''தளபதி'' என்றாள் இன்னொரு தோழி.

''யார்! யார்!'' காதரைன் விழிகளில் நீர் சுரந்தது. அதை மறைக்க அவள் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். பிறகு சேடிகளை வெளியே போகச் சொல்லிக் கதவைத் தாளிட்டுக் கொண்டாள். உணவு வந்ததும் கதவைத் திறந்து உணவைச் சிறிதளவே உண்டாள்.

பகலவன் உச்சியிலிருந்து நகர்ந்து இரண்டு நாழிகைகள் ஆகியதும் இரு காவலர் வந்து அவள் பெட்டிகளை வார் போட்டுக் கட்டி எடுத்துச் சென்றனர். கோட்டைக் காவலன் வந்து, ''புறப்படுங்கள்'' என்று கூறினான்.

காதரைன் புறப்பட்டாள். மெல்ல மெல்ல ஆஸ்தான மண்டபத்துக்கு வந்தாள். அங்கு தனது ஆசனத்தில் கம்பீரமாக அரசன்போல் அமர்ந்திருந்த தளபதி, ''மிஸஸ் சௌன் வாருங்கள்!'' என்று சம்பிரதாயமாக அழைத்துச் சிறிது தள்ளியிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த கிப்போர்ட்டை நோக்கி, ''கிப்போர்ட்! இதோ மிஸஸ் சௌனை ஒப்படைக்கிறேன், எந்த மாசோ மருவோ இன்றி. அழைத்துச் செல்லுங்கள். நான் பிடித்த மரக் கலங்கள் இரண்டும் பம்பாய் துறைமுகத்துக்கு இன்னும்



சில நாட்களில் வந்து சேரும்'' என்று கூறி எழுந்திருந்தான் ஆசனத்திலிருந்து.

காதரைனின் விழிகள் அவன் விழிகளுடன் ஒரு விநாடி சந்தித்தன. பிறகு கிப்போர்ட்டை நோக்கின. கிப்போர்ட்டின் மணிக்கட்டில் கட்டுப் போடப்பட்டிருந்தது, அவன் முகம் சுரணையற்றுக் கிடந்தது. இருவரையும் நோக்கியதும் பேசாமல் வாயிலை நோக்கி நடந்தாள் காதரைன். இதயசந்திரனும் அவளைப் பின்பற்றி நடந்தான். வாயிலைத் தாண்டிய பின்னும் அவளைத் தொடர்ந்தே சென்ற தளபதி கொலாபா தீவுக் கோட்டையைக் கரையிலிருந்து பிரித்த நீர் நிலைக்கு வந்ததும் அங்கிருந்த படகில் அவளைக் கையைப் பிடித்து இறக்கி விட்டான். இறக்கிய அந்தச் சமயத்தில் அவள் கை தன் கையை மிக இறுக்குவதையும் ஆதரவைத் தேடுவதையும் உணர்ந்ததால் இதயசந்திரன் இதயத்தில் அப்பொழுதும் அனுதாபம் சுரந்தது. கையை விட்ட பின்பு அவள் படகில் இறங்கி அமர்ந்த பின்பும் தன்னையே நோக்குவதைக் கண்டான். கிப்போர்ட் ஏற, படகு நகர்ந்தது எதிர்க்கரையை நோக்கி. அதில் உட்கார்ந்து தன்னையே நோக்கிக்கொண்டு சென்ற காதரைனை நோக்கிய இதயசந்திரன், 'மூன்றாமவளும் நகர்ந்து விட்டாள். அடுத்தது யார்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

## அத்தியாயம் 27

# அசரீரி

ஆசை அறுபடும்போது விரக்தி உதயமாகிறது. மன உறுதியால் ஆசை அறுபட்டால் விரக்தி நிச்சயமாகிறது. நிலைத்து நிற்கிறது. ஏமாற்றத்தால் ஆசை அறுபடுமானால் விரக்தி அர்த்தமற்றதாகிறது. நிலைத்து நிற்பதில்லை. விரக்தியின் விளைவு விளக்கத்தையும் ஆனந்த நிலையையும் தருவதற்குப் பதில் குழப்பத்தையும் துன்பத்தையுமே தருகிறது. அத்தகைய குழப்பத்திலும் துன்பத்திலுமே அடுத்த ஒரு மாதத்தைக் கழித்தான் இதய சந்திரன். மும்முறை கண்ட ஏமாற்றத்தின் விளைவு அவன் இதயத்தில் அர்த்தமில்லாத விரக்தியை ஏற்படுத்தியிருந்ததால் அர்த்தமில்லாத பல காரியங்களையும் செய்து வந்தான் தமிழக வீரன். கனோஜி ஆங்கரேயால் கட்டுதிட்டம் செய்து வைக்கப்பட்டிருந்த பிழையேதுமற்ற கொலாபா கோட்டைக் காவலை அடிக்கடி அனாவசியமாக மாற்றவும் முற்பட்டான். அந்த மாறுதல்களால் ஏற்படக் கூடிய தீமைகளைக் கோட்டைக் காவலன் விளக்கியபோது "சொல்வதைச் செய்" என்று அவன்மீது எரிந்து விழுந்தான். திடீரெனக் காரணமில்லாமல் இரவிலும் பகலிலும் படகை எடுத்துக்கொண்டு ஜலதீபத்திற்குச் சென்று அங்கேயே ஒரு பகலோ இரவோ தங்கிவிடும் வழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டான். ஜலதீபத்திலிருந்த அவனது உபதளபதிகளும் சரி, மற்ற மாலுமிகளும் சரி இதயசந்திரன் குணம் அடியோடு மாறிவிட்டதை உணர்ந்தார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்குப் புரிந்திருந்ததால், அவர்கள் அவனை ஏதும் கேள்விகள் கேட்காவிட்டாலும் தங்கள் வெறுப்பை மறைமுகமாகக் காட்ட முற்பட்டார்கள். இதயசந்திரனும் காரணமில்லாமல் அவர்கள்மீது எரிந்து விழுவதையும் குற்றம் கண்டு ...தையும் தொழிலாகக் கொண்டான்.



திடீரென அவன் ஒரு நாள் ஜலதீபத்திற்கு வந்தபோது தனது அறை திறந்திருப்பதைக் கவனித்து, "ஹர்கோவிந்த்! ஹர்கோவிந்த்!" என்று கூவி ஹர்கோவிந்த் வந்ததும், "இந்த அறை ஏன் திறந்திருக்கிறது?" என்று வினவினான்.

ஹர்கோவிந்தின் பதில் சட்டென்று வந்தது, "பூட்ட அவசியமில்லை" என்று.

அந்தப் பதிலின் உட்பொருள் புரிந்தது இதய சந்திரனுக்கு. தன்னிடமிருந்து காதரைனையோ அல்லது காதரைனிடமிருந்து தன்னையோ பாதுகாக்கும் உத்தேசத்துடன் அவன் முன்பு அறையைப் பூட்டியிருந்தது நினைவுக்கு வரவே, "என்னைப் பரிகசிக்கிறாயா ஹர்கோவிந்த்?" என்று வினவினான் சீற்றத்துடன் தமிழன்.

"பரிகசிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று வினவினான் ஹர்கோவிந்தும் லேசாகக் குரலில் உஷ்ணத்தைக் காட்டி.

"என்ன இருக்கிறது? அதைத்தான் நானும் கேட்கிறேன்" என்றான் இதயசந்திரன் அதிகச் சீற்றத்துடன்.

"கேட்க ஏதுமில்லை." இம்முறை ஹர்கோவிந்த் குரலில் உஷ்ணமில்லை, இகழ்ச்சியிருந்தது.

"யாரைக் கேட்க?"

"என்னையோ உங்களையோ கேட்க."

"இதற்கு முன் என்ன இருந்தது?"

"இருந்தது ஒரு வெள்ளைச் சிலை."

"காதரைனை அவதூறு கூறுகிறாயா?"

"அவதூறு கூறவோ அன்பொழுகப் பேசவோ எனக்கேதுமில்லை."

"எனக்கு இருந்தது என்கிறாயா?"

அதற்கு நீங்கள்தான் பதில் சொல்லவேண்டும்?''

ஹர்கோவிந்தின் கடைசிப் பதிலுக்குப் பிறகு அவனைச் சினத்துடன் பார்த்த இதயசந்திரன், தாங்கள் நின்றிருந்த இடத்திலிருந்து சற்றுத் தள்ளி இப்ராஹீமும் பர்னாண்டோவும் நிற்பதைக் கவனித்தான். அவர்கள் முகங்களிலும் வெறுப்பு மண்டிக் கிடப்பதைக் கவனித்துவிட்டு வேகமாக அறைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டான். அன்று பகல் உணவைத் தனிமையில் தனது அறையிலேயே உண்டான். பிறகு நன்றாகத் தூங்கினான். மாலை வரையில் உறங்கிய இதயசந்திரன் மீண்டும் கப்பலிலிருந்து நூலேணியில் இறங்கிப் படகொன்றைத் தானே செலுத்திக் கொண்டு கோட்டைக்குச் சென்றான். கோட்டையிலிருந்த தோர்லாவாடாவின் பிரதான அறைக்குச் சென்று மாலுமி உடையைக் கழற்றி எறிந்து தமிழகத்து வேட்டியை எடுத்து மராட்டியக் கச்சம் கட்டிக்கொண்டு வெள்ளையர் சட்டையொன்று போட்டுக்கொண்டு விபூதி அணிந்து கொண்டு குலாபியின் கோயிலுக்குச் சென்றான்.

அந்திகால பூஜை நடந்துகொண்டிருந்தது குலாபிக்கு. அன்று கோயில் அர்ச்சகர் மகிஷாசுரமர்த்தினியான குலாபிக்கு திவ்யமாக அலங்காரம் செய்திருந்தார். விளக்குகளையும் ஒன்றுக்கு இரண்டாக ஏற்றி வைத்திருந்தார். பூசையின்போது நீறு அணிந்து வந்த இதயசந்திரனை வரவேற்று, ''இப்படி வாருங்கள்'' என்று அழைத்தார்.

''பூசையின்போது இடையில் பேசவேண்டாம் நடக்கட்டும் அர்ச்சனை'' என்றான் இதயசந்திரன் இரைந்து.

அர்ச்சகர் ஏதும் புரியாமல் அவனை ஊன்றிப் பார்த்தார். ''என்ன பார்க்கிறீர்?'' என்று மிரட்டினான் இதயசந்திரன்.

அவன் மிரட்டலுக்குச் சிறிதும் மசியவில்லை அந்த மகாராஷ்டிர சாஸ்திரி. ''தங்களை குலாபிக்கு அருகில் அழைக்கிறேன்'' என்று கட்டளையிடுவதுபோல் கூறினார்.



''நான் எட்ட நிற்க ஆசைப்படுகிறேன்'' என்றான் இதயசந்திரன்.

''ஆசை ஒழுங்கான ஆசை அல்ல.''

''எது?''

''ஈசுவரியிடமிருந்து எட்ட நிற்பது.''

''ஏன்?''

''குலாபியிடமிருந்து விலகி நிற்க ஆசைப்படுபவன் ஒன்று நாஸ்திகன், அல்லது புத்தியில் தெளிவில்லாதவன். அருகில் வாருங்கள் தளபதி'' என்ற சாஸ்திரி சற்று அதிகாரத்துடனேயே கூறவே மெள்ள இதயசந்திரன் சந்நிதியை அணுகினான்.

குலாபியின்மீது அவன் கண்கள் நிலைத்தன. குலாபியின் உக்ரமும் அருளும் கலந்த கண்கள் தன்னைக் கூர்ந்து நோக்குவதாகத் தோன்றியது தமிழனுக்கு. கீழே கிடந்த மகிஷாசுரனை வாள் கொண்டு அடக்கும் தோரணையிலிருந்த கீழ் வலது கரம் தன்னையே அடித்துவிடும் போலிருந்தது. மேல் இடது கையில் ஈசுவரி தாங்கி நின்ற சக்ராயுதம் தன்னை நோக்கி வருவதுபோல் தோன்றியது தளபதிக்கு. இந்த உணர்ச்சிகள் புத்தியில் உராய, உராய நெஞ்சம் நெகிழ நெகிழ, வைத்த கண்கள் வாங்காதபடி குலாபியைப் பார்த்துக்கொண்டே இருந்த இதயசந்திரன் காதில் அர்ச்சகர் உச்சரித்த அஷ்டோத்திர மந்திரங்களும் புகுந்து உள்ளேயிருந்த இருட்டை மெள்ள மெள்ளக் கிழித்தன. அர்ச்சனை முடிந்ததும் குலாபியின் கால்களில் விழுந்தெழுந்த இதயசந்திரனை சாஸ்திரி பரிதாபத்துடன் பார்த்தார். பிறகு மெள்ளச் சொன்னார், ''தளபதி, நீங்கள் காலங் கடந்து வந்திருக்கிறீர்கள். கனோஜியா யிருந்தால் முன்பே வந்திருப்பார்'' என்று.

இதயசந்திரன் சாஸ்திரிகளை ஏறெடுத்து நோக்கி விட்டுக் கேட்டான், ''ஸார்கேலா?'' என்று.

''ஆம் தளபதி! ஸார்கேல்தான். குழப்பமோ சந்தேகமோ ஏற்பட்டால் குலாபியிடம்தான் வருவார் ஸார்கேல். குலாபி குழப்பத்தை அகற்றுவாள். சந்தேகத்தைத் தீர்ப்பாள்'' என்றார் சாஸ்திரி.

''குழப்பத்தை அகற்றுவாளா? சந்தேகத்தைத் தீர்ப்பாளா?'' என்று வினவினான் வியப்புடன் இதயசந்திரன்.

''ஆம். வெற்றியையும் சம்பாதித்துக் கொடுப்பாள்! கனோஜியின் வெற்றிக்கெல்லாம் குலாபிதான் காரணம்'' என்றார் சாஸ்திரி திட்டவட்டமாக.

இதயசந்திரன் சிந்தனையில் இறங்கினான். ''போரில் வெற்றி தோல்வி, வாழ்வில் வெற்றி தோல்வி இவை லௌகீக விஷயங்கள். இவற்றில் தெய்வம் தலையிடுமா?'' என்றும் வினவினான் கடைசியில்.

''தெய்வத்தின் தலையீடு இல்லாமல் எதுவும் நடப்பதில்லை தளபதி. சகலமும் தெய்வத்தின் சிருஷ்டி. அதன் இஷ்டப்படி சகலமும் இயங்குகின்றன. ஆகவே அதன் இஷ்டத்தை நாம் பெற்றால் நமக்கு அனுகூலமாக இயங்கும்'' என்றார் சாஸ்திரி.

''எது உலகமா?''

''ஆம்.''

''காற்று நமது இஷ்டப்படி அடிக்குமா குலாபியை வேண்டினால்?''

''அடிக்கும். சந்தேகமிருந்தால் ஸார்கேலைக் கேளுங்கள்.''

இதயசந்திரன் பிரமித்தான். காற்றும் கடலும் ஆண்டவன் இஷ்டப்படி இயங்கினாலும் அதைத் தனி மனிதன் தேவியிடம் விண்ணப்பித்து மாற்றிவிடுவது என்பது நடவாத காரியம் என்று நினைத்தான் தமிழன். புராணக் கதைகளில் அவை நடந்திருந்தாலும் 1813-வது



ஆண்டில் நடக்க முடியாதென்று நினைத்தான். அவன் நினைப்பை சாஸ்திரி புரிந்து கொண்டதால் கூறினார், ''தமிழா! நடக்குமா? நடக்காதா? என்று நினைப்பவனுக்கு எதுவும் நடப்பதில்லை. தெய்வம் உண்டா? இல்லையா? என்று நினைப்பவனுக்குத் தெய்வம் கிடையாது. வீரம் தனக்கு உண்டா? இல்லையா? என்று சந்தேகிப்பவனுக்கு வீரம் கிடையாது. சந்தேகம் அலட்சியம் இந்த இரண்டும் சிந்தனையின் பலவீனங்கள். நம்பிக்கை, லட்சியம் இரண்டும் ஆத்மாவின் சக்திகள். சக்தியுள்ள இடத்தில் நம்பிக்கையுமிருக்கிறது. கனோஜி ஆங்கரேக்கு இரண்டும் உண்டு. சக்தி இருக்கிறது, பெரிய சாதனைகளைப் புரிகிறார். நம்பிக்கையிருக்கிறது, குலாபியிடம் அனுமதி பெற்றுப் பெரிய அலுவல்களில் இறங்குகிறார்'' என்று.

சாஸ்திரியன் சொற்கள் மெள்ள மெள்ள உறைந்தன இதயசந்திரன் உள்ளத்திலே. கனோஜி ஆங்கரேயைப் போன்ற செயல் வீரர் பெரிய காரியங்களுக்கெல்லாம் குலாபியைக் கேட்கிறாரென்றால் குலாபியிடம் பெரும் சக்தியிருக்க வேண்டும் என்று நினைத்தான். சாஸ்திரி சொல்லச் சொல்ல குலாபியின் முகத்தில் பேரொளி உதயமாவது போல் தோன்றியது அவனுக்கு.

அவன் திரும்பிச் சென்றபோது குலாபி கோயிலின் பக்க விளக்குகளும் தூரத்தே தெரிந்த கோட்டைவாயிலின் பந்தங்களும், அலையில் ஆடிக்கொண்டிருந்த ஜலதீபத்தின் பந்தங்களும், விளக்குகளும், எல்லாத் தீபங்களும் வழக்கத்தைவிட அதிக ஜோதியாகப் பளிச்சிட்டதாகத் தோன்றியது அவனுக்கு. ஆங்கரேயின் அரண்மனைப் பிரதான அறையில் அவன் உட்கார்ந்து உணவருந்தத் தொடங்கிய போது ஒரு மாதமாக இல்லாத பசி அன்று இருப்பதாகத் தோன்றியது அவன் புத்திக்கு. அறுசுவை உண்டியை அளவுக்கு அதிகமாகவே உண்டு அவன் பஞ்சணையில் படுத்தபோது பஞ்சணையும் அதிக சுகமாகப் பட்டது அவன் உடலுக்கு.

எதிலும் ஒரு தெளிவு இருந்தது. எதிலும் ஒரு சுகமிருந்தது! அத்தனையும் குலாபியின் தரிசனத்தால் தானா என்ற சந்தேகமும் லேசாக இருந்தது. எப்பேர்ப்பட்ட மனிதனையும் சந்தேகம் மட்டும் லேசில் விடுவதில்லையெனத் தீர்மானித்த இதயசந்திரன் அதை அகற்றிக்கொள்ள அன்று முதல் முயற்சியில் இறங்கினான். அந்த முயற்சி தனக்குப் பெரும் பலனை மூன்றே நாட்களில் கொடுத்ததையும் உணர்ந்தான். தனக்கு ஏற்பட்ட விரக்தி மெள்ள மெள்ள விலகி வாழ்க்கை மீண்டும் அர்த்தமுள்ளதாக மாறுவதை உணர்ந்தான். நடுவில் ஏற்பட்ட மனச்சோர்வு மெள்ள மெள்ள விலகுவதையும் மனச்சோர்வால் ஏற்பட்ட உடற்சோர்வும் நீங்கி, பழைய சக்தி ஏற்படுவதையும் புரிந்து கொண்டான். மாலை கோயிலுக்குப் போவதோடு காலையும் மாலையும் போகத் துவங்கினான். அப்படிப் போகத் துவங்கியதால் சாஸ்திரியிடம் பல விஷயங்களைப் பற்றியும் தர்க்கித்தான்; கனோஜி குலாபியிடம் எப்படி உத்தரவு கேட்பது வழக்கம் என்று வினவினான்.

''கனோஜி முன்னதாக பூஜைக்குச் சொல்லியனுப்புவார். பூஜை ஆரம்பம் முதல் கடைசி வரையில் தியானத்திலிருப்பார்...'' என்று துவங்கிய சாஸ்திரியை இடைமறித்த இதயசந்திரன், ''என்ன? கனோஜியா! தியானத்திலிருப்பாரா!'' என்று வினவினான் வியப்புடன். சதா எதிலும் ஓர் அலட்சியத்தைக் காட்டுபவரும், மாமிசம் சாப்பிட்டு மதோன்மத்தராக இருப்பவருமான ஸார்கேல் எப்படித் தியானத்திலிருக்க முடியும் என்ற கேள்வி அவன் கண்களில் திட்டமாகத் தெரிந்தது.

அந்தக் கேள்வியைப் புரிந்துகொண்ட சாஸ்திரி கூறினார்: ''கனோஜியின் முரட்டுத்தனம் வேறு, பக்தி வேறு. நல்ல முரடர்கள் நல்ல பக்திமான்களாயிருந்திருக்கிறார்கள்'' என்று.



அதை ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த இதயசந்திரன், ''தியானத்திலிருந்துவிட்டு உத்தரவு கேட்பாரா?'' என்று வினவினான்.

''ஆம். கேட்பார்.''

''எப்படி?''

''வரும்போது இரண்டு ஓலை நறுக்குகளைக் கொண்டு வந்து குலாபியின் காலடியில் போடுவார். சிறிது நேரத்தில் இரண்டில் ஒன்று முன்னால் உருளும், அதைப் பிரித்துப் பார்ப்பார்.''

''ஓலை நறுக்குகளா! உருளுமா!''

''ஆம்.''

''எப்படி உருளும்?''

''குலாபியின் சந்நிதிக்குள் கடற்காற்று வருகிறது. அது ஓலை நறுக்கைத் தள்ளும்.''

''அது குலாபி தள்ளுவதாக அர்த்தமா?''

''ஆம். கடற்காற்றே குலாபியின் சக்தியால் இயங்குகிறது. அவள் இஷ்டப்பட்டதைத்தான் உருட்டும் காற்று.''

இதயசந்திரனுக்கு இந்தப் பதில் வேதாந்த ரீதியில் சரியாயிருந்தாலும், கடற்காற்று உருட்டும் ஓலையைக் குலாபி உருட்டுவதாக எப்படி வைத்துக் கொள்கிறது என்று சந்தேகித்தான்.

சாஸ்திரியின் குரல் கம்பீரமாக ஒலித்தது அப்பொழுது, ''தமிழா! மீண்டும் சந்தேகிக்கிறாய் நீ. காற்று தள்ளுவதால் ஓர் ஓலையைத்தான் தள்ள வேண்டும் என்பதில்லை. இரண்டையும் தள்ளலாம். ஆனால் இங்கு எப்பொழுதும் ஓர் ஓலைதான் உருளுகிறது. அதுவும் ஒரே பக்கமுள்ள

உலையல்ல உருளுவது. அக்கம் பக்கத்தில் வைக்கப்படும் போது சுருள்களில் இந்தப் பக்கமுள்ளதும் உருளும், அந்தப் பக்கம் உள்ளதும் உருளும். சமயம் வரும்போது நீயே பார்க்கலாம்'' என்ற சாஸ்திரியின் குரல் குலாபி வின் குரலைப் போலவே இருந்தது.

''எப்பொழுது பார்க்கலாம் குருஜி?'' என்று வினவி னான், சாஸ்திரியின் குரலிலிருந்த உணர்ச்சிப் பெருக்கைக் கண்ட இதயசந்திரன்.

அடுத்து ஒலித்தது பதில், ''நாளை'' என்று. ஆனால் அது சாஸ்திரியின் குரலல்ல. வேறொரு குரல். மிகக் கம்பீரமாயும் கணீரென்று அசரீரி போல் ஒலித்தது அந்தக் குரல்! எந்த நாஸ்திகனையும் நம்பவைக்கும் அதிகார மிருந்தது அக்குரலில்.

அத்தியாயம் 28

# பதவி மாற்றம்

**க**ம்பீரத்துடன் கணீரென்று ஒலித்த குரலைக் கேட்டு அது வரும் திசை எதுவென்று அறிய நாற்புறமும் திரும்பித் திரும்பிப் பார்த்த இதயசந்திரன் குலாபியின் கர்ப்பக்கிருகத்திலோ கர்ப்பக்கிருக வாயிலிலோ தன்னை யும் சாஸ்திரியையும் தவிர யாருமில்லாததைக் கண்டதும் உண்மையில் அது குலாபியின் வாக்காகத்தானிருக்க வேண்டுமென்று நினைத்தான். அந்த நினைப்புக்கு ஆதரவு தேட சாஸ்திரியின் முகத்தைப் பார்க்கவும் செய்தானானா லும் சாஸ்திரியின் முகத்தில் எந்தவித உணர்ச்சியோ பரபரப்போ இல்லாததைக் கண்டதால், ''சுவாமி! இப்பொழுது யார் பதில் கூறியது எனக்கு?'' என்று வினவினான்.

''எனக்கு எப்படித் தெரியும்?'' என்றார் சாஸ்திரி பதிலுக்கு.

''குரல் மனிதர் குரல் மாதிரி இருந்ததே'' என்று மீண்டும் கேட்டான் தமிழன்.

''ஆம்'' என்ற ஒற்றைச் சொல்லிலேயே பதில் கூறினார் மகாராஷ்டிர சாஸ்திரி.

''ஆனால் மனிதர் யாரையும் காணோமே.''

''ஆம், காணோம்.''

''மனிதர் குரலாயில்லாவிட்டால் அது குலாபியின் குரலாகத்தான் இருக்க வேண்டும்.''

''மனிதர் குரல் மூலமும் குலாபி பேசுவதுண்டு. அதற்கு ஆவேசம் என்ற பெயரும் உண்டு.

சாஸ்திரியிடமிருந்து விளக்கம் ஏதும் தான் பெற முடியாதென்பதை ... இதயசந்திரன்

மிகுந்த கோபத்துடன் குலாபியை வணங்கிவிட்டு, ''இந்த
உண்மையை உன் அருளால் அவிழ்க்கிறேன்'' என்றும்கூறி,
கர்ப்பக்கிருக்த்தை விட்டு வெளியேற வாசற்படியைத்
தாண்டினான். அவனைத் தாண்ட விடாமல் குறுக்கே ஒரு
வாள் அவனைத் தடுத்தது. வாளைக் கண்டதும் இதய
சந்திரன் பெரிதும் பிரமித்தான். சில வினாடிகள் நின்ற
இடத்திலேயே சிலைபோல் நின்றான். பிறகு சட்டென்று
மண்டியிட்டு அந்த இடத்திலேயே வணங்கி வாளைக் கண்
களிலும் ஒற்றிக் கொண்டான். அந்த வாள் தாழ்ந்தது.
கடகடவென கனோஜியின் பயங்கர சிரிப்பு உதிர்ந்தது.
குலாபியின் ஆலயத்தையே கிடுகிடுக்கச் செய்யும் வகையில்
கர்ப்பக்கிருகச் சுவருக்கு வெளியே மறைந்திருந்த ஆங்கரே
மெள்ள வெளியே வந்து, ''எழுந்திரு தமிழா! எழுந்திரு!
இத்தனை சீக்கிரத்தில் குலாபியின் பக்தனாகி விடுவாய்
என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்று கூறி அவனை
எழுந்திருக்கச் செய்து முதுகிலும் பேயறைவது போல
தட்டிக்கொடுத்தார்.

மண்டியிட்ட நிலையிலிருந்து எழுந்து அந்த அறையை
யும் முதுகில் வாங்கிக் கொண்ட இதயசந்திரன்,
''ஸார்கேல் வருவதற்கு எந்த முன்னறிவிப்பும் இல்லையே''
என்று வினவினான் பணிவுடன். அதைக் கேட்டபோது
அவர் உடையிலிருந்த நிலைமையும் முகத்திலிருந்த கரியை
யும் பார்த்து வியப்பும் அடைந்து, ''தாங்கள் நேராக...''
என்று இன்னொரு கேள்வியையும் தொடுக்க முற்பட்டான்.

அவன் வாசகத்தை முடிக்க விடாத மகாராஷ்டிர
கடற்படைத் தலைவர், ''ஆம். போரிலிருந்து வருகிறேன்.
அதுவும் எடுத்த காரியம் நிறைவேறாமல் வருகிறேன்''
என்று கூறினார். அதைச் சொல்லிக். கொண்டே கர்ப்பக்
கிருகத்துக்கு வெளியே நெடுஞ்சாண் கட்டையாகத்
தரையில் விழுந்து குலாபியை வணங்கவும் செய்தார். பிறகு
எழுந்திருந்து ''வா போகலாம் அரண்மனைக்கு'' என்று
அவனை உடனே அழைத்துச் சென்றார்.



தோர்லாவாடாவை அடையும் வரையில் கடற்படைத்
தலைவர் ஏதும் பேசாமல் விடுவிடு என்று நடந்தே
சென்றார். வழியில் அவரைப் பார்த்த கோட்டை வீரர்கள்
வணங்கியதற்கும் சாதாரண பணிமக்கள் கை கால்களில்
விழுந்ததற்கும் கையை மாத்திரம் ஆட்டிவிட்டுச்
சென்றார். அவருடைய வேகமான நடையையும்
சாதாரணமாகச் சிரித்த வணக்கத்தை ஏற்கும் அவர்
நடைமுறை அடியோடு அன்று மாறியிருந்ததையும் கண்ட
இதயசந்திரன் அவர் பெரும் யோசனையிலிருப்பதைப்
புரிந்து கொண்டதால் அவனும் பேசாமலே அவரைப்
பின்பற்றிச் சென்றான்.

அரண்மனையை அடைந்ததும் அவர் பிரதான
அறைக்குச் சென்று தனது ஆடைகளைக் களைந்து வேறு
ஆடை உடுத்தி உணவும் உட்கொண்டார். இதயசந்திரனை
யும் தன்னுடனேயே உண்ணப் பணித்து இருவரும் உண்ட
தும் அங்கிருந்த பெரும் ஆசனத்தில் சாய்ந்து கொண்டு
பணியாட்களை வெளியே செல்லச் சொல்லிவிட்டு இதய
சந்திரனை நோக்கி, ''தமிழா! நீ இங்கு வந்து எத்தனை
நாட்களாகின்றன?'' என்று வினவினார்.

அவர் அந்தக் கேள்வியை, எதற்குக் கேட்கிறார்
என்பதை உணர முடியாததால் சிறிது சிந்தனையில்
இறங்கிய இதயசந்திரன், ''ஒரு மாதம் சில நாள்கள்''
என்றான்.

கனோஜியின் ராட்சதக் கண்கள் இதயசந்திரன்
முகத்தை ஆராய்ந்தன. பிறகு உதடுகள் மெல்ல விரிந்து,
''இந்த ஒருமாதம் சில நாள்கள் என்ன செய்து கொண்டு
இருந்தாய்?'' என்ற சொற்களை உதிர்த்தன.

''தங்கள் உத்தரவுப்படி முப்பதாயிரம் ரூபாய் வாங்கிக்
கொண்டு வெள்ளைக்காரியை அனுப்பினேன் பம்பாய்க்கு''
என்றான் இதயசந்திரன்.

“நீயாக அனுப்பினாயா? அவர்களாக வந்து ரூபாய் கொடுத்து அழைத்துப் போனார்களா?” என்று வினவினார் கனோஜி.

“அவர்கள்தான் கிப்போர்ட் என்ற தூதனை அனுப்பினார்கள். அவன் வந்தான், நீங்கள் என்னை நம்பாமல் நேரிட கவர்னருக்கு எழுதிய கடிதத்துடன்” என்று சுட்டிக் காட்டிய இதயசந்திரன் குரலில் வெறுப்பு இருந்தது.

“ஆம், ஆம் எழுதினேன், ஏனப்படி எழுதினேனென்று கேட்டு நீ ஏன் எனக்குக் கடிதம் எழுதவில்லை” என்று வினவினார் கனோஜி.

“ஸார்கேல் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பதைக் கூற நான் யார்?” என்று பதில் வினா எழுப்பினான் தமிழன்.

கனோஜியின் ராட்சதக் குரல் பலமாக ஒலித்தது. “நீ என் கப்பல்களிலொன்றின் தளபதி. திட்டமான உத்தரவுகளுடன் இங்கு வருகிறார். நீ வருவதற்கு முன்பே எதிரிகளுக்குக் கடிதம் போய் விடுகிறது— என்னிடமிருந்து. உன் நிலையில் நானிருந்தால் ஒன்று ஜலதீபத்தை எடுத்துக் கொண்டு ஓடியிருப்பேன். தனிக் கொள்ளைக்காரனாகியிருப்பேன். அதற்கு வசதிகள் நிரம்ப இருக்கின்றன. அரபிக் கடற்கரையோரத்தில் அப்படிச் செய்ய இஷ்டமில்லையேல் என் நாணயத்தைப் பற்றிச் சந்தேகப்படுபவர் ஸார்கேலாயிருந்தாலும் எந்தக் கேலாயிருந்தாலும் சரி, சமாதானம் கேட்காமல் விடமாட்டேன். அப்படிக் கேட்பது வீரன் உரிமை. கேட்கப்படுபவன் வீரனாயிருந்தால் பதில் கூறும் கடமை அவனுக்கு உண்டு...” என்ற ஆங்கரே பேச்சை முடிக்காமல் விட்டு, தமிழனை ஊன்றிப் பார்த்தவண்ணம் இருந்தார் சில வினாடிகள்.

இதயசந்திரன் பதிலேதும் சொல்லவில்லை. ஆங்கரே சொல்வதில் நிரம்ப உண்மையிருப்பதைப் புரிந்து கொண்டான். காதரைன் தன் மனத்தை, தன் எண்ணங்



சனை, தன் நடவடிக்கையை எத்தனை தூரம் மாற்றி விட்டாளென்ற நினைப்பால் உள்ளம் புழுங்கவும் செய்தான்; அவன் இதயத்திலோடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட கனோஜி எழுந்து அவனருகில் வந்து, “சுத்த முட்டாள்” என்று கூறிவிட்டுச் சற்று எட்ட இருந்த சாளரத்தை நோக்கி நடந்து சென்று அதன்மூலம் வெளியே நோக்கிக் கடலில் ஆடிநின்ற மரக்கலங்களைக் கவனித்தார். பிறகு திரும்பி, “இதயசந்திரா! இப்படி வா!” என்று அவனையும் அழைத்தார். அவன் வந்ததும் வெளியே துறைமுகத்தில் நின்றிருந்த கப்பல்களைச் சுட்டிக் காட்டினார்.

ஜலதீபத்தையும் நான்கைந்து காலிவாத்துகளையும் தவிர ஒரு குராப்பும் ஒரு காலிவாத்தும் தனித்து நின்றிருந்தன துறைமுகத்தில். “இந்தா, இதைக் கொண்டு நிதானமாகப் பார்” என்று அவனிடம் தூரதிருஷ்டிக் கண்ணாடியையும் கொடுத்தார். தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்ணில் வைத்து, சிறிது நேரம் அவன் ஆராய்ந்தான். அப்படி அவன் பார்த்துக்கொண்டேயிருக்கையில் கனோஜி கேள்விகளைக் கேட்டார். கண்ணிலிருந்து தூரதிருஷ்டியை எடுக்காமலே இதயசந்திரனும் பதில் கூறினான்.

“இதயசந்திரா! குராப் எனது கப்பல் என்று உனக்குத் தெரியும்.”

“தெரியும்.”

“காலிவாத்தை அழைத்து வந்ததற்கு ஒரு கப்பல் கூட இருக்கட்டும் என்று அழைத்து வந்தேன்.”

“உம்.”

“அந்தக் குராப் எப்படியிருக்கிறது?”

“பக்கப் பலகையில் குண்டு வீச்சால் காயம் பட்டிருக்கிறது. பாய்மரத்தண்டில் ஒன்றும் பாதிக்கப்பட்டிருக்கிறது...”

''காலிவாத்?''

''அதிகச் சேதமெதையும் காணோம். இருப்பினும் அதன் உடல் பூராவும் காயங்கள் இருக்கின்றன.''

''இதிலிருந்து நீ என்ன நினைக்கிறாய்?''

இதயசந்திரன் தூரதிருஷ்டிக் கண்ணாடியை நீக்கி விட்டு அவரை நோக்கினான். ''இங்கு எங்கோ சமீபத்தில் போர் நடந்திருக்கிறது'' என்று அறிவித்தான்.

''ஆம்'' என்ற கனோஜி ஆங்கரே, ''எத்தகைய கப்பல் களுடன் போர் நடந்திருக்கும்?'' என்று வினவினார்.

''சாதாரண வர்த்தகக் கப்பல்களுடன்'' என்றான் இதயசந்திரன்.

கனோஜி ஆங்கரே மெல்ல நகைத்தார். ''வர்த்தகக் கப்பல்கள் மட்டும் எதிர்த்திருந்தால் அவற்றை நான் விட்டிருக்க மாட்டேன். அவற்றை உடன் கொண்டு வராமல் இங்கு வந்திருக்கவும் மாட்டேன்'' என்று கூறினார் ஆங்கரே.

''வேறெவ்வகைக் கப்பல்க்ள்?'' என்றான் இதய சந்திரன் சந்தேகத்துடன்.

''குராப்பைவிடப் பெரிய கப்பல்கள். போர்க் கப்பல்கள். இரண்டு மடங்கு ஆயுத பலமுள்ள இரண்டு கப்பல்கள். 'கிரந்தாம்' 'ஸாமர்ஸ்' என்று பெயர் கொண்டவை'' என்ற கனோஜி ஆங்கரே இதயசந்திரன் மீது கண்களை நிலைக்க விட்டார்.

இதயசந்திரன் முகத்தில் பிரமை தட்டிக் கிடந்தது. ஒரு குராப்பையும் காலிவாத்தையும் கொண்டு இரு பெரும் பிரிட்டிஷ் கப்பல்களுடன் போரிடும் துணிவு ஆங்கரே யைத் தவிர வேறு யாருக்கும் இருக்கமுடியாதென்று நினைத்ததால் ''நம்பத்தகாததாயிருக்கிறது ஸார்கேல்'' என்று குழறினான் தமிழன்.

கனோஜி ஆங்கரே புன்முறுவல் கொண்டார். ''இதய
சந்திரா! நம்பத் தகாதது இதில் எதுவுமில்லை, சரியாகக்
கப்பலை நடத்தினால் சிறிய கப்பல்கூடப் பெரும் காரியங்
களைச் செய்ய முடியும். போர் என்பது பெரும்பாலும்
அறிவைப் பொறுத்தது. சிறிது ஆயுத பலத்தையும்
பொறுத்தது. என்னுடைய குராப்பே பிரிட்டிஷ் கப்பல்
இரண்டுக்கும் பெரும் சேதத்தை விளைவித்து விட்டது.
அவை என்னிடமிருந்து தப்பி ஓடியதற்கு அவற்றின் பெரிய
பாய்மரங்கள் காரணம். வசதியான காற்றும் காரணம்.
ஆனால் அவை தோற்று, சேதப்பட்டு ஓடியிருக்கின்றன''
என்றார் ஆங்கரே. மேலும் சொன்னார்: ''இதயசந்திரா!
நீ மட்டும் சரியான கடற்படைத் தளபதியாயிருந்தால் ஒரு
மாதகாலம் ஜலதீபத்தை நங்கூரம் பாய்ச்சிவிட்டு இந்த
அரண்மனையில் தூங்கமாட்டாய். இல்லை இல்லை,
தூங்கவில்லை நீ. உனக்குத் தூக்கம் எப்படி வரும்?
வெள்ளைக்காரியை நினைத்து நினைத்து உருகத்தானே
சமயம் இருந்தது உனக்கு! பல விஷயங்களில் நீ கோழை.
அதுவும் பெண்களின் விஷயத்தில் பெரும் கோழை. என்
வளர்ப்பு மகளை இரண்டு ஆண்டுகள் தனித்து விட்டேன்.
கப்பலில் உன்னுடன் அப்பொழுதே அவளை நீ திருமணம்
செய்துகொண்டிருக்கலாம். பயந்து பயந்து பிராணனை
விட்டாய். அதற்கு முன்பு பானுதேவியிடம் துணிவைக்
காட்டவில்லை. நீ அந்த வெள்ளைக்காரியையும் கடைசி
யில் கோட்டை விட்டாய். பெண்களைப் பற்றி நினைப்ப
திலேயே உன் காலம் போய்விடுகிறது. அதில் மனத்தை
ஊன்றவிடுபவன் பெரிய காரியங்களைச் சாதிக்க
மாட்டான். நீ மட்டும் சரியான மாலுமியாயிருந்தால்
இத்தனை நாள் வெறுப்புத் தட்டும் அளவுக்குக் காமத்தை
அனுபவித்திருக்கலாம். அதைப்பற்றி அக்கறையில்லாமல்
ஜலதீபத்தைச் சதா கடலில் ஓடவிடலாம். அப்படி ஓட
விட்டிருந்தால் உனக்கும் எனக்கும் கடல் வழியில்
தொடர்பு இருக்கும். கொலாபாவில் சமீபத்தில் நடந்த

இந்தப் போரில் ஜலதீபம் கலந்து கொண்டிருந்தால் விளைவும் வேறு.''

இதைக்கேட்ட இதயசந்திரன் மௌனமே சாதித்தான். கனோஜியே மேற்கொண்டு பேசினார். ''இதயசந்திரா! பெண்களைச் சுற்றி வருவதால் பெண்களும் கிடைக்க மாட்டார்கள், வாழ்க்கையிலும் முன்னேற்றம் இருக்காது. கடமையையும் நாம் செய்ய மாட்டோம். மகாராஷ்டிர வாரிசைத் தேட வந்த நீ அந்த அலுவலிலும் வெற்றி பெற வில்லை. காதலிக்க முற்பட்ட நீ அதிலும் வெற்றி பெற வில்லை. பக்தனாக மாறினாயே, அதிலாவது வெற்றி கண்டாயா? அதிலும் இல்லை. இப்படியே நீ போய்க் கொண்டிருந்தால் வாழ்க்கை வியர்த்தமாகிவிடும். இன்று நீயும் நானும் இந்த நாடும் பெரும் வரலாற்றின் முன்னணியில் நிற்கிறோம். இங்கு மேற்கு வல்லரசு ஒன்று உருவாகிறது. இந்தச் சமயத்தில் நமக்குள்ளும் சண்டை இருக்கிறது. பெரும் இக்கட்டில் நாமிருக்கிறோம்...'' இங்கு சற்று நிறுத்தினார் ஸார்கேல்.

இதயசந்திரன் தலை நிமிர்ந்து அவரை நோக்கினான். ''என்ன இக்கட்டு?'' என்று வினவினான்.

''நான் இப்பொழுது இரண்டு பிரிட்டிஷ் போர்க் கப்பல்களை விரட்டினேனல்லவா?'' என்று துவங்கினார் ஸார்கேல்.

''ஆம்.''

''அவை இங்கிலாந்திலிருந்து வந்தவை.''

''அப்படியா?''

''ஆம், இப்படி அடிக்கடி இங்கிலாந்திலிருந்து போர்க் கப்பல்கள் இரண்டிரண்டாகப் பம்பாய்க்கு வருகின்றன.''

...உண்மை விளங்கலாயிற்று.



''பம்பாய் பிரிட்டிஷாரின் கடல் தளமாகிறது. பிரிட்டன் இங்கு காலை ஊன்றப் பார்க்கிறது.''

''ஏற்கெனவே போர்ச்சுகீசியர் காலூன்றி இருக்கிறார்களே?''

''போர்ச்சுகீசியர் குரூரர்கள், ஆனால் தந்திரசாலிகளல்ல. பிரிட்டிஷார் தந்திரசாலிகள். அவர்களிடம்தான் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.''

''அதற்கு என்ன செய்ய வேண்டும்?''

ஸார்கேல் தமது ஏற்பாடுகளைச் சொன்னார். ''விஜய துர்க்கம் பம்பாயிலிருந்து நீண்ட தூரமிருக்கிறது, ஆகவே நமது தலைமைத் தளத்தைக் கொலாபாவுக்கு மாற்ற வேண்டும். இங்கிருந்து பம்பாயைக் கவனிப்பது எளிது. தவிர பிரிட்டிஷாரிடம் நட்புக் கொள்ள வேண்டும்'' என்ற ஸார்கேலின் சொற்களைக் கேட்ட இதயசந்திரன் பிரமித்தான்.

''என்ன! பிரிட்டிஷ்காரர்களிடம் நட்பா?'' என்று வினவினான்.

''ஆம்.''

''அதற்கென்ன அவசியம் இப்பொழுது?''

''ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது'' என்ற ஸார்கேல் இருமுறை அந்த அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தார். பிறகு அறையின் நடுவில் விரிந்து கிடந்த பாரத தேசப் படத்தைப் பார்த்தார். இதயசந்திரனையும் கிட்ட அழைத்து ''இந்த இடத்தை நன்றாகக் கவனி'' என்றார்.

கவனித்த இதயசந்திரன், ''ஆம் அதற்கென்ன?'' என்று வினவினான், அவர் படத்தைப் பார்க்கச் சொன்னதற்குக் காரணம் புரியாமல்.

''இங்கிருப்பவர் நம்மை அழிக்கப் பார்க்கிறார்'' என்று கூறினார் கனோஜி...

''அப்படியா!'' வாயைப் பிளந்தான் தமிழக வீரன்.

''ஆம். அதற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. நிலத்தில் இந்த அபாயம். கடலில் பிரிட்டிஷ் அபாயம். இரண்டில் ஒன்றைத்தான் முதலில் கவனிக்க முடியும்...'' என்று கூறி இதயசந்திரனை உற்று நோக்கினார்.

ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்து இதயசந்திரன், ''அப்படியானால் பிரிட்டிஷ்காரருடன் தற்காலிக நட்பு அவசியம். நிலத்திலும் தற்காப்புக்கு அவசியமிருக்கிறது'' என்றான்.

''ஆம்'' என்று தலையசைத்த ஆங்கரே, ''இதய சந்திரா! உனக்குச் சிறிது பதவி மாறுகிறது'' என்று கூறி, பதவி மாற்றத்தைக் குறிப்பிடவும் செய்தார். அந்த மாற்றம் அவனுக்கு வேதனையை மட்டுமல்ல, திகிலையும் தந்தது.

அத்தியாயம் 29

# குலாபியின் அடிமை

மகாராஷ்டிரக் கடற்படைத் தளபதியான கனோஜி ஆங்கரே திடீரெனத் தனக்கு ஏற்படுத்திய பதவி மாற்றத்தைக் கேட்டதும் பெரும் மனோவேதனையையும் ஓரளவு திகிலையுங்கூட அடைந்த தமிழக வீரன், அந்த வேதனையும் திகிலும் கண்களில் மிகத் தெளிவாகத் துலங்க ஏறிட்டு நோக்கினான் எதிரே ராட்சத ரூபத்துடன் நின்றிருந்த அந்த மாபெரும் வீரனை. அவரது பயங்கர விழிகள் தமிழனை ஏற இறங்கப் பார்த்ததன்றி இதழ்களும் சற்றுப் பரிதாபத்துடன் மடிந்தன.

''தமிழா! உனக்கு இந்தப் புதிய பதவி பிடிக்கவில்லை போலிருக்கிறது?'' என்ற அவர் கேள்வியில் கேலியுடன் பரிதாபமும் கலந்தொலித்தது.

இதயசந்திரன் கண்கள் அவர் கண்களைச் சற்றும் சலனமின்றிச் சந்தித்தன. ''மீனை எடுத்துத் தரையில் போடுகிறீர்கள்'' என்று அவன் சொன்ன பதிலில் லேசான குழப்பமும் சற்று அதிகமான வெறுப்பும் கலந்து கிடந்தது.

கனோஜியின் ஈட்டிக் கண்கள் அவன் கண்களை அப்படியே கவர்ந்து நிறுத்தின. ''உவமை சரியல்ல தமிழா! முதலை என்று வைத்துக்கொள். முதலில் தரையிலிருந்து முதலையை எடுத்துத் தண்ணீரில் போட்டேன். இப்பொழுது அதைத் தரைக்கு இழுக்கிறேன். தமிழகத்தில் நீ இருந்தபோது தரைப்படை வீரனாயிருந்தாய். உன்னை எடுத்துக் கடலில் போட்டு மாலுமியாக்கினேன். இப்பொழுது எனது தரைப் படைக்குத் தலைமை வகிக்கத் தகுந்தவன் வேண்டியிருக்கிறது. அதற்காக எனது தரைப் படையின் உபதளபதியாக நியமிக்கிறேன்'' என்று கூறிய கனோஜி, மேலும் விளக்கினார்: ''இதயசந்திரா! தஞ்சை

மகாராஷ்டிரர் தரைப் படையில் நீ வேலை பார்த்திருக்கிறாய். தவிர, சென்னை பிரிட்டிஷாரிடமும் அலுவல் புரிந்திருப்பதாக நீயே கூறியிருக்கிறாய். இந்த அனுபவங்களோடு உனக்கு நுண்ணிய அறிவும் இருக்கிறது. இந்த அனைத்தும் நமது தரைப் படைக்குத் தற்சமயம் தேவை. இன்னும் சில நாட்களில் சிறுகச் சிறுக எனது தரைப் படை வீரர்கள் இங்கு கப்பல் மூலம் வருவார்கள். சிறுகச் சிறுகக் கொலாபாவுக்கு அக்கரையிலிருக்கும் ஆலிபாக்கிற்கு அனுப்பப்படுவார்கள். அங்கு ஏற்கெனவேயுள்ள சிறு படை மெள்ள மெள்ள விரிவுபடுத்தப்படும். இதைத் தவிர, ஆங்காங்கு இந்த ஸஹ்யாத்ரி மலைத் தொடரில் எங்கெங்கு நமது துறைமுகங்களிருக்கின்றனவோ அங்கெல்லாம் அடுத்தடுத்து உள்ள கரைகளில் சிறுசிறு படைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவும் இங்கு வரும். நாலைந்து நாட்களில் மிகச் சிறந்த படைப் பிரிவொன்றை இங்கு திரட்டிவிட முடியும். அதைத் தலைமை ஏற்று நடத்த எனக்கு அடுத்த படி ஒரு வீரன் தேவை. அந்த வீரன் நீ!''

இதயசந்திரன் முகம் பிரமை தட்டிக் கிடந்தது. கனோஜியின் கடற்படையைப் பற்றிய விவரம் பூராவையும் அவன் அறிந்திருந்தாலும், இப்படியொரு தரைப் படை இருக்க முடியும் என்று அவன் சொப்பனத்திலும் நினைக்கவில்லை. அத்தகைய தரைப் படை ஸஹ்யாத்ரியின் பல பகுதிகளில் ரகசியமாகத் திரட்டப்பட்டிருந்ததை நினைத்துப் பார்த்து, நீரில் எப்படியோ அப்படி நிலத்திலும் பெரும் திட்டங்களை ரகசியமாக வகுக்கும் இந்த மனிதனின் திறமை எத்தனை அசாதாரணமானது என்று உள்ளூர வியந்தும் கொண்டான். அந்த வியப்பு விளைவித்த பிரமையுடன் கேட்டான் ஸார்கேலை நோக்கி, ''ஸார்கேல்! பதவி மாற்றத்துக்குக் காரணம் உண்மையில் தங்கள் தேவையா, எனது திறமையின்மையா?'' என்று.

''திறமையின்மை என்று யார் சொன்னது?'' என்று

... பதிலுக்கு.



''ஜலதீபத்தை நங்கூரம் பாய்ச்சிவிட்டு வெள்ளைக்காரி பின்னால் சுற்றியதை நீங்கள்தானே சுட்டிக் காட்டினீர்கள் சற்று முன்பு?'' என்று குறிப்பிட்டான் இதயசந்திரன்.

''ஆம். குறிப்பிட்டேன். ஜலதீபத்தை நங்கூரம் பாய்ச்சிவிட்டு நீ தோர்லாவாடாவில் உட்கார்ந்துவிட்டது தவறுதான். ஆனால் அது உனது திறமையின்மையைக் குறிக்கவில்லை. சபலத்தைக் குறிக்கிறது. காரணம் அதுவல்ல இதயசந்திரா, மகாராஷ்டிர சரித்திரம் அடுத்த சில மாதங்களுக்குக் கடலிலிருந்து தரைக்கு மாறுகிறது. ஆகவே, நீயும் தரைக்கு மாற்றப்படுகிறாய். தமிழா! உனக்கும் இந்த மகாராஷ்டிரத்துக்கும் விதி சம்பந்தமான தொடர்பு ஏதோ இருக்கிறது. மகாராஷ்டிர ராஜ்யத்தின் மூன்றாவது வாரிசு ஒருவனைத் தேடி இங்கு வருகிறாய். விதியால் கடலிலிருந்து கொங்கணிக் கரையில் வீசப்படுகிறாய். கடலிலிருந்து இந்த நாட்டில் விசிறப்பட்டவன் இப்பொழுது வேறு இரு வாரிசுகளின் போர்களில் சம்பந்தப்படுகிறாய். ஷாஹூவை அரியணையிலிருந்து அகற்ற மகாராணி தாராபாய் செய்யும் முயற்சிக்கும், அரியணையில் திடமாக உட்கார்ந்துவிட ஷாஹூ செய்யும் முயற்சிக்கும் இடையில் நீயும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய்'' என்று கூறிய கனோஜி தமது ராட்சத சரீரத்தை மேஜைக்காகத் திருப்பினார். ''வா இப்படி'' என்று இதயசந்திரனையும் தமக்கு அருகில் அழைத்து, தமது கைத்துப்பாக்கியால் பாரத தேசப் படத்தில் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டி, ''இந்த இடத்தைத்தான் உனக்கு முன்பு காட்டினேன்'' என்று கூறினார் படத்தைப் பார்த்துக் கொண்டே.

''ஆம், அந்த இடந்தான்'' என்றான் இதயசந்திரன்.

''இது...''

''ஸதாரா?''

"அப்படித்தான் இப்பொழுது அழைக்கிறார்கள்"
என்ற கனோஜி ஆங்கரே படத்திலிருந்து கண்களை
மட்டும் இதயசந்திரன் மீது திருப்பி, "இதன் பெயர் ஸாத்
ஆரா, ஸதாரா என்று திரிந்துவிட்டது. மகாராஷ்டிர
மன்னர்களின் இந்தத் தலைநகரம் மலைச்சரிவில்
நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. பதினேழு பாதுகாப்புச்
சுவர்கள், ஸ்தூபிகள், வாயில்கள் உள்ளதால் ஸாத் ஆரா
என்றழைக்கப்பட்டது. இதைத் தாக்குவதோ, பிடிப்பதோ
பிரும்மப் பிரயத்தனம். இங்குதான் உட்கார்ந்திருக்கிறார்
மகாராஜா ஷாஹு, மொகலாயர் ஆதரவுடன்.
இப்பொழுது இவர் என்னை ஒழித்துக் கட்டத்
திட்டமிட்டு வருகிறார்" என்று விளக்கினார்.

பதிலேதும் கூறாத இதயசந்திரன் தலையசைத்தான்.
ராணி தாராபாயால் ஸார்கேலாக நியமிக்கப்பட்ட
கனோஜி ஆங்கரேயை மகாராஜா ஷாஹு அழிக்க
முற்படுவதில் விந்தை ஏதுமில்லையென்றாலும்
ஏற்கெனவே தாராபாயின் போர்களில் சிக்கியுள்ள ஷாஹு
இந்தத் தலைவேதனையை ஏன் விலை கொடுத்து வாங்கிக்
கொள்ள வேண்டும் என்று சிந்தித்தான் இதயசந்திரன்.
ஆனால் கனோஜி ஆங்கரேயின் சக்தி தாராபாயின்
பக்கலில் இருக்கும்வரை ஐந்து ஆண்டுகளாக ஷாஹு
சூடியிருக்கும் மணிமகுடம் நிலையற்றதாகவே இருக்கு
மென்பதையும் புரிந்து கொண்டதால் கேட்டான்,
"எப்பொழுது தங்கள் மீது தாக்குதலைத் தொடங்குவார்
மகாராஜா? எந்தப் பக்கத்தில் தொடங்குவார்?" என்று.

"இன்னும் இரண்டு மாதங்களில் தொடங்கலாம்.
அவர்கள் படை தயாராயிருக்கிறது. படைத் தலைவரை
யும் நியமித்தாகி விட்டது" என்றார் கனோஜி
புன்முறுவலுடன்.

"யாரது?" என்று வினவினான் இதயசந்திரன்.

"பாஹிராவ் பிங்களே..." என்ற கனோஜி
வார்த்தையை முடிக்குமுன்பே, "யார், பேஷ்வா



பிங்களேயா?" என்று கேட்டான் வியப்புடன் இதய
சந்திரன்.

"ஆம்" என்றார் ஆங்கரே.

"பேஷ்வாவையே நேரில் அனுப்புவதனால் தங்களைக்
கண்டு மகாராஜாவுக்குச் சிறிது அச்சந்தான் இருக்க
வேண்டும்" என்றான் இதயசந்திரன்!

கனோஜி சற்று நிமிர்ந்து நின்று இதயசந்திரனை
நோக்கிப் புன்முறுவல் கோட்டினார். "தமிழா! அச்சமிருக்
கிறதோ இல்லையோ மகாராஜாவுக்கு, என்னை மிக
முக்கியஸ்தனாக மதித்திருக்கிறார். சாதாரண ஒரு
கொள்ளைக்காரனை நோக்கி மகாராஷ்டிரப் படையே
வருகிறதென்றால் அது நமக்கு மிகவும் பெருமை" என்று
அம்முறுவலுக்கிடையே கூறிவிட்டுச் சற்று ரகசியமாக,
"இதயசந்திரா! இது ஒரு பெரிய சந்தர்ப்பம் நமக்கு.
மகாராஜா ஷாஹு ஜன்மத்தில் அடைந்திராத படிப்பி
னையை அடைவார் இந்தப் படையெடுப்பில்" என்று
சொன்னார், அதைச் சொன்னபோது அவர் கண்களி
லிருந்த ஒளி அந்தப் படிப்பினை கற்பிக்கப்படுவது நிச்சய
மென்பதைத் தெளிவாகக் காட்டியது.

அந்த ஒளியைக் கண்ட இதயசந்திரனின் மனம் பெரு
மிதத்தால் பொங்கியது. தனது நிலையையும் சாதனையை
யும் இத்தனை நிச்சயமாக நினைக்கவல்ல ஒரு மாவீரனிடம்
தான் பணிபுரிய நேர்ந்தது பெரும் பாக்கியமென்று நினைத்
தான். இருப்பினும் ஒரு பெரும் மகாராஷ்டிரப் படையை,
எந்தக் கட்டுப்பாடுமில்லா மலைவீரர்கள் கொண்ட
படையைக் கொண்டு எப்படி எதிர்ப்பது என்று சந்தேகப்
பட்டான் தமிழன். துறைமுக ஓரமுள்ள மலைப் பகுதிகளில்
சிறுசிறு கூட்டமாக வைத்துள்ள பிரிவுகளை ஒன்று திரட்டி
னால் அவையனைத்தும் ஒரே படையாக இயங்க முடியுமா
என்ற ஐயப்பாடும் இருந்தது தமிழக வீரனுக்கு. தவிர,
பேஷ்வாவே தலைமை வகித்துப் படையை நடத்துகிறா
ரென்றால், அவர் எப்படியோ, என்ன திறமைசாலியோ

எண்ணிப் பார்த்தான். ஆகவே கேட்டான். ''நமது தரைப் படையைச் சிறுசிறு தனிப்பட்ட பிரிவுகளைக் கொண்டு அமைக்கிறோம். இவர்களை ஒரே படையாக இயங்கச் செய்யப் பயிற்சி வேண்டும். அதற்குக் காலம் பிடிக்குமோ?'' என்று.

''தேவையில்லை. ஒன்றாக இயங்க இந்தப் பிரிவுகள் பழக்கப்பட்டிருக்கின்றன'' என்றார் கனோஜி.

''பேஷ்வா பிங்களே எப்படி? திறமைசாலியா?''

''திறமைக்கும் அவருக்கும் சம்பந்தம் கிடையாது.''

''என்ன பேஷ்வாவுக்கா?''

''ஆம்.''

''திறமையில்லாமல் எப்படி பேஷ்வாவாக முடியும்?''

''பேஷ்வா ஆவதற்கு மன்னன் கருணைதான் வேண்டும். திறமை அவசியமல்ல'' என்று கூறிய கனோஜி நகைத்தார்.

இதயசந்திரன் அவர் எதிரியைத் தவறாக மதிப்புப் போடுகிறார் என்று எண்ணினான். ''தகுதியில்லாமல் பதவி வருமா?'' என்று வினவவும் செய்தான்.

''வரும் சந்தர்ப்பங்களால் பதவிக்கு வருகிறவர்களுமிருக்கிறார்கள். தகுதியால் பதவிக்கு வருகிறவர்களுமிருக்கிறார்கள். சாதாரணமாகப் பதவியும் தகுதியும் ஒன்று சேருவதில்லை. பதவி வந்தவுடன் தகுதியிருப்பதாக நமக்கு ஒரு பிரமை ஏற்படுகிறது. பதவிக்கு வந்தவனிடம் சலுகைகள் சன்மானங்கள் எதிர்பார்க்கும் சிலர் தகுதி மற்றும் பல சிறப்புகளையும் கற்பிக்கிறார்கள். அந்தப் புகழ்ச்சிக் கோஷம், பாராட்டுக்கூச்சல்— திரும்பத் திரும்பக் காதில் விழுவதால் மக்களும் அவனைத் தகுதியுள்ளவர்களாக மதிக்கிறார்கள். சோதனை வரும்போது தகுதியின்றிப் பதவி பெறுபவன் வேஷம் வெளியாகிறது'' என்று கூறினார் கனோஜி ஆங்கரே இகழ்ச்சியுடன்.



''அப்படியானால்... பேஷ்வா பிங்களே...'' என்று துவங்கினான் இதயசந்திரன்.

''பிங்களே இரண்டே திங்களில் நமது சிறையில் இருப்பார்?'' என்று அறிவித்த கனோஜி, ''தரையில் இந்த நிலை இருப்பதால்தான் நீரிலிருந்து நிலத்துக்கு வருகிறாய்!'' என்று கட்டளையிடும் தோரணையில் கூறினார்.

பதிலுக்குத் தலை வணங்கிய இதயசந்திரன், ''அடுத்து நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவினான்.

''நாளை முதல் இங்கு வரும் படை வீரரைத் திரட்டிப் பயிற்சி அளி. அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களைத் தயார் செய்ய ஆயுத சாலைக்கு உத்திரவிடு. அத்துடன் ஆலிபாக்கிலுள்ள படைகளையும் அணி வகுத்து நடத்து. அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களைப் பம்பாயிலிருந்து வரவழைப்போம்'' என்றான்.

இதயசந்திரனின் முகத்திலே கேள்வி பெரிதாக எழுந்து நின்றது. ''பம்பாயிலிருந்தா?'' என்று அவன் வாய்விட்டுக் கேட்காவிட்டாலும் முகத்தில் கேள்வி பிரதிபலித்ததால் ஆங்கரே பதில் கூறினார், ''ஆம். பம்பாயிலிருந்துதான் பிரிட்டிஷாரிடமிருந்து'' என்றார்.

''பிரிட்டிஷார் உங்கள் விரோதிகளல்லவா?'' என்று வினவினான் இதயசந்திரன் வாய்விட்டு.

கனோஜி அவனருகில் வந்து அவன் தோளில் கை வைத்து, ''இன்று வரையில் விரோதிகள். நாளை முதல் நண்பர்கள்'' என்று விளக்கியதன்றி அவன் தோளையும் அழுத்தினார் வேடிக்கையாக.

அந்த அழுத்தத்தால் தோள் எலும்பு முறிவுறாததைக் குறித்து மகிழ்ந்த இதயசந்திரன், கனோஜியை ஏற இறங்கப் பார்த்தான் பக்கவாட்டில். அவன் பார்த்ததைக் கண்ட அவர் பெருவிழிகள் இகழ்ச்சிச் சிரிப்பைக் கக்கின. அவர் மீசையும் இதழ்கள் அசைந்ததால் வேடிக்கையாக அசைந்தது. 'யாரை நண்பர்களாக வைத்துக் கொள்வது

யாரை விரோதிகளாக்கிக் கொள்வது என்பது இவரிஷ்டம் போலிருக்கிறது?' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட இதயசந்திரன், "நட்புக்கு அவர்கள் ஒப்புக் கொள்வார்களா?" என்று வினவினான்.

கனோஜி லேசாக நகைத்தார். "அவர்களாக நமது நட்பை நாடினால் நாம் எப்படி மறுக்க முடியும்?" என்று வினவினார் நகைப்பின் ஊடே.

"அவர்களாகக் கோருவார்களா உங்கள் நட்பை? ஆம்! கோருவார்கள். இப்பொழுதுதானே அவர்கள் கப்பல்கள் இரண்டைத் தாக்கியிருக்கிறீர்கள்?" என்ற இதயசந்திரன் சொற்களில் கேலி இருந்தது.

கனோஜி ஆங்கரே அந்தக் கேலியை லட்சியம் செய்யவில்லை. அவன் தோளில் வைத்துப் பிடித்திருந்த கையையும் அப்புறப்படுத்தவில்லை. சிறிது நேரம் சிந்தனையில் இறங்கினார். பிறகு மெள்ளக் கூறினார், "இதயசந்திரா! இரண்டரை ஆண்டுகளில் நீ கடற்போர் கற்றாயே தவிர, அரசியல் கற்கவில்லை. கற்றிருந்தால் உனக்கு நிலைமை தெளிவாகப் புரியும். நன்றாகச் சிந்தித்துப் பார். விஜயதுர்க்கத்திலிருந்து உன்னை அனுப்பியபோது நன்றாக எச்சரித்து அனுப்பினேன் ஜன்ஜீராவின் பக்கத்தில் செல்லாதே என்று. வெள்ளைக்காரியிடமிருந்த மயக்கத்தில் உன்னையும் அறியாமல் ஜன்ஜீராவை அணுகினாய், அங்கு எதிர்ப்பட்ட கப்பல்களிலிருந்து தப்ப, காமாந்தகனாக இருந்தவன் பிரும்மேந்திர ஸ்வாமியாக மாறி எதிரிகளை ஏமாற்றி அவர்கள் படகுகள் நான்கை முகத்துவாரத்தில் அமிழ்த்திவிட்டாய். இதனால் ஸித்தி ரஸூல் யாகூத்கான் கொதிக்கிறான். அதை ஆட்சேபித்து எனக்கு ஓலையும் அனுப்பியிருக்கிறான். உன் செய்கையால் ஏற்கனவே தரையிலுள்ள ஸித்திகளின் விரோதம் மிகைப்படுகிறது. தரையில் ஷாஹூ, கடலில் ஸித்திகள் மொகலாயர் ஆதரவுடன் இவர்கள் எதிர்ப்பு. இந்த இருவரைச் சமாளிப்பதே எளிதல்ல. மூன்றாவதாக இப்பொழுது பிரிட்டிஷ் போர்க்



கப்பல்கள் இரண்டையும் ஒரு குராப்பையும் சிறிய காலிவாத்தையும் வைத்துக்கொண்டு விரட்டியிருக்கிறேன். ஆகவே பிரிட்டிஷ்காரர் விரோதமும் இப்பொழுது சேர்ந்திருக்கிறது. பிரிட்டிஷார் திறமையான கடலோடிகள். தந்திரசாலிகள். மேலுக்கு வர்த்தகர்கள். உண்மையில் ராஜதந்திரிகள். வீரர்கள். அவர்கள் விரோதமும் சேர்ந்தால் நமக்குக் கடற்பகுதி பெரும் யமனாகப் போய் விடும். ஆகையால், அவர்கள் நட்பு அவசியம். அதை அவர்கள் நாடும் போது அந்த நட்புக் கரத்தை நாம் கைப்பற்ற வேண்டும்" என்று.

இங்கு பேச்சைச் சற்று நிறுத்திய கனோஜி, "இதயசந்திரா! திரும்பத் திரும்ப அவர்கள் நமது நட்பை நாடி வருவார்கள் என்று நான் சொல்வது உனக்கு விசித்திரமாயிருக்கலாம். ஆனால் சிந்தித்துப்பார். நெடுந்தூரத்திலிருந்து அவர்கள் போர்க் கப்பல்களை வரவழைக்கிறார்கள் வியாபாரத்துக்குப் பாதுகாப்பு என்ற போர்வையில். இப்படி இரண்டிரண்டாக வரும் போர்க் கப்பல்கள் வெகு சீக்கிரம் கடற்படையானால் அவர்களைச் சமாளிப்பது எளிதல்ல. ஆனால் வரும் கப்பல்களையெல்லாம் நாம் தாக்கி அழித்துக் கொண்டிருந்தால் அவர்களுக்குக் கடற்படை உருவாகாது. ஆகவே, கப்பல்கள் ஒழுங்காக வந்து சேர அவர்களுக்கும் அவகாசம் வேண்டும். ஆகையால், அவகாசத்தைப் பெற அவர்கள் நமது நட்பைத் தேடுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி அவர்கள் நட்பை நாடினால் நாம் அங்கீகரிக்கலாமா என்பதுதான் கேள்வி" என்று கூறினார்.

இதயசந்திரன் அவரது சொற்களை மனத்தில் நன்றாக வாங்கிக்கொண்டு சிந்தித்துப் பார்த்தான். நிலைமையையும் எதிரிகளையும் எத்தனை திட்டமாகப் புரிந்து கொண்டிருக்கிறார் கடற்படைத் தளபதி என்பதை நினைத்துப் பார்த்துப் பிரமிப்பும் அடைந்தான். நிலத்தில் பாய, கனோஜி கடலில் அமைதி தேடுகிறார் என்பது புரிந்தது

அவனுக்கு. அத்துடன் ஒரு சந்தேகமும் ஏற்பட்டது. வேண்டுமென்றே பிரிட்டிஷ் கப்பல்கள் இரண்டையும் பிடிக்காமல் காயப்படுத்தி விரட்டியிருப்பாரோ ஸார்கேல் என்று கேள்வியும் அவன் மனத்துள் எழுந்தது.

அவன் நினைப்பையும் ஸார்கேல் புரிந்துகொண்டார். ''இல்லை இதயசந்திரா! நான் வேண்டுமென்று அவற்றைத் தப்ப விடவில்லை. அவை பெரும் போர்க் கப்பல்கள். பிடிக்க முடியாதென்ற காரணத்தாலேயே விரட்டினேன்'' என்றார்.

''அப்படியானால் பிரிட்டிஷாரிடமிருந்து செய்தியை எதிர்பார்க்கிறீர்களா விரைவில்?''

''ஆம்'' என்றார் ஆங்கரே.

''செய்தி வராவிட்டால்?'' இதயசந்திரன் கேள்வியில் சந்தேகமிருந்தது.

''வரும். அவர்கள் ராஜ தந்திரிகளாயிருந்தால் வரும். வராவிட்டால் வேறு வழி இருக்கிறது. வருமா வராதா என்பதையும், பிரிட்டிஷாரிடம் நட்புக்கொள்ளலாமா கூடாதா என்பதையும் நாளை கேட்டு விடுவேன்'' என்ற ஆங்கரே, ''இதயசந்திரா! நமக்குத் தெரியாத விஷயங்கள் பல. ஆனால் பராசக்திக்குத் தெரியாதது ஏதுமில்லை. அவள் கூறுவாள் எது நடக்கும் எது நடக்காது என்று. நாளை உத்தரவு கேட்கப் போகிறேன்'' என்றும் அறிவித்தார்.

அவரது முரட்டுப் பக்தி அவனுக்கு வியப்பை விளைவித்தது. ஆனால் ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. அந்தப் பக்தி மூடபக்தியோ எதுவோ, அதனால் கனோஜிக்கு நன்மையே விளைந்திருக்கிறது என்பது வெகு திட்டமாகத் தெரிந்தது அவனுக்கு. அத்துடன் நாளை அந்த ஓலைகள் உருளுவதைப் பார்க்கவும் ஆசையாயிருந்தது அவனுக்கு. பராசக்தியின் சந்நிதானம் அப்பொழுதே அவன் கண் முன்னால் எழுந்தது. குலாபியின் அருள்



கண்கள் தன்னை அப்பொழுதும் உற்று நோக்குவதாகத் தோன்றியது அவன் உள்ளத்துக்கு. 'நாளை பல விஷயங்கள் தெளிவாகும். ஏன், என் நிலைகூடத் தெளிவாகும்' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான் இதயசந்திரன்.

கனோஜியும் அவன் மனத்திலுள்ளதைத் திருப்பிச் சொல்வதுபோல் சொன்னார், ''இதயசந்திரா, நாளை குலாபி தீர்மானிப்பாள் என் கதியை, உன் கதியை, மகாராஷ்டிரத்தின் கதியை. மகாராஷ்டிரம் சிறப்பதும் இறப்பதும், வாழ்வதும் தாழ்வதும் நாளை அவள் தரும் கட்டளையைப் பொறுத்திருக்கிறது. கட்டளை எதுவாயினும் சரி, அதை இந்தக் கனோஜி நிறைவேற்றியே தீருவான். கனோஜி வாழ்வில் குலாபிக்குத்தான் அடிமை'' என்று.

இதைச் சொன்ன அவர் தோரணையில், பார்வையில், சொற்களில் கனவு விரிந்து கிடந்தது, அந்தக் கனவில் ஆழ்ந்தவர்போல் கனோஜி நீண்ட நேரம் மௌனமாகவே நின்றார். அவர் சொற்களால் ஈர்க்கப்பட்ட தமிழனும் நின்றான், சொல்லிழந்து, திறனிழந்து. குலாபியின் நினைப்பில் வந்த நிலைமை அது. அடிமை நிலைதான் அது. ஆனால எப்பேர்ப்பட்ட ஆனந்த நிலை!

# திருவுள ஓலை

மௌன நிலை பயத்திலும் ஏற்படுகிறது. பக்தியிலும் ஏற்படுகிறது. பயத்தில் ஏற்படும் மௌனம் மன உளைச்சலால் ஏற்படுகிறது. பக்தியில் விளையும் மௌனம் ஆறுதலாலும் ஆனந்தத்தாலும் ஏற்படுகிறது. ஆறுதலும் ஆனந்தமும் கலந்து நிலவும் நிலையை சாந்தி என்கிறோம். அந்த ஆறுதலில், ஆனந்தத்தில், இரண்டும் கலந்த சாந்தியில், நீண்ட நேரம் மௌனமாகவே நின்ற இருவரில் முதலாக சுயநிலையை அடைந்த இதயசந்திரன் நிலத்தில் நிலைக்க விட்டிருந்த கண்களை மெள்ளத் தூக்கிக் கடற்படைத் தளபதியை நோக்கினான். ''ஸார்கேல்!'' என்று மெதுவாக அழைக்கவும் செய்தான். ஏதோ ரகசிய வார்த்தை கூறுவதுபோல் உதிர்ந்த அந்த ஒற்றைச் சொல் கனோஜியைக் கனவிலிருந்து நனவுக்கு இழுக்கவே அவர் முகத்தில் பழைய புன்சிரிப்பும் விஷமக் களையும் நன்றாகப் படர்ந்தன. ''தமிழா, உன் வியாதி எனக்குப் பிடித்துக் கொண்டது'' என்று கூறிய கனோஜி அவன் முதுகில் அறைந்தார் மகிழ்ச்சியுடன்.

தடித்த அவர் கை கொடுத்த அறையின் வலியால் சற்று முகம் சுளித்த தமிழன், ''என் வியாதியா? எதைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று வினவினான்.

''சற்று முன்பு குலாபி கோயிலில் நீ காட்டிய பக்திப் பரவசம், அது என்னையும் பிடித்துக்கொண்டது போல் தோன்றுகிறது'' என்று சற்று முன்பு தாம் எட்டிய நிலையை மறைக்க எண்ணி வேடிக்கையாகப் பதில் கூறி நகைக்கவும் செய்தார். அத்துடன் அவனைத் தோளைப் பிடித்து அழைத்துக்கொண்டு தோர்லாவாடாவிலிருந்து மீண்டும் வெளியே சென்றார்.



ஸார்கேலும் ஜலதீபத்தின் தளபதியும் இணைபிரியாத தோழர்கள்போல வெளியே சென்றதை அரண்மனைக் காவலர்கள் வியப்புடன் பார்த்தனர்.

சுமார் கால் ஜாமத்திற்கு முன்பே அரண்மனைக்கு வந்த இருவரும் கோட்டையே உறங்கப்போகும் சமயத்தில் எதற்காக வெளியே செல்கிறார்கள் என்ற கேள்வியைக் காவலர் உள்ளூர எழுப்பிக்கொண்டாலும் வாய்விட்டுக் கேட்கத் திராணியிராததால் தலை வணங்கி வழிவிட்டு நின்றார்கள். அவர்கள் கிளம்பும்போது எதிரே வந்த கோட்டைக் காவலர் தலைவன் மட்டும் ஏதோ கேட்க வாய் திறந்தாலும் அவனை ஒரு கையால் வழியிலிருந்து ஒதுக்கி விட்டு ஆங்கரே மேலே நடந்தாராதலால் அவனும் வாயடைத்து நின்றான். காவலர் தலைவன் பிரமையையோ காவலர் வியப்பையோ சிறிதும் லட்சியம் செய்யாமல் தமது கால்களை வீசி சிங்கம்போல் நடந்த கனோஜி ஆங்கரே சுமார் இருநூறு அடிகளுக்கு மேல் நடந்து சென்று *மஹாதர்வாஜாவுக்கு வந்து அதன் பக்கப் படிகளில் ஏறி கோட்டை மதில்சுவரின்மீது நின்று கொண்டார். தன்னைத் தொடர்ந்து ஏறிவந்து அருகில் நின்றுகொண்ட இதயசந்திரனை நோக்கி, ''தமிழா! சுற்றுமுற்றும் பார். இங்கிருந்து உனக்குக் கடல் கேந்திரங்கள் அனைத்தும் தெரியும். இந்தக் கோட்டையின் பிரதானச் சுவர் சிறியது; வெளிச் சுவர் பெரியது. சுமார் 25அடி உயரமுள்ளது. உள் சுவரைக் காக்க வெளிச்சுவர் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. எத்தனை பெரிய கப்பல்; எத்தனை பெரிய பீரங்கி கொண்டு சுட்டாலும் உள் கோட்டையைத் தொட முடியாது. இதைத் தாக்க ஒரே ஒரு வழிதான். கரையில் இறங்கி வந்து தாக்க வேண்டும். கரையில் இறங்கி வருபவர்களை அழிக்க

---

* மஹாதர்வாஜா— *Main gate in north east corner of Kolaba fort— Maharashtra Gazeteer Kolaba, District.*

இக்கோட்டையில் பலமான பீரங்கிகள் இருக்கின்றன. இதன் பதினேழு ஸ்தூபிகளில் பதினேழு பீரங்கிகள் இருப்பதால் இறங்கும் படை எந்தப் பக்கம் இறங்கினாலும் அழிக்கப்படும். இந்தப் பதினேழு பீரங்கிகள் தவிர வேறு பல பீரங்கிகளையும் உள்மதில் சுவரிலும், வெளி மதில் சுவரிலும் பொருத்தலாம். இப்பொழுது உள் வெளிச் சுவர்களில் பீரங்கிகளில் சிலவே இருக்கின்றன. நாம் மேலும் பீரங்கிகளை அமைத்து இக்கோட்டைச் சுவர்களுக்குப் பயங்கரத் தீ நாக்குகள் பலவற்றை அளிப்போம். குலாபியின் சுடர் நாவைப்போல் இவை இயங்கினால் இக்கோட்டையை யாரும் அணுக முடியாது’’ என்று கூறிக்கொண்டே பதினேழு ஸ்தூபிகளையும் மதில்களில் தாம் பீரங்கிகளை அமைக்க உத்தேசித்திருக்கும் இடங்களையும் சுட்டிக் காட்டினார்.

இதயசந்திரன் கண்கள் அவர் கை காட்டிய இடங்களிலெல்லாம் சென்றன. கொலாபாவின் இரவுத் தோற்றமே அவனுக்குப் பயங்கரமும் இன்பமும் நிறைந்த தோற்றமாகத் தெரிந்தது. அத்துடன் பதினேழு ஸ்தூபிகளின் அமைப்பையும் அப்பொழுதுதான் சரியாகப் பார்த்தான் அவன். அந்த ஸ்தூபி ஒவ்வொன்றிலும் விளக்கு ஏதும் எரியாவிட்டாலும் உள்ளே ஒரு வீரனும், கடலை எட்டிப் பார்த்து ஒரு பீரங்கியும் இருக்கும் என்று திட்டமாகப் புரிந்துகொண்டான் தமிழன். அந்தப் பதினேழு ஸ்தூபிகளிலும் சரி, கோட்டை மத்தியிலிருந்த மாபெரும் ஸ்தூபியான மாணிக்கவாடாவிலும் சரி, விளக்கேதுமில்லாவிட்டாலும் கோவில் உச்சிகளிலும் வாயில்களிலும் எரிந்த விளக்குகள் அக்கோட்டையின் அழகை அந்த இரவில் மிகைப்படுத்திக் காட்டின. எதிரே துறைமுகத்தில் நின்ற கப்பல்களின் விளக்குகள் வேறு அக்கோட்டையின் கழுத்துக்குக் கெம்பு மாலை அணிவித்திருந்த பிரமையை அளித்தன. நாற்புறமும் விர்ரென்று வீசிய கடற்காற்றும் அலை ஓசையும் அவன் உடலுக்கும் இதயத்துக்கும்



பெரும் சாந்தியை அளித்தன. அதனால் பெருமுச்செறிந்த இதயசந்திரன் தோளைப் பிடித்து அழுத்திய ஆங்கரே, ‘‘தமிழா! இக்கோட்டையை நான் முன்பே பலப்படுத்தியிருப்பேன். அதற்குப் பல இடையூறுகள் இருந்தன. போர்ச்சுக்கீஸியர் இந்தக் கொலாபாவுக்கு அருகிலுள்ள சேவூலில் பெரும் பலத்துடன் இருந்தார்கள். அடுத்து ஜன்ஜீராவிலுள்ள ஸித்திகளின் பலமும் அபரிமிதமாயிருந்தது. அவ்விருவர் ஆதிக்கத்தையும், பூராவாக ஒடுக்க முடியவில்லையாயினும் ஓரளவு சமாளிக்கும் நிலைக்குக் கொண்டு வர இத்தனை ஆண்டுகள் பிடித்தன எனக்கு. இனி நான் தெற்கே நீண்ட தூரத்திலுள்ள விஜயதுர்க்கத்தில் இருக்கத் தேவையுமில்லை. ஆங்காங்கு உள்ள நமது துறைமுகக் கோட்டைகள் சில இப்பொழுது வலுவாக இருக்கின்றன. இதை வலுப்படுத்தித் தலைக் கோட்டையாக்கிக் கொண்டால் இது நமது கடலாதிக்கத்தின் வடகோடியாகவும் விஜயதுர்க்கம் தென்கோடியாகவும் இருக்கும். நம்மை மீறிக் கப்பல்கள் இந்த கடலில் சஞ்சரிக்க முடியாது’’ என்றும் கூறினார்.

ஸார்கேலின் தெளிவையும் திடீரென அவர் திட்டம் வகுத்து அதைச் செயல்படுத்த வந்துவிட்ட வேகத்தையும் எண்ணிப் பார்த்த தமிழனுக்கு அவரிடமிருந்த பக்தி அதிகமாயிற்று. ‘‘ஆம்! ஆம்! இரு துருவங்களில் நமது பலமிருந்தால் இடையில் எதிரிகள் நடமாடுவது கஷ்டம்’’ என்றான் இதயசந்திரன் அவர் கூறியதை ஆமோதித்து.

‘‘ஆம் தமிழா! எதிரிகள் சஞ்சாரத்தை ஓரளவு கடலில் நிறுத்தலாம். ஆனால் அதற்கு நமது பலம் மட்டும் போதாது’’ என்றார் ஆங்கரே.

‘‘வேறு என்ன வேண்டும் ஸார்கேல்?’’ என்று வினவினான் இதயசந்திரன்.

‘‘பிறர் பலவீனமும் அதற்குத் தேவை’’ என்று சுட்டிக் காட்டினார் ஸார்கேல்.

"பிறர் பலவீனமா?" என்ற தமிழன் கேள்வியில் வியப்பு மண்டிக் கிடந்தது.

"ஆம். பிரிட்டிஷ்காரர்கள், போர்ச்சுகீஸியர், ஸித்திகள் ஆகிய மூவரும் சேர்ந்து விட்டால் நமது நிலைமை இங்கு ஆபத்தாகிவிடும். அவர்கள் பலம் அதிகமாகும். அவர்கள் பிரிந்து நின்றால் அவர்களுக்குப் பலவீனம், நமக்கு அனுகூலம். பிரிட்டிஷார், போர்ச்சு கீஸியர், ஸித்திகள் இவர்களுக்குள் எப்பொழுதும் ஒற்றுமை கிடையாது. ஆனால் நம்மை எதிர்க்க ஒன்றுபடு வார்கள். ஆகவே ஒருவரையோ இருவரையோ நமக்கு நண்பர்களாக்கிக் கொள்வது நல்லது. முதலில் பிரிட்டிஷா ரிடம் நட்புக் கொள்வோம். மூவரில் ஒருவரைப் பிரிப்போம். பிரிட்டிஷாரை நாம் பிரித்தால் யுக்தியுள்ள வர்களைப் பிரிக்கிறோம். யுக்தியைப் பிரித்துவிட்டால் தீர்ந்தது மற்றவர் பலம்" என்று சுட்டிக் காட்டினார் கனோஜி.

மீண்டும் மீண்டும் கனோஜி பிரிட்டிஷாரின் நட்பிலேயே மனத்தை ஊன்றுவதைக் கவனித்த இதய சந்திரன் ஏதோ பெரும் திட்டத்தை கனோஜி முன்னோடி யாக வகுத்துவிட்டாரென்பதைப் புரிந்து கொண்டான். அதுவும் மகாராஷ்டிரர் கடல் பலத்தை விருத்தி செய்யும் பிற நாட்டாரை அடியோடு இந்த நாட்டில் கால் ஊன்றாமல் அடிக்கவும் அவர் ஏற்பாடு செய்கிறாரென்ப தையும் தெளிவாகத் தெரிந்து கொண்டான். தன்னை அவர் தரைப்படைக்கு மாற்றுவதுகூட அந்தத் திட்டத்தின் ஒரு பகுதிதானென்பது சந்தேகமறத் தெரிந்தது அவனுக்கு. கனோஜியின் அரசியல் சதுரங்கத்தில் மற்ற காய்களைப் போல் தானும் ஒரு காய்தானென்பது மிகத் தெளிவாகப் புரிந்தது தமிழனுக்கு. ஆகவே பதிலேதும் சொல்லாமல் மௌனமே சாதித்தான். ஆனால் கனோஜி மௌனம் சாதிக்கவில்லை. "தமிழா, நீ நினைக்கலாம். நான் ஏதோ மனிதர்களைச் சதுரங்கக் காய்கள்போல் நகர்த்த முயற்சிக்கிறேனென்று. நகர்வது நானல்ல. என்னையும்



உன்னையும் இதோ இந்தக் கடலையும் காற்றையும் திருவுளப்படி திருப்பும் மஹிஷேசுவரியான குலாபிதான் சகலத்தையும் நிர்வகிக்கிறாள், நகர்த்துகிறாள், விசிறுகி றாள், கொந்தளிக்கச் செய்கிறாள். நாளை அவள் சொல்லுவாள் நமக்கும் நாட்டுக்கும் எது நல்லது என்று" என்று கூறிய கனோஜி ஆங்கரே, கோட்டையைப் பலப்படுத்தும் வழிகளைப் பற்றி ஏதோ முணுமுணுத்துக் கொண்டு மதிள்சுவரிலிருந்து படிகளில் இறங்கி தோர்லா வாடாவை நோக்கிச் சென்றார். சென்றதும் மறுநாள் பூஜைக்கு வேண்டிய அனைத்தையும் செய்யக் கோட்டைக் காவலனுக்கு உத்தரவிட்டு இதயசந்திரனையும் இளைப் பாறப் பணித்து சயன அறைக்குள் நுழைந்து விட்டார்.

மறுநாள் விடியற்காலையிலேயே கொலாபா புதுக்கோட்டையாக மாறியது. குலாபியின் கோயிலில் மணி டணார் டணார் என்று ஒலித்ததால் எழுந்திருந்து தோர்லாவாடாவின் வாயிலுக்கு வந்த இதயசந்திரன் அங்கிருந்த வீரர்கள் அணிவகுப்பையும் பணியாட்கள் பலர் நாலா திசையிலும் பறந்துகொண்டிருந்ததையும் கவனித்து வியந்து நின்றான். எங்கிருந்தோ வந்த புஷ்பக் கூடைகள் தோர்லாவாடாவின் வாயிலில் இறக்கப்பட்டு அங்கிருந்த அதிகாரி பார்த்து அங்கீகரித்த பின்பு குலாபியின் கோயிலை நோக்கி விரைந்தன. எங்கும் சாதாரண ஜனங்களின் நடமாட்டமும் அதிகமாயிருந்தது. குலாபி ஆலய மணி யைத் தவிர பவானி ஆலயம், பத்மாவதி ஆலயம், கணேசர், மாருதி ஆலயங்கள் இவற்றிலிருந்து சங்கங்கள் ஊதப் பட்டன. மணிகள் ஒலித்தன. அந்தந்தக் கோயில்களி லிருந்து எழுந்த பிரார்த்தனை கீதங்களும் கொலாபாவைத் திருமண வீடாகவும் தெய்வீகத்தின் இருப்பிடமாகவும் அடித்துக் கொண்டிருந்தன.

இந்த ஏற்பாடுகளைவிடப் பெரும் ஏற்பாடுகளையும் திருவிழாக்களையும் இதயசந்திரன் தமிழகத்தில் பார்த் திருந்தானாகையால் அவற்றைப்பற்றி வியப்படைய வில்லை. அவன் முந்திய இரவில் இரண்டாவது ஜாமத்தில்

படுப்பதற்குச் சற்று முன்பு கனோஜி இட்ட உத்தரவு அந்த பஞ்ச உஷத் காலத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது! இடையிலிருந்த காலம் எவ்வளவு? இரவோடு இரவாக ஒரு தீவுக்கோட்டையை விழாத் தலமாக்க வேண்டுமென்றால் தூங்காமலே காரியம் நடந்திருக்க வேண்டும்! இப்படிப் பலபடி நினைத்தாலும், கனோஜியின் உத்தரவின் சக்தியையும் ஆட்களின் ஜரூரையும் எண்ணியதாலும் வியப்படைந்த இதயசந்திரனும் வேகமாக உள்ளே ஓடி, தானும் நீராடிக் கோயிலுக்குச் செல்லத் தயாரானான். மற்றவர்களுக்குத் தான் பின்னடையக்கூடாதென்ற நினைப்பால், வெகு துரிதமாக நீராடி, நீறணிந்து, குங்குமம் தீட்டி, இடையே பட்டுக் கட்டி மேலே பட்டுத் துணி மூடி தோர்லாவாடாவின் வாயிலுக்கு வந்தவன் வாயடைத்து நின்றான். வாயிலில் அவனுக்கு வரவேற்புக் கோஷ்டியொன்று காத்திருந்தது. கனோஜி ஆங்கரே நீராடித் தலையைத் துவட்டியிருந்தாலும் அந்த முரட்டு மயிர்கள் ஈரம் போகாமல் இரண்டொரு நீர்த்துளிகளைச் சொட்டிக் கொண்டிருக்க, இடையே பட்டு மூலக்கச்சமாகக் கட்டியிருக்க அதில் குறுக்கே ஒரு பட்டு சுற்றிப் பாய்ந்திருக்க, முரட்டு மயிர் பரந்த மார்பு திறந்து கிடக்க, அதில் பட்டை பட்டையாக விபூதி குறுக்கே காட்சியளிக்க, பெருங் கைகளிலும் முகத்திலும் கட்டுக் கட்டாக விபூதி தீட்டியிருக்க, நெற்றிக்கு நடுவே குங்குமம் துலங்க, மீசை பயங்கரமாக அகன்றிருக்க, சாட்சாத் இரணியன் போல் நின்றுகொண்டிருந்தார். அந்தப் பக்தி வேஷத்திலும் அவரது இடுப்புப் பட்டில் இரு கைத்துப்பாக்கிகள் துலங்கின. அவரைச் சுற்றி நீராடி நீறணிந்த வீரர்கள் ஆயுதங்களுடன் நின்றிருந்தார்கள். இதயசந்திரன் வெளியே வந்ததும், “வா! தமிழா! உனக்காகத்தான் காத்திருக்கிறோம்” என்று சொல்லி கனோஜி வரவேற்க, மற்ற வீரர் தலை தாழ்த்த ஏற்பட்ட நிலை கண்டு மலைத்த தமிழன் ஏதும் பேசாமல் கனோஜியின் அருகே சென்று வணங்கினான். பிறகு கூட்டம் குலாபியின் கோயிலை நோக்கி நடந்தது.



குலாபியின் கோயில் வாயிலிலும் பெருங்கூட்டம் முன்னதாகவே நின்றிருந்தது. கோயில் தூண்களிலும் மகுடத்திலுங்கூடப் புஷ்பாலங்காரம் பிரமிக்கத்தக்கதாயிருந்தது. கோயிலை அணுகுமுன்பாகவே உள்ளிருந்து கிளம்பிய சாம்பிராணிப் புகை மற்ற மலர்களின் நறுமணத்துடன் கலந்து இன்பமாக வெளியே வந்ததால் தெய்வீக சாந்நித்யம் எங்கும் நிரம்பி நின்றது. கனோஜி கோயிலை அடைந்ததும் கூட்டம் வழி கொடுக்கக் காவலர் அணிவகுத்து வெளியிலேயே நின்றுவிட கனோஜி உள்ளே நுழைந்தார், இதயசந்திரன் பின்தொடர.

கர்ப்பக்கிருகத்தை அடைந்ததும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். பிறகு எழுந்து நின்று தலை வணங்கி ஏதோ தோத்திரங்களை முணுமுணுத்தார். அடுத்து பூஜை துவங்கியது. இதயசந்திரன் கனோஜியைப் போலவே வணங்கி எழுந்தான். தனக்குத் தெரிந்த தமிழ்ப் பாடல்கள் ஓரிரண்டைச் சொன்னான். பிறகு குலாபியை ஏறிட்டு நோக்கினான். அழகும் பயங்கரமும் கலந்த மஹிஷேசுவரியின் திருவதனம் உள்ளத்திற்குப் பயத்தையே அளித்தது. குலாபியின் மூக்கிலிருந்த ஒரு வைரம் தூண்டிவிட்ட விளக்கைப் போல சுடர்விட்டு எரிந்தது. கால் ஆபரணங்களில் பட்ட பக்க விளக்குகள் அவள் திருவடி ஆபரணங்களிலும் பிரதிபலித்து அங்கும் பல தீபங்கள் ஒளிவிடும் பிரமையை அளித்தன.

சாஸ்திரி பூஜையைத் துவங்கினார். நூற்று எட்டு நாமங்களை உச்சரித்துக் குங்குமம் கொண்டு அர்ச்சித்தார். நூற்று எட்டு தேங்காய்கள் உடைக்கப்பட்டன. ஆயிரத்து எட்டு வாழைப்பழங்கள் நைவேத்தியம் செய்யப்பட்டன. பூஜை கிட்டத்தட்ட ஒரு ஜாமம் நடந்தது. அந்த ஒரு ஜாமமும் குலாபியின் தரிசனத்தில் லயித்து நின்றிருந்தார் ஆங்கரே. பூஜை முடிந்ததற்கு அறிகுறியாகத் தீபாராதனை செய்த சாஸ்திரி கனோஜிக்குச் சைகை செய்யவே கனோஜி உள்ளே சென்று குலாபியின் காலிலிருந்த மையை வழித்து

நெற்றியில் இட்டுக்கொண்டார். பிறகு மடியிலிருந்த இரு ஓலைச் சுருள்களை எடுத்து ஈசுவரியின் திருவடிகளில் வைத்து விட்டுக் குலாபியைப் பார்த்தவண்ணம் பின்னால் நடந்து கர்ப்பக்கிருகத்திலிருந்து வெளியே வந்து தியானத்தில் இறங்கினார்.

இதயசந்திரன் கண்களைத் தீட்டிக்கொண்டு ஓலைகளைக் கவனித்தான்.

திடீரென விர்ரென்று கேட்டது ஓர் ஒலி. அதைத் தொடர்ந்தது காற்று! ஓலையில் ஒன்று காற்றில் எழுந்தது, விழுந்தது, உருண்டது திருவடியிலிருந்து.

பிரமிப்பால் நிலைத்தன தமிழன் கண்கள். அந்த ஓலைகளில் உருண்டது ஒன்றுதான். அதுவும் காற்று வந்த திசையிலிருந்த ஓலையல்ல அது. எதிர்ப்புறம் இருந்த ஓலை. அது இருந்த இடத்தில் காற்றுப்பட நியாயமே இல்லை.

''ஆச்சரியம்! ஆச்சரியம்!'' என்று அவன் உள்ளக் குரல் ஒலி கிளப்பியது. கனோஜி மிகுந்த பக்தியுடன் எடுத்தார் அந்த ஓலையை. பிரித்தார் பயத்துடன், படித்தார் தலை வணங்கி. பிறகு கண்ணில் ஒற்றிக்கொண்டு ஓலையைப் பின்னால் நின்றிருந்த இதயசந்திரனிடம் கொடுத்தார். ஓலையைப் படித்த தமிழன் கண்களில் பிரமை தட்டியது. குலாபியின் உத்தரவு திட்டமாக இருந்தது. ஓலையைப் படித்துவிட்டு ஸார்கேலை நோக்கினான் தமிழன். கனோஜியின் கண்கள் ஈட்டிகளைப்போல் ஜொலித்தன. குலாபியின் கண்களைப் பேர்லவே அவர் கண்களும் இருப்பதாகத் தோன்றியது தமிழனுக்கு. அந்தச் சில விநாடிகளில், சக்தியின் விழிகள் பக்தனுக்கும் புது சக்தியை ஊட்டியிருக்க வேண்டும் என்று நினைத்த இதயசந்திரன், ''ஆண்டவனை அடியார்கள் எப்படிப் புரிந்துகொள்கிறார்கள்!'' என்று இதயத்துக்குள் சொல்லிக்கொண்டான். ''இனிப் பெரும் போர்கள் மகாராஷ்டிரத்தில் நடக்கும்'' என்று சற்று இரைந்தே சொன்னான்.

அத்தியாயம் 31

# உதடுகள் அசையவில்லை, ஒலியும் எழும்பவில்லை!

"போர்கள் துவங்கும். பிரிட்டிஷ்காரர்களிடம் நட்பு கொள்'' என்று வாசகம் தீட்டப்பட்ட ஓலையைக் கையிலேந்திக் கொண்டே வரப்போகும் பெரும் போர்களைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்த இதயசந்திரன் அடுத்து நிகழ்ந்த தீபாராதனையைக் கூடப் பார்க்கவில்லை. சாஸ்திரியடித்த மணியோசைகூட எங்கிருந்தோ அடிப்பதாகவே தோன்றியது அவன் சித்தத்துக்கு. அவன் கையிலிருந்த ஓலையைக் கனோஜி ஆங்கரே பிடுங்கித் தனது மடியில் செருகிக்கொண்ட பிறகுதான் இதயசந்திரனுக்குக் கோவில் ஸ்மரணை வந்தது. சற்று நேரம் குலாபியின் திவ்யரூபத்தைப் பார்த்து மிரள மிரள விழித்தான். பிறகு சாஸ்திரி கொண்டுவந்த தீபாராதனைத் தட்டிலிருந்த கற்பூரச் சுடரைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அந்தத் தட்டிலிருந்தே சாஸ்திரிகள் அர்ச்சனைக் குங்குமத்தை எடுத்து முதலில் கனோஜியின் நெற்றியிலும் பிறகு இதயசந்திரன் நெற்றியிலும் இட்டதும் கனோஜி மற்றுமொருமுறை குலாபித் தாய்க்குத் தலை வணங்கி விட்டு வெளியே சென்றார். இதயசந்திரனும் ஏதோ மந்திரத்தால் இயக்கப்பட்டவன் போல் அவரைத் தொடர்ந்து சென்றான்.

கோயிலிலிருந்து தோர்லாவாடாவுக்கு இவ்விருவரும் வரத் துவங்கியபோது கிட்டத்தட்ட உச்சிவேளை நெருங்கி விட்டதால் கதிரவன் ஆட்சி சற்றுத் தீட்சண்யமாகவே எங்கும் நடந்து கொண்டிருந்ததன் காரணமாக, தூரத்தே இருந்த கடலலைகள் பெரும் கண்ணாடிகளைப் போல் பளபளத்தன. கரிய பாறைகள் காலைத் தகிக்கும் நிலையை

அடைந்திருந்தன. கோயிலுக்குச் செல்லும் காரணத்தால் பாதரட்சையின்றியே வந்த கனோஜி ஆங்கரே, அந்தப் பாறைகளின் சூட்டைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் பல இடங்களில் நின்று நின்று கோட்டைப் புறத்தையும் கடற் புறத்தையும் ஆராய்ந்து ஆராய்ந்து பிறகு நடந்தார். இதயசந்திரன் கால்கள் பாறைக் கனலைத் தாங்க முடியாததால் சில வேளைகளில் அவன் சற்றுப் பெரும் பாறைகளளித்த நிழல்களில் ஒதுங்கியும் காலைச் சிறிது மாற்றிப் போட்டுத் தத்தளித்தும் ஆங்கரேயைத் தொடர்ந்து சென்றான்.

கொலாபா அன்று பெரிதும் மாறுபட்டிருந்தது. வேறு இரண்டு மூன்று கப்பல்கள் புதிதாகத் துறைமுகத்துக்கு வந்திருந்ததால், அவற்றிலிருந்து மாலுமிகளைத் தாங்கிய படகுகள் தரையை நோக்கி வந்து கொண்டிருந்த தல்லாமல், ஏற்கெனவே கரையிறக்கப்பட்டிருந்த கும்பல்கள் கூச்சலிட்டுக் கொண்டும், ஆடிப் பாடிக் கொண்டும் கோட்டையை நோக்கி வந்துகொண்டிருந்ததன் விளைவாகக் கடற்கரை அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. ஏற்கனவே பலர் கோட்டைக் கதவுகளையும் தாண்டிவந்து விட்டதால் கோட்டையின் பிரதான பாதுகாப்புச் சுவருக்கும் இரண்டாவது பாதுகாப்புச் சுவருக்குமிடையே இருந்த பிரதேசத்தில் அவர்கள் பாதரட்சை ஒலிகளும், ஆயுத ஒலிகளும் பெரிதாகக் கிளம்பிக் கோட்டைப் பகுதியை நிரப்பிக் கொண்டிருந்தன. அந்த ஒலிகளைக் கேட்டதாலோ என்னவோ குலாபி கோயிலைத் தாண்டியிருந்த சண்டையிடும் மிருக, பட்சிக் காட்சிச் சாலைகளிலிருந்த ஆட்டுக் கடாக்கள், கோழிகள், கிளிகள், கடம்பைகள் இவற்றில் சில பெரிதாகக் கத்தியும், சில கிலகிலா சப்தங்களைக் கிளப்பிக் கொண்டும் இருந்ததால் சுரம் தப்பிய வாத்தியங்கள் பல ஏக காலத்தில் சப்திக்கும் சூழ்நிலை பரவிக் கிடந்தது கோட்டைப் பகுதியில்.



இவற்றையெல்லாம் அடிக்கடி பார்த்தும் ஆராய்ந்தும், கேட்டும் சென்ற ஆங்கரே ஏதும் பேசாமலே தோர்லா வாடாவிற்கு வந்து தமது பிரதான அறையை அடைந்தார். பிறகு மேஜைமீதுள்ள தேசப்படத்தைப் பிரித்து அதன்மீது தமது இடையிலிருந்த கைத்துப்பாக்கி யொன்றையும் வைத்து ஒரு காலைத் தூக்கிப் பக்கத்தி லிருந்த நாற்காலிமீது ஊன்றிய வண்ணம் தேசப்படத்தை ஆராய்ந்தார். சுமார் அரைமணி நேரத்திற்கு மேலாக தேசப்படத்தை ஆராய்ந்த பின்னர் பக்கத்தில் நின்றிருந்த இதயசந்திரனை நோக்கி, ''உபதளபதி! கொலாபா இருக்குமிடத்தைப் பார்'' என்று அந்த இடத்தைக் கைத்துப்பாக்கியின் நுனியால் சுட்டிக் காட்டினார்.

அவர் கூறுவதற்கு முன்பே அந்தப் படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த உபதளபதி தலையை அசைத்தான் பார்ப்பதற்கு அறிகுறியாக. ஆனாலும் பதிலேதும் சொல்லவில்லை அவன், ஆங்கரேயிடமிருந்து மேற்கொண்டு கேள்விகள் எழும் என்ற காரணத்தால்.

அடுத்த கேள்வி உடனடியாக எழுந்தது, ''இதன் நிலைபற்றி என்ன நினைக்கிறாய்?'' என்று.

உபதளபதியின் பதிலும் தாமதமின்றி வந்தது, ''மிக அபாயமான நிலை'' என்று.

''என்ன அபாயமிருக்கிறது இங்கே?'' என்று மற்றுமொரு கேள்வியையும் வீசினார் கனோஜி துரிதமாக.

'..கொலாபாவைச் சுட்டி காட்டியதும் அவர் படத்தின் மீது இருக்கவிட்ட கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்ட இதயசந்திரன், ''இந்தக் கோட்டைக்கு நேர் வடக்கே வெகு அருகிலிருக்கிறது பிரிட்டிஷாரின் தளமான பம்பாய்த் தீவு. நேர் தெற்கே அதைப்போலவே வெகு அருகிலுள்ள சேவூலில் அடுத்த பலமான எதிரிகள் போர்ச்சுகீஸியர் இருக்கிறார்கள். சேவூலுக்குச் சற்றுத்

தெற்கே ஸித்திகளின் ஜன்ஜீராத் தீவு இருக்கிறது. அதற்கும் அடுத்து ஸாத்ஸித்தியின் அஞ்சன்வேல் கோட்டை இருக்கிறது. கோடியிலிருக்கிறது. விஜயதுர்க்கம். கொலாபாவும் விஜயதுர்க்கமும் பலமான எதிரிகளால் துண்டிக்கப்பட்டிருக்கிறது. எதிரே வடக்கில் பிரிட்டிஷார் இருக்கிறார்கள். போதாக்குறைக்கு'' என்று கூறியதன்றி ஒவ்வோர் இடத்தையும் துப்பாக்கியின் நுனியால் காட்டவும் செய்தான்.

கனோஜி உற்சாகத்துடன் தலையை அசைத்தார். அவரது பெரிய விழிகள் தமிழன் மீது அன்புடன் நிலைத்தன. ''தமிழா! நாம் பெரும் அபாயத்திலிருக்கிறோம் என்பது புரிகிறதா உனக்கு?'' என்று வினவினார்.

''நன்றாகப் புரிகிறது'' என்று கூறினான் இதயசந்திரன் கவலையுடன்.

''இந்த நிலையில் விஜயதுர்க்கத்திலிருந்து கொலாபாவிற்குத் தலைமைத் தளத்தை மாற்றியது அறிவுள்ள காரியமா அறிவுகெட்ட காரியமா?'' என்று வினவினார் ஆங்கரே அவனை நோக்கி.

இதயசந்திரன் பதில் சொல்லத் தெரியாமல் திணறினான். அறிவுகெட்ட காரியமென்று சொல்லத்தான் நினைத்தான் அவன். ஆனால் மகாராஷ்டிரத்தில் இணையிலா கடற்படைத் தலைவரின் முடிவை அறிவுகெட்ட காரியமென்று சொல்லத் துணிவில்லாததால் வெறித்து நோக்கினான் அவரை.

கனோஜி பெரிதாக நகைத்தார். ''இதயசந்திரா! அறிவுகெட்ட முடிவென்று உன் நெஞ்சிலிருக்கிறது. சொல்ல நடுங்குகிறாய்'' என்று அந்த நகைப்பைத் தொடர்ந்து கூறிய ஸார்கேல், ''நெஞ்சிலுள்ளதைச் சொல்ல அஞ்சாதே. படைத் தலைவர்களின் முடிவுகளில் போர்களோ அன்றி அமைதியோ ஏற்படுகிறது. அந்த முடிவுகள் மனித உயிர்களின் பெரு நாசத்திற்கோ



பேரமைதிக்கோ காரணமாகின்றன. ஆகவே ஆலோசனை சொல்பவன் விளைவைப் பார்க்காமல் நெஞ்சில் படுவதைச் சொல்லிவிட வேண்டும்'' என்றும் தெரிவித்தார்.

இதயசந்திரன் சிறிது நேரம் மௌனம் சாதித்தான். இவன் மௌனத்தைப் பற்றிக் கவலைப்படாமலும், அவன் பதிலை எதிர்பார்க்காமலும் ஸார்கேல் மீண்டும் தமது இன்னொரு கைத்துப்பாக்கி கொண்டு தேசப் படத்தின் பல பகுதிகளை ஆராய்ந்தார். பிறகு திடீரென்று இதயசந்திரனை நோக்கித் திரும்பி, ''உபதளபதி! கடல்தளங்களைப் பார்த்தாய் இதுவரை. இப்பொழுது நிலத்தளங்களையும் கோட்டைகளையும் பார். இங்கிருந்து நேர் கிழக்கிலுள்ள கல்யாணி நகரத்திலிருந்து, கொங்கணியின் மலைக் கூரை மீதுள்ள ராஜ் மச்சிலிருந்து, பூனா, ஸதாரா, பன்ஹாலா வரையில் நீண்ட மலைப் பிரதேசமும் கீழுள்ள பீடபூமியின் பெரும் பகுதியும் சேர்ந்தது மகாராஷ்டிரம். இவையனைத்திலும் மொகலாயரால் ஆதரிக்கப்பட்ட ஷாஹூ மகாராஜாவின் படைகள் இருக்கின்றன. அப் படைகள் நேரே கடலோரம் இறங்கினால் என்ன ஆகும்?'' என்று வினவினார் கனோஜி அந்த இடங்களையும் அவற்றைத் தொடர்ந்த நிலப் பகுதிகளையும் தொட்டுத் தொட்டுக் காட்டி.

''நாம் அழிக்கப்படுவோம்'' என்றான் இதயசந்திரன்.

''நாம் மட்டுமல்ல, இதயசந்திரா! ராஜாராமின் இளைய மனைவி தாராபாயும் அடியோடு அழிக்கப் படுவாள். தாராபாயைத் தரையில் வென்று முடிசூடி விட்டார் ஷாஹூ. ஆனால் கடலில் அவர் தாராபாயை வெற்றி கொள்ளவில்லை'' என்று சுட்டிக் காட்டினார் ஸார்கேல்.

ஸார்கேல் தம்மையே குறிப்பிடுகிறாரென்பதைப் புரிந்துகொண்டான் இ த ய ச ந் தி ர ன். தாராபாயால் ஸார்கேலாகவும் தார்யஸாரங்கரராகவும் நியமிக்கப்பட்ட ஸார்கேல் மகாராஷ்டிரப் போர்களில் தாராபாய்

முறியடிக்கப்பட்ட பின்பும் கடலில் அவள் பெயரால் போரிடுவது உண்மையில் தாராபாய்க்காக அல்லவென்றும், தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு அதிகார பூர்வமான ஏதோ ஒரு போலிக் காரணத்தை ஏற்படுத்திக் கொள்கிறாரென்றும் புரிந்து கொண்டதால் மெல்லப் புன்முறுவலும் காட்டினான்.

ஸார்கேல் அந்தப் புன்முறுவலைக் கவனித்தார். அதற்குக் காரணமும் அவருக்குத் தெளிவாக விளங்கியது. இருப்பினும் மெல்லக் கூறினார்: ''தமிழா! நான் ஷாஹுவை எதிர்ப்பதற்குச் சுயநலம் காரணமில்லை'' என்று.

''இல்லை இல்லை'' என்று ஆமோதித்த இதயசந்திரன் குரலில் லேசாகக் கேலி ஒலித்தது.

கனோஜி மெள்ள நகைத்தார் பதிலுக்கு. ''தமிழா! நில ஆதிக்கத்தையும் கடலாதிக்கத்தையும் தவிர வேறு முக்கிய விஷயங்கள் இந்தப் போர்களில் கலந்திருக்கின்றன. ஷாஹுவின் பலம் தற்சமயம் மொகலாயர் அளித்துள்ள பலம். ஷாஹுவை ஆதரித்தால் மொகலாயர் செல்வாக்கை மகாராஷ்டிரத்தில் ஆதரிக்கிறோம். ஷாஹு வலுத்தால் மொகலாயர் வலுக்கிறார்கள். அதன் விளைவு எல்லோருக்கும் புரிந்தது. ஆகவே தாராபாயோ அல்லது தாராபாயின் பெயரையோ நாம் ஆதரிக்க வேண்டியது அவசியமாகிறது. தரைப் போர்களில் தாராபாய் தோற்றுவிட்டாள். இப்பொழுது கடல் ஒன்றில்தான் அவள் ஆதிக்கம் இருக்கிறது. என் மூலமாக அதை நிலைநிறுத்த வேண்டியது அவசியம். அதை நிலைநிறுத்தத் தரைப் படை உதயமாகிறது'' என்றும் கூறினார்.

இதயசந்திரன் அவரது எண்ணங்களின் போக்கைப் புரிந்துகொண்டான். ''கடலைக் காக்கத் தரைப் படை எதற்கு?'' என்று வினவினான் சிறிது யோசனைக்குப் பிறகு.



''நிலத்தைக் காக்கக் கடல் வலு தேவையில்லையா?'' என்று வினவினார் கடற்படைத் தளபதி.

''ஆம்'' என்று ஆமோதித்தான் உபதளபதி.

''அதுபோலத்தான் இன்னொன்றும். கடலைத் தாக்க நிலத்தில் வலு தேவை. கப்பல்களாலும் தீவுக் கோட்டைகளாலும் துறைமுகங்களை வலுப்படுத்துகிறோம் நிலத்தைக் காக்க. அந்தத் துறைமுகங்களையும் கப்பல்களையும் காக்க நிலத்திலுள்ள வீரர் தேவைப்படுகின்றனர். உணவும், ஆயுதங்களும் தேவைப்படுகின்றன. ஆகவே, ஒன்றைவிட்டு ஒன்றைக் காக்க முடியாது. இதனால்தான் நமது தரைப்படை வலுப்படுகிறது. மொகலாயர் கடற்படைத் தலைவர்களான ஸித்திகளைக் கொண்டு ஷாஹு நம்மை அடக்கச் செய்த முயற்சிகள் பலிக்காததால் நமது துறைமுகக் கோட்டைகளைப் பிடிக்கத் தரைப்படையை ஏவுகிறார். அந்தச் சவாலை நாம் ஏற்போம். இன்னும் பத்து நாட்களில் நமது தரைப்படை எத்தன்மையது என்பதை நீயே பார்க்கப் போகிறாய்'' என்று கூறினார் கனோஜி.

இதயசந்திரன் அவரது நுண்ணறிவைக் கண்டு மிக வியந்தான். ஸார்கேல் மேலும் சொன்னார், ''ஆகையால் தான் தமிழா, கொலாபாவைத் தலைமைத் தளமாக்குவது. அபாயமானாலும் இதைத் தலைமைத் தளமாக்குவது ஏனென்றால் இங்கிருந்து நாம் ஷாஹுவைச் சமாளிப்பது எளிது. கொலாபாவைத் தாக்குவது இப்பொழுதுதான் எளிது. இன்னும் இரண்டு நாள் கழித்தால் எளிதல்ல'' என்று.

''ஏன்? இரண்டு நாளில் என்ன நடந்துவிடும்?'' என்று வினவினான் தமிழன் ஏதும் புரியாமல்.

''நமது கடற்படையில் பாதி இங்கு வந்துவிடும். இவற்றில் சில இந்தத் தீவுக்கோட்டையைப் பாதுகாத்துக் கடலில் நிற்கும். இன்னும் சில இங்கிருந்து ஜன்ஜீரா வரையிலுள்ள கடற்பகுதியில் சதா தெற்கு நோக்கி சஞ்சரிக்கும்.

விஜயதுர்க்கத்திலுள்ள பாதிப் படை விஜயதுர்க்கத்திலிருந்து ஜன்ஜீரா வரை வடக்கு நோக்கி சஞ்சரித்தவாறு இருக்கும். அரபிக் கடலின் இந்தப் பகுதியை இரண்டாகப் பிரித்து விட்டேன். ஸித்திகளின் ஜன்ஜீராவிலிருந்து விஜயதுர்க்கம் வரை தென்பகுதி. கொலாபா வரை வடபகுதி— இந்த இரண்டு பகுதிகளில் நமது கடற்படையின் ஒவ்வொரு பகுதி உலாவும். ஆலிபாக்கில் தரைப் படையின் சிறு பகுதிகள் இணைந்து பெரும் படையொன்று ஒரு தமிழன் இஷ்டப்படி வளையும். இதற்கிடையில் அந்தத் தமிழன் ஒருமுறை பம்பாய் சென்று வருவான்'' என்று விளக்கினார் கனோஜி.

தமிழன் திகைத்தான் அவர் ஏற்பாடுகளைக் கேட்டு. அந்தத் திகைப்புக்கிடையே கேட்டான், ''பம்பாய்க்கா?'' என்று.

''ஆம்.''

''எதற்கு?''

''குலாபியின் உத்தரவை நிறைவேற்ற.''

''பிரிட்டிஷார் நட்பை நாடவா?''

''ஆம்.''

''அவர்களாக நமது நட்பை நாடுவார்கள் என்று கூறினீர்களே நேற்று?''

''ஆம். அவர்களாகத்தான் நாடுவார்கள்.''

''அப்படியானால் நான் போவானேன்?''

''நட்பை நாட அல்ல நீ செல்வது.''

இதயசந்திரன் விழித்தான். ''பிரிட்டிஷாரிடம் தூது போகச் சொல்கிறீர்களா, அவர்கள் நோக்கமறிய?'' என்று வினவினான் குழப்பத்துடன்.

''இல்லை. அவர்களிடம் போகச் சொல்லவில்லை உன்னை'' என்றார் ஆங்கரே திட்டமாக.



''வேறு யாரிடம்?'' என்று கேட்டான் தமிழன் குழப்பம் அதிகரிக்க.

''உன் காதலியிடம்'' என்ற ஆங்கரே அவனை உற்று நோக்கினார்.

அந்த நோக்கில் பரிகாசமில்லை, விஷமமில்லை. ''யார் காதரைனிடமா?'' என்று வினவினான் அவர் முகத்திலிருந்த தீர்க்க சிந்தனைக்குக் காரணம் புரியாமல்.

அவர் கூறிய பதில் அவனைத் திக்பிரமையடைய வைத்தது. ''அவளிடமில்லை. பானுதேவியிடம். கஹினாவின் உத்தரவையும் நிறைவேற்றிவிடு'' என்ற ஆங்கரேயின் சொற்கள் அவன் திக்பிரமையை உச்சநிலைக்குக் கொண்டு சென்றது.

''பானுதேவி, கஹினா...'' என்ற சொற்களை உச்சரிக்க அவன் உள்ளம் துடித்தது. உதடுகள் அசையவில்லை. ஒலியும் எழும்பவில்லை!

# அமைதிக்கும் அனுபவத்துக்கும் பெண்!

கஹினாவின் உத்தரவை நிறைவேற்றி விடும்படியும் பானுதேவியைச் சந்திக்கும்படியும் கனோஜி ஆங்கரே கூறியதைக் கேட்டதும் இதயசந்திரன் மிதமிஞ்சிய உணர்ச்சிகளால் திக்பிரமையடைந்து பல நிமிடங்கள் நின்ற இடத்தில் சிலையென நின்று விட்டதன்றி, பேச நா எழாமலும் தவித்தானென்றால் அதற்குக் காரணங்கள் பல இருந்தன. கஹினா மிக ரகசியமாகத் தன்னிடம் அனுப்பி வைத்த கடிதத்தைப்பற்றி கனோஜி ஆங்கரேக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும் என்ற யோசனை ஒரு காரணம். அப்படி காகிதமனுப்பியிருந்ததை அறிந்திருந்தாலும் அது பானுதேவிக்குத்தான் தெரியும் என்பதை அவர் எப்படி உணர்ந்திருக்க முடியும் என்று இதயத்தில் எழுந்த கேள்வி மற்றொரு காரணம். ஒருவேளை கடிதம் கொண்டு வந்தவனை வழிமறித்துக் கடிதத்தின் விலாசத்தைப் பார்த்திருந்தாலும் அதற்கும் அரசியலுக்கும் சம்பந்தமிருக்க முடியுமென்று ஏன் நினைக்கவேண்டும் கடற்படைத் தலைவர் என்ற குழப்பம் இன்னொரு காரணம். அப்படி அரசியலுக்கும் அக்கடிதத்திற்கும் சம்பந்தமிருப்பது ஸார்கேலுக்குத் தெரியாது என்றால், அரசியலைப்பற்றியும் போர்களைப்பற்றியும் பேசிவிட்டுத் திடுதிப்பென்று தமது மனைவியின் கடிதத்தைப் பற்றி உத்தரவிடுவானேன் என்ற நினைப்பும் காரணங்களில் ஒன்றாயிற்று.

இப்படிப் பல நினைப்புகளால் திண்டாடித் திக்பிரமை பிடித்து நின்ற இதயசந்திரனை நோக்கிய கனோஜி மெல்லத் தமது உதடுகளில் புன்முறுவலைத் தோற்றுவித்தார். ''தமிழா! உனக்குப் பெண்களென்றாலே திக்பிரமை பிடிக்கிறது. வர வர உனது துணிவு காற்றில் பறந்து விடுகிறது'' என்று கூறி மெல்ல நகைக்கவும் செய்தார்.



இதயசந்திரன் நகைக்கும் நிலையிலோ நகைப்பை ரசிக்கும் நிலையிலோ இல்லாததால் சீரிய நோக்கு நிறைந்த விழிகளை அவர்மீது திருப்பினான். ''ஸார்கேல்! நீங்கள் மனைவிமீதே வேவு பார்க்கிறீர்களா?'' என்று வினவவும் செய்தான் வெறுப்பு நிறைந்த குரலில்.

''ஆம். அதனாலென்ன?'' என்றார் ஸார்கேல் மிக அலட்சியமாக. அதில் என்ன தவறு என்ற கேள்வி அந்தப் பதிலில் தொக்கியிருந்தது.

இதயசந்திரன் அந்த அலட்சியத்தைக் கவனிக்கவே செய்தான். மனைவியையே வேவு பார்ப்பவர் யாரைத் தான் நம்புவார் என்று புரியவில்லை அவனுக்கு. ஆகவே கேட்டான் மீண்டும், ''மனைவியை வேவு பார்ப்பது நியாயமா? அவர்களிடம் அது நம்பிக்கைக் குறைவைக் காட்டாதா?'' என்று.

''தமிழா! உலக ரீதியும் உனக்கு இன்னும் புரியவில்லை. மனைவியை நான் நம்பவேண்டுமென்கிறாய்? அவள்மீது ஒரு கண்ணை வைத்திருப்பது தவறென்கிறாய்?'' என்று வினவினார் சிரித்துக்கொண்டே.

''ஆம். நம்பிக்கையில்தான் வாழ்வு மலர்கிறது, மணக்கிறது'' என்று கூறினான் தமிழன்.

''அப்படியா!'' என்ற கனோஜி ஆங்கரேயின் கேள்வியில் இகழ்ச்சி அபரிமிதமாக ஒலித்தது.

இதயசந்திரன் அந்த இகழ்ச்சியைக் கவனிக்கத் தவறவில்லை. அதனால் இன்னும் சற்று உறுதியாகவே சொன்னான்: ''ஆம்'' என்று.

''மனைவியும் நம்மை நம்பவேண்டுமல்லவா?'' என்று வினவினார் ஸார்கேல்.

''ஆம். அவசியம் நம்பவேண்டும்'' என்று பதிலிறுத்த பிறகுதான் விழித்துக்கொண்டான் இதயசந்திரன். ஸார்கேல் தன்னை எங்கு இழுத்துச் செல்கிறாரென்ற உண்மையைப் புரிந்துகொண்டான். ஆகவே சொற்களை உச்சரித்ததும் சற்றுக் குழம்பவே செய்தான்.

அவன் குழப்பத்தைக் கவனித்த ஆங்கரே பலமாகச் சிரித்தார். வழக்கம்போல் அவன் முதுகில் தட்டவும் செய்தார். ''புரிகிறதா தமிழா உனக்கு. எந்த மனைவி யும் புருஷனை நம்புவதில்லை. எந்தப் புருஷனும் மனைவியை நம்புவதில்லை. இதுதான் உலக ரீதி, உலக தர்மம், மனித குலத்தின் இயற்கை. கஹினா என் கொள்கைகளை ஒப்பவில்லையென்பது எனக்குத் தெரியும். அவளுக்கு ஷாஹூதான் மகாராஷ்டிர மன்னன். அந்த ராஜபக்திக்காகக் கணவனுக்கெதிராகச் சதியும் செய்வாள். ஆகையால் அவளை நம்பாமல், அவள்மீது நான் ஒரு கண் வைத்திருப்பதில் தவறென்ன?'' என்று வினவவும் செய்தார் கடற்படைத் தலைவர்.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று இதயசந்திர னுக்குத் தெரியாததால் அவனுக்குக் கோபமே வந்தது. ''சிறிய விஷயங்களை மிகைப்படுத்துகிறீர்கள். தவிர உங்கள்மீதும் தவறிருக்கிறது'' என்று சம்பந்தமில்லாமல் சிறிது சினத்தைக் காட்டிப் பேசினான்.

கனோஜி, ''பலே பலே!'' என்று கூறி ராட்சதச் சிரிப்பாகச் சிரித்தார்.

''என்ன பலே!'' என்றான் தமிழன் ஆத்திரத்துடன்.

''தமிழா! உன்னைத் தமிழன் என்று அழைப்பதுகூடத் தவறு. பார்க்கப் போனால் நான்தான் தமிழன்'' என்றார்



''நான் தமிழனல்லவா?''

''அல்ல.''

''ஏன்?''

''தமிழ்க் காவியங்களில் காதல் நிரம்ப இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். கள்ளத்தனமாகக் காதல் புரிவதும் சிறப்பாகச் சொல்லப்பட்டிருப்பதாகத் தஞ்சை மகாராஷ்டிரர் சொல்லக் கேள்வி. அது சரியானால் அதைக் கடைப்பிடிப்பவன் நான். அப்படி நான் காதலிக்கிறேன் பல பெண்களை, அனுபவித்துமிருக்கிறேன் பல அழகி களை. நீ ஓரிரண்டு பெண்களைக் கண்டு பல்லிளித்து விட்டு அவர்களை அணுகவும் அனுபவிக்கவும் அஞ்சி ஒதுங்குகிறாய். இப்படிப்பட்ட நீ எப்படித் தமிழனா யிருக்க முடியும்?'' இதைச் சொன்ன கனோஜி ஆங்கரே மீண்டும் கட்டிடம் அதிரும்படியாக நகைத்தார்.

இதயசந்திரன் அவர் பேச்சு எதையும் ரசிக்கவில்லை. தமிழர்களெல்லாம் காதல் சுவையிலேயே திளைத்துக் கிடப்பவர்கள் என்று அவர் கூறியது வேப்பங்காயா யிருந்தது அவனுக்கு. அவர் தம்மைத் தமிழரென்று சொல்லி மார்தட்டிக் கொண்டதும் அவனுக்கு வேடிக்கையா யிருந்தது. ''நீங்கள் சொல்வதை நான் ஒப்பவில்லை. தமிழரை நீங்கள் அறிய மாட்டீர்கள். அவர்கள் வீரர்கள். எதிலும் ஒரு வரையறைக்கு உட்பட்டு நடப்பவர்கள்'' என்று வினவினான் கோபத்துடன்.

''வரையறை பெண்களிடம் கூடாது. அவர்களுக்கு வரையறை கிடையாது. எந்தப் பெண்ணுடன் நாம் உறவு வைத்துக்கொண்டாலும் அவள் நம்மைச் சந்தேகிப்பாள். வேறு பெண்களைப் பார்க்கிறோமா, பேசுகிறோமா என்பதையும் கண்காணிப்பாள். நம்பிக்கையில்லாத சிருஷ்டிதான் பெண்! ஆகவே அவர்களை நாம் நம்புவதும் தவறு. அவர்களை அனுபவிப்பதோடு நிறுத்திக் கொள்ள

வேண்டும். உபயோகத்துக்குப் பெண் சிருஷ்டி. அதற்கு மேல் அவர்களுக்கு இடம் கொடுப்பது மடத்தனம்'' என்றார் ஆங்கரே.

''பெண்கள் ஆளப் பிறந்தவர்கள் என்று நாங்கள் நினைக்கிறோம்'' என்றான் தமிழன்.

''தமிழா! வடமொழியில் ஒரு பழமொழி உண்டு. அது சொல்கிறது. 'ஸ்திரீ நாயகம், பாலநாயகம், பகுநாயகம், அநாயகம்' என்று. ஸ்திரீ ஆட்சி, வீட்டுக்கும் பயனளிக்காது, நாட்டுக்கும் பயனளிக்காது. அநாயகமும், அராஜகமுமே இவற்றில் விளையும். நான் ஏதோ சுலோகம் சொல்கிறேனென்று மலைக்காதே. யாரோ சொல்லிக் கேள்வி. ஆனால் இதில் உண்மை அதிகம் இருக்கிறது. என் அனுபவமும் அப்படித்தான். சபல புத்தியுள்ள பெண் திட்டமான முடிவுகளை எடுக்க முடியாது. சிந்திக்க முடியாது. பத்துப் பேர் சேர்ந்து குட்டை குழப்பும் நிர்வாகத்தில் எஜமான் யார் என்று தெரியாது. இதெல்லாம் வீட்டுக்கும் அனர்த்தம், நாட்டுக்கும் அனர்த்தம்'' என்று தமது சித்தாந்தத்தை வெளியிட்ட ஆங்கரே மேலும் கூறினார், ''ஆகையால்தான் நான் மனைவிமார்களை நம்புவதில்லை. எனது வீரர்களை, மாலுமிகளை நம்புகிறேன். அதனால்தான் நான் காரியங்களைச் சாதிக்க முடிகிறது. கஹினா உனக்குக் கடிதம் அனுப்பியதும் வீரன் நேரடியாகக் கடிதத்தை என்னிடம்தான் கொண்டு வந்தான். அதை நான் படிக்கவில்லை. விலாசத்தை மட்டும் பார்த்துக் கொண்டேன்...''

வியப்பு நிரம்பிய விழிகளை கனோஜியின்மீது திருப்பிய இதயசந்திரன் கேட்டான், விலாசத்தை மட்டும் பார்த்து என்ன லாபம்?'' என்று.

கனோஜி சொன்னார்: ''அந்த விலாசத்திலிருப்பவரைக் கண்காணிக்க உடனடியாக ஏற்பாடு செய்துவிட்டேன்.



அங்கு யார் யார் வருகிறார்கள் என்பதையும் அவ்வப்போது அறிந்து வருகிறேன். பானுதேவி மாமனிருக்கும் ஸதாராவை விட்டுப் பம்பாயிலுள்ள உறவினர்களோடு ஏன் தங்கவேண்டும்? ஸதாரா அரண்மனையைவிட வெள்ளைக்காரர் அதிகமாக வசிக்கும் கவர்னர் படை வீட்டுக்கருகில் ஏன் வசிக்கிறாள்? பம்பாயைப் பார்க்க வந்திருந்தால், உறவினருடன் சீராட வந்திருந்தால் சுமார் இரண்டு மாத காலமாக அவள் பம்பாயிலேயே தங்கியிருப்பானேன்? இக்கேள்விகளுக்கு விடை காண முயன்றேன்.''

இதயசந்திரன் சிந்தனை துரிதமாக வேலை செய்தது. ''விடை கிடைத்துவிட்டதா?'' என்று வினவினான் சிறிது வேகத்துடன்.

''கிடைத்துவிட்டது. அது உனக்கும் புரிந்திருக்கிறது'' என்றார் கனோஜி.

''எனக்குப் புரிந்திருக்கிறதா?''

''ஆம். கஹினா மகாராணி தாராபாய்க்கு எதிரான திட்டங்களை அக்கடிதத்தில் எழுதியிருக்க வேண்டும். அதைப்பற்றி உன்னிடமும் பிரஸ்தாபித்திருப்பாள் அவள்.''

இதயசந்திரன் அசந்துபோனான். கஹினா தன்னிடம் கூறியதைக்கூட கனோஜி ஊகித்துக்கொண்டதை அறிந்த அவன் அவருடைய அபார புத்தி கூர்மையைக் கண்டு வியந்தான். அவர் சகலத்தையும் உணர்ந்துகொண்டு தன்னைச் சதுரங்கக் காயாக்குகிறார் என்பதைப் புரிந்து கொண்டதால் கேட்டான், ''கஹினா அம்மையாரின் கடிதத்தை நான் கொண்டுபோய்க் கொடுப்பதால் பயனுண்டா?'' என்று.

''உண்டு'' என்றார் ஆங்கரே.

"என்ன பயன்? உங்களுக்குத்தான் பம்பாயில் நடப்பது தெரிந்திருக்கிறதே?" என்றான் இதயசந்திரன்.

"அதனால்தான் பயன், இதயசந்திரா! இப்பொழுது பானுதேவி ஷாஹூவின் சார்பில் பிரிட்டிஷாரைத் திருப்ப முயன்று வருகிறாள். ஒரு மாத காலமாக அவள் உள்ள மாளிகைக்கு பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் பலர் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அது தவிர ஒரு போர்ச்சுகீஸியனும் வருகிறான்..." என்று ஆங்கரே குரலைத் தாழ்த்தி, "அவன் உனக்கும் தெரிந்தவன்" என்றார் ரகசியமாக.

"எனக்குத் தெரிந்தவனா?" என்று வினவிய இதயசந்திரன் குரலில் வியப்புமிருந்தது, குழப்பமுமிருந்தது.

கனோஜி ஆங்கரே சற்று நிதானித்தார், இதயசந்திரன் உஷ்ணம் குறைவதற்காக. பிறகு கூறினார், "என் மகளை அடையப் போட்டியிட்டவன், மானுவல் டி காஸ்ட்ரோ" என்று.

கனோஜி அவரது இடையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து முகத்துக்கு நேரே நீட்டியிருந்தால்கூட அடைய முடியாத பெரும் திகைப்பை அடைந்தான் இதயசந்திரன். பரம அயோக்கியனான காஸ்ட்ரோ பானுதேவியிருக்குமிடம் போய் வருகிறானென்பதைக் கேட்டவுடன் அவன் சிந்தை மட்டுமின்றி அவன் உடலெல்லாம்கூடக் கொதித்தது. பானுதேவிக்கு காஸ்ட்ரோவால் என்ன அபாயம் நேரிடுமோ என்ற எண்ணம் அவன் அச்சத்தை உச்சநிலைக்குக் கொண்டு சென்றது. அந்த அச்சத்துடன் கேட்டான் தமிழன், "தளபதி! இது பயங்கரமான செய்தியல்லவா?" என்று.

"எது?" கனோஜியின் பதில் கேள்வியில் அசட்டை இருந்தது.

"காஸ்ட்ரோ பானுதேவியிருக்குமிடம் போய்வருவது?"



"அதில் பயங்கரமென்ன இருக்கிறது?"

"காஸ்ட்ரோ அயோக்கியன். மஞ்சுவிடமே அவன் சரியாக நடந்து கொள்ளவில்லை."

"ஆம். அதற்குத்தான் நீ தண்டனை அளித்துவிட்டாய் அவனுக்கு."

"இப்பொழுது பானுதேவி?"

"என்ன பானுதேவிக்கு?"

"அபாயம் ஏதாவது நேரிட்டால்?"

"அதற்கு அவள்தான் பொறுப்பாளி."

"அவளா!"

"ஆம்."

"நீங்கள் சொல்வது புரியவில்லை எனக்கு."

"புரியும்படி சொல்கிறேன் கேள்" என்ற கனோஜி, "தமிழா! அவன் நாடவில்லை பானுதேவியை. அவள் அழைப்பின்மேல் அவன் போயிருக்கிறான். அதுவும் நீ நினைக்கிற காரணத்துக்கல்ல. பானுதேவி எனக்கெதிராக என் விரோதிகளைத் திரட்டுகிறாள். என் கடற்படை மர்மங்களை அறிந்தவர்களைத் தன் பக்கம் சேர்த்துக் கொள்ள முயலுகிறாள். அந்த முயற்சியில் காஸ்ட்ரோவை யும் அழைத்துப் பேசுகிறாள். காஸ்ட்ரோ இப்பொழுது பிரிட்டிஷாரிடம் வேலையாயிருக்கிறான். இவை அனைத்தையும் இணைத்துப் பார்" என்று கூறினார்.

போர் மேகங்கள் பம்பாயில் உற்பத்தியாவதை உணர்ந்தான் இதயசந்திரன், அவர் விளக்கத்திலிருந்து. பம்பாயில் தனது அலுவல் என்ன என்பதையும் புரிந்து கொண்டான். 'பிரிட்டிஷ்—ஷாஹூ' ஒப்பந்தம் ஏற்படாது தவிர்க்க வேண்டிய முக்கிய கடமையைச் செலுத்தவும், பிரிட்டிஷாரைக் கனோஜி பக்கம் இழுக்க ஏற்பாடு செய்யவும் கனோஜி தன்னை அனுப்புவதை உணர்ந்ததால்,

அவருக்குத் தன்னிடம் உள்ள நம்பிக்கையை நினைத்துப் பெருமிதம் கொண்டான். ஆகவே இடையே ஏற்பட்ட உணர்ச்சிகளை உதறி நிமிர்ந்து கடற்படைத் தளபதியை நோக்கினான். ''என்று புறப்பட வேண்டும் நான்?'' என்று வினவினான்.

''சொல்கிறேன் நாளைக்கு'' என்றார் ஆங்கரே. அத்துடன் ''இன்று என்ன செய்யப் போகிறாய்?'' என்றும் வினவினார்.

''உத்தரவிடுங்கள்'' என்றான் இதயசந்திரன்.

''ஜலதீபத்திற்குப் போ'' என்று உத்தரவிட்டார் ஆங்கரே.

''அங்கு சென்று...''

''இளைப்பாறு.''

''இங்கு இளைப்பாறினால் என்ன?''

''அமைதியிருக்காது.''

''அங்கு மட்டும் அமைதி இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''என்ன அமைதி?''

''அங்கு ஒரு பெண்ணிருக்கிறாள்.''

''எனக்கென்ன அதைப்பற்றி?''

''அமைதிக்கும் அனுபவத்துக்கும் பெண் இனம் சிறந்தது.''

இதயசந்திரன் வெறுப்புடன் நோக்கினான் அவரை. ''நீங்கள் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் கூறும் அழகி எனக்குத் தேவையில்லை'' என்றான் வெறுப்பு குரலிலும் ஒலிக்க.



கனோஜியின் இதழ்களில் இளநகை புலர்ந்தது. ''அந்தப் பெண் மஞ்சுவாயிருந்தால்கூடவா?'' என்ற கேள்வியும் அந்த இளநகையின் ஊடே உதிர்ந்தது.

''என்ன! மஞ்சுவா!''

இதயசந்திரன் வாயைப் பிளந்துகொண்டு நின்றான்.

''ஏன் நிற்கிறாய்? போ'' என்று அதட்டினார் ஸார்கேல்.

## அத்தியாயம் 33

# விதியின் பதில்

மஞ்சு இருக்கிறாள் ஜலதீபத்தில் என்று கனோஜி ஆங்கரே சொன்னதும் இதயசந்திரன் இதயத்திலிருந்து அரசியல் அகன்றது, போர் அகன்றது, சூழ்நிலை அகன்றது. அனைத்தும் அகன்று, சூன்ய நிலை நிலவத் தொடங்கிய சமயத்தில் மஞ்சுவின் எழில் முகம் புகுந்தது அந்த வாலிபன் இதயத்திலே. அந்த முகம் புகுந்து விரிந்து இதயம் முழுவதையும் ஆக்ரமித்துக் கொண்டதால் பிரமை பிடித்து நின்ற இதயசந்திரன் காதில், ''ஏன் நிற்கிறாய் போ'' என்ற கனோஜியின் செல்ல அதட்டல்கூட விழவில்லை. அவர் கடகடவென நகைத்து முதுகில் ஓர் அறை கொடுத்து, ''தமிழா! பெண் பெயரைக் கேட்டாலே இப்படிப் பயந்து சாகிறாயே? கிட்டே நெருங்கினால் பிராணனையே விட்டுவிடுவாய் போலிருக்கிறதே'' என்று கூறிய பின்பே சற்று சுரணை வந்தது தமிழக வீரனுக்கு. சுரணை வந்த பின்னும், ''ஸார்கேல், ஸார்கேல்'' என்று இருமுறை தடுமாறி ஏதோ சொல்ல முயன்று முடியாமல் பெயரைச் சொல்வதோடு நிறுத்திக் கொண்டான்.

''என்ன தமிழா?'' என்று வினவினார் ஸார்கேல் இகழ்ச்சி கலந்த இளநகை உதடுகளில் உலாவ.

''மஞ்சு...'' என்று இழுத்தான் தமிழன் தட்டுத் தடுமாறி.

''என்ன மஞ்சுவுக்கு? நன்றாகத்தானிருக்கிறாள்?'' என்றார் ஸார்கேல் உற்சாகத்துடன்.

''அதைக் கேட்கவில்லை ஸார்கேல்?'' என்றான் மெல்ல இதயசந்திரன்.



''வேறெதைக் கேட்கிறாய்?'' என்று கேட்ட ஸார்கேல் தமது விழிகளைப் பரிதாபத்துடன் அவன்மீது நிலை நாட்டினார்.

அவர் விழிகளில் படர்ந்த பரிதாபத்தைப் பார்க்கவே செய்தான் இதயசந்திரன். அவர் மனப்போக்கும் அடிப்படைக் குணமும் தெரிந்திருந்ததால் அதைப்பற்றி ஏதும் சொல்லாமலே கேட்டான், ''மஞ்சுவின் மனநிலை எப்படியிருக்கிறது?'' என்று.

அவன் எதைக் குறிப்பிடுகிறானென்பதைப் புரிந்து கொண்ட ஆங்கரே, ''காதரைனை நீ மணந்துகொள்ள முயன்றது அவளுக்குத் தெரியுமா என்று கேட்கிறாயா?'' என்று வினவினார்.

''ஆம்'' என்ற இதயசந்திரன் தாபத்தால் பெருமூச்சு விட்டான்.

''இதயசந்திரா!'' என்ற கனோஜியின் குரல் அதிகாரத்துடனும் சிறிதளவு சினத்துடனும் ஒலித்தது.

''என்ன ஸார்கேல்?'' என்று வினவினான் இதயசந்திரன், அவர் சினத்துக்குக் காரணம் புரியாமல்.

''முதலில் பெருமூச்சை நிறுத்தப் பழகிக்கொள்.''

''உம்.''

''அடுத்தபடி பெண்கள் என்ன நினைப்பார்கள், ஏது நினைப்பார்கள் என்று எண்ணி எண்ணி உயிர் விடுவதை நிறுத்திக் கொள்.''

''ஸார்கேல்.''

''உஷ். பேசாதே. சொல்வதைக் கேள்! பெண்களைப் பற்றி நினைத்துக் கொண்டேயிருப்பவன் நினைப்பதோடு சாக வேண்டியதுதான். பெண்களை நினைப்பதைவிடப் பெரிய காரியங்கள் உலகில் இருக்கின்றன. அவற்றைக் கவனிக்க வேண்டுமானால் வாழ்க்கையின் சில்லறை

விஷயங்களை நெஞ்சிலிருந்து கூடியவரை ஒதுக்கவேண்டும். நம்முன் பெரும் போர்களிருக்கின்றன. அவற்றை நினைத்தால் மஞ்சு, காதரைன், பானுதேவி, சுஹினா எல்லோரும் துரும்புகள். வீரனாயிருப்பவன் பெரும் செயல்களால் வாழ்கிறான். சாதனைகள்தான் அவன் வாழ்வு, வாழ்வின் லட்சியம். அந்த லட்சியப் பாதையில் நடப்பவன் இடையே வேண்டிய சுகங்களைப் பெறுகிறான். முடிந்தால் சுலபமாகப் பெறுகிறான். இல்லையேல் வலுவில் அடைகிறான்...'' இதைச் சொல்லிச் சிறிது பேச்சை நிறுத்தினார் ஸார்கேல். அவனை உற்றும் நோக்கினார்.

இதயசந்திரன் அவரைப் பார்க்கவும் சக்தியற்று நிலத்தை நோக்கி நின்றான். அவர் பெரிய நோக்கு, மனித வாழ்க்கையின் சிறிய சுக துக்கங்களை அவர் துரும்புபோல் மதித்தல், இவையனைத்தும் அவன் அறிந்தேயிருந்தான். ஆகவே அன்று அவர் சொன்னது அவனுக்கு அதிகமாக உறைக்கவில்லை. ஆகவே நிலத்தை நோக்கியபடி சொன்னான், ''வாழ்க்கையைப் பற்றிய பெரிய் விஷயங்களைக் கூறுகிறீர்கள் ஸார்கேல். ஆனால் எனது மனத்தில் சிறிய விஷயங்களே நிரம்பி நிற்கின்றன'' என்று.

''உதறு அவற்றை'' என்றார் ஸார்கேல்.

''முடியாது ஸார்கேல். எனக்கு அந்தத் திறனில்லை. காதரைனை நான் மணந்துகொள்ள முயன்றதை இத்தனை நேரம் ஹர்கோவிந்தோ, பர்னாண்டோவோ யாராவதோ சொல்லியிருப்பார்கள். ஆகவே மஞ்சு என்னைத் திரும்பியும் பார்க்கமாட்டாள்'' என்று கூறினான் இதயசந்திரன் தழுதழுத்த குரலில்.

''திரும்பிப் பார்க்கச் சொல்வது உன் திறமையிலிருக்கிறது.''

''என் திறமையா?''



''ஆம்.''

''எனக்கு அந்தத் திறமையில்லை ஸார்கேல்'' என்று முடிவாகக் கூறினான் இதயசந்திரன்.

ஸார்கேல் அவனைப் பரிதாபத்துடன் பார்த்தார். ''இதயசந்திரா'' என்று மெல்ல அழைக்கவும் செய்தார். அவன் தோள்மீது தன் கையைப் போட்டுக் கொள்ளவும் செய்தார். மெல்ல அவனை நடத்தி தோர்லாவாடாவுக்கு வெளியே அழைத்தும் வந்தார் தைரியம் சொல்லிக் கொண்டே. ''இதயசந்திரா! வாழ்க்கையில் தவறு செய்யாதவன் இல்லை. வழுக்கி விழாதவர் மிகச் சொற்பம். அதுவும் பெண்களிடம். ஆண்களைப் பித்துக்கொள்ளச் செய்யவே பெண்களை ஆண்டவன் கவர்ச்சியாகப் படைத்திருக்கிறான். நாம் தவறினால் அதற்கும் அவர்கள்தான் காரணம். காதரைன் இடையே வந்த ஒரு பூங்காற்று. நித்யமான தென்றலல்ல. நித்யமான தென்றலை நோக்கிப் போ'' என்றார் ஸார்கேல்.

''தென்றல் சூறாவளியாயிருந்தால்?'' என்று கேட்டான் இதயசந்திரன்.

ஸார்கேல் அவனைத் தன்னை நோக்கித் திருப்பி, ''கப்பல் சூறாவளியில் அகப்பட்டுக்கொண்டால் என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார்.

''பாய்களை அவிழ்த்துவிடுகிறோம், சுக்கானைச் சரியாகப் பிடித்தும், துடுப்புகளை மும்முரமாகத் துழாவியும் சூறாவளியைச் சமாளிக்கிறோம். எப்படியும் சமாளித்து ஒரு நிலைக்குக் கொண்டு வரும்வரை போராடுகிறோம். சூறாவளி அடங்கியதும் சாந்தப்படுகிறோம்'' என்றான் இதயசந்திரன்.

''அதுதான் வழி. போய் வா'' என்ற ஸார்கேல் அவனைத் தோர்லாவாடாவின் வாயிலில் விட்டு, திரும்பி உள்ளே சென்றார்.

தோர்லாவாடாவின் படிகளில் இறங்கிக் கீழே நின்று சிறிது நேரம் அந்தப் பெரும் மாளிகையைப் பார்த்துக் கொண்டிருந்த இதயசந்திரன் மறுபடியும் படிகளில் ஏறிச் சென்று தனது அறையிலிருந்த தனது மாலுமி உடைகளி லொன்றை அணிந்துகொண்டான். பிறகு கைத்துப்பாக்கி யொன்றையும் கச்சையில் செருகிக்கொண்டு படகொன்றை எடுத்துக்கொண்டு ஜலதீபத்தை நோக்கிச் சென்றான்.

அப்பொழுது உச்சி வேளை தாண்டி ஒரு ஜாமம் முடிந்து விட்டதால் கடலில் அலைகள் அமைதியுடன் எழுந்து தாழ்ந்தன. கதிரவன் கொடுமை ஓரளவு குறைந்து மிருந்தது. துறைமுகத்தில் காலையில் காணப்பட்ட கப்பல் களைத் தவிர வேறு கப்பல்களும் வந்து நங்கூரம் பாய்ச்ச முயன்றுகொண்டிருந்தன. நங்கூரம் பாய்ச்சிய கப்பலி லிருந்து பல மாலுமிகளும் மாலுமிகளல்லாத வீரரும் சாரி சாரியாகப் படகுகளில் சென்றுகொண்டிருந்தார்கள் கரை நோக்கி. புதிதாக வந்த கப்பல்களும் கனோஜியின் குராப்பும் போரில் காயமடைந்த காலிவாத்தும் இன்னும் நாலைந்து பெரும் கப்பல்களும் நிறைந்திருந்ததால் பெரும் கடல் தளமாகும் அறிகுறிகளைப் பெற்றுக்கொண்டிருந்தது கொலாபா துறைமுகம். இத்தனையையும் பார்த்தும் அவற்றைப்பற்றி ஏதும் நினைக்கச் சக்தியில்லாமலே படகைச் செலுத்திக் கொண்டு சென்ற இதயசந்திரன் பிற்பகல் பதினெட்டு நாழிகைக்கு மேல் ஜலதீபத்தை அடைந்தான். அவன் வருவதைத் தூரத்திலிருந்தே கவனித்த இப்ரஹீம் அவன் ஏறிவர நூலேணியொன்றை முன்னதாகவே தொங்கவிட்டிருந்ததால் அதிலேறித் தளத்தில் குதித்த இதயசந்திரன் சுற்றுமுற்றும் கவனித்தான்.

மாலுமிகள் அவரவர்கள் அலுவல்களைப் புரிந்து கொண்டிருந்தார்கள். கப்பல் தளத்தை இரண்டு பேர் கழுவிக் கொண்டிருந்தார்கள். பர்னாண்டோ ஒரு



மூலையில் உட்கார்ந்து பாய்ச்சீலையின் கிழிந்த இடங் களைப் பெருஊசியும் நூலும் கொண்டு தைத்துக்கொண் டிருந்தான். ஹர்கோவிந்த் பீரங்கியின் முதுகுக்கு எண்ணெய் போட்டுத் துடைத்துக்கொண்டிருந்தான். எங்கும் கப்பல் சுத்திகரிப்பு வேலை நடந்துகொண் டிருந்தது. மாலுமிகளில் சிலர் புதிதாகவும் இருந்தார்கள். ''இப்ரஹீம்! புதிதாகச் சில மாலுமிகள் இருக்கிறார்களே'' என்று கேட்டான் இதயசந்திரன்.

''ஆம். இப்பொழுது புதிதாகச் சிலரை நியமித்திருக் கிறோம்'' என்றான் இப்ரஹீம்.

''யார் நியமித்தது இவர்களை?'' என்று சீறினான் இதயசந்திரன்.

''கப்பல் தளபதி'' என்று அடக்கமாக வந்தது இப்ரஹீம் பதில்.

''ஏன், என்னைக் கேட்க வேண்டியதில்லையா?'' என்ற இதயசந்திரன் குரலில் அதிகாரமும் அதட்டலும் இணைந்திருந்தன.

''இந்தக் கேள்வியைத் தளபதியைத்தான் கேட்க வேண்டும்'' என்ற இப்ரஹீம் மெள்ள அவ்விடத்திலிருந்து நகர்ந்தான்.

பீரங்கிக்கு எண்ணெய் போட்டுக் கொண்டிருந்த ஹர்கோவிந்திடம் விரைந்து சென்ற இதயசந்திரன், ''ஹர்கோவிந்த்!'' என்று சற்று அதிகாரத்துடன் அழைத்தான்.

ஹர்கோவிந்த் மெள்ள இதயசந்திரனைத் திரும்பிப் பார்த்து, ''ஓகோ தாங்களா?'' என்றான் அப்பொழுது தான் அவனைப் பார்ப்பது போல்.

''ஆம். நான்தான்.'' கடுமையிருந்தது தமிழன் குரலில்.

''இப்பொழுதுதான் வந்தீர்களா?'' சர்வ சாதாரண மாகயிருந்தது ஹர்கோவிந்தின் கேள்வி.

''ஆம் வந்ததும் வரவேற்பு பலமாயிருக்கிறது!'' என்ற இதயசந்திரன் சீறினான்.

அதை ஹர்கோவிந்த் கவனித்ததாகக்கூடத் தெரிய வில்லை. ''தளபதி அவர்கள் அறையிலிருக்கிறார்கள்'' என்று சுட்டிக் காட்டினான் ஹர்கோவிந்த்.

இதயசந்திரன் அசந்துபோனான். இப்படி ஓர் அலட்சியத்தைத் தனது மாலுமிகள் தன்னிடம் காட்டுவார் களென்று சற்றும் எதிர்பார்க்கவில்லை அவன். தான் தளபதியல்லாவிட்டாலும் உபதளபதியென்ற முறையி லாவது தனக்கு உட்பட வேண்டிய ஹர்கோவிந்தும் இப்ரஹீமும் தன்னை மூன்றாவது மனிதன் போல் நடத்துவது அவனுக்குப் பெருவிசித்திரமாயிருந்தது. கடைசியாக பர்னாண்டோ எப்படியிருக்கிறான் என்பதைப் பார்க்க அவனிருந்த இடத்துக்குச் சென்றான். பர்னாண்டோ பாய்ச் சீலையைத் தைப்பதில் மும்முரமா யிருந்ததால் தலையைத் தூக்கவில்லை. ''பர்னாண்டோ!'' என்று அழைத்த பின்புதான் ஏறிட்டுப் பார்த்தான். பிறகு உட்கார்ந்தபடியே கேட்டான்: ''தாங்களா! வாருங்கள். இப்படி உட்காருங்கள்'' என்று சற்றுப் பாய்மரத் தண்டிலிருந்து தள்ளி இடங்கொடுத்தான்.

இதயசந்திரன் உட்காரவில்லை. ''பர்னாண்டோ!'' என்று இடியென ஒலித்த குரலில் கூறினான் தமிழன்.

அந்தக் கூவலால் சிறிது அதிர்ச்சியடைந்த பர்னாண்டோ எழுந்து நின்றான். ''உங்களுக்கெல்லாம் என்ன வந்து விட்டது பர்னாண்டோ?'' என்று இரைந்த குரலில் கேட்டான் தமிழன்.

''என்ன கேட்கிறீர்கள்?'' என்றான் பர்னாண்டோ ஏதும் புரியாததுபோல்.

இதயசந்திரன் பொறுமையை இழந்து திடீரென பர்னாண்டோவின் சட்டையைக் கழுத்தருகில் இழுத்துப் பிடித்து அவனைப் பாய்மரத்தில் சார்த்திப் பிடித்தான்



பலமாக. ''இப்பொழுது பேசு. என்னை இப்படி அலட்சியப்படுத்தும்படி யார் உத்தரவிட்டிருக்கிறது, உங்களுக்கு? கனோஜியின் மகளா?'' என்று சீறினான். அத்துடன் கழுத்திலிருந்த கையையும் சற்றுப் பலமாக அழுத்தினான்.

பர்னாண்டோ சிறிது அசையாமல் நின்றான். பிறகு இதயசந்திரன் கை கழுத்தில் அழுத்தியிருந்ததால் சற்றுச் சிரமப்பட்டு பேசவும் செய்தான். ''தெரிந்திருந்தும் ஏன் கேட்கிறீர்கள் என்னை?'' என்று கேட்டான் பர்னாண்டோ.

''உபதளபதியை அவமானப்படுத்தும்படி உத்தரவிட தளபதிக்கும் அதிகாரம் கிடையாது தெரியுமா?'' என்று சீறினான் தமிழன்.

அடுத்து பர்னாண்டோ பேசவில்லை. ''நீங்கள் உப தளபதியென்று யார் சொன்னது?'' என்ற குரல் பின்னா லிருந்து ஒலித்தது அதிகாரத்துடன். பர்னாண்டோவின் சட்டையை விட்டுத் திரும்பிப் பார்த்த இதயசந்திரன் தனக்குப் பின்னால் சிறிது தூரத்தில் மஞ்சு நின்றிருப்ப தைக் கவனித்தான். அவள் கண்களில் கனல் பொறிகள் பறந்தன. சிறிதும் அசைவற்று நின்றிருந்தாள் அவள்.

இதயசந்திரன் கண்களில் கோபாக்கினி துளிர்த்தது. ''நான் உபதளபதியல்லவென்று யார் சொன்னது?'' என்று சீற்றம் மிதமிஞ்சி ஒலித்த குரலில் பதில் கேள்வியை வீசினான்.

''நான் சொல்லுகிறேன் ஜலதீபத்தின் தளபதி'' என்றாள் மஞ்சு. அந்தச் சமயத்தில் அவள் நெருப்பை உள்ளடக்கிய வன்னிமரம் போலிருந்தாள்.

இதயசந்திரன் நிதானம் தவறி இரண்டெட்டில் அவளிருந்த இடத்தை எட்டி அவள் தோள்களை இறுகப் பிடித்தான். ''என்ன துணிவு உனக்கு, என்னை ஜலதீபத்

தின் உபதளபதியல்லவென்று சொல்ல?'' என்று சீறினான், அவள் விழிகளுடன் தனது விழிகளைக் கலந்து.

''விடு அவளை.'' சற்று எட்ட இருந்து கேட்டது ஒரு புதுக்குரல். அந்தக் குரல் வந்த திசையை நோக்கிய இதய சந்திரன் தான் சற்றும் முன்பின் அறியாத ஒரு மனிதன் நிற்பதைக் கண்டான். சுமார் ஐம்பது வயதுடையவ னென்று மதிக்கக்கூடிய அம்மனிதன் கையில் ஆயுதமேது மில்லையென்றாலும் அவன் தோரணையில் கம்பீர மிருந்தது.

''யார் நீ!'' இதயசந்திரன் குரல் அதிகாரத்துடன் ஒலித்தது.

அந்த மனிதன் பதற்றம் ஏதும் காட்டவில்லை. அவன் பதிலைச் சர்வ சாதாரணமாகத்தான் கூறினான். அவன் சொன்னது பதிலல்ல அது, விதியின் பதில் என்பதைப் புரிந்துகொண்ட இதயசந்திரன் சிலையெனச் சமைந்து நின்றான். 'இருக்காது இருக்க முடியாது' என்று குழறவும் செய்தான்.

அத்தியாயம் 34

# இதுதான் முடிவா? இப்படித்தான் பிரிவா?

மஞ்சுவின் அழகிய தோள்களை இறுகப் பிடித்த அவன் கைகளும் அகலவில்லை; அந்தப் புது மனிதன்மீது நிலைத்த அவன் விழிகளும் விலகவில்லை; ஏதோ பேயறைந்து விட்டவன்போல் நின்றுவிட்டான் இதய சந்திரன் பல வினாடிகள். 'அவள் தந்தை' என்று புது மனிதன் வாயிலிருந்து உதிர்ந்த சொற்கள் புகுந்தது அவன் செவியிலல்ல. இதயத்தில் புகுந்து சம்மட்டியால் ஓங்கி அடித்துக்கொண்டிருந்தன. ஆகையால் அவன் புத்தியும் கலங்கிச் சுழன்று கொண்டிருந்தது. வாழ்க்கைக் கடலில் அவனுக்கு மிகுதியிருந்த ஒரே ஒரு பலகையான மஞ்சுவும் கையிலிருந்து நழுவிவிடும் நிலை உருவாகிக் கொண் டிருந்ததையும், அப்படி அவளும் நழுவிவிட்டால் தன் கதி அதோ கதிதானென்பதையும் உணர்ந்த இதயசந்திரன் ஏதும் பேச நா எழாமல் நீண்ட நேரம் திகைத்தே நின்றான்.

''அவளை விட்டுவிடு என்று சொன்னேன்'' என இரண்டாம் முறை அந்தப் புதுமனிதன் வலியுறுத்திய பிறகே சிறிது சுயநிலைக்கு வந்த இதயசந்திரன் அவள் தோள்களிலிருந்து கையை நீக்கி இரண்டடி பின்னடைந் தான். பிறகு மஞ்சுவை நோக்கிக் கேட்டான், ''இது உண்மையா?'' என்று.

ஆமென்பதற்கு அறிகுறியாக அவள் தலையை மட்டுமே அசைத்துவிட்டுத் தனது அறை நோக்கிச் செல்லத் திரும்பினாள். ''தளபதி'' என்ற இதயசந்திரன் குரல் அவளைச் சற்றுத் தேக்க வைத்ததன்றி அவள் இதயத்தைச் சற்றுச் சுருக்கென்று குத்தவும் செய்தது. உள்ளிருந்த அவள்

பாசமும் நேசமும் மீண்டும் தலைகாட்டத் துவங்கினாலும் அவற்றை அடக்கிக்கொண்ட மஞ்சு மீண்டும் சற்றே தலையைத் திருப்பி, ''என்ன?'' என்று வினவினாள்.

''ஜலதீபத்தின் உபதளபதிப் பதவியிலிருந்து என்னை விலக்க உங்களுக்கு யார் அதிகாரமளித்தது? திரும்ப இங்கு தளபதிப் பதவி ஏற்க உங்களுக்கு உத்தரவிட்டது யார்?'' என்று வினவினான். பதவியிலிருந்து விலக்கப்பட்ட சாதாரண வீரன் காரணம் கேட்பதுபோல.

மஞ்சுவின் விழிகள் அவன் விழிகளை அச்சமின்றிச் சந்தித்தன. ''உபதளபதியை நீக்கத் தளபதிக்கு அதிகாரமுண்டு. தளபதியற்ற கப்பலுக்குத் தளபதியை நியமிக்க ஸார்கேலுக்கு அதிகாரமுண்டு'' என்று அவளும் சம்பிரதாயமாகவே காரணம் காட்டினாள்.

''இந்த மாறுதலுக்குக் காரணங்கள் தேவையில்லையா'' என்று வினவினான் இதயசந்திரன்.

மஞ்சுவின் கண்களில் ஏதோ யோசனை செய்யும் பாவம் விரிந்தது. அதைத் தொடர்ந்து உதிர்ந்த சொற்களில் உறுதியும் இருந்தது. தெளிவான கருத்தும் இருந்தது. ''போர்கள் சதா நிகழும் காலத்தில் ஒரு போர்க்கப்பலின் தளபதியாய் இருப்பவரின் கடமை அந்தக் கப்பலை நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவிட்டுச் சொந்த அலுவல்களைக் கவனிப்பதல்ல. இரண்டு நாளுக்கொரு முறையாவது கப்பலைச் சஞ்சரிக்க விட்டுக் கடல் பகுதியைக் கவனிக்க வேண்டும். அந்தக் கப்பலை ஓடவிடாவிட்டாலும் ஏதாவது இரண்டொரு கப்பலையாவது சஞ்சரிக்கவிட்டு நிலைமையைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வர வேண்டும். அப்படி ஏதும் செய்யாமல் சில்லறை ஆசைகளுக்காகச் சண்டை போடுவதும், மாளிகையில் படுத்துறங்குவதுமே வேலையாக ஒரு தளபதி இருந்தால், அந்தத் தளபதி கப்பலில் இருக்க லாயக்கற்றவர். அதுவும் சில நாள்களுக்கு முன்பு வெகு அருகில் நடந்த கடற்போரில்



ஸார்கேலுக்குக்கூட உதவ முடியாதவர் மாலுமியாயிருப்பதே தவறு. இந்தத் தவறுதலுக்கு உங்களைச் சிறை செய்வது நியாயம். என் வளர்ப்புத் தந்தைக்கு உங்களிடம் உள்ள பரிவால் உங்களை அவமானத்திலிருந்து நீக்கித் தரைப்படைக்கு அழைத்துச் செல்கிறார்கள். போதுமா காரணங்கள்? இன்னும் தேவையா?'' என்று வினவினாள் மஞ்சு.

இதயசந்திரன் சிலையென நின்றான். காரணங்கள் கோவையாயிருந்தாலும் அவையல்ல உண்மைக் காரணங்கள் என்பதை அவன் உணர்ந்தேயிருந்தான். உள்ளூரக் காதரைனைப் பற்றிப் புகைந்து கொண்டிருந்த பொறாமையும் அதனாலுண்டான எரிச்சலுமே அவள் குற்றச்சாட்டுக்குக் காரணங்கள் என்பதைப் புரிந்து கொண்டாலும் அந்தச் சமயத்தில், அந்தச் சூழ்நிலையில், தான் ஏதும் செய்ய முடியாது என்பதையும் சந்தேகமற உணர்ந்து கொண்டான். தன்னோடு தோளுக்குத்தோள் நின்று பல போர்களில் கலந்து கொண்டவர்களும் பல கஷ்டங்களை அடைந்தவர்களுமான பர்னாண்டோ, ஹர்கோவிந்த், இப்ராஹீம் இம்மூவரும் மாறுபட்ட குணங்களுக்குக் காரணம் மஞ்சுவின் கண்டிப்பைத் தவிர, தான் தோர்லாவாடாவில் காதரைனுடனும் இருந்து விட்டது தான் என்பதையும் புரிந்து கொண்டதால் அந்தக் கப்பலில் உபதலைவர்களோ, மாலுமிகளோ யாரும் தன்னை அணுவளவும் மதிக்கமாட்டார்களென்பதையும் அறிந்து கொண்டான். மஞ்சுவை உயிருக்குயிராக நேசித்த மாலுமிகளும் ஜலதீபத்தின் உபதளபதிகளும் காதரைனுக்கு எதிராக, அதனால் தனக்கு எதிராக, எத்தனை முறை நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நினைத்துப் பார்த்தான். தான் ஜலதீபத்தின் விஷயத்தில் அசட்டை காட்டிவிட்டதே அவர்கள் வெறுப்புக்குக் காரணமென்பதையும், அந்த வெறுப்புடன் மஞ்சுவின் கட்டுத் திட்டமும் சேர்ந்து அவர்களைத் தன்னை வெறுக்கும்படி செய்திருக்க வேண்டுமென்றும் தீர்மானத்துக்கு வந்தான். எப்படியும்

அந்த விரோதத்துடன் ஜலதீபத்திலிருந்து அகன்று விட இஷ்டப்படாமல் மஞ்சுவை நோக்கி, ‘‘எனது அறையில் மாலை வரையில் தங்கவும் அதிலுள்ள எனது பெட்டி முதலியவற்றை எடுத்துச் செல்லவும் தளபதியின் அனுமதி உண்டா?’’ என்று வினவினான்.

மஞ்சு முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவனுக்கு நேரிடையாகப் பதில் கூறாமல், ‘‘ஹர்கோவிந்த்! நமது மாஜி உபதளபதி அவரது பழைய அறையில் மாலை வரை தங்கட்டும். மாலைக்குப் பிறகு அவரை அவரது பெட்டி படுக்கையுடன் அனுப்பி வை’’ என்று உத்தரவிட்டு வேகமாகத் தனது அறையை நோக்கி நடந்தாள்.

அவள் போவதை இதயசந்திரன் பார்த்துக்கொண்டே நின்றான். அவள் நடையில் முந்திய உரமில்லாததை அவன் கவனித்தான். சரீரத்தின் அழகும் யௌவனமும் சிறுதும் பாதிக்கப்படாவிட்டாலும் வாட்டம் சிறிது தெரியத்தான் செய்தது. வாட்டத்திலும், வீம்புக்கு அலட்சியம் காட்டி நடந்து சென்ற தோரணையிலும், ஏதோ உள்ளூரத் துன்பம் புரையோடிக் கொண்டிருந்ததை உணர்ந்தான். உணர்ந்தும் ஏதும் செய்ய வகையற்றுச் சிலையென சமைந்து நின்றான். தளபதி அறைக்குள் சென்று அவள் கதவை சாத்திக் கொண்ட பிறகே மற்றவர் களைக் கவனிக்க முற்பட்டு, மஞ்சுவின் தந்தையென உறவு கொண்டாடியவன்மீது கண்களை நாட்டினான்.

அந்த மனிதன் நல்ல உயரமும் பருமனுடனும் கூரிய கண்களுடனும் காட்சியளித்தான். அவன் இடையில் பெரிய வாளேதுமில்லாவிட்டாலும், கச்சையில்கூடக் குறுவாளோ கைத் துப்பாக்கியோ காணப்படாவிட்டா லும், அவன் பல போர்களைக் கண்டவனென்பதற்குச் சான்று கூற உடலில் பல காயங்கள் இருந்தன, கை கால்கள் அளவுக்கதிகமாகப் பெருத்து, சில இடங்களில் அனாவசியமாக உருண்டு, சில இடங்களில் அனாவசிய



மில்லாவிட்டாலும் அவன் முகமும் கண்களும் கம்பீரத்தைக் காட்டின அந்தக் கம்பீரத்தில் சந்தேகிக்கக்கூடிய ஏதோ ஓர் அம்சமும் சம்பநதப்பட்டிருந்ததாகத் தோன்றியது இதயசந்திரனுக்கு. ‘இவன் கண்காணிப்பதற்கு உரியவன்’ என்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்ட இதயசந்திரன் தனது பழைய அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டு நீண்ட சிந்தனையில் இறங்கினான். இரண்டு நாழிகைகளுக்குமேல் தனது மாலுமிப் பையையும், பெட்டி படுக்கைகளையும் சரிசெய்து அவற்றில் அடைக்க வேண்டிய உடை முதலியவற்றை அடைத்தான். தடுப்புப் பலகையில் அடித்த ஆணிகளில் தொங்கிக்கொண்டிருந்த தனது பழைய மகாராஷ்டிர வாளையும் ஆங்கரே கொடுத்த வெளிநாட்டுக் கைத்துப்பாக்கியையும் பையில் பத்திரப்படுத்தினான். அவன் அந்த அலுவல்களில் மும்முரமாயிருந்தபோது அவனது பெட்டி படுக்கைகளைக் கட்டுவதற்கு உதவி செய்ய பர்னாண்டோ அனுப்பிய இரு மாலுமிகளையும் தேவையில்லையென்று அனுப்பி விட்டான். இந்த ஏற்பாடுகளைச் செய்து முடிக்கும் தருவாயில் மாலை முதிர்ந்து விட்டதால் வெளியே வந்து முகம் கை கால் கழுவிக் கொள்ளத் தளத்தின் கோடியி லிருந்த ஒரு தண்ணீர் பீப்பாயை நோக்கிச் சென்றான். கைகால் கழுவி, முகத்தில் தண்ணீரை அடித்துக் கொண்டு, தோளிலிருந்த துண்டு ஒன்றால் முகத்தைத் துடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்தான்.

கடற்காற்று சில்லென அவன் முகத்திலடித்தது. அவன் தலைமயிரிழைகள் சில பின்னால் பறந்தன. சில முன்னால் விழுந்தன. எங்கும் மெல்ல மெல்ல இருள் சூழ முயன்று கொண்டிருந்தது. மேலைக் கடலிருள் அவன் மதியையும் மெல்ல இருட்டடிக்கச் செய்தது. அந்த இருட்டில் சில தாரகைகளும் தோன்றின. அவை அவனைச் சுட்டுவிடுவது போல் பார்த்தன. அதனால் தலையை ஓர் உலுக்கு உலுக்கிக் கண்களை ஆகாயத்தில் நிலைக்கவிட்டான்

இதயசந்திரன். திடீரென தாரகைகள் லட்சக்கணக்கில் எங்கும் தோன்றிவிட்டன.

எண்ணங்கள் பல எழுந்து மோத, கால்களை சுரணையின்றி அழைத்துச் செல்ல, மீண்டும் அறையை அடைந்த இதயசந்திரன் தனது மாலுமிப் பையையும் பெட்டியையும் ஒன்று சேர்த்துத் தூக்குவதற்குத் தயாராக வைத்தான். பிறகு அறையிலிருந்து புறப்பட்டுவிடுவது என நடந்து மஞ்சுவின் அறைக்குச் சென்று, ''தளபதி!'' என்று அறைவாயிலிலிருந்தே அழைத்தான்.

''கதவு திறந்திருக்கிறது'' என்று உக்கிரச் சொற்கள் உள்ளிருந்து வரவே, கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்ற இதயசந்திரன் ஒரு வினாடி திகைத்து நின்றான்.

மஞ்சு பஞ்சணையில் சற்று சாய்ந்து காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் குழல் அரைகுறையாக முடிக்கப்பட்டிருந்ததால் சிறிது கலைந்து இருந்தது. அவள் பிற்பகல் தன்னைச் சந்தித்தபோது அணிந்திருந்த சராயை நீக்கி, சேலை அணிந்திருந்ததால் நீட்டிய காலிலிருந்து சேலை சிறிது மேற்புறம் நகர்ந்து கிடந்தது. அவள் மல்லாந்திருந்த நிலையில் விம்மிக் கிடந்த அழகு கண்ணைப் பறித்தது. உருண்ட திரண்ட இடங்கள் அவன் சிந்தனையைக் கண்டபடி உருட்டித் தள்ளின. அதே பஞ்சணையில் காதரைன்கூட அப்படித்தான் அரைகுறையாகப் படுத்திருப்பாளென்பதை அவன் மனக்கண்ணில் எழுப்பிப் பார்த்தான். 'அது ஒருவித அழகு, இது ஒருவித அழகு. ஆனால் இது எத்தனை நிலையானது?' என்று நினைத்து உள்ளத்தில் தான் இழந்தது எத்தனை பெரிய ஐசுவரியம் என்பதை உணர்ந்தான். தான் தொட்டுக் காட்டிய அந்த அழகும் தனக்கு எட்டாத ஒன்றாகிவிட்ட நிலையை எண்ணிப் பெரிதும் ஏங்கினான் தமிழன் அந்தச் சமயத்தில். 'வெள்ளைக்காரியின் மயக்கத்தில் இந்தக் கொள்ளை அழகை இழந்து விட்டேனே!' என்று தன்னைத் தானே நொந்துகொண்டான். தான் ஓர் இந்தியனென்



பதற்காகத் தன்னை மணக்க மறுத்த காதரைனின் காலடியில் தான் கிடக்கவேண்டிய காரணமென்னவென்பது அவனுக்குப் புரிந்தது அந்த வினாடியில். 'மஞ்சு அருகிலில்லாததுதான் காரணம். காதரைனைப் போன்ற ஓர் அழகியின் வலையிலிருந்து எந்த ஆடவன் எத்தனை நாளைக்குத்தான் தப்ப முடியும்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

இப்படிப் பலப்பல நினைத்துப் பார்த்தது பார்த்தபடி நின்ற இதயசந்திரனை நோக்கிய மஞ்சு, ''எங்கு வந்தீர்கள்?'' என்று வினவினாள்.

''விடைபெற்றுப் போக வந்தேன்'' என்றான் இதயசந்திரன் அவள் விழிகளுடன் தனது விழிகளை இணைத்து.

என்ன காரணத்தாலோ அவள் விழிகள் அவன் விழிகளைச் சந்திக்க மறுத்தன. அவற்றைச் சந்திப்பதற்குப் பதிலாகப் படுக்கையைப் பார்த்தன. காலில் மேலிருந்த சேலையைக் கைகள் இழுத்துவிட்டுக் கொண்டன. மேலாடையையும் இழுத்துப் போர்த்திக் கொண்ட மஞ்சு, ''நல்லது'' என்றாள் மெதுவாக.

''உன் தந்தை, அதாவது இப்பொழுது புதிதாக வந்திருப்பவர்...'' என்று இழுத்தான்.

''அவருக்கென்ன?'' என்று கேட்டாள் மஞ்சு. அந்தக் கேள்வியில் விருப்புக்குப் பதில் வெறுப்பு இருந்தது.

''உண்மையில் அவர் உன் தந்தைதானா?'' என்று வினவினான் இதயசந்திரன் மீண்டும்.

''தந்தை என்பதற்கான ருசுக்கள் இருப்பதாக ஸார்கேல் கூறுகிறார்'' என்று அசட்டையாகப் பதில் சொன்னாள் மஞ்சு.

''உன் மனம் என்ன சொல்கிறது மஞ்சு? அது ஒப்புக் கொள்கிறதா?'' என்று வினவினான்.

மஞ்சு அவனை ஏறிட்டு நோக்கினாள். ''அதைக் கேட்க அவசியமில்லை'' என்று சொன்னாள் சலிப்புடன்.

''ஏன் மஞ்சு?''

''அதற்கு உண்மை தெரிவதில்லை.''

''மனத்திற்கு உண்மை தெரியாமலிருக்குமா?''

''மற்றவர்கள் மனம் எப்படியோ! என் மனத்திற்கு உண்மை தெரிவதில்லை. அது பொய்யை நிஜமாகக் காட்டுகிறது. நிஜத்தைப் பொய்யாகக் காட்டுகிறது. அதை நான் நம்பவில்லை இப்பொழுது. ஆகையால் பிறர் சொல்வதை நம்புகிறேன். பிறர் கொடுக்கும் ருசுக்களை நம்புகிறேன்'' என்று கூறினாள் மஞ்சு. கூறிய பிறகு லேசாகத் துன்பத்துடன் பெருமூச்சும் எறிந்தாள்.

''மஞ்சு! மனத்தைக் குறை சொல்லிப் பயனில்லை. மனத்தை மீறி, இயற்கையை மீறி, உணர்ச்சிகளை மீறி நாமும் நடக்கிறோம். இயற்கை சுட்டிக் காட்டும் வழியைக் காரணமில்லாமல் எதிர்க்கிறோம். அதிலிருந்து தப்பப் பார்க்கிறோம். இவற்றாலும் விளைவதுண்டு விபரீதங்கள். இத்தனைக்கும் இடையே உண்மை சொல்வது மனந்தான்'' என்றான் இதயசந்திரன்.

மஞ்சுவின் விழிகளில் கோபம் மெல்ல உதயமாயிற்று. ''மனம் அவ்வப்பொழுது புதுப்புது உண்மையைச் சொல்லுமா?'' என்று வினவினாள் அந்தக் கோபம் குரலிலும் ஒலிக்க.

''கூறாது''

''அப்படியானால் முதலில் பானுதேவியையும், அடுத்து என்னையும், பிறகு வெள்ளைக்காரியையும் உங்கள் மனம் எப்படி ஏற்றுக்கொண்டது?''

''மஞ்சு! மனம் வேறு, உணர்ச்சிகள் வேறு என்று நினைக்கிறேன். நான் சாதாரண மனிதன், பெரிய ரிஷி



அல்ல. புலன்களை அடக்கும் சக்தி உள்ளவன் அல்ல. கவர்ச்சியான ஒரு பெண் அருகில் வந்து அத்துமீறி என்னுடன் பேசியும், அருகில் இணைந்தும் பேசும்போது உணர்ச்சிகள் என்னை மீறுகின்றன. அந்தச் சமயத்தில் பெண்களைத் தொட்டிருப்பேன். அதற்குமேல் வரம்பு மீறியதில்லை. பானுதேவி அரசியலுக்கு உபயோகப் படுத்த என்னுடன் உறவாடினாள். காதரைன் என்னுடன் சரசமாட விரும்பினாள். ஆனால் நான் அதற்கு இடம் கொடுக்கவில்லை. மணம் செய்து கொள்ள முயன்றேன். ஏன்? உன் தந்தை உன்னை எனக்கு மணம் முடித்துத் தர மறுத்து, காதரைன் போன்ற அழகியுடன் இஷ்ட விரோதமாக என்னை அனுப்பினார். அவள் விரித்த வலையிலிருந்து தப்ப முயன்றேன் பல நாட்கள். தனியாகப் பெண்ணுடன் பெருங்கடலில் விடப்பட்டவன். அவள் எழுப்பிய அலைகளில் விழுந்து தத்தளித்தேன். என்ன செய்வேன் அந்த நிலையில்? விபசாரம் செய்ய இஷ்டமில்லை. அதை என் கண்ணியம் மறுத்தது, மனம் மறுத்தது. ஆகவே திருமணத்துக்கு ஏற்பாடு செய்தேன். அவள் மறுத்தாள் நான் கறுப்பனென்று. நான் கட்டாயமாகத் திருமணம் செய்து கொண்டிருப்பேன், ஒரு பெண்ணை கெடுப்பதைவிட திருமணம் செய்துகொள்வது நல்லதென்று. அது பலிக்கவில்லை. அவள் சென்று விட்டாள் அவள் வழியில். அதனால் நான் மனம் உடையவில்லை. ஏனென்றால் மனம் அவளிடமிருந்ததில்லை, அது எப்பொழுதும் உன்னுடையது மஞ்சு. இது சத்தியம்.''

இப்படி உரைத்து மன்றாடி நின்ற இதயசந்திரனுக்கு மஞ்சு பதில் ஏதும் சொல்லவில்லை பல விநாடிகள். மஞ்சு கடைசியில் சொன்ன பதிலில் உறுதியிருந்தது. ''கடலில் அலையும் இரு மரப் பலகைகளைப் போல் திடீரென எங்கிருந்தோ வந்து எங்கோ ஒன்று சேர்ந்தோம். மீண்டும் எங்கோ விலகிச் செல்கிறோம். முன்பு விஜயதுர்க்கத்தில் விலக்கியது என் புதிய தந்தையை அறிவித்த ஜன்ஜீராத்

தலைவர் ரஸூல் யாகூத்கான் கடிதம். இரண்டாவது பிரித்தது அந்த வெள்ளைக்கார மோகினி. இப்பொழுது பிரிப்பது மகாராஷ்டிரத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் புயல். நாம் மீண்டும் சந்திப்போமோ அல்லவோ சொல்ல முடியாது. சந்திப்பிலும் நாமிருவரும் முழு மனத்துடன் ஒன்ற முடியாது இனிமேல். என் மனம் உங்களை ஏற்க மறுக்கிறது. ஆகவே போய் வாருங்கள்.''

இதயசந்திரன் அவளுக்கு வெகு அருகில் வந்து நின்றான். ''இதுதான் முடிவா! இப்படித்தான் பிரிவா!''

''ஆம்'' என்றாள் அவள் திடமாக.

''ஏன்?''

அவள் படுக்கையிலிருந்து எழுந்து அவனுக்கு வெகு அருகில் வந்து, ''நீங்கள் ஆண்மகன்தானா?'' என்று சீறினாள்.

அவள் கண்களில் விவரிக்க இயலாத சீற்றமிருந்தது. உதடுகளில் துடிப்பிருந்தது. அவனுக்கு அதுவரை புலனாகாத உண்மை புலர்ந்தது. விரிந்தது ஓர் இன்ப உலகம்.

## அத்தியாயம் 35

# புணர்ச்சி மகிழ்தல்

குவளை மலர் கதிரவன்போல் சுட முடியாது. கதிரவனும் குவளை மலர்போல் குளிர முடியாது. இது இயற்கை. ஆனால் இதயசந்திரனை நோக்கிய மஞ்சுவின் குவளை விழிகள் அந்த இயற்கைக்கு மாறாக அவன் கண்களைச் சுட்டெரித்து விடுவனபோல் பார்த்தன. அப்படியும் ஒரு நிலை உண்டு என்பதைச் சமீப காலக் கவியான அருணாசலக் கவியும் 'குவளை விழிகளோ பாணம்' என்று கூறியிருக்கிறாரல்லவா? ஏன், கம்பன் மட்டும் 'கண்ணெனும் பூசல் அம்பு' என்று சொல்லவில்லையா? கவிகள் பார்த்த அந்தத் தீ விழிகளை அன்று நேரிலேயே பார்த்தான் தமிழனான இதயசந்திரன். 'நெறியின் புறஞ் செலாத' பெண்களின் விழிகளில் கதிரவனுடைய தீக்கு மேற்பட்ட தீட்சண்யமுண்டு என்பதை அவன் அந்தச் சில விநாடிகளில் நன்றாக உணர்ந்து கொண்டான்.

இருள் சூழ முயன்ற சமயத்தில் அவன் உள்ளே வந்ததாலும் உள்ளே லேசாக இருட்டே இருந்தது. இதயசந்திரன் உள்ளே வந்து கதவை மூடியபோது முழுதும் மூடாததால் ஒருக்களித்திருந்ததன் காரணமாக, இடுக்கிலிருந்து வந்த சிறு வெளிச்சம் அந்த அறை இருட்டைச் சிறிது சாந்தப்படுத்தியிருந்தது. சாந்தப்பட்ட அந்த இருளில் சாந்தத்துக்கு முழுதும் புறம்பாக இருந்த மஞ்சுவின் பெருவிழிகளின் பார்வையைத் தாங்கமாட்டாத இதயசந்திரன், துடித்த, அவள் உதடுகளை நோக்கினான். துடித்து நின்ற உடலையும் நோக்கினான். ஆக்ரோஷத்தின் காரணமாகத் தனக்கு வெகு அருகில் வந்துவிட்ட அவள் உடலின் நிலை உள்ளூர இருந்த உணர்ச்சியை நன்றாகத் தெரியப்படுத்தியது. ''நீங்கள் ஓர் ஆண் மகனா?'' என்ற கேள்வியின் வேகம் அவள் உதடுகளிலிருந்து மட்டுமின்றி

உடலின் ஒவ்வோர் அணுவிலிருந்தும் வெளி வந்துகொண்டிருந்ததைத் தொங்கியிருந்த கை விரல்களின் நடுக்கத்திலிருந்தும் மார்பின் அசைவிலிருந்தும் புரிந்துகொண்டான் அந்த வாலிபன்.

அந்த உடலின் கொந்தளிப்பையும் உள்ளக் கோபத்தையும் அடக்கவோ அல்லது வேட்கை மீறிய காரணத்தாலோ என்னவோ, அவள் தோளிரண்டையும் திடீரென அவன் தனது கையினால் பற்றி, ''மஞ்சு, ஏன் இப்படிப் பதட்டப்படுகிறாய்? நான்...நான்'' என்று ஏதோ சொல்ல முயன்று முடியாமல் மென்று விழுங்கினான். உதடுகள் சொல்ல முடியாததை அவன் சொல்ல முயன்று அவள் தோள்களை மேலும் அழுத்தி வலிக்கும்படியாகப் பிடித்தன. பிறகு தோளிலிருந்த இரு கைகளும் மெல்ல அவள் கழுத்தை நோக்கிச் சென்று கழுத்தின் இரு பகுதிகளிலும் லேசாக அழுத்தித் தடவவும் செய்தன.

அவன் கைகள் கழுத்தில் புதைந்ததும் அவள் உடல் ஒரு முறை சிலிர்த்தது. அவள் உதடுகளும் மெல்ல அசைந்தன. அந்தச் சிலிர்ப்பில் இருந்தும், உதடுகளின் அசைவிலிருந்தும், கீழே அவள் கால் விரல்கள் தரையைக் கீறி நிமிர்ந்து பதிந்த போது அகஸ்மாத்தாகத் தன் புறக்கால்மீது அழுத்திவிட்டதிலிருந்தும், கொழுகொம்பை நாடும் பூங்கொடி போல் அவள் தவிக்கிறாளென்பதை உணர்ந்துகொண்ட இதயசந்திரன் அவள் கழுத்தை மெல்லப் பிடித்தவண்ணம் அவளை நெருங்கி ''மஞ்சு, மஞ்சு!'' என்று குரல் தடுமாற அழைத்தான். அழைத்துக்கொண்டே முகத்தினருகே தன் முகத்தையும் கொண்டு சென்றதால் அவள் கன்னமும் லேசாக அவன் கன்னத்தைத் தடவியது. கன்னத்தை இழைத்துக் கொண்ட இதயசந்திரன் காதில் அவள் உதடுகள் முணுமுணுத்தன, ''இங்கு ஏன் வந்தீர்கள்? அப்படியே போயிருக்கக்கூடாதா?'' என்று.

பதில் சொல்லும் திறன் அவனுக்கில்லாததால் அவள் மேலும் முணுமுணுத்தாள். ''கழுத்தைச் சரியாகத்தான் பிடித்திருக்கிறீர்கள். அப்படியே நெறித்து விடுங்களேன்.''



இந்த முணுமுணுப்பு அவன் காதில் விழுந்ததோ இல்லையோ தெரியவில்லை. அவன் கைகள் அவள் கழுத்தை விட்டு முதுகுப்புறம் இறங்கி, கீழே சென்றன. சென்று அவள் உடலைத் தன்னை நோக்கி இழுக்கவும் செய்தன. நீண்ட நாள் பிரிவு. இடையே புகுந்த கனவு போன்ற வேறொருத்தியின் உறவு, உறவால் ஏற்பட்ட அந்த ஆண்மகனின் மனச் சிதைவு, இவற்றையெல்லாம் எண்ணியதால் துடிப்பும் குழைவும் நிறைந்த அவள் உடல் அவன் இழுத்ததை எதிர்க்கவில்லை. உணர்ச்சிப் புயலில் ஆடிய பூங்கொடி பக்கத்திலிருக்கும் மரத்தண்டின் மீது சாய்வது போல அவள் உடல் அவன்மீது சாயவே செய்தது.

சூறாவளி வேகத்துடன் அடித்ததால் பூங்கொத்துக்கள் இரண்டு ஆடின, துடித்தன. கொடி மலர்க் கரங்களிரண்டு உடலைச் சுற்றின. கன்னக் கமலங்கள் அதிகமாக இழைந்தன. பாதமலர்கூடக் கடினப்பட்டுப் பாதத்தை மிதித்தது. அவற்றின் குறிப்புகளை உணராதில்லை அந்த வாலிபன். எப்பேர்ப்பட்ட புதையலை இத்தனை நாள் இழந்திருந்தோம் என்பதை அவன் புரிந்துகொண்டான். அவளுடைய வலுவான கைகள் தன்னைச் சுற்றியபோது அவற்றில் கடினம் மிக இருந்தும் எத்தனை இன்பமும் அந்தக் கடினத்தில் கலந்திருந்ததென்பதை எண்ணிப் பார்த்தான். 'இத்தகைய மஞ்சுவை, உயிரைத் தன்னிடம் வைத்திருந்த இந்த அழகு மலரை ஏன் இழந்திருந்தேன்' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். விவரமும் மெல்ல மெல்லப் புரியலாயிற்று அவனுக்கு. சம்பிரதாயங்களையும் பண்பாட்டையும் எண்ணியும் ஸார்கேலின் அனுமதியைப் பெற முயன்றும் நாள் வீணாகிவிட்டதை உணர்ந்தான். ''வீரர்களுக்கான காந்தருவ மணத்தில் நான் காலூன்றியிருந்தால் மஞ்சுவை விட்டு விலகவும்

நேர்ந்திருக்காது, காதரைனிடம் அகப்பட்டு அறிவிழக்கவும் அவசியமிருந்திருக்காது'' என்றும் கூறிக்கொண்டான் தனக்குள்ளே.

இன்னொரு முறை அந்தத் தவறு ஏற்படுமானால் மஞ்சுவை விட்டுச் சாதாரணமாகப் பிரிந்து சென்றால், நிலை என்னவாகுமோ என்ற கிலியும் பிடித்துக்கொள்ளவே அவள் பூவுடல் நெரியும்படியாக இறுக்கி ஒரு முறை பிடித்த இதயசந்திரன் அவளைச் சிறிது முரட்டுத்தனமாகவே அழைத்துச் சென்று கட்டிலில் கிடத்திவிட்டுக் கட்டில் அருகில் நின்றவண்ணமே அவளை ஊன்றிப் பார்த்தான். வீழ்த்தப்பட்ட நிலையிலேயே கட்டிலில் கிடந்த மஞ்சுவின் அழகுப் பெருவிழிகள் அவனைச் சலனமின்றிப் பார்த்தன. உதடுகள் மோகனப் புன்னகை கோட்டின. அவனைக் கட்டிலில் உட்கார அழைக்கவில்லை உதடுகள், கைகளும் அதற்குச் சைகை காட்டவில்லை. கைகள் காட்ட அவசியமில்லை. அவள் கிடந்த நிலையிலேயே அந்த அழைப்பு இருந்தது.

கப்பலுக்கு வருமுன்பு மா.லுமிகளுக்குத் தன்னை அசட்டை செய்யக் கட்டளையிட்டுத் தன்னை அலட்சியத்துடன் வரவேற்ற மஞ்சுவுக்கும் அந்தக் கட்டிலில் படுத்திருந்த மஞ்சுவுக்கும் மாறுபாடு எத்தனையோ இருந்ததைக் கவனித்தான் இதயசந்திரன். வெறுப்பு நிறைந்த அந்த மஞ்சுவின் முகத்துக்கும் விருப்பு விரவிக் கிடந்த இந்த மஞ்சுவின் முகத்துக்கும் சம்பந்தமில்லையென்பதை நன்றாக உணர்ந்துகொண்டான். 'அப்பொழுதும் அகன்று விழித்தன விழிகள், இப்பொழுதும் அகன்று விழிக்கின்றன. அகலாமலே பெருவிழிகள் இவளுக்கு. அகன்றபின் இன்பக் கடலின் ஆழத்தைக் காட்டும் இரு ஜோதிகள் இவை. அப்பொழுது பார்த்த கடல் கொந்தளித்த கடல், இப்பொழுது பார்ப்பது நிம்மதியாகிவிட்ட கடல், நிலவைக் கண்ணாடிபோல் காட்டும் மந்தமாருதத்தால் சலனப்படும் சிற்றலைகளை உடைய இன்பக் கடல்!'



இப்படி விமர்சனம் செய்து நின்ற இதயசந்திரனை அழைக்கவோ என்னவோ அவள் பஞ்சணையில் சிறிது இடம் விட்டு நகர்ந்தாள்.

'குறிப்பாலுணர்த்துதல்' என்ற இலக்கண வழியை உணர்ந்த தமிழன் கட்டிலின் முனையில் உட்கார்ந்தான். பிறகு மெள்ள நன்றாகப் பின் சென்றும் அமர்ந்து அவளை நோக்கித் திரும்பி, ''மஞ்சு! ஒரு சந்தேகம் எனக்கு?'' என்று கேட்கவும் செய்தான்.

''கேளுங்கள்'' என்றாள் மஞ்சு. சிறிது நேரம் அவன் ஏதும் கேட்கவில்லை. அவள் உள்ளூர கேட்டுக்கொண்டாள். 'சந்தேகம் கேட்டவர் அந்தக் கையைத் தூக்கி எதற்காக என் உடலுக்குக் குறுக்கே போடுகிறார்' என்று.

''இல்லை மஞ்சு! சற்று முன்பு என்னை மிரட்டினாரே அவரைத்தானே உன் தந்தை என்கிறாய்?'' என்று வினவினான் இதயசந்திரன்.

''ஆம்'' என்றாள் மஞ்சு வெளியே. 'சரி! இதைக் கேட்க அந்தக் கை எதற்காகக் கீழே இறங்கிச் செல்ல வேண்டும்? சே! என்ன... இப்படி... இவர்?' என்று உள்ளூர சொல்லிக்கொண்டாள்.

''உன் தந்தை என்பதற்கு ருசுக்களைக் காட்டினார் என்றாயே, என்ன ருசுக்கள் அவை?'' என்று வினவிய இதயசந்திரன் தனது கைகளால் அவளைத் தன்னை நோக்கித் திருப்பினான்.

'என்ன ருசுக்கள் என்பதைத்தான் வளர்ப்புத் தந்தை இவரிடம் சொல்லிவிட்டாரே? எதற்காக மீண்டும் கேட்கிறார்? எல்லாம் பாசாங்கு' என்று உள்ளூர நினைத்த அவள் ''என் உடலில் சில அடையாளங்களைச் சொன்னார். அதைப் பற்றித்தான் உங்களுக்கு எப்பொழுதோ தெரியுமே'' என்று கூறினாள்.

''அங்க அடையாளங்களா?''

''ஆம்!''

''எங்கே இருக்கின்றன?''

''தெரிந்ததைத் திரும்பக் கேட்காதீர்கள்.''

''சரி, அவை இருப்பது உண்மைதானே?''

''உண்மைதான்.''

''நான் பார்க்கலாமா?''

''உம்! உம்!'' என்று அதட்டினாள் அவள் வெட்கத்துடன்.

''ஏன் மஞ்சு! இதில் என்ன தவறு?'' என்று கேட்டான் அவன்.

''என்ன தவறா? நல்ல கேள்வி'' என்று கோபம் காட்டினாள் அவள்.

''ருசுக்களைப் பார்ப்பதும் அவர்கள் சொல்வது சரிதானா என நிர்ணயிப்பதும் என் கடமையல்லவா?'' என்று வினவிய இதயசந்திரன் அவளை நோக்கிக் குனிந்து, ''மஞ்சு உன் பிறப்பின் ரகசியம் அவிழ்க்கப்பட வேண்டுமானால் அதை வீணாகப் பயன்படுத்திக் கொள்ளாதிருக்கிறார்களா என்பதையும் உணரவேண்டுமல்லவா!'' என்றும் கேட்டான்.

''அப்பப்பா! இப்பொழுதுதான் கவலை வந்துவிட்டது இவருக்கு?'' என்று நினைத்தாள் மஞ்சு. அத்துடன் சொன்னாள், ''உங்களுக்கு என்னைப்பற்றி எத்தனைக் கவலை வந்துவிட்டது!'' என்று.

''ஏன் வருவதில் என்ன வியப்பு?'' என்று கேட்டான் தமிழன்.

மஞ்சுவின் முகத்தில் இகழ்ச்சிக் குறி படர்ந்தது. ''இந்தப் பஞ்சணையில் [illegible] உங்களுக்குக்



கவலை ஏற்படுகிறது. முதலில் என்னிடம், பிறகு வெள்ளைக்காரியிடம், மறுபடியும் என்னிடம்! வீரரே! இந்தப் பஞ்சணைக்கும் விக்கிரமாதித்தன் சிம்மாசனத்திற்கும் ஏதோ சம்பந்தமிருக்க வேண்டும்'' என்றாள் ஏளனத்துடன். அத்துடன் ஒருமுறை நெளிந்தாள்.

அவள் நெளிந்ததாலும் அருகாமையில் அவன் சாய்ந்திருந்ததாலும் குறுக்கே கிடந்த கையில் வழுக்கிய திண்மைப் பகுதிகள் இதயசந்திரனின் உணர்ச்சிகளைக் கட்டுக்கடங்காமல் செய்துகொண்டிருந்தன. அவள் இகழ்ச்சியை இவன் பொருட்படுத்தவில்லை. அதைச் சொல்லவும் செய்தான். ''மஞ்சு! என்னை நீ இகழ்ந்தாலும் சரி, அடித்தாலும் சரி, அத்தனையும் தரும் எனக்கு'' என்று.

மஞ்சு மெல்ல நகைத்தாள். ''நல்ல ஆசாமி நீங்கள்'' என்றும் கூறினாள்.

''ஏன் மஞ்சு?'' என்ற இதயசந்திரன் குரல் குழைந்தது.

''மிகப் பணிவு காட்டுகிறீர்கள்!'' ஏளனமிருந்தது மஞ்சுவின் குரலில்.

''பணிவா! சரணாகதி என்று சொல்.''

''சரணாகதியும் செய்வீர்கள்.''

''இதோ பார் மஞ்சு! உன் காலைப் பிடிக்கிறேன்'' என்று அவள் உடலுக்குக் குறுக்கே கிடந்த கையை எடுத்துக் காலில் வைத்தான்.

''காரியம் ஆவதற்குக் காலையும் பிடிப்பீர்கள்'' என்ற அவள் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய் மஞ்சு!'' என்று கேட்ட அவன் இன்னொரு கையைத் தோளில் வைத்தான்.

''வீரரே!'' என்று அழைத்தாள் மஞ்சு.

''ஏன் மஞ்சு?''

''அது காலல்ல, தோள்.''

''தெரிகிறது.''

''காலைத்தான் பிடிப்பதாகச் சொன்னீர்கள்.''

''இடது கையால்தான் பிடித்திருக்கிறேனே காலை.''

''காலை சரணாகதிக்குப் பிடிப்பதானால் இரண்டு கைகளாலும் பிடிக்க வேண்டும்.''

''நான்கு கைகளிருந்தால் அவற்றாலும் பிடிப்பேன் மஞ்சு?'' என்று சொன்ன இதயசந்திரன் தோளிலிருந்து கையைக் காலில் வைத்தான்.

மஞ்சு மெல்லச் சுழன்றாள் பஞ்சணையில். ''சும்மா இருங்கள், கைகள் காலிலேயே இருக்கட்டும். அலைய வேண்டாம்'' என்று அவள் நகைத்தாள்.

நேரம் நகர்ந்தது. அவன் பிணைப்பில் அவள் கிடந்தாள். இரு உடல்கள் பேசின பல பேச்சுக்கள். சூன்யநிலை உள்ள கடற்பகுதியில் திடீரெனக் காற்றுப் புகுந்தால் அலை புரளுவதுபோல உணர்ச்சிகள் சிதறுண்டு புரண்ட நிலை அது. அந்த அலைகளின் பரிமாணம், வேகம், அனைத்துமே அதிகம். அதிக நிலையிலும் காற்று வீச்சில் ஒலிகள் உண்டு. ஏதேதோ ஒலிகள்! அர்த்தமற்ற ஒலிகள்!

உண்மையை அவனும் உணர்ந்தான், அவளும் உணர்ந்தாள். தன் கோபமெல்லாம் அவன் பிரிவால் என்பதை உணர்ந்தாள். அவனும் உணர்ந்தான் வழுக்கியதற்கெல்லாம் அவள் பிரிவு காரணமென்பதை.

அறையில் இருள் மூண்டு கிடந்தது. ஒருக்களித்த கதவு மூலமும் ஒளி வரவில்லை. இருப்பினும் அதைத் தாழிட்டு வந்தான். இருட்டிலே கிடந்தார்கள் இருவரும். வெளியே



ஜலதீபத்தின் விளக்குகள் ஏற்றப்பட்டன. அந்த அறை விளக்கையும் கொளுத்த மாலுமியொருவன் கிளம்பினான். பர்னாண்டோ கேட்டான் அவனை, ''எங்கே போகிறாய்?'' என்று.

''தளபதி அறை விளக்கைக் கொளுத்த'' என்று பதிலளித்த மாலுமி, ''அந்த விளக்கை நான்தான் தினம் கொளுத்துவேன்'' என்றும் சுட்டிக் காட்டினான்.

''இன்று நீ கொளுத்த வேண்டாம்'' என்றான் பர்னாண்டோ.

''ஏன்?'' மாலுமி கேட்டான் கோபத்துடன்.

''அதற்கு வேறொருவர் ஏற்பட்டுவிட்டார்'' என்ற பர்னாண்டோ புன்முறுவல் செய்தான்.

பக்கத்திலிருந்த இப்ராஹிம் தலையாட்டினான். விளக்கு ஏதும் உள்ளே கொளுத்தப்படவில்லை. இருளே மூண்டு கிடந்தது. வேறொரு விளக்கு எரிந்தது அங்கே. அதை ஏற்றிய தீ மஞ்சுவிடமிருந்தது. வியக்கத்தக்கது அது! கவிகளே வியந்த தீ அது! அவளை நீங்கினால் சுடும், குறுகி நெருங்கினால் குளிரும், அத்தகைய தீ அது!

நீங்கின் தொறூஉம்; குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண் டுப்பெற்றாள் இவள்.

—குறள்—புணர்ச்சி மகிழ்தல்.

**(இரண்டாம் பாகம் முற்றும்)**